# பன்னாட்டுப் பொருளியல்

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

எம். பாலசுப்பிரமணியம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—504

# பன்னாட்டுப் பொருளியல்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்

**எம். பாலசுப்பிரமணியம்**, எம்.ஏ., (பொருளாதாரம்),
எம்.காம்., எல்எல்.பி.,
வணிகவியல் பேராசிரியர்,
ஏ. எம். ஜெயின் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — September, 1973

T.N.T.B.S. (C.P.) No. 504

© Tamil Nadu Text Book Society

**International Economics**

M. BALASUBRAMANIAM

Price Rs. 5-10

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Sarathy Printers,
Madras-7.

# அணிந்துரை

## திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன் றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழி லேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன் வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழி லேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறு வதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'பன்னாட்டுப் பொருளியல்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 504ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 539 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# முகவுரை

டேவிட் ரெகார்டோவின் (David Ricardo) காலமுதல் வளர்ச்சி பெற்ற பன்னாட்டு வர்த்தகம் படிக்கத்தகு முறையில் பல்வேறு பொருளியல் வல்லுநர்களால் படிப்படியாக விளக்கம் செய்யப்பட்டு, இந்த நூற்றாண்டின் பின்பகுதியில் ஒரு பெரிய நூலாகப் பரிணமித்தது. பொருளியல் நூலின் உட்பிரிவாக இதுகாறும் இருந்துவந்த இந் நூல் இப்போது தனித்த ஒரு பாட நூலாக மாறி வருகிறது. பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான கொள்கைகள், ஆதாரங்கள், நிறுவனங்கள், அரசியல் சாசனங்கள் இவைகளைப் பற்றியும் நடைமுறைப் பிரச்சினைகளையும் கொண்டதால் இதற்குப் பன்னாட்டுப் பொருளியல் (International Economics) என்று பெயரிடப்பட்டுள்ளது. சேக்கப்பு வினர் (Jacob Viner) என்கே, சாலேரா (Enke and Salera), கிண்டில்பர்கர் (Kindleberger) போன்ற ஆசிரியர்களுடைய கோட்பாடுகளையும், அண்மையில் தோன்றிய பன்னாட்டு நிறுவனங்கள் தொடர்பான விவரங்களையும் இப் புத்தகத்தில் விளக்கமாகக் கூறியுள்ளேன். பிற்சேர்க்கைப் பகுதியாகிய அனுபந்தத்தில் அநேக புள்ளிவிவரங்களை இணைத்துள்ளேன்.

கடந்த பதினெட்டாண்டுகளாக வணிகவியல், சட்டவியல், வர்த்தகக் கணக்கியல், புள்ளியியல், பொருளியல் போன்ற பாடங்களைத் தொடர்ந்து போதித்து வந்துள்ளதாலும், தென் மாநில அடக்கவிலை தொழில் கணக்கியல் நிறுவனத்தில் (Southern Regional Council of Cost and Works Accountants) பாடம் போதித்த அனுபவத்தின் அடிப்படையிலும், இந்தோ–ருசிய வர்த்தகம் (Indo-Soviet Trade) தொடர்பாக நீண்டகால ஆராய்ச்சியின் காரணத்தாலும், M.Com. மாணவர்களுக்குப் பன்னாட்டு வர்த்தகமும் அயல் நாட்டுச் செலாவணியைப்பற்றிய வகுப்புகள் நடத்திவந்த அனுபவத்தைக் கொண்டும் இப் புத்தகத்தை எழுத முன்வந்தேன்.

‘சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்’ —திருக்குறள்

பயனற்றசொற்களை உபயோகிக்கக்கூடாதென்பது திருவள்ளுவரின் வாக்கு. எனவே, பயனுள்ள சொற்களை மட்டுமே பயன்படுத்துதல் இன்றியமையாததெனலாம். இப் புத்தகத்தில் பயனற்றவைகளைப் புறக்கணித்துப் பயனுள்ளவற்றை மேற்கொள்ளலாம். இப் புத்தகத்தைப் பயனுள்ளதாக அமைக்கும் நோக்குடன் ஆசிரியப் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இதில் உள்ள தவற்றைச் சுட்டிக்காட்டிச் சீர்திருத்தும் வகையில் உதவி புரியவேண்டுமென்று அவர்களை இறைஞ்சுகிறேன்.

எம். பாலசுப்பிரமணியம்

# பொருளடக்கம்

பக்கம்

1. தோற்றுவாய் ... 1

இலக்கணம்—வர்த்தகத்தின் நிலை—உற்பத்திக் கான மூலகாரணிகளின் இடம்விட்டுப் பெயரும் தன்மை—பல்வேறு நாட்டுக் கொள்கைகள்—தனிப்பட்ட சந்தைகள் — அரசியலடிப்படையில் மாறுபட்ட பல்வேறு சமுதாயம்—பல்வேறு பண வகைகள்—கட்டுப்பாடுகள்.

2. பன்னாட்டு வாணிபக் கொள்கை ... 8

அடக்கவிலை ஒப்பிடல் விதி—வரலாற்று வாயிலாக வளர்ச்சியின் சுருக்கம் —டேவிட் ரெகார்டோவின் விளக்கம்—பண மதிப்பீட்டைப் புகுத்தியதன் பின் — இரு பண்டங்களுக்கும் அதிகமாகப் புகுத்தினுல்—அதிகப்படியான நாடுகளுடன் நடப்பின் — மாற்றத்திற்கான அடக்கச் செலவைப் புகுத்தியபின் — மாறும் தன்மையுள்ள உற்பத்தி அடக்கவிலை — மதிப்பீட்டு விதியின்கீழ் உண்மை அடக்கவிலை—வாய்ப்புப் பெறுமான அளவில் விதியை மாற்றியமைத்துக் கூறல் — அடக்கவிலை ஒப்பிடல் விதியும் வளர்ச்சியுறு நாடுகளும்—எக்ஸ்சர்-ஆக்லின் அவர்களின் பன்னாட்டு வர்த்தக விதி (Heckscher-Ohlin's Theory of International Trade).

3. பன்னாட்டு வர்த்தகத்தினின்று வரும் இலாபம் ... 37

வர்த்தகத்தின் வாயிலாக வரும் இலாபத்தை அளவிடும் முறை — இலாபங்களை வழங்கல் — பன்னாட்டு மதிப்புக் கொள்கைபற்றி மார்ஷலின் விளக்கம் — சிறு நாடுகள் பெறும் தனிப்பட்ட இலாபம்—செல்வந்தர் நாடுகளுக்குக் கிடைக்கும் இலாபம்—வர்த்தக மாற்று விகிதங்கள்—வர்த்தக மாற்று விகிதங்களைக் கணக்கிடும் முறை — அளவிடலில் ஏற்படும் புள்ளியியல் பிரச்சினைகள் —குணத்தில் மாற்றம் — அமைப்பில் மாற்றம் — அலகின் மதிப்பைப் பயன்படுத்துதல்—எடையிடு

பக்கம்

தலின் இன்றியமையாத பிரச்சினை—கப்பல் செலவு, காப்பீட்டுறுதிச் செலவு — மாதிரிகள் — ஏற்றுமதி இறக்குமதி இவற்றிடையேயுள்ள கால மாறுபாடு —பொருளாதார வளர்ச்சியும் வர்த்தக மாற்று விகிதமும்—பின்தங்கிய நாடுகளில் சீர்கேடான நிலை.

4. பன்னாட்டு வர்த்தகக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை ... 49

வர்த்தகக்கோட்பாட்டினர்—மூலதனப் பெயர்ச்சி—பன்னாட்டுப் பணநிதி — ஈடுகாட்டிய பணஉதவி — சமன்பாடின்மைக்கான காரணங்கள்—சுழற்சி சமன்பாடின்மை—பன்னெடுங்காலச் சமன்பாடின்மை—அமைப்பின் சமன்பாடின்மை —வளர்ச்சியுறும் நிலையில் சமன்பாடின்மை—தொன்மைப் பொருளாளரின் கொள்கை—கீன்ஸ் அவர்களின் வருமான விதி—செயல்முறை விளைவுக் கொள்கை (Demonstration Effect Theory)—உற்பத்தி வளர்ச்சிக் கொள்கைகளிலுள்ள வேற்றுமைகள்—சமன்பாடின்மைக்குக் காரணங்கள்—சாதகமான நிலை.

5. அயல்நாட்டுச் செலாவணி—செலாவணி விகிதம் ... 64

இலக்கணம் — மாற்றவியலா காகிதச் செலாவணி—நிலைத்த, நிலையற்ற சந்தைகள் — குறுக்கு விகிதங்கள்—முன்னேக்கிய செலாவணிச் சந்தை —முன்னேக்கிய செலாவணிச் சந்தையில் வங்கிகள் செயல்படும் திறன்—விகிதம் முடிவு செய்யும் முறை—செலாவணி வசதிகளால் ஏற்படும் நன்மைகள், குறைபாடுகள்—வட்டி விகிதங்கள் — ஊக வர்த்தகம்—அமைவதற்கான சூழ்நிலை—வா.தி.ச. கொ. (P.P.P. Theory)— மாறும், மாறாச் செலாவணி விகிதங்கள்—பணமதிப்புக் குறைப்பு (Devaluation)—அன்னியச் செலாவணி விகிதங்களைக் கொண்டு சரிப்படுத்துதல்.

6. வர்த்தகக் கட்டுப்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியும்... 80

தடங்கலற்ற தொழில் வர்த்தகம் — தொழிலாக்கமும் நிலையான வளர்ச்சியும் — தொழில் காப்பு முறைகள் — அமெரிக்க அனுபவம்—

பக்கம்

வேளாண்மை — நீண்டகால வளர்ச்சியின் அடிப்படை—லத்தீன் அமெரிக்கா—தளிர்த் தொழில்கள்.

7. சுங்க வரி ... 87

முறை, அமைப்பு, பலாபலன்கள் — காப்பு முறைச் சுங்கவரி விதிப்பு—நுகர்வு பாதிக்கப்படல் —ஏற்றுமதித் தீர்வை—விலைகளும் உற்பத்திகளும் பாதிக்கப்படல்—போக்குவரத்துத் தீர்வைகள்—மதிப்பு விகிதத் தீர்வை—தனிப் பயன் தீர்வை—தனி மதிப்புத் தீர்வை—காப்புத் தீர்வையும் வருவாய்த் தீர்வையும்—பாகுபாடுகள்—ஒற்றைக் கலன், இரட்டைக் கலன் தீர்வைகள் — பொதுத் தீர்வையும் பழக்கத் தீர்வையும் — தீர்வையின் உச்சத்தைக் கணக்கிடல் — அரசின் பண உதவி அல்லது உதவிக் கொடை.

8. பங்கு விதிப்பு முறை ... 102

மூலகாரணம்—பங்கு விதிப்பு முறை இன்ன அளவையுடையது என்று முடிவு செய்தல்—பங்கு விதிப்பை ஒதுக்கும் முறை—உலகப் பங்கு விதிப்பு —ஏல வழியே ஒதுக்கல் முறை—ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு ஒதுக்கிடும் முறை—உரிமம் வழங்கல் —ஒரே வகைப் பங்கு விதிப்பு—இரு வழிப் பங்கு விதிப்பு—பங்கு, சுங்க வரி விதிப்பு முறை—இதன் இன்றியமையாத தன்மை.

9. அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடு ... 117

முகவுரை—இதற்கான திட்டம்—இதன் குறிக்கோள்—சமநிலையற்ற தன்மையைச் சீர்திருத்தல் —உறுதிப்படுத்துதல்—இன்றியமையாப் பண்டங்களை இறக்குமதி செய்தல்—உள்நாட்டுத் தொழில்களைக் காத்தல்—வருமானம் பெற—அதிக மதிப்புள்ள செலாவணியை ஆதரித்தல்—அயல் நாடுகளில் வைத்துள்ள தேசிய முதலீடுகளின் விலைகளைக் குறைத்தல்—கடன்களைக் கொடாதிருத்தல் —வேற்றுமை விகிதங்கள் — பொருளாதாரத் திட்டத்தின் மூலம்—கட்டுப்பாட்டின் அமைப்பு—

பக்கம்

சமன்பாட்டுக் கணக்கு—செலாவணி நிலைநாட்டு நிதி—சில வகைக் கட்டுப்பாட்டு முறை—1. பல வகைச் செலாவணி விகிதங்கள்—அதிகார விகிதத்தின்மீது கூடுதல் விகிதம் அமைத்தல்—கட்டுப்படுத்தப்பட்ட கணக்கு—மூலதன ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு — அரசிடம் கைவசமுள்ள செலாவணியை ஒப்புவித்தல்—இருமுக வர்த்தக நிகரம் (Bilateral Balancing)—கணக்குத் தீர்வு ஒப்பந்தங்கள் (Clearing Agreements)—செலுத்து ஒப்பந்தம்—ஈடுகட்டும் ஒப்பந்தம்—பன்முகச் செலாவணி விகிதங்கள்—இடையூறுகள்.

**10. மாநில வர்த்தக அமைப்பு** ... 130

தோற்றுவாய்—முதல் உலகப் போரின்முன்—சோவியத் அரசின் அனுபவம்—சோஷலிச சமுதாயம்—அயல்நாட்டு வர்த்தக முற்றுரிமை—வளர்ச்சியின் வரலாறு—புதிய பொருளாதாரக் கொள்கை (N.E.P.)—சோவியத் நாட்டின் வர்த்தகமும் வேறுபாடற்ற முறைகளைக் கையாளுதலும் — இடையூறுகள் — நன்மைகள் — சு.வ.ச. பொ.ஒ.வும் இராச்சிய வர்த்தக நிறுவனமும் (G. A. T. T. and State Trading) — தனியார் வர்த்தகம்.

**11. மிகப் பரிவு காட்டப்படும் தேசத்தைப் பற்றிய பிரிவு** ... 142

சமமாகப் பரிவு காட்டப்படுதல்—போட்டி வர்த்தக மனப்பான்மை நீங்க முயலுதல்—சலுகை வேண்டுமென்று கோருதல்—இந்தப் பிரிவு ஒப்பந்தத்தில் எழுதப்படுகிறது—இதன் இன்றியமையாத நிலை—பேரத்தில் ஈடுபடா நாடுகளின் கொள்கை-செயல்படுத்துவதில் சில முக்கிய இடையூறுகள்—அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடு—முழு பண்ட விவரங்கள் அடங்கிய சுங்க வரி விதிப்புப் பட்டியல்—பண்டமாற்று ஒப்பந்தங்கள்—விதிவிலக்கு—எல்லைப் போக்குவரத்து—சுங்க வரிக் கூட்டு நிறுவனம்—வட்டார விதிவிலக்குகள்—சுகாதார விதிவிலக்கு—தேசிய மீன்கள் வர்த்தக

பக்கம்

மும் கடற்கரை வர்த்தகமும் விதிவிலக்கு—திணறிக் கொட்டலை எதிர்த்துள்ள முறை—பன்முக வர்த்தகக் கூட்டங்கள்.

12. திணறிக் கொட்டல் ... 148

முகவுரை—இதன் வகைகள்—நிரந்தரத் திணறிக் கொட்டல்—அரசியலடிப்படையில் எதிர்ப்பு—திணறிக் கொட்டலை வெற்றிகரமாக நடத்த வழிகள்—மாற்ற அடக்கச் செலவு—உள்நாட்டில் உற்பத்தி வழங்கு முற்றுரிமை—திணறிக் கொட்டப்பட்ட நாட்டில் விலைமாற்றங்கள்.

13. பொருளாதார இணைப்புக் கொள்கை ... 152

வேறுபாடு காட்டும் முறை—பொருளாதாரக் கூட்டமைப்பு வேலைவாய்ப்பில் ஏற்படும் மாறுதல்—உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்—மூலாதாரப் பண்டங்கள்-மறு அமைப்பு—மாற்றுவகை உற்பத்தி—ட்ரஸ்டுகளும் கார்ட்டல்களும் (Trusts and Cartels)—தூரம்—நிலைபெற்ற தன்மை—அறியாமை—பகுத்தறிவின்மை—வர்த்தகச் சேவா வணிக் கட்டுப்பாடுகள்—முதலீட்டின் அமைப்பு, தொகை, திக்கு முதலியன.

14. முதன்மைப் பண்டத்தின் சந்தையைச் செம்மையாக்குதல் ... 158

இதன் இன்றியமையாத தன்மை—தனிப்பட்ட உற்பத்தியாளரின் வருமானத்தில் மாற்றம்—வளர்ச்சியுறு நாடுகளில்—இறக்குமதிப் பதிலி (Import Substitution) பண்டங்கள்—பன்முக வர்த்தகத்திற்குத் தடை—நிலையற்ற நிலை உருவாதல்—ஆதார அடிப்படைப் பண்டங்களின் விலைகளில் கடும் ஏற்றவிறக்கம்—வர்த்தகச் சுழல்கள் (business cycles)—எப்போதாவது ஏற்படும் மாற்றம் (Incidental Fluctuation)—தளவாடங்களில் மாற்றம்—எதிர்நோக்கியிருத்தல் (expectation)—ஒப்பிடத்தகு அளவில் நெகிழ்ச்சியற்ற தேவைகளும் வழங்குதல்களும்.

பக்கம்

15. அன்னிய மூலதனமும் பொருளாதார வளர்ச்சியும்... 162

இதன் இன்றியமையாத நிலை — ருசிய, சப்பான் நாடுகள்—முன்னேற்ற நாடுகளில் வாழ்க்கைத் தரம்—பற்றுக்குறை—மூலதனமின்மை—புதிய தொழில்களை உருவாக்குதலில் இடர்கள்—அன்னிய மூலதனத்தில் குறைபாடு—இதனால் ஏற்படும் தீமைகள்—கூட்டாக ஈடுபடல்—உலக வங்கி (I. B. R. D.) நிறுவனத்தின் அமைப்பு—கடன்களும் உத்தரவாதங்களும்—பன்னாட்டு நிதிக் கழகம் (I.F.C.)—ஏற்றுமதி இறக்குமதி வங்கி (I.& E.B.).

16. பன்னாட்டுப் பண நிதி ... 172

சான் மேனார்ட் கீன்ஸ் பிரபு (John Maynard Keynes) கோட்பாடுகள்—விதிப்பும் ஒப்பியவைகளும்—செலாவணிகளின் மாற்று மதிப்பு—உலக வர்த்தகமும் செலாவணி நிலையும்—உறுப்பினர் நாட்டிலுள்ள செலாவணி அமைப்பு—ஆரம்ப மாற்று மதிப்பு (Initial par Value)—அளவையிடல்—கொடுக்கல் வாங்கல் முறை—செலவினம்—மூலதன மாற்றம்—கிடைப்பதற்கரிய செலாவணி (Scarce Currencies).

17. சுங்கவரித் தீர்வை வர்த்தகத் தொடர்புடைய பொது ஒப்பந்தம் ... 179

கொள்கைகள்—முக்கியப் பிரிவுகள்—பிரிவு 2—பிரிவு 3—பிரிவு 4—பிரிவு 5—பிரிவு 6—பிரிவு 7—பிரிவு 8—பிரிவு 9—பிரிவு 10—பிரிவு 11—தீர்வைகள் குறைப்பு —பேச்சு நடத்திய முறை (1947-62) — கென்னடி வட்டம் (Kennedy Round).

18. வர்த்தகம், வளர்ச்சி தொடர்புடைய பன்னாட்டு மாநாடு... 185

உங்டாட் I—வ.வ.தொ.ப.மா. I—நாட்டு உறுப்பினர்கள்—ஹவானா சாசனம் (Charter)—பொதுக் கொள்கைகள்—உங்டாட் II (UNCTAD II)—இதன் பேச்சுவார்த்தைகள்.

பக்கம்

*19.* ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு ... *191*

வரலாறு—எஃகு நிலக்கரி வர்த்தக அமைப்பு—இதன் திட்டம்—பொருளாதாரச் சமூகம்—ஐரோப்பியப் பொதுச் சந்தை (E.C.M)—சுங்கவரி குறைப்பு—சுங்கவரி கணக்கிடும் முறை—பொது வேளாண்மைக் கொள்கை—ஐரோப்பியத் தடங்கலற்ற வர்த்தகச் சங்கம் (European Free Trade Association)—பிரிட்டனின் யோசனை நிராகரிப்பு—பேச்சுவார்த்தைகள்—ஐ.பொ.ச.வும் வெளி நாடுகளும் (E.C.M. & Other Countries)—ஐரோப்பியப் பணவசதிக் கூட்டுறவு—மார்சல் உதவி—ஐரோப்பிய செலுத்துநர் ஒருமைப்பாட்டு நிறுவனம்—ஐரோப்பியப் பண ஒப்பந்தம்.

20. பன்னாட்டுச் செலாவணிப் பணம் ... *202*

பணவியல் முறையில் சீர்திருத்தம்—பொன் கட்டி—ப.ப.நிதியும் வாணிபக் கொடுப்பல் நிலையும்—பொன்மாற்றுத் திட்டம்—அமெரிக்க நாட்டில் பாதக நிலை—ஒதுக்கு நிதி—பொன் விலையேற்றம்— திரு. மாக்ஸ்வெல் ஸ்டாம்ப் அவர்கள் திட்டம் — ட்ரிஃபின் திட்டம் — பெர்ன்ஸ்டியன் திட்டம்—ப.ப.நி-யும் உலகப் பண மாற்று வசதிகளும்.

அனுபந்தம்

*1.* இந்திய வாணிபக் கொடுப்பல் நிலை—மூலதனக் கணக்கு ... *212*

*2.* இந்திய வாணிபக் கொடுப்பல் நிலை—நடப்புக் கணக்கு ... *214*

மேற்கோள் நூற்பட்டியல் ... *216*

கலைச்சொற்கள் ... *221*

பொருட்குறிப்பகராதி ... *227*

# 1. தோற்றுவாய்

மனிதன் தனது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு இலக்காகிறான். எடுத்துக்காட்டாகக் கூறுவோமாயின், பொருளுற்பத்தி, நுகர்வு, பொருள் வழங்கும் முறை, பணவீக்கம், வர்த்தக மந்தம், விற்பனையின்மை, சரக்கின் தேக்கநிலை, எதிர்பாரா திடீர் விலையேற்றம், மற்றும் வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் இவையனைத்தும் மனித சமுதாயத்தைத் தாக்குவது வெள்ளிடை மலை. மனிதன் பொருளியல் நூல் வழியே இவைகளை அறிந்து கொண்டு அவைகளையடக்கித் தன் வசமாக்கிக் கொள்ள வழி தேடுகிறான். எந்த நூலிலும் பொதிந்துள்ள உட்கருத்துகளைத் திறம்பட அறிய விரும்புவோர் அந் நூலை ஐயந்திரிபறக் கற்றல் இன்றியமையாதது ஆகும்.

உலகின்கண் உள்ள எல்லா நாடுகளும் தம்மிடையே வர்த்தகப் பொருளாதாரத் தொடர்பு கொண்டு நல்லுறவு பெற விழைகின்றன. இதையே பன்னாட்டுப் பொருளியலுக்கு இலக்கணமாகக் கொள்ளலாம். ஒவ்வொரு நாடும் ஏனைய நாடுகளுடன் எவ்வகையில் தொடர்பு கொண்டு பொருளாதார முறையில் முன்னேறியுள்ளதென்று மேற்கோள்களுடன் ஆராய முற்படும் நூலே 'பன்னாட்டுப் பொருளியல்' எனலாம்.

பொருளியலின் ஒரு பிரிவாகப் பன்னாட்டுப் பொருளியலைக் கூறலாம். (நமது முதல் ஐயப்பாடென்னவெனில் பன்னாட்டுப் பொருளியல், பொருளியல் நூலினின்று வேறுபட்டதா அல்லது, இல்லையா என்பதே).

உலகில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளைச் சீரிய முறையில் புரிந்துகொள்ளும் வண்ணம் தகவல்களை ஒருமைப்படுத்தி, நன்கு திறனாய்வு செய்யும் ஒரு கருவியே[1] பன்னாட்டுப் பொருளியல்.

[1] Enke & Salera—International Economics, III Edition, London, Dennis Dobson 1957, p. 1.

வங்கி முறை, தொழிலாளர் பற்றிய பொருளியல் முறை இவை தனித்தியங்கும் தன்மையுள்ளவை. அதே போன்று பன்னாட்டுப் பொருளியல் தனித்தியங்குமா அல்லது பொருளியலுடன் இயைந்து நடக்கக் கூடியதா என்ற ஐயமும் உருவாகிறது. தொன்றுதொட்டுப் பன்னாட்டுப் பொருளியல் தனித்தியங்கி வந்தது என்பது நாம் அறிந்த செய்தியேயாகும். ஏனெனில், விரைந்து முடிவு கட்ட வேண்டியவற்றைக் கேள்விகளாக அமைத்து அப் பிரச்சினைகளை நடைமுறையில் உலகினுக்கெடுத்துக் காட்டி அவற்றின் வாயிலாக உள்நாட்டு வர்த்தகத்தின் சட்ட திட்டங்களில் உள்ள உயரிய கருத்துகளை ஒளிச்சுடர் போன்று மின்னவைத்து நம்முடைய அறிவையும் மிளிரச் செய்கிறது.[1]

பன்னாட்டுறவு தொடர்பான படிப்பினையைத் தனிப்பட்ட நபர் அறிந்துகொள்ள வேண்டியதென்ற நியதியில்லை. அது மனித சமூகத்தின் மலைமுகட்டினைப் போன்ற பகுத்தறிவாளரின் இன்றியமையாத படிப்பினை எனக் குறிப்பிடலாம். விரித்துரைப்பின் இது நாகரிகச் சின்னத்தின் உருவமாகிய மக்களின் வாழ்க்கையில் அறிந்துகொள்ள வேண்டிய படிப்பினையே பன்னாட்டுப் பொருளியல்.[2]

(நமது அன்றாட வாழ்க்கை, வாழ்க்கை வசதிகள் இவற்றுடன் பன்னாட்டுறவு, கலாசாரம், பொருளியல் இவை மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. மக்களாட்சி நடைபெறும் பல்வேறு நாடுகளில் உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த உலகானுபவத்தைக் கொண்டு மேலெழுந்தவாறு பன்னாட்டுப் பொருளியலை அறிந்து மிகவும் தவறான முறையில் விளக்கம் தருவதோடல்லாமல், தவறான சட்டமியற்றித் தீங்கிழைத்து வருவது வருந்தத்தக்கதே. நாடுகளுக்கிடையே பரஸ்பர வசதிகளுடனும், ஒற்றுமையுடனும் பொருளீட்டி மேன்மேலும் முன்னேற்றப் பாதையில் நடக்கவும் பயன்படுகிறது. இந் நூலில் பொதுவாக அரசியலின் ஊடுருவலாலும், பொருளியல் கலவா இதர காரணங்களாலும் இது தனித்துத் திகழ்கிறது. இது தனித்துத் திகழ்வதென்று கூறுவது பொருத்தமல்ல என்பது இன்னொரு வாதம். இது உள்நாட்டு வர்த்தகத்தினின்று வேறுபட்டதெனக் கூற இடமில்லை).

[1] Charles P. Kindlesarkar — International Economics.
[2] Delbert A. Snider — Introduction to International Economics.

## வர்த்தகத்தின் நிலை

தனிப்பட்ட நபர் தனக்குத் தேவைப்பட்ட பொருள்களை ஏற்படுத்திக்கொண்டு பிறர் உதவியை நாடாது வாழக்கூடும். ஆயினும், அவ்வாறு ஒரு நாடு தனித்தியங்குமா என்பது கேள்விக்குரியது. தற்காலச் சமுதாயத்தினர்கூட ஏதாவது பொருளுற்பத்தியில் மேம்பாடடைந்து அவைகளைப் பண்ட மாற்றுகக் கொடுத்து வந்தனர். அறிவியல் வளர்ச்சியின் அடிப்படையில் முதன்முதலில் நெருப்பினுல் ஏற்படும் பலன்களை அறிந்துகொண்டனர். அரவைக் கற்கள், வட்டத் திகிரி இவைகளில் தொடங்கிப் படிப்படியாக முன்னேற்றமடைந்து மின் அணுவை இன்றைய சமுதாயம் அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்தத் தொடங்கியுள்ளது.[1] அத் துறையில் மேம்பாடான பயிற்சியின் காரணமாக அமோகமாகப் பொருளுற்பத்தி நடைபெறுவது தெரிந்ததே. பல நூற்றாண்டுகளாகவே பல்வேறு நாடுகள் பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு உயரிய செல்வ நிலையை அடைந்தது. பன்னாட்டு வர்த்தகம் புரிய இயலாத நாடுகள் இன்றும் வறுமைத் தளையில் கட்டுண்டு கிடக்கின்றன எனலாம்.

பன்னாட்டு வாணிபமும், ஒரு நாட்டினுள் காணப்படும் பல மாநில வர்த்தகமும் ஒன்றல்ல; மாறுபட்டது எனக் கருதப்பட்டு வருகிறது. இந்த வாதத்தையொட்டிக் கூறப்படும் காரணங்கள் கீழே வரிசையாக விளக்கப்பட்டுள்ளன.

### உற்பத்திக்கான மூல காரணிகளின் இடம் விட்டுப் பெயரும் தன்மை

டேவிட் ரெகார்டோ (David Ricardo) அவர்கள் பன்னாட்டு வர்த்தகத்தைத் தனிப்பட்ட ஒரு கொள்கையாகக் கூறுகிறார். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மூல காரணிகள் அந்த நாட்டினுள்ளேயே உயரிய ஊதியத்தை நாடி இடம் விட்டு இடம் பெயரக் கூடும். ஆயினும் அவை அந் நாட்டை விட்டுப் பிரிதொரு நாட்டிற்குப் போவதில்லை. நாட்டினுள் இடம் விட்டு இடம் மாறுவதால் விலை ஒரே சீராக அமையும். இந்தக் காரணத்தால்தான் பன்னாட்டு வர்த்தக முறை நாட்டினூடே உள்ள பல மாநில வர்த்தக முறையினின்று தனித்து நிற்கிறது.

நாட்டினூடே உள்ள பல மாநிலங்களுக்குள் இடம் பெயரும் என்று கூறுவது கடினம் எனலாம். ஏனென்றால், மொழி, பழக்க

[1] P. T. Ellsworth—The International Economy, III Edition, Macmillan Collins Ltd, New York, 1964, p. 1.

வழக்கம், கலாசாரம், போக்குவரத்திற்கான மிகுந்த செலவு, மாநிலங்களுக்கிடையே நிலவி வரும் வெறுப்புணர்ச்சி இவை களைக் காரணமாகக் காட்டலாம். குறிப்பாக மூலதனம் பல்வேறு நாடுகளுக்கிடையே சுழன்று வருவது தெரிந்ததே. டேவிட் ரெகார்டோ, மில் இவர்களின் வாதத்தை ஜே. ஈ. கேயர்ன்ஸ் (J. E. Cairnes) எதிர்க்கிறார். ஒரு நாட்டி னின்று மற்றொரு நாட்டிற்குத் தொழிலாளர்களையும், மூலதனத் தையும் இடம் பெயர்த்துப் போகச் செய்வது மிகவும் கடினமான செயல் எனக் கூறலாம். இதனால் தனி நபர்களிடையே உண்டாகும் போட்டியில் பண்ட மாற்றம் வெகுவாகப் பாதிக்கப் படுகிறது[1]. கேயர்ன்ஸின் விடையின் மூலம் தனிப்பட்ட கொள்கை வேண்டுமென்றுள்ள வாதம் நிலை நாட்டப்படவில்லை. ஒரே நாட்டி லுள்ள அடுத்தடுத்துள்ள மாநிலங்களுக்குள்ளாக இடமாற்றம் நிகழ்வதில்லை. அதேபோல், இரு நாடுகளுக்கிடையே அடுத்தடுத்து உள்ள இரு மாநிலங்களுக்குள் இந்தமாற்றம் நிகழ்வதில்லை. எனவே கேயர்ன்ஸின் வாதம் போட்டியிடா வகுப்புகளிடையே ஏற்படும் வர்த்தகத்தைக் குறிக்கிறது. (இவ் வகுப்புகளுடைய உற்பத்திக் கான மூலகாரணிகள் இடப்பெயர்ச்சி செய்யக் கூடியவையல்ல) பன்னாட்டு வாணிபத்தையல்ல என்பது நியதி.

நாடுகளுக்கிடையே, மற்றும் பல மாநிலங்களுக்கிடையே இடப்பெயர்ச்சி பெற்றுவரும் உற்பத்திக்கான மூல காரணி களுடைய புள்ளி விவரங்களைக் காணுவோமானால் அவை மாற்றம் பெறுவது மிகக் குறைவே. ஆகவே பன்னாட்டு வர்த்தகம் தனியாக ஓர் இயல்பு பெற்றதல்ல. நாட்டினுள் பல மாநிலங் களிடையே நடைபெறும் உள்நாட்டு வர்த்தகத்தின் அமைப்பைப் போன்றே பெருமளவில் நடைபெறுகிறது எனக் கூறலாம்.

### பல்வேறு நாட்டுக் கொள்கைகள்

ஒரு நாட்டினுள் காணப்படும் வரிதண்டல்முறை, தொழிலாளருக்கான திறனாய்வு முறை, தொழிற்சாலையில் காணப் படும் சுகாதார, சட்ட அமைப்பு, சமுதாயக் காப்புமுறை, தொழிற் சங்கங்கள், கல்வி, பொதுமக்களுக்கெனப் பணிக்கப்பட்ட அமைப்புகள் இவையனைத்தும் பல்வேறு மாநிலங்களில் இருப்பினும் அவை ஒரே சீராக நாடு முழுமையும் நடப்பது திண்ணம். ஆனால், அதேபோன்று பல நாடுகளுக்கிடையே ஒப்பிடமுடியாது. எடுத்துக்காட்டாக, ஆங்கில நாட்டின் அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டிற்கும் பிரான்சு நாட்டரசு விதித்துள்ள

[1] J. E. Cairnes—Source Leading Principles of Political Economy Newly Expounded, London, 1874, p. 303.

கட்டுப்பாட்டிற்கும் மாறுதல் இருக்கக்கூடும். அவற்றை ஆய்ந்து நோக்கின் பன்னாட்டு வர்த்தகம், உள்நாட்டு வர்த்தகத்தினைப் போன்று பன்மடங்கு பெருமளவில் நடந்து வருகிறது என்பது புலனாகும்.

### தனிப்பட்ட சந்தைகள்

ஒரே நாட்டினுள் அமைந்துள்ள உள்நாட்டுச் சந்தைகள் மொழி, இனம், பழக்க வழக்கம், பயன்படுத்தும் எடை முதலிய காரணங்களால் தனித்துள்ளது போன்று புலனாகும். எடுத்துக்காட்டாக இந்திய நாட்டின் வடக்குப் பகுதியில் டெல்லியின் அருகிலுள்ள ஹாத்ரஸ் (Hathras) என்ற ஊரில் வாரச் சந்தை கூடுகிறது. அதேபோன்று நம் நாட்டின் தென் பகுதியில் மதுரை அருகிலுள்ள தேனீயிலும் சந்தை கூடுகிறது. இவைகளைக் கொண்டு பன்னாட்டு வர்த்தகம் தனித்தியங்குகிறது என்று கூறப்படும் கொள்கை முற்றிலும் தவறானது.

### அரசியலடிப்படையில் மாறுபட்ட பல்வேறு சமுதாயம்

ஒரே நாட்டமைப்பின்கீழ் வாழும் மக்கள் ஒற்றுமையுடனும் தேசிய ஒருமைப்பாட்டுடனும் வாழ்கின்றனர். நாட்டுப்பற்று மேன் மேலும் மக்களிடையே வளர்ந்து வருவது வரவேற்கத் தக்கதே. அந்தந்த நாட்டரசு தன் மக்களுக்கு நலம் தேடித் தருவது இயல்பு. ஆயினும் இதர நாட்டு மக்களின் முன்னேற்றத்தைப் பற்றி அவை கவலையுறுவதில்லை. தன் நாட்டு மக்களுக்கு நலம் பேண எண்ணித் தம்முடன் வர்த்தகத்திலீடுபடும் அயல்நாட்டு மக்களுக்கு இடையூறுகளையும் இன்னல்களையும் உண்டாக்கக் கூடும். உலக முழுமையும் ஏவலிட ஒரே அரசு இருப்பின் பன்னாட்டு வர்த்தகமும் உள்நாட்டு வர்த்தகமும் ஒன்றே என்ற கருத்து வெளிப்படும்.

### பல்வேறு பண வகைகள்

பன்னாட்டு வர்த்தகத்தில் பல்வேறு பண வகைகள் இடம் பெறுகின்றன. குறிப்பாக அயல்நாட்டுச் செலாவணியில் இந்திய ரூபாயும், ஆங்கில நாட்டு ஸ்டெர்லிங்கு பவுண்டும், அமெரிக்க ஐக்கிய நாட்டு டாலரும் புழங்கி வருகின்றன. ஒரே நாட்டினுள் பல்வேறு மாநிலங்களிடையே நடக்கும் வர்த்தகத்தில் அந்த நாட்டிலுள்ள அரசு உருவாக்கியுள்ள பணமுறையை அனுசரிக்கும். சென்னைக்கும் பம்பாய் நகரத்திலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு மிடையே நடைபெறும் வர்த்தகம் இந்திய ரூபாயில் கணக்கிடப் பட்டு முடிவு செய்யப்படுகிறது. உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் பொன்கட்டி முறையில் (Gold Std.) இருந்து கொண்டு தங்கள் நாட்டின் பணமுறையை பொன்கட்டியின் விகிதத்தில் அமைத்துக்

கொண்டால் செலாவணியின்போது எவ்வித இடையூறும் இன்றி வர்த்தகம் செய்ய இயலும். இதனால் ஏற்படும் வேற்றுமையும் மறைந்துவிடக் கூடும். உள்நாட்டுத் தேவைகளைச் சமாளிப் பதற்கென ஒவ்வொரு நாடும் செலாவணிப் பணமுறையை அரசுச் சட்டத்தின்கீழ் நிலையாக அமைத்துக் கொள்கிறது. அயல்நாட்டு வர்த்தகத்தின் காரணமாக ஏற்படும் வர்த்தக நிலுவையினாலும் (Balance of Trade) வர்த்தகக் கொடுப்பல் நிலையினாலும் (Balance of Payment) செலாவணி விகிதத்தில் ஏற்றத் தாழ்வுகள் நிகழ்கின்றன. மேலும், இவ்விரு நாடுகளுக் கிடையே மூலதனமோ அல்லது தொழிலாளர்களோ அதிக ஊதியத்தை எதிர்நோக்கியவண்ணம் இடப்பெயர்ச்சி செய்வார் களா என்பது ஐயம்தான். அவ்வாறு நிகழின் இவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மத்திய வங்கி (Central Bank) செலாவணியைச் சீரான முறையில் அமைத்துச் சமாளித்து வருகிறது. அந்த நாட்டின் அரசியல், பொருளாதார, வர்த்தக நிலையையொட்டி, பணச் செலாவணியைக் கட்டுப்படுத்துவார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் விற்பனையின்மை காரணத் தாலும், வேலையின்மை காரணத்தாலும் அந் நாட்டு மத்திய வங்கி (Central Bank) நாட்டின் பணச் செலாவணியைச் சட்ட முறையில் விதித்து, கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அதிகப் பணத்தைப் புழங்கவிடக்கூடும். அதே சமயத்தில் பிறிதொரு நாட்டில் பணவீக்கம் காரணமாக அந் நாட்டில் அளவு கடந்து புழங்கி வரும் பணத்தை அந் நாட்டு மத்திய வங்கி (Central Bank) வைப்புகளாகவும், சேமிப்பு நிதியாகவும் மக்களிடமிருந்து திரட்டி ஒழுங்குபடுத்த முயலுகிறது. உலகின்கண் மலிந்துள்ள எல்லா நாட்டு மத்திய வங்கிகளும் தம்மிச்சைப்படியே கட்டுப்பாடுகளை விதித்தும், நிலைமைக்கேற்ப தளர்த்தியும் நாட்டின் பொருள் நிலையைச் சீர்செய்து கொள்ளும். நாட்டினுள் காணப்படும் பல மாநிலங்களுக்கிடையே தொடர்ந்துவரும் உள்நாட்டு வர்த்தகம் அந் நாட்டு மத்திய வங்கியின் மேற்பார்வையில் நடைபெறுகிறது. இதனால் வரம்பின்றி நூற்றுக்கு நூறு சதவிகிதம் இலாபம் அந்த நாட்டு மத்திய வங்கிக்கே சேரும். இதனால் விலையேற்றமோ தாழ்வோ நிகழ்வதில்லை. ஒரு நாட்டிலுள்ள பணத்தைப் பிறிதொரு நாட்டிற்கு அனுப்புவது எளிதன்று. அனுப்ப விரும்பும் நாட்டிலுள்ள மத்திய வங்கியின் அனுமதி பெறாது அனுப்ப இயலாது. உள்நாட்டு வர்த்தகத்தின் காரணமாகப் பண்டங் களுக்கான மாற்றம் ஏற்படுகிறது. சுருங்கக் கூறினால் இது பண்ட விற்பனையே அன்றிச் செலாவணி விற்பனைக்கு இடமில்லை.

ஆயினும் பன்னாட்டு வர்த்தகத்தில் பண்ட விற்பனையும் அதையொட்டிச் செலாவணிக்கான வர்த்தகமும் நடைபெறு கிறது. செலாவணியின் விகிதங்கள் பணத்திற்கேற்படும் தேவை வழங்கு முறைகளை அனுசரித்து மாறக் கூடும்.

**வர்த்தகக் கட்டுப்பாடுகளும் செலாவணிக் கட்டுப்பாடுகளும்**

உற்பத்திக்கான மூல காரணிகள் உயரிய ஊதியத்தைத் தேடி அயல் நாடுகளுக்கு இடம் மாறுவதைத் தவிர்க்கவே வர்த்தகக் கட்டுப்பாடுகளும், செலாவணிக் கட்டுப்பாடுகளும் கொண்டு வரப்படுகின்றன.

இக் கட்டுப்பாடுகளால்தான் பன்னாட்டு வர்த்தகத்தைத் தனிப்பட்ட ஒரு முறையாகப் பாகுபாடு செய்தனர். உண்மையில் உள்நாட்டு வர்த்தகத்தின் குணநலன்களைப் பன்னாட்டு வர்த்தகத் திலும் காணலாம் என்ற காரணங்களைக் காட்டியிருக்கிறோம். இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமை அவைகளின் உருவத்தை யொட்டியதேயன்றிக் குணத்தில் அன்று எனக் கூறலாம்.

# 2. பன்னாட்டு வாணிபக் கொள்கை

## அடக்கவிலை ஒப்பிடல் விதி
## (Comparative Cost Theory)

**வரலாற்று வாயிலாக வளர்ச்சியின் சுருக்கம்**

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பன்னாட்டு வர்த்தகம் பண்டத்தின் தனிப்பட்ட விலை-ஏற்றத் தாழ்வை அனுசரித்து நடந்து வந்தது. பண்ட உற்பத்தியின் அடக்க விலை மித மிஞ்சி அதிகரித்ததாலும், அயல்நாட்டிலுற்பத்தியாகும் பண்டம் சொற்ப விலையாக இருப்பின் அப் பண்டத்தை உள் நாட்டில் உற்பத்தி செய்வதைவிட இறக்குமதி செய்வதுதான் நலம் என்று கருதியதாலும், அதே போன்று எந்தப் பண்டத்தை மிகக் குறைந்த அடக்க விலையில் உற்பத்தி செய்து அயல்நாட்டில் விற்க இயலுமோ அவற்றை உற்பத்தி செய்ய வேண்டியது இன்றியமையாததெனவும் கருதினர். தடங்கலற்ற வர்த்தகத்தின் (Free Trade) அடிப்படையில் ஒவ்வொரு நாடும் மிகக் குறைந்த அடக்க விலையில் உற்பத்தி செய்யத்தகு பண்டங்களையே ஊக்குவிக்கும் எனலாம்.

ஆதம் ஸ்மித் (Adam Smith) என்பவர் முதன்முதலில் தடங்கலற்ற வர்த்தகக் கொள்கை (Free Trade) என்ற முறையை ஆராய்ந்து முடிவு செய்தார். ஆயினும் இக் கொள்கை மேலெழுந்த வாரியாக விளக்கமின்றி நின்றுவிட்டது. அவர் இதைப் பற்றி விளக்கும் முன்னரே அநேகப் பண்டைய பொருளியல் வல்லுநர்கள் அடக்க விலை ஒப்பிடல் விதியைப் பற்றி எடுத்துக்காட்டாக அனுமான முறையில் குறிப்பிட்டுள்ளனர். 1815ஆம் ஆண்டில் டாரன்ஸ் (Torrens) என்ற அறிஞர் 'அயல்நாட்டுத் தானிய வர்த்தகம்' என்ற கட்டுரையில் கூறியது பின்வருமாறு :

'இங்கிலாந்து தன்வசமுள்ள மூலதனத்தைச் சீரான முறையில் துணி உற்பத்தியில் ஈடுபடுத்திச் செம்மையான வகையில் உற்பத்தியைப் பெருக்கி, போலந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்து,

பதிலுக்கு அவர்களிடமிருந்து தானியத்தை இறக்குமதி செய்வதே மேல். ஏனெனில், இங்கிலாந்து நாட்டு வயல்கள் மிகவும் வளம் பெற்றதாயிருப்பினும், அவைகளைக் கொண்டு உற்பத்தியாகும் தானியத்தின் அடக்க விலை போலந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தானியத்தைவிட அதிக விலையுள்ளதாக இருக்கும். இந்த ஒரே காரணத்தால் மூலதனத்தை நிலத்திலிட்டுப் பயனடைவதைவிட, துணி உற்பத்தியில் முடக்கி அதிக இலாபம் பெறலாம்.'[1]

டாரன்ஸ் அவர்கள் 1815-ல் தன் கட்டுரையில் அடக்கவிலை ஒப்பிடல் விதியைப் பற்றி எடுத்துக்காட்டாகச் சுருக்கிக் கூறியுள்ளார். 1817-ல் முதன் முதலாக இதை ஒரு விதியாக (Rule) ஆழ்ந்த விளக்கங்களுடன் டேவிட் ரெகார்டோ (David Ricardo) வர்ணித்துள்ளார். இக் கொள்கைக்கு முதன் முதலாக வித்திட்டவர் டாரன்ஸா அல்லது டேவிட் ரெகார்டோவா என்ற சர்ச்சையில், செலிக்மன்[2] லேஸ்ஸர்[3] இவ்விருவரும் டாரன்ஸ் என்பவர்தான் முன்னோடி எனக் கூறுகின்றனர். ஆயினும், ஆலந்து (Holland) என்டவர் இக் கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

டேவிட் ரெகார்டோவின் விளக்கம்

'தடங்கலற்ற வர்த்தக நிலையில் ஒவ்வொரு நாடும் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு குறிப்பிட்ட பண்ட உற்பத்தி முறையில் மேம்பாட்டை எய்துகிறது. குறைந்த அடக்க விலையில் மிகவும் சீரிய உற்பத்தியாகத் திகழ்வதால், வேறெந்த நாட்டிலும் அவ்வளவு குறைவான உண்மை அடக்க விலையில் உற்பத்தி செய்ய இயலாது. இந்த உண்மை அடக்க விலை (Real Cost) ஏனைய இதர நாட்டின் அடக்க விலையோடு ஒப்பிட்டால் இதர நாடுகள் அப் பண்டத்தை உற்பத்தி செய்யாது. இந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும். உள் நாட்டில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நட்டத்தைவிட இறக்குமதி செய்து இலாபம் பெறக் கூடும் எனலாம்'.

பண்டைப் பொருளியல் வல்லுநர்கள் அடக்க விலையைக் கணக்கிட, தொழிலாளரின் உழைப்பு நேரத்தை அளவிடும் கருவியாகப் பயன்படுத்தி வந்தனர். பண்டமாற்றம் நடந்த காலத்தில்

1 Torrens—An Essay on External Corn Trade (London, 1815), p. 364-365.

2 E. R. Seligman—Essays in Economics (New York 1925), p. 707.

3 E. Lasser—Untrsuchengeu Zur Geschesunt Der-National Economics 1881), p 82-83.

கூட அப் பண்டத்தை உற்பத்தி செய்ய தொழிலாளர் உழைப்பின் விகிதத்தைக் கணக்கிட்டு அதற்கேற்ப வேருெரு பண்டத்தை மாற்றமாகப் பெற்றனர். எடுத்துக்காட்டாக எட்டு மணி நேர உழைப்பில் ஒரு துணி உற்பத்தியாகிறது. நான்கு மணி நேர உழைப்பில் ஒரு மரச் சாமான் தயாராகிறது. 2 மரச் சாமான் களேக் கொடுத்து ஒரு துணியைப் பெறக் கூடும். இவர்கள் கணக்கிடும் முறையாவது ஒரே விலேயுள்ள பண்டங்களுக்கு ஒரே விகிதமுள்ள தொழிலாளரின் உழைப்பு இருக்க வேண்டும் என்று அனுமானிக்கப்படுகிறது. இதில் உண்மை புலனுகிறது.

மேலும் சில அனுமானங்களே ஆராய்வோம் :

(1) உற்பத்திக்கான மூலகாரணியாகத் தொழிலாளர்களே மட்டுமே கணக்கிடல் வேண்டும்.

(2) எல்லாத் தொழிலாளர்களும் தரத்திலும் உழைப்பிலும் அவதியடைவதிலும் ஒரே சீராக உள்ளதாகக் கொள்ள வேண்டும்.

(3) தொழிலாளர் இடப் பெயர்ச்சி செய்து போகும் தன்மையுடையவர் என அனுமானிப்பதில் தவறென்றுமில்லே.

(4) சாதாரணமாக உழைப்பின் உயரிய பலனேப் பெற, போட்டி மனப்பான்மை இவர்களிடையே நிலவும்.

மேலே கூறியுள்ள அனுமானங்கள் நடைமுறையில் ஏற்கக் கூடியவையல்ல. இவை ஏட்டளவில்தான் உண்மை. தொழிலாளரின் உழைப்பை மட்டிலும் மூல காரணியாகக் கொண்டு கணக்கிடுவது சரியான வழியெனக் கருத இடமில்லே. தொழில் உழைப்பைத் தவிர இதர காரணிகளே அப்பாற்படுத்துதல் தவறெனக் கூறலாம். உற்பத்தியின் உண்மை அடக்க விலேயைக் கணக்கிட தொழிலாளரின் உழைப்பு, மூலதனம், மேற்பார்வை, நிலக் குடிக்கூலி முதலியவைகளேயும் சேர்த்த பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும்.

டி. ரெகார்டோவின் (D. Ricardo) பாட்டாளி மதிப்பீட்டு முறைக் (Labour Theory of Value) கொள்கையின் அனுமானங்களே முன்னர் கூறியுள்ளோம். நாட்டிலுள்ள பாட்டாளிகள் அனேவரையும் ஒரே சீரான உழைப்பு வரம்பு பெற்றவர்கள் எனக் கருத இடமில்லே. திறம்பட உழைப்போரும் உள்ளனர். அதே போன்று குற்றேவல்களேக்கூடச் செம்மையாகச் செய்ய அருகதையற்றவர்களும் காணப்படுகின்றனர். உற்பத்திக்கான காலத்தை அளவையாகக் கருதி அதினின்று அடக்க விலேயை ஒப்பிடல்

தவறாகும். உற்பத்தித் தரத்திலும் குணத்திலும் பல்வேறு பிரிவுகள் உண்டென்று கூறலாம்.[1] உற்பத்தித் தளவாடப் பொருள்களில் சேமித்துள்ள பாட்டாளியின் உழைப்பின் அளவைக் கணக்கிடுவது கடினம். மேலும் பாட்டாளிகளிடையே தடங்கலற்ற போட்டாப்போட்டி நிகழக்கூடும் எனலாம். போட்டியிலீடுபடாப் பாட்டாளி வர்க்கத்தினரைப் பற்றி இவர்கள் சிந்தித்ததாகவே தெரியவில்லை.

நாட்டிலுள்ள பாட்டாளிகள் ஒரே சீராக அமைவதோடல்லாது இடப்பெயர்ச்சி செய்து கொண்டிருப்பார்கள் என்றும், நாட்டை விட்டு அயல் நாடுகளுக்குப் போவார்கள் என்றும் அனுமானித்தனர். அதன் விளைவாகப் பல்வேறு நாடுகளில் உற்பத்தியாகும் பண்டங்களின் விலையில் ஏற்ற இறக்கம் ஏற்படுகிறதென்ற காரணத்தை இவற்றின் மூலம், பண்டைய பொருளியல் வல்லுநர்கள் கற்பிக்கின்றனர். ஒரே நாட்டிலுள்ள பாட்டாளிகளைப் பொருத்தமட்டில் இடப் பெயர்ச்சியின் காரணத்தை யொட்டி உள்நாட்டிலுற்பத்தியாகும் பண்டங்களின் விலையில் ஏற்றத் தாழ்வு ஏற்படுமா? பொதுவாக ஒரு பண்டத்தின் விலை தேவை, அளிப்பு இவைகளையனுசரித்தே நிலவும். பாட்டாளியின் உழைப்பால் நான்கு ஆப்பிள் பழங்களைத் தோற்றுவிக்கலாம் அல்லது 12 மாம்பழங்களை உற்பத்தியாக்கவியலும் என்று அனுமானித்துக் கொள்வோம். ஆயினும் உள்நாட்டில் இவை இரண்டிற்குமிடையே உள்ள மாற்ற விகிதம் 1 : 2 என்றிருப்பின், ஆப்பிள் உற்பத்தியில் ஈடுபட்ட பாட்டாளிகள் அங்கிருந்து மாறி மாம்பழத்தில் ஈடுபடக் கூடும். இதனால் குறைந்த உழைப்பினால் முழு அளவு மாற்றப் பண்டம் கிடைக்கலாம். மேலே கூறியுள்ள எடுத்துக்காட்டின்படி அவர்களுக்கு ஆறு ஆப்பிள்கள் கிடைக்கலாம். நேரடியாக ஆப்பிள் உற்பத்தியில் ஈடுபட்டால் அவர்களுக்கு 4 ஆப்பிள்கள் மட்டிலும் கிடைக்கும். ஆப்பிள் உற்பத்தியில் ஈடுபட்ட பாட்டாளிகள் சிறிது சிறிதாக மாம்பழ உற்பத்தியில் ஈடுபடுவார்கள். இதனால், ஆப்பிள் உற்பத்தியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கைக் குறைந்து மாற்ற விகிதம் முன்போல் 1 : 3 ஆகும் வரை நடந்து கொண்டிருக்கும்.

இரு நாடுகளுக்கிடையே மேற்கூறிய வண்ணம் பாட்டாளிகள் இடப் பெயர்ச்சி செய்து மாறமாட்டார்கள். ஏனெனில் பல்வேறு நாடுகளுக்கிடையே பாட்டாளிகளின் இடப்பெயர்ச்சி இல்லை

[1] Delbert A. Snider—Introduction to International Economics-Richard D. Irwin' Inc. Home wood, Illinois, p. 33, 4th Edition, 1967.

என்ற அனுமானமே காரணம். இரு நாடுகளுக்கிடையே பண்ட மாற்ற விகிதத்திற்கும் பாட்டாளியின் விகிதத்திற்கும் பேதமிருப்பின் அப் பண்டத்தில் இலாபம் பெறத் தக்கவகையில் அயல்நாட்டு வர்த்தகம் நடக்கும் எனலாம்.

பல்வேறு நாடுகளில் காணப்படும் அடக்க விலைகளில் வேறுபாடுகள் தோன்றக் கூடும். அவை வரம்பற்றும் (absolute), ஒப்பிடத்தக்க முறையிலும் சமமாகவும் அமையக்கூடும். இம் மூன்று வகைகளிலும், முதலிரண்டின் காரணமாகப் பன்னாட்டு வர்த்தகம் நடைபெறக் கூடும் எனலாம். இரு நாடுகளில் அதே தன்மையுடைய இரு பண்டங்களை ஒப்பிட்டு அடக்க விலைகளில் மூவகை மாறுபாடுகளை எடுத்துக்காட்டாகச் சித்திரிப்போம். கீழ்க்கண்ட அட்டவணையைப் பார்க்கவும்.

| I | | | II | | | III | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வரம்பற்ற பேதமுள்ள அடக்கவிலை | | | போட்டியிடத் தகு பேதமுள்ள அடக்க விலை | | | அடக்க விலைகளில் ஒரே சமமான பேதம் | | |
| பாட்டாளியின் உழைப்பின் அடிப்படையில் பண்டத்தின் அடக்கம் | | | பாட்டாளியின் உழைப்பின் அடிப் படையில் பண்டத் தின் அடக்கம் | | | பாட்டாளியின் உழைப்பின் அடிப் படையில் பண்டத் தின் அடக்கம் | | |
| நாடு | க | ச | நாடு | க | ச | நாடு | க | ச |
| ஆ | 4 | 8 | ஆ | 8 | 4 | ஆ | 8 | 4 |
| ஐ | 8 | 4 | ஐ | 4 | 3 | ஐ | 4 | 2 |

முதல் கட்டத்தில் நாடு 'ஆ', 'க' என்ற பண்ட உற்பத்தியில் வரம்பற்ற சௌகரியங்கள் பெற்றுள்ளது. நாடு 'ஐ' என்பது 'ச' என்ற பண்ட உற்பத்தியில் வரம்பற்ற சௌகரியங்களைப் பெற்றுள்ளது. இவ்விரு நாடுகளையும் ஒன்றாகக் கணக்கிட்டுப் பார்க்கின் 'ஆ' என்ற நாடு 'க' என்ற பண்ட உற்பத்தியை ஊக்குவித்து 'ச' என்ற பண்டத்தை இறக்குமதி செய்யும் அதே போன்று 'ஐ' என்ற நாடு 'ச' என்ற பண்டத்தை உற்பத்தி செய்து கொண்டும், 'க' என்ற பண்டத்தை இறக்குமதி செய்யும்.

இரண்டாம் கட்டத்தில் நாடு 'இ' இவ்விரு பண்டங்களையும் நாடு 'ஆ'வை விடக் குறைந்த அடக்க விலைகளில் உற்பத்தி செய்யக்கூடும். பொதுவாகக் 'க' என்ற பண்ட உற்பத்தியில் 'ஆ' என்ற நாடு மிகுந்த இலாபம் பெறும். 'ஆ' என்ற நாட்டில் 'ச' என்ற பண்ட உற்பத்தியில் இடையூறுகள் குறைவே என்று அனுமானிக்கலாம். இவ்விரு நாடுகளையும் ஒன்றாக நோக்கின், 'ஆ' என்ற நாடு 'க' என்ற பண்ட உற்பத்தியிலும், 'இ' என்ற நாடு 'ச' என்ற பண்ட உற்பத்தியிலும் ஈடுபடுவது வரவேற்கத் தக்கது என்பது புலனாகும்.

மூன்றாவது கட்டத்தில் 'இ' என்ற நாடு இவ்விரு பண்டங்கள், 'க' 'ச' இரண்டையும் மிகவும் குறைந்த விலைகளில் நாடு 'ஆ'வை விட உற்பத்தி செய்யக்கூடும். இவ்விரு நாடுகளுக்கிடையே பரஸ்பரம் அயல்நாட்டு வர்த்தகம் நடைபெறவியலாது. ஏனெனில், இவ்விரு நாடுகளிலும் அடக்க விலைகளின் விகிதம் ஒரே சமமாக இருக்கின்றன. எந்த நாடும் இலாபம் பெற வசதி கிடையாது. தனிப்பட்ட முறையில் எந்த நாடும் எந்தவிதமான பண்ட உற்பத்தியிலும் ஈடுபடுவதில் பலனில்லை என்பது தெரிந்தது.

இக் கொள்கையை விளக்க மேற்கூறிய எடுத்துக்காட்டை விவரித்துள்ளோம். இக் கொள்கைக்கான அடிப்படை அனுமானங்களை இங்குக் கூற முற்படுவோம்.

(அ) பண மதிப்பீடு இல்லை எனவும்,

(ஆ) இரு நாடுகளும், இரு பண்டங்களும் மட்டுமே உள்ளன வென்றும்,

(இ) ஓரிடமிருந்து பிறிதோர் இடத்திற்கு மாற்றம் செய்வதற்காகத் தனிப்பட்ட செலவுகள் இல்லையெனவும்,

(ஈ) இவ்விரு நாடுகளிலும் உற்பத்திச் சீரான பலன் என்ற (Constant Return) சட்டத்தை ஒட்டியே நடந்து வருகின்றன எனவும்,

(உ) பல்வேறு பண்டங்களின் விலைகள் அவற்றின் இயல்பான அடக்கவிலை உற்பத்திக்கேற்றவாறு அமையும் என்றும்,

(ஊ) எல்லா மூல காரணிகளுக்கும் முழு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளன எனவும்,

(எ) தடங்கலற்ற போட்டி இவைகளுக்குள் நிகழ்கின்றது எனவும் அனுமானிக்கலாம்.

மேலே காணப்படும் கொள்கை மிக எளிதில் புரியும்வண்ணம் பல்வேறு அனுமானங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. அனுமானம் ஒவ்வொன்றாக நீக்கியும், இடையிடையே சிக்கல்களைப் புகுத்தியும் இதை ஆராய்வோம்.

### பண மதிப்பீட்டைப் புகுத்தியதன் பின்

இன்றைய உலகில் பண மதிப்பீட்டின் பேரில் வர்த்தகம் நடந்து வருகிறது. குறிப்பாகப் பன்னாட்டு வர்த்தகம் பணக் கணக்கின் பேரில்தான் அல்லது பண்டமாற்றல் முறையில் அல்ல என வலியுறுத்துகிறோம். இறக்குமதியாளர்களும், ஏற்றுமதி யாளர்களும் தாங்கள் வர்த்தகம் புரிந்த சரக்குகளின் விலைகளை யொட்டிப் பாக்கிக் கணக்கைக் கருதுகின்றனரே அன்றி அப் பண்டங்களிலுள்ள பாட்டாளி உழைப்பு விகிதத்தை அனுசரித்து அல்ல. முன்கூறிய இரண்டாவது கட்டத்திலுள்ள போட்டியிடத்தகு அடக்கவிலைப் பேதம் என்றதில் கூறியுள்ள பாட்டாளியின் உழைப்பு விகிதத்தைப் பணக் கணக்கில் மாற்றி யமைத்துப் பண அடிப்படையில் வரம்பற்ற பேதமாகக் காட்டலாம்.

| நாடு | ஒரு பண்டத்தின் உற்பத்தி விலை பாட்டாளியின் உழைப்பு அடிப்படையில் | | உழைப்பு அடிப்படையில் கூலிப் பணம் | அடக்க (விலை) ஒரு பண்டத்தின் விலை | |
|---|---|---|---|---|---|
| | க | ச | | க | ச |
| ஆ | 8 | 4 | 1 | 8 | 4 |
| ஐ | 4 | 3 | 1·8 | 7·2 | 5·4 |

மேலே குறிப்பிட்ட அட்டவணையில் 'ச' என்ற பண்டத்தின் வரம்பற்ற விலை 'ஆ' என்ற நாட்டில் மிகக்குறைவான விலையிலும், 'க' என்ற பண்டம் 'ஐ' என்ற நாட்டில் குறைவாகவும் உள்ளது. எனவே, 'ஆ' என்ற நாடு 'ச' என்ற பண்ட உற்பத்தியில் மேம்

பாட்டையடைந்து 'க' என்ற பண்டத்தை 'ஐ' என்ற நாட்டி லிருந்து இறக்குமதி செய்து அதற்குப் பதிலாக 'ச' என்ற பண்டத்தை மாற்றிக்கொள்ளக் கூடும். அதேபோல் 'ஐ' என்ற நாடு 'க' என்ற பண்ட உற்பத்தியில் மேம்பாட்டையடைந்து 'ச' என்ற பண்டத்தை 'ஆ' என்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்து அதற்குப் பதிலாக 'க' என்ற பண்டத்தை மாற்றிக் கொள்ளக் கூடும்.

முன்னர் விளக்கியுள்ளபடி பாட்டாளி உழைப்பு அடக்க விலையில் போட்டியிடத்தகு பேதம் காணக் கூடும். இப் பண்டங் களின் விலை தீர்மானம் செய்யும்போது இவ்விரு நாடுகளிலும் பட்டாளியின் கூலி விகிதம் ஆதார அடிப்படையின்றி ஒப்பிடப்படு கிறது. இது நமது முடிவைப் பாதிப்பதில்லை. ஏனெனில் பாட்டாளி யின் கூலி விகிதமும், ஒப்பிடத்தகு பாட்டாளியின் உழைப்பு அடக்க விகிதமும் உயர்வு தாழ்வெல்லைகளுக்குள் அமையும். 'ஆ' என்ற நாட்டில் பாட்டாளியின் கூலி ரூபாய் ஒன்று என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு இருப்பின் 'ஐ' என்ற நாட்டில் பாட்டாளியின் கூலி ரூபாய் இரண்டாக இருக்கும். ஏனெனில் ஆ, ஐ இவ்விரு நாடுகளுக்கிடையே பாட்டாளியின் உழைப்பு விகிதம் 2 : 1. 'ஐ' என்ற நாட்டில் உற்பத்தி அடக்கவிலை ரூ. இரண்டைவிட அதிகரிக்கிறது எனக் கொள்வோம். இதனால் 'க' என்ற பண்டத்தின் விலை 'ஐ' என்ற நாட்டில் 'ஆ' என்ற நாட்டு விலையைவிட அதிகரிக்கும். இதன் விளைவாக 'ஐ' என்ற நாடு இதன் ஏற்றுமதியைத் தவிர்த்து இறக்குமதி செய்ய ஆரம் பிக்கலாம். 'க' என்ற பண்டத்துடன் 'ச' என்ற பண்டத்தையும் இறக்குமதி செய்யக்கூடும். எனவே 'ஐ' என்ற நாடு எல்லாப் பண்டங்களையும் இறக்குமதி செய்யுமே ஒழிய ஏற்றுமதி செய்ய இயலாது. இதன் விளைவாக 'ஐ' என்ற நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலையில் கடன் ஏற்படும். இவ்விரு நாடுகளும் பொன் கட்டி மாற்ற முறையில் அமைந்திருப்பின், 'ஐ' என்ற நாடு தன் வசமுள்ள பொன்னை 'ஆ' என்ற நாட்டிற்குக் கடனைச் சரிக்கட்ட அனுப்பிவைக்கும்.

பொன் வெளியேறிய காரணத்தால் 'ஐ' என்ற நாட்டின் உள் நாட்டு விலைகள் சரியக்கூடும்; கூலி வரம்பும் குறைய ஆரம்பிக்கும். 'ஆ' என்ற நாட்டில் விலைகளும் கூலியும் சரசர என ஏற ஆரம் பிக்கும். இவ்விரு நாடுகளுக்குமிடையே கூலி விகிதம் 2 : 1 ஆகும் வரை ஏற்ற இறக்கம் நிகழக்கூடும். அதே போன்று 'ஐ' என்ற நாட்டில் 'ச' என்ற பண்டத்திற்கு உள்ள பாட்டாளியின் உழைப்பு விகிதத்தையொட்டி ஆ : ஐ என்ற நாடுகளில் முறையே 4 : 3 என

இருப்பதால் 'ஐ' என்ற நாட்டில் கூலி ரூ. 133-க்குக் கீழே போக நியதியில்லை. எந்த நாடு ஏனைய நாடுகளைக் காட்டிலும் உற்பத்திச் செலவைச் சுருக்கி இதர வசதிகளுடன் உற்பத்தி செய்யக் கூடிய நிலையில் உள்ளதோ அந்நாட்டில் பாட்டாளியின் கூலி, தரம் உயர்வாக இருக்கக்கூடும். பொருள் துறையில் முன்னேற்ற மடைந்த நாடுகள் பின் தங்கிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உற்பத்தியாகும் பொருள்களின்மீது இறக்குமதிச் சுங்க வரியை வசூலிக்கின்றனர்.

தங்களுடைய நாட்டிலுள்ள பாட்டாளிகளுக்குக் கிடைக்கும் உயரிய வாழ்க்கைத் தரத்திற்குப் போட்டியாக இச் சரக்குகள் வந்து குவிந்து அவர்களுடைய வேலை வாய்ப்பைக் குறைக்கும். உயர்ந்த வாழ்க்கைத் தரமுள்ள நாடு என்றுள்ள காரணத்தினுல் அந்நாட்டிற்கு உற்பத்தியில் மேம்பாட்டை எய்திய காரணத் தாலும், பிற நாடுகளுடன் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. முன்னேற்றமடைந்த நாட்டில் உற்பத்தி அடக்க விலை குறைவாக இருக்கக் காரணம் உற்பத்தி முறைகளில் மேம்பாட்டையடைந்ததே ஆகும். அதே போன்று பொரு ளாதார முறையில் பின் தங்கிய நாடுகளில் உற்பத்தி அடக்கவிலை குறைவாக இருக்கக் காரணம் பாட்டாளியின் மிகக் குறைந்த கூலியென ஒப்பிடலாம். மேலும் பின் தங்கிய நாட்டுக் காவலர்கள் இறக்குமதிச் சுங்கவரி விதித்து மேல் நாட்டிலிருந்து வரும் உற்பத்திப் பண்டங்கள் தங்கள் நாட்டிலுள்ள மூலதனம், உற்பத்தியாளர்களின் முறைகள் இவைகளுக்குக் குந்தகம் விளை விப்பவை என்றும், நாட்டினுள் வளர்ச்சியாகும் தொழில்களைத் தொடர்ந்து வளர விடாமல் தடுக்கின்றன எனவும் வாதம் புரியக் கூடும். இதன் விளைவாக எந்த நாடும் ஏற்றுமதி இறக்குமதிகளால் நன்மையடையாது; நட்டமடைவது திண்ணம். எனவே பொருள் துறையில் முன்னேறிய நாடுகள் இறக்குமதிச் சுங்கவரி விதித்தலைத் தவிர்க்க வேண்டும்.

அடக்கவிலை ஒப்பிடல் விதியில் கூறப்படும் இரு அனுமானங்கள் குறிப்பாகப் போக்குவரத்துச் செலவுகள் இல்லையென்பது, உற்பத்தியில் சமநிலை அடக்க விலைதான் இருக்கக்கூடும் என்பது. இவற்றின் விளைவாக ஒவ்வொரு நாட்டிலும் ஒரே ஒரு பண்டத்தை மட்டிலும் உற்பத்தி செய்வதில் அவர்களுக்குப் பலன் கிடைக்கும் என்பது ஏற்றுக்கொள்ளவியலா வாதம். எந்த நாட்டிற்குப் பண்ட உற்பத்தியில் இதர நாட்டினைக் காட்டிலும் உற்பத்தி அடக்க விலை அனுகூலங்களைப் பெற்றிருக்கிறதோ அந்த நாடு உள்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யவும், அயல்நாட்டின் தேவையைப்

பூர்த்தி செய்யவும் உற்பத்தி செய்யக் கூடும். சொந்த உற்பத்தி முறைகளால் உள்நாட்டின் தேவையைச் சமாளித்த பிறகே அயல் நாட்டின் தேவைகளைப் பற்றிக் கவனிக்கத் தொடங்கும். வர்த்தகத்தில் ஈடுபட விழையும் நாடுகளில் ஒன்று பெரிய நாடாகவும் மற்றொன்று சிறிய நாடாகவும் இருப்பின் இந்த நிலை ஏற்படலாம் அல்லது உற்பத்தி செய்யத்தகு பண்டங்களில் ஒன்று மிகவும் தவிர்க்கவியலாததென்றும் மற்றொன்று மிகவும் சாதாரணமானதாகவும் இருக்கக் கூடும்.

### இரு பண்டங்களுக்கும் அதிகமாகப் புகுத்தினால்

நமது அனுமானங்களில் இது வரையிலும் இரண்டு பண்டங்களே வர்த்தகத்திற்கு உள்ளன என்று கொண்டிருந்தோம். நடைமுறையில் அவ்வாறன்று. பலதரப்பட்ட சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி இவ்விரண்டிலும் பயன் பெருகின்றன. முன்னரே எடுத்துக்காட்டாகக் கூறிய ஆ,' 'ஐ' என்றுள்ள இரு நாடுகளும் பல்வேறு வகையான பண்டங்களை மாற்றிக் கொள்வதாக அனுமானித்துக் கொள்வோம். 'ஆ' என்ற நாடு ஏற்றுமதி செய்யும் பண்டங்களினால் கொடுப்பல் நிலையில் பலனைப் பெறும். அதேபோன்று இவற்றின் இறக்குமதியினால் 'ஐ' என்றுள்ள நாட்டிற்குக் கொடுப்பல் நிலையில் பாதகம் விளைவிக்கும். எதிரிடையில் 'ஐ' என்ற நாடு அளவு கடந்த பண்டங்களை 'ஆ' என்ற நாட்டிற்கு ஏற்றுமதி செய்யின் அதனுடைய வாணிபக் கொடுப்பல் நிலையில் சாதகநிலை ஏற்படும்.

கீழே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டைக் கவனிக்கவும் :

$$\frac{\text{ல}_{\text{ஆ}}}{\text{ல}_{\text{ஐ}}} < \frac{\text{ம}_{\text{ஆ}}}{\text{ம}_{\text{ஐ}}} < \frac{\text{ந}_{\text{ஆ}}}{\text{ந}_{\text{ஐ}}} < \frac{\text{வ}_{\text{ஆ}}}{\text{வ}_{\text{ஐ}}} \ldots < \frac{\text{ர}_{\text{ஆ}}}{\text{ர}_{\text{ஐ}}}$$

ல, ம, ந, வ...ர என்ற பல்வேறு பண்டங்களில் ஆ என்ற நாட்டுடன் ஐ என்ற நாடு வர்த்தகம் செய்வதாக அனுமானித்துக் கொள்வோம். ஆ என்ற நாட்டில் ஒரு குறிப்பிட்ட பாட்டாளியின் உழைப்பளவில் $\text{ல}_{\text{ஆ}}$, $\text{ம}_{\text{ஆ}}$, $\text{ந}_{\text{ஆ}}$, $\text{வ}_{\text{ஆ}}$, $\text{ர}_{\text{ஆ}}$ என்ற பண்டங்களின் எண்ணிக்கை அதேபோன்று ஐ என்ற நாட்டில் ஒரு குறிப்பிட்ட பாட்டாளி உழைப்பளவில் $\text{ல}_{\text{ஐ}}$, $\text{ம}_{\text{ஐ}}$, $\text{ந}_{\text{ஐ}}$, $\text{வ}_{\text{ஐ}}$, $\text{ர}_{\text{ஐ}}$ என்ற பண்டங்களின் எண்ணிக்கை எனக் கருதுவோம். சாதாரண நிலையில் தடங்கலற்ற வர்த்தகம் (Free Trade) நடப்பின் ஆ என்ற நாடு முறையே ர, வ, ந, ம, ல என்ற பண்ட உற்பத்தியில் மேம்பாட்டை இறங்கு வரிசையில் அடையும். அதாவது ர என்ற பண்ட உற்பத்தியில் ஆ என்ற நாடு மிகவும் குறைந்த அடக்கவிலையைப் பெறும். ஆனால், அதேசமயத்தில்

ல என்ற பண்ட உற்பத்தியில் ஆ என்ற நாடு மிகவும் கூடுதலான அடக்க விலையைப் பெறும். ஐ என்ற நாடு மேற்கூறிய நிலைமையில் ல, ம, ந, வ, ர என்ற பண்ட வரிசையில் மேம்பாட்டை இறங்கு வரிசையில் பெறும். குறிப்பாக ல என்ற பண்ட உற்பத்தியில் ஐ என்ற நாட்டில் மிகக் குறைந்த அடக்க விலை அதே சமயத்தில் ர என்ற பண்ட உற்பத்தியின் அடக்கவிலை மிகவும் அதிகம். ஐ என்ற நாடு ல, ந என்ற பொருள்களை (பண்டங்களை) ஏற்றுமதி செய்தும், ம என்ற பண்டத்தை இறக்குமதி செய்யலாம் எனக் கருத இடமில்லை. அடக்கவிலை ஒப்பிடல் விதியை அனுசரித்து ஒவ்வொரு நாட்டின் ஏற்றுமதியும் இறக்குமதியும் ஏற்படலாம் எனக் கொள்வது சரியன்று என வலியுறுத்துகிறோம். எந்தக் குறிப்பிட்ட எல்லைக் கோட்டிலும் வாணிபக் கொடுப்பலில் சமநிலையேற்படும் என்பதையொட்டி ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நடைபெறும். அல்லது பதில் தேவைகளுக்கேற்ப இரு நாட்டிலும் (Receprocal Demand) பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதி அமையக்கூடும். பதில் தேவைகளில் வரும் பண்டங்களின் விலையை அனுசரித்து வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்ற இரக்கங்கள் அமையும். வாணிபக் கொடுக்கலில் சமநிலையை எய்த 'ஐ' என்ற நாடு 'ல', 'ம', 'ந' என்ற பண்டங்களை 'ஆ' என்ற நாட்டிற்கு ஏற்றுமதி செய்து 'ஆ'-லிருந்து 'ர', 'வ' என்ற பண்டங்களை இறக்குமதி செய்தது. திடீரென 'ஐ', 'ந' என்ற பண்டங்களை ஏற்றுமதி செய்யாது 'ஆ' என்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யின், இவ்விரு நாடுகளுக்குமிடையே உள்ள கொடுக்கல் நிலைமாறி 'ஆ' என்ற நாட்டிற்குப் பாதகமாக அமையும். இவ்விரண்டு நாடுகளும் பொன்கட்டித் திட்டத்திலிருப்பின் 'ஐ' என்ற நாட்டில் இருந்து தங்கம் (பொன்) அனுப்பப்பட்டு 'ஆ' என்ற நாட்டை வந்தடையும். இதன் விளைவாக 'ஆ' என்ற நாட்டில் விலை, கூலி விகிதங்கள் சரசர என ஏறக்கூடும். 'ஐ' என்ற நாட்டிலிருந்து பொன் வெளியேறிய காரணத்தால் விலை, கூலி இவைகளில் இறக்கமேற்படும். 'ஐ' என்ற நாடு இறக்குமதியை நிறுத்தி முன் கூறிய 'ந' என்ற பண்டத்தை ஏற்றுமதி செய்யக் கூடும். அதே போன்று எதிரிடை விகிதத்தில் 'ஆ' என்ற நாடு முயன்றால் வாணிபக் கொடுப்பலில் சமநிலையை அடையக் கூடும்.

**இவ்வர்த்தகம் இரண்டு நாடுகளையன்றி இன்னும் அதிகப்படியான நாடுகளுடன் நடப்பின்**

இந்தக் கொள்கையை இரு நாடுகளுக்கு மேலும் அதிகப்படியான நாடுகளுடன் வர்த்தகம் செய்வதாக ஏற்றுக் கொள்ளக் கூடும். ஒவ்வொரு நாடும், உள்நாட்டின் அடக்கவிலை, பன்னாட்டு

உற்பத்தி அடக்கவிலையைவிடக் குறைவாக இருப்பின் அப் பண்டங்களை ஏற்றுமதி செய்ய முன்வரும். அதேபோன்று இதர நாடுகளின் அடக்கவிலை உள்நாட்டு அடக்கவிலையைக் காட்டிலும், குறைவாக இருப்பின் அவற்றை இறக்குமதி செய்ய முன்வரும். எந்தக் குறிப்பிட்ட பண்டம் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்பது அடக்கவிலை, ஒப்பிடல் விதியை ஒட்டித் தீர்மானிப்பது கிடையாது. ஒவ்வொரு நாட்டின் பதில் தேவையைக் கணக்கிட்டு ஏற்றுமதி இறக்குமதியைத் தீர்மானம் செய்ய முயலக்கூடும்.

| பண்டம் | பாட்டாளி உழைப்பின் அடிப்படையில் பண்டத்தின் அடக்க விலை குறித்த அளவில் | | |
|---|---|---|---|
| | இந்தியா | பாகிஸ்தான் | பர்மா |
| துணி | 1 | 1 | 1 |
| கோதுமை | 2 | 3 | 4 |

இரு நாடுகளன்றி அதற்கு மேம்பட்ட எண்ணிக்கைகளில் அயல் நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் என்ற கொள்கையை விளக்க மேற்கண்ட எடுத்துக்காட்டை விளக்குவோம். இந்தியா, கோதுமையை, பாகிஸ்தானையும், பர்மாவையும் விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்கிறது. பர்மா துணியை பாகிஸ்தானையும், இந்தியாவையும்விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்கிறது. அவ்வாறானால் பாகிஸ்தானின் நிலையென்ன? அந்நாடு பர்மாவைக் காட்டிலும் கோதுமை உற்பத்தியில் குறைந்த செலவு செய்யும். அதேபோன்று இந்தியாவைக் காட்டிலும் துணி உற்பத்தியில் குறைந்த செலவு செய்யும் எனலாம். கோதுமைக்கும் துணிக்கும் உள்ள மாற்று விகிதம் எது என்று தெரியாத நிலை வரையிலும் பாகிஸ்தான் எந்தப் பண்டத்தை மிகக் குறைந்த செலவில், நிறைந்த அளவில் உற்பத்தி செய்யும் எனக் கூற இயலாது. இம் மூன்று நாடுகளுக் கிடையே நடைபெறும் பதில் தேவைகளையொட்டி (Reciprocal demand) அதற்கான பட்டியல் (Schedule) படி இவ்விரண்டு பண்டங்களின் மாற்று விகிதத்தைத் தீர்மானிக்கலாம். சம நிலையில் பாகிஸ்தான், இந்தியாவினின்று பர்மாவிற்கு ஏற்றுமதி

யாகும் கோதுமையில் பங்குபெறும். அதே போன்று பர்மா வினின்று இந்தியாவிற்கு ஏற்றுமதியாகும் துணியின் மதிப்பில் பங்கு பெறும், இல்லையேல் இவ்விரு பண்டங்களின் வர்த்தகம் புரியாது வாளாயிருக்கவும் கூடும்.

கோதுமை, துணி இவ்விரண்டிற்கும் உள்ள மாற்று விகிதம் 1 : 2-க்கும், 3-க்கும், இடையில் என்று அனுமானித்தால், பாகிஸ்தான், பர்மாவைப்போன்று துணி உற்பத்தியில் சிக்கனத்தை அடைந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடும். அதேபோன்று இந்தியாவினின்று கோதுமையை இறக்குமதி செய்து கொள்ளும். கோதுமை, துணி இவ்விரண்டிற்கும் உள்ள மாற்று விகிதம் 1 : 3-க்கும், 4-க்கும் இடையே அமைந்தால், பாகிஸ்தான் கோதுமை உற்பத்தியில் இந்தியா போன்று சிக்கன மாக இருந்துகொண்டு, பர்மாவினின்று துணியை இறக்குமதி செய்து கொள்ளும். கோதுமை, துணி இவ்விரண்டிற்கும் உள்ள விகிதம் 1 : 3 என்றிருப்பின், பாகிஸ்தான் இவ்விரண்டு பண்டங் களில் பன்னாட்டு வர்த்தகம் புரியாது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளும்.

### மாற்றத்திற்கான அடக்கச் செலவைப் புகுத்தியபின்

இதுகாறும் நாம் பன்னாட்டு வர்த்தகக் கொள்கையை விளக்கும்போது பண்டங்கள் ஒரு நாட்டைவிட்டு பிறிதொரு நாட்டிற்குப் போகும்போது செலவே ஏற்படுவதில்லை என அனு மானித்து வந்தோம். நடைமுறையில் அவ்வாறு அனுமானிப்பது தவறு. அனுப்புவதற்கு வண்டிக் கூலியும், காப்புறுதிச் (Insurance) செலவும் இன்றியமையாதவை. அடக்கவிலை ஒப்பிடல் விதியில் இவைகளைப் புகுத்துவதால் ஓர் இடையூறும் ஏற்படாது. மாற்றத் திற்கான செலவைப் புகுத்துமுன் இந்நாடுகளில் வர்த்தக அமைப்பு இருந்ததாவது :

$$\frac{க_{ஆ}}{ச_{இ}} < \frac{ச_{ஆ}}{க_{இ}}$$

கஆ, சஆ, என்ற எண்ணிக்கைகள் உள்ள இரு பண்டங்கள் க, ச என்றவை ஒரு குறிப்பிட்ட பாட்டாளி உழைப்பின் அளவில் 'ஆ' என்ற நாட்டில் உற்பத்தியைக் கூறுகிறது. அதே போன்று கஇ, சஇ என்ற அளவையுள் க ச என்று இரு பண்டங்களை 'இ' என்ற நாட்டில் குறிப்பிட்ட பாட்டாளி உழைப் பின் அளவில் தயாரித்தது எனக் கொள்ளலாம்.

$$\frac{க'_{ஆ}}{க'_{இ}} < \frac{ச_{ஆ}}{ச_{இ}} \quad \& \quad \frac{க_{ஆ}}{க_{இ}} < \frac{ச'_{ஆ}}{ச'_{இ}}$$

க'ஆ என்ற எண்ணிக்கை உள்ள 'க' என்ற பண்டத்தை 'ஐ' என்ற நாட்டுப் பாட்டாளி உழைப்பு விகிதத்தில் உற்பத்தி செய்யப்பட்டு 'ஆ' என்ற நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. சஐ' என்ற எண்ணிக்கை உள்ள 'ச' என்ற பண்டத்தை 'ஆ' என்ற நாடு தன் பாட்டாளி உழைப்பு விகிதத்தில் உற்பத்தி செய்து 'ஐ' என்ற நாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறது.

பண அடக்கவிலையில் எவ்வாறு அமையும் என்று கருதுவோம். இவைகளின் தனிப்பட்ட அடக்கவிலைகள் (Absolute Cost) மாற்ற அடக்க விலையை விட அதிகமாக இருந்தால்தான் ஏற்றுமதியோ அல்லது இறக்குமதியோ செய்யப்படும். மாற்ற அடக்க விலையைப் புகுத்துவதால் இரு நாடுகளுக்குமிடையே உள்ள பாட்டாளியின் விகிதம் குறைகிறது. மாற்ற அடக்கவிலையை விடக் குறைவான அடக்க விலையுள்ள பண்டங்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்ய இயலாது போய்விடும். 'ஆ' என்ற நாடு 'ஐ' என்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறது. 'ஐ' என்ற நாட்டின் பண்ட உற்பத்தி விலை 'ஒ' என்ற நாட்டை விட அதிகம் இருக்கக் கூடும். 'ஒ' என்ற நாட்டிலிருந்து 'ஆ' என்ற நாட்டிற்கு மாற்ற அடக்கவிலை கூடுதலாகவும், 'ஆ' என்ற நாட்டிற்கு 'ஐ' என்ற நாட்டிலிருந்து வரும், மாற்ற அடக்கம் குறைவாகி ஏறும் போதுதான் மேற்கூறியபடி இறக்குமதி நடைபெறலாம்.

### மாறும் தன்மையுள்ள உற்பத்தி அடக்கவிலை

நிரந்தர அடக்கவிலை என்றுள்ள அனுமானத்தை ஒப்பிடல் அடக்கவிலை விதியினின்று நீக்கி அதற்குப் பதிலாக மாறும் தன்மையுள்ள உற்பத்தி அடக்கவிலை என்று கொள்வதால் கொள்கையில் எந்தவித வேற்றுமையும் தோன்றாது. ஒப்பிடல் அடக்க விலைகள் என்பதற்குப் பதிலாக வரம்புள்ள ஒப்பிடல் அடக்க விலை எனத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். நிரந்தர அடக்க விலையின் கீழ், வரம்புள்ள அடக்கவிலையும் (Marginal cost) சராசரி (Average) அடக்கவிலையும் சமமாக இருக்கும். இவ்விரு சொற்களும் ஒரேபொருள் (meaning) உடையவை. வர்த்தகம் புரியும் நாடுகளுக்கிடையே அடக்க விலை அதிகரிப்பு விதியையொட்டி பாட்டாளியின் உழைப்பு விகிதம் குறைவுபடுகிறது. எடுத்துக் காட்டாக 'ஆ' என்ற நாட்டில் கோதுமை உற்பத்தி மிகவும் குறைவான அடக்க விலையில் நடத்தி வருகிறது. 'ஐ' என்ற நாட்டில் துணி உற்பத்தி மிகவும் குறைவான அடக்க விலையில் நடத்தி வருகிறது. இவ்விரு நாடுகளுக்கிடையே வர்த்தகம் நடைபெறுவதாகக் கொள்வோம். 'ஆ' என்ற நாடு கோதுமை உற்பத்தியில் மட்டும் மேன்மேலும் ஈடுபட்டு அதன் விளைவாக அடக்க விலை அதிகரிக்க

ஆரம்பிக்கிறது போன்றே 'ஐ' என்ற நாடு துணி உற்பத்தியில் மட்டும் ஈடுபட்டு அதன் அடக்கவிலை அதிகரிக்க ஆரம்பிக்கிறது. இதன் விளைவாக ஒப்பிடல் அடக்கவிலை குறுகி, நாளடைவில் சமநிலையை அடைகிறது. இனி எந்த நாடும் தன் உற்பத்தியை மேன்மேலும் அதிகரிக்க முயலாது. இதனால் உற்பத்தியில் உயரிய முறைகளைக் கையாண்டால் நிரந்தர அடக்கவிலையினும் கீழே போகக் கூடும்.

இதற்கு எதிரிடையாக உற்பத்தி அடக்கவிலைகள் குறைந்து வரும். அடக்கவிலை விதியையொட்டி இருப்பின், வர்த்தகம் இன்னும் அதிகம் நடப்பதற்கும் வாய்ப்பு உண்டு எனக் கூறலாம். இதன்கீழ் அமையும் வர்த்தகம் நிரந்தர அடக்க விதியின்கீழ் அமையும் வர்த்தகத்தைவிடக் கூடுதலாகவே அமையும். அடக்க விலை அதிகரிப்பு ஒப்பிடல் விதியின்கீழ் அமையும் வர்த்தகத்தை விட மிக அதிக அளவில் ஏற்றமடையும் எனலாம். குறைந்து வரும் அடக்கவிலை ஒப்பிடல் விதியின்கீழ் வர்த்தகம் இன்னும் அதிகரிக்கக்கூடும். இரு நாடுகளின் வரம்பு அடக்கவிலைகளில் வேறுபாடு ஏற்படவில்லையெனினும் வர்த்தகம் தொடர்ந்து நடக்க இடமுண்டு. ஆரம்பத்தில் சிறிதளவு வர்த்தகம் தொடங்கிய தாகக் கொள்வோம். நாளடைவில் இவ் வர்த்தகம் அதிகரிக்க ஆரம்பித்து மேன்மேலும் கூடிக்கொண்டிருக்கும். வரம்பு அடக்க விலை ஏற்றமும், வர்த்தக ஏற்றமும் ஒன்றாகவே நிகழும்.

நிரந்தர, குறைந்துள்ள அடக்க விதிகளின்கீழ் இரு நாடு களுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்தில் ஒரு நாடு ஏதேனும் ஒரு பண்ட உற்பத்தியில் உன்னதநிலையை எய்தலாம் அல்லது இவ்விரு நாடுகளும் அளவில் ஒன்றாக இருப்பின் அதே பண்டத்தில் இவ்விரு நாடுகளும் உற்பத்தியில் உன்னத நிலையை அடையலாம். அதிகரிப்பு அடக்கவிலை விதியின்கீழ் உற்பத்தியில் உன்னத நிலை அடையும் என்பது அரைகுறையாகவே அமையும்.

இரு நாடுகளின் அடக்க விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கின் இவை இரண்டிற்குமிடையே அதிக வேறுபாடுகள் தோன்றின், உற்பத்தியின் காரணமாக அடக்கவிலை அதிகரித்தால் நாளடைவில் ஒரு நாடு அல்லது இரு நாடுகளும் அடக்கவிலையை நிருணயித்துக் கொள்ள இடம் உண்டு.

அதிகரிப்பு அடக்கவிலை விதியின்கீழ் ஒரு நாட்டின் உற்பத்தியில் வேறொரு நாட்டைவிட இலாபம் பெறுவதாகவும் அதே நாடு குறைந்த அடக்கவிலை விதியின்கீழ் நட்டம் பெறு

வதாகவும் கொள்வோம். அவ்வாருனல், அந் நாட்டின் உற்பத்தி நட்டமுள்ளதாகவே இருக்கும்.

**மதிப்பீட்டு விதியின்கீழ் உண்மை அடக்கவிலை**

ரெகார்டோவும் அவரது வழியைப் பின்பற்றுபவர்களும் அடக்கவிலை ஒப்பிடல் விதியின் அடிப்படையில் அடக்கவிலையைப் பாட்டாளி உழைப்பை அளவையாகக் கொண்டு பாட்டாளி அப் பண்டத்தை உற்பத்தி செய்ய எடுத்துக் கொள்ளும் நேரத்தைக் கணக்கிட்டு வரையறுத்தனர். இந்த ஓர் அனுமானத்தை மட்டும் கொண்டு அவர்கள் இதர உற்பத்திக் காரணிகளை மறந்து விட்டார்கள் எனக் கொள்வது தவறு. பாட்டாளியின் உழைப்பு விகிதத்தை அவர்கள் வலியுறுத்திஞர்களே அன்றி இதர மூல காரணிகளைக் கவனியாது விட்டுவிடவில்லை. குறிப்பாக மூலதனத்தை அவர்கள் கருதியுள்ளனர். பல்வேறு பொருளியல் வல்லுநர்கள் பலவகை உருபுகளையும், உரிச் சொல்களையும் வழங்கியுள்ளனர். பின்வழி வந்தோர் இவற்றை மிக அழகாக 'உற்பத்திச் சக்தியின் அளவு' (Productive Power Unit) என்ற சொற்களை எடுத்தாண்டுள்ளனர்.

சந்தை விலையும் (Market Price), உண்மை அடக்கவிலையும் அடக்கவிலை ஒப்பிடல் விதியின்கீழ் சமம் என்று நிரூபிக்கப்பட்டா லன்றி ஏற்றுக் கொள்வதற்கில்லை. தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் உண்மை அடக்கவிலையை அகவழியாக அடக்கவிலை என்று கணக்கிட்டு அதன்மூலம் பயனடையாதவைகளின் எண்ணிக்கைகளை முடிவு செய்தனர். பாட்டாளி ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரத்திற்கும் உழைக்கும் நேரத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டும் முறையாகும். பயனடையாத தன்மை உற்பத்தியில் ஒருவிதமாகக் கணக்கிடலாம். நடைமுறையில் இம் மாதிரிக் கணக்கிட இயலாது. பணி செய்யாது இருப்பதும் உழைப்பதும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் மாறி வரும் இயல்பே. சிக்கனமாக ஒரு ரூபாயைச் சேமித்துக் கொள்வதும் அதேபோன்று தனிப்பட்ட மனநிலையை விளக்குகிறது. இவைகளால் உண்மை அடக்கவிலை எது என்று அறியலாமே ஒழிய வாய்ப்புப் பெறுமானமாகக் கருத இடமில்லை.

பல்வேறு விகிதங்களில் பல்வேறு தொழில்கள் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதால் உண்மை அடக்கவிலை இவ்வளவுதான் அமைய வேண்டும் என்று முடிவு கூறுவது சற்று கடினம். இவைகளில் ஓரினத் தன்மையுடன் முடிந்திருப்பின்

(Homogenous) இன்ன அடிப்படையின் கீழ் அடக்கவிலையின் உண்மை நிலை எது என்று கூறலாம். ஒரே இயல்பான பாட்டாளி களுக்கு பல்வேறு தொழில்களில் பல்வேறு அளவான கூலி கொடுத்தால் பாட்டாளியின் உழைப்பையொட்டி நோக்கின் கூலி விகிதத்தையொட்டிப் பண்டங்களின் விலைகள் அமையக் கூடும். இதில் பாட்டாளியின் உழைப்பின் கால விகிதத்தைக் கொள்ளுதல் சரியல்ல. டாஸிக் (Taussig) இக் கருத்தை விளக்கி யுள்ளது வருமாறு:

' பல்வேறு நாடுகளிலும் தொழிலாளர்கள் (பாட்டாளிகள்) ஒரே இனமாகக் கருதி, அவர்கள் ஒரேவிகிதத்தில் பாட்டாளிகளாக இருப்பின், கூலி சதவிகிதத்தில் கணக்கிட்டு விகிதத்தில் அமைத்தால், அவர்களை ஈர்த்திழுக்கும் அதிகப்படிக்கூலி, ஓய்வு எடுத்துக்கொள்ள விழையும் காரணம் இவைகளின் அடிப் படையில் கணக்கிட்டால் பணஅளவில் அடக்கவிலை இன்னதென்று கூற இயலும். பாட்டாளி உழைப்பு நேரம் தேவையில்லை' டாஸிகின் கொள்கை மனோநிலைக் கற்பனையளவில் உண்மையே அன்றி இதனை நடைமுறையில் கொள்ள இயலாது.

உண்மை அடக்கவிலைக் கொள்கையின் அடிப்படையில் முதன் முதலில் தங்குதடையின்றி நடைபெறும் வர்த்தகம் உள்ளதென்று ஊகித்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று மூலகாரணிகள் ஒருமையும் இருக்கும் என்று அனுமானித்துக் கொள்வோம். வர்த்தகம் என்று இயம்பப்படுவது பணக் கணக்கியலில் அடக்க விலையைக் கொண்டும் விலையைக் கொண்டும் முடிவிடப்படுகிறது. நிறைவற்ற (Imperfect Competition) வர்த்தகத்தில் உண்மை யடக்க விலையும், விலையும் சமமாக இருப்பதில்லை.

**வாய்ப்புப் பெறுமான அளவில் விதியை மாற்றியமைத்துக் கூறப் படுகிறது**

உண்மை அடக்கவிலையை எதிர்த்துப் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக் காட்டிக் காண்பிக்கப்பட்ட காரணத்தால் ஏபர்லர் (Haberlar) வாய்ப்புப் பெறுமான முறையில் இதை விளக்க முற்பட்டுள்ளார். தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் இரு நாட்டுப் பண்டங்களின் மாற்று விகிதத்தைக் கணக்கிட உண்மை அடக்கவிலையைக் கணக்கிட்டனர். ஆயினும் ஏபர்லர் அவர்களோ வாய்ப்புப் பெறுமான அளவில் மாற்றுவிகிதத்தைக் கணக்கிடு கிறார். கீழ்க்காணும் எடுத்துக்காட்டின்மூலம் பல தரப்பட்ட மூலப் பொருள்களை ஒரு குறிப்பிட்ட தொகுப்பில் அமைப்போம். அவற்றின் உற்பத்தி அடக்கம் 4 ஆ அல்லது 8 ஐ என்ற விகிதத்தில்

வாய்ப்புப் பெறுமான விகிதமாகக் கொள்ளலாம் அல்லது 1 ஐ ½ ஆ-க்குச் சமம். இதில் பாட்டாளி உழைப்பு விகிதம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அளவு கடந்த உற்பத்திக் காரணிகள் இருந்த போதிலும் வாய்ப்புப் பெறுமான விகிதத்தைக் கணக்கெடுத்து விளக்கக்கூடும். இரு பண்டங்களின் மாற்று விகிதத்தை பதிலீட்டு வளைவாக (Subsititution Curve) விபரப்படுத்திக் காட்டலாம்.




படம் 1

பதிலீட்டு வளைவாக அமையும் பண்டங்களின் உற்பத்தி நிரந்தர அடக்கவிதியின்கீழ் இருப்பின் மேலே காட்டியுள்ள நேர்கோடுபோன்று அமையும். ஆ, ஐ என்ற நேர்கோடு பண்டங்களின் தொகுப்பு விகிதத்தை எடுத்துக் காண்பிக்கின்றது. 'ஆ' என்ற பண்ட உற்பத்தியில் அனைத்தும் செலவிடின் 4 ஆ உற்பத்தி ஒரு 'ஐ' கூட கிடைக்காது. அதேபோன்று 8 ஐ ஆனால் ஒரு 'ஆ' கூட கிடைக்காது. ஒரு 'ஆ' உற்பத்திக்கு 2 ஐ-யை இழக்க நேரிடும். கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகளையொட்டி ஆ ஐ நேர்கோடு தொகுப்பு விகிதத்தைக் கூறுகிறது.

அதிகரிப்பு அடக்கவிலை விதியின்கீழ் இரு பண்டங்களில் உற்பத்தியானால் கீழ்க் கண்ட முறையில் உருவகப்படுத்தலாம். இதில் குறித்துள்ளபடி 'ஒ ஆ' என்ற 'ஆ' வழியில் ஆயினும் 'ஐ' என்ற பண்டம் இல்லை. 'ஒ ஐ' என்ற பண்டம் விரும்பினால் நாம் 'ஆ ; ஆ' என்ற பண்டத்தை உற்பத்தி செய்யாது விட்டுவிட வேண்டும். 'ஐ' என்ற பண்டத்தில்

இன்னமும் ஒரு பங்கு கூடுதலாக வேண்டுமென்றால் அதாவது ‘ஐ$_1$ ஐ$_2$’ என்றால் நாம் ‘ஆ$_1$ ஆ$_2$’ என்ற பண்டங்களை உற்பத்தி செய்ய இயலாது. ‘ஆ’ என்ற பண்டத்தை மேன்மேலும் உற்பத்தி செய்ய விரும்பினால் ‘ஐ’ என்ற பண்ட உற்பத்தியை நிறுத்தவேண்டி வரும். அதேபோன்று ‘ஐ’ என்ற பண்ட உற்பத்தியை அதிகப்படுத்த விரும்பினால் ‘ஆ’ என்ற பண்ட




படம் 2

உற்பத்தியைத் தடுக்கவேண்டி ஏற்படும். சுருங்கக் கூறினால் ‘ஐ’-ன் உற்பத்தி ஆ-ன் பதிலீடாகக் கூறினால் ‘ஐ’-ன் வாய்ப்புப் பெறுமானம் ‘ஆ’-ன் அளவில் அதிகரிக்கும். அதே போன்று ‘ஆ’ன் விலை ‘ஐ’-ன் மதிப்பில் அதிகரிக்கும்.

இவ்விரண்டு பண்டங்களும் குறைப்பு அடக்க விதியின்கீழ் அமைந்திருந்தால், உற்பத்திப் பதிலீட்டிலிருப்பின் வளைவின் அமைப்பு கீழ்க்கண்டபடி அமைகிறது. இதனால் ‘ஆ(ஐ)’




படம் 3

பதிலிடப்பட்டு உற்பத்தி ‘(ஐ ஆ)’ வாய்ப்பு பெறுமானம ‘ஆ (ஐ)’ என்ற பண்டத்தினுடையது ‘ஐ (ஆ)’ அளவில் குறைந்து கொண்டேவரும்.

இரு பண்டங்களின் மாற்று விகிதம் எவ்வாறு தீர்மானிக்கப் படுகிறது? நிரந்தர அடக்க விதியையொட்டி இரு பண்டங்களின் அடக்கவிலை அமைந்தால் நிரந்தர மாற்று விகிதம் அடக்க விலையையொட்டி அமையக்கூடும். சார்படக்க விலைகள் (Relative Costs) இந்த இரு பண்டங்களைப்பொறுத்தமட்டிலும் நிரந்தரமாக இருப்பினும் அவைகளின் தேவைகள் மாறக்கூடும். மாறி அடக்க விலைகளின் (Variable Costs) கீழ் சார்படக்க விலைகள் அவைகளின் தேவைகளையொட்டி விகிதப்படும். மேற்படி பண்டங்களின் மாற்று விகிதங்களைத் தீர்மானிக்கத் தேவைகள் உற்பத்தி அடக்க விலைகள் இவையிரண்டும் இன்றியமையாததெனலாம். எந்த ஒரு நிலையில் உற்பத்தி பதிலீட்டு வளையமும், நுகர்வு சமநோக்குக் கோடும் தொடுகோடு போன்று அமையுமோ (Tangential) அந்த நிலையில்தான் மாற்று விகிதம் இது என்று முடிவு செய்யப்படும். இந்த நிலையில்தான் இவ்விரு பண்டங்களின் இறுதிநிலைப் பயன் பாடுகளும், அவற்றின் இறுதிநிலை அடக்கவிலைகளுக்கு விகிதமாக அமையும். இவற்றையொட்டியே மாற்று விகிதம் அமையக்கூடும்.

தனிப்பட்ட காரணிகள் உள்ளதென்று இந்த விதியைத் தவறென ஒதுக்கயியலாது. இந்தத் தனிப்பட்ட காரணிகள் உற்பத்திப் பதிலீட்டு வளையத்தின் உருவத்தை மட்டும் மாற்றி விடக்கூடும். தனிப்பட்ட காரணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின், உற்பத்தி நிலையில் இவ்விரு பண்டங்களின் உற்பத்திப் பதிலீட்டு வளையமும் பெருத்திருக்கும். எந்த விகிதங்களில் இப் பண்டங்கள் தேவைப்படுகின்றனவோ அவை சார்படக்க விலைகளையொட்டி மாறும். எவ்வளவுக்கெவ்வளவு தனிப்பட்ட காரணிகள் குறைந்துள்ளதோ (அதாவது உற்பத்தியில்) அவை




படம் 4

செம்மையாக (Flatter) உற்பத்திப் பதிலீட்டு வளைவு அடைகிறது. இவ்விரு பண்டங்களின் தேவை விகிதங்கள் இவற்றின் உற்பத்தி சார்பு அடக்கவிலைகளை மாற்றுவதில்லை. அவ்வாறான உருவப் படத்தை மேலே காணலாம்.

முன்னரே பகர்ந்த அடக்க விலைகளின் வேறுபாடுகளை வரை படங்களின் வாயிலாக விளக்க முயலுவோம். அனுமானித்துள்ள இரு நாடுகளிலும் அடக்கவிலைகள் நிரந்தர அடக்க (Constant Cost) விதியை ஒட்டி வாய்ப்புப் பெறுமானம் அமையும்.




படம் 5

கோடுகள் ஆஆ' ஐஐ' என்பவை 'க', 'ச' என்ற இரு பண்டங்களின் உற்பத்தி சார்படக்க விலைகளை 'ஆ' என்ற நாட்டின் 'ஐ' என்ற நாட்டின் உற்பத்திகளைக் கூறுகின்றன. படங்கள் 2, 3-ல் உள்ளபடி உற்பத்தி சமநோக்குக் கோடுகள் (Prodnction (Indifferences) பல்வேறு வகைகளில் சரிந்திருப்பின் அந் நாடுகளின் வர்த்தகம் இலாபகரமாக அமையும் எனலாம். உற்பத்தி சமநோக்குக் கோடுகள் ஒரேசீராகச் சரிந்திருப்பின் இரு நாடுகளிலும் அடக்கவிலைகள் சமமாக இருக்கும். அதனல் பன்னாட்டு வர்த்தகம் நடக்க இயலாது. இந்த நிலையை விளக்கப் படம் 1 மேலே காட்டப்பட்டுள்ளது.

**படவிளக்கம்**

ஒன்றும் படத்தைப் பார்க்கவும் 'ஐ' என்ற நாடு 'ஆ' என்ற நாட்டைப்போல் சீரான அடக்க உற்பத்திவிலையில் பண்டங்களைத் தயாரிக்க இயலும். இரு நாடுகளிலும் சீரான சரச விலைகள் இருக்கும்.

இரண்டாம் படத்தில் 'ஐ' என்ற நாடு 'ஆ' என்ற நாட்டைக் காட்டிலும் 'க', 'ச' என்ற இரு பண்டங்களையும் மிகவும் குறைந்த அடக்க விலைகளில் உற்பத்தி செய்யும். ஒப்பிட்டுப் பார்க்கின், 'க' என்ற பண்ட உற்பத்தியில் 'ஐ' என்ற நாடு மிகவும் குறைந்த

செலவில் நடத்தும். இதன் விளைவாக இதற்குப் பலனும் அதிகரிக்கலாம். 'ஆ' என்ற நாட்டுடன் நாட்டில் இவ்விரு பண்ட உற்பத்தி அடக்க விலைகள் 'ஐ' என்ற நாட்டுடன் ஒப்பிட்டால் அதிகக் கூடுதலாக இருக்கும். 'ஆ' என்ற நாட்டில் உற்பத்தியாகும் 'ச' என்ற பண்ட அடக்கவிலையில் நட்டம் ஏற்படலாம்.

மூன்றும் படத்தில் 'ஆ' என்ற நாடு 'ச' என்ற பண்டத்தை உற்பத்தி செய்வதில் நிறைந்த பலன் பெற்றதாக உள்ளது. அதே போன்று 'க' என்ற பண்டத்தை உற்பத்தி செய்வதில் நிறைந்த நட்டம் அடைந்ததாக உள்ளது. 'ஐ' என்ற நாட்டில் 'க' என்ற பண்டத்தை மிக இலாபகரமாக உற்பத்தி செய்கிறது. அதே போன்று 'ச' என்ற பண்டத்தை மிக நட்டத்தில் உற்பத்தி செய்கிறது.

### அடக்கவிலை ஒப்பிடல் விதியும் வளர்ச்சியுறு நாடுகளும்

முன்னரே அடக்கவிலை ஒப்பிடல் விதியைப் பற்றி விளக்கிய பொழுது அது பொருளாதார வளர்ச்சியடையாத நாடுகளுக்கு ஏற்றதல்ல என்ற குறைபாட்டைக் கூறியுள்ளோம். அதற்கான விளக்கங்களை இங்குக் கூறுவோம்.

அடக்கவிலை ஒப்பிடல் விதி என்றும் மாறுத்தன்மையுள்ளது. வளர்ச்சியின் விகிதம் என்னவாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் மொத்த உற்பத்தியைப் (Aggregate Output) பெருக்க முயலுகிறது. தற்போதைய உற்பத்தியைப் பெருக்குவதால் உற்பத்தி விகிதத்தை வளர்த்துவிட்டதாகக் கூறமுடியாது. எடுத்துக்காட்டாக 110 சதவிகிதம் நம் தேசிய மொத்த உற்பத்தியை நுகர்ந்து விட்டால் நாம் நமது தேசிய மொத்த உற்பத்தியை அதிகரித்துக்கொண்டே போகிறோம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ள இயலாது.[1] தற்கால உற்பத்தி அதிகரிப்பைவிட நாட்டு வளர்ச்சியின் வேகத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மூலாதாரப் பொருள்களை ஒதுக்கிவிடுவதால் நாட்டின் வளர்ச்சி பல கோணங்களிலும் முன்னேறுகிறது. குறிப்பாக தொழிற்றுணிவு (Euhidu Nussihy) பாட்டாளிகள், திறனுய்வு, சேமிப்பு முறைகள் முதலியவை பெருகக்கூடும். இதன் விளைவாக மக்கள் தொகை பெருகலாம். இவற்றின் அடிப்படையில் தனி நபர் விகிதம் கணக்கிடலாம். வளர்ச்சியுறு நாட்டின் மூலப் பொருள்களை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படும்

[1] Walter Galensan & Harvey Liebinstin—'Investment of Siberia Productivity & Economic Development'-Quarterly Journal of Economics 69, (August 55), p.345.

தொழிலில் பயன்படுத்துவதா அல்லது தற்காலிகப் பலனைத் தரும் தொழிலில் புகுத்துவதா என்ற ஐயம் தோன்றலாம். நாட்டின் வளர்ச்சியில் ஈடுபடும் தொழிலில் முலப்பொருளைப் பயன்படுத்துவதுதான் சாலச்சிறந்தது. வருங்காலத்தில் நாட்டின் வருவாய் அதிகரிக்கவேண்டும் என்று முயலுவதைவிட நடப்பாண்டில் வருவாயை அதிகரிக்க முயலுவதுதான் நலம். இவை இரண்டினுக்கும் ஓர் இயல்பான விகிதம்அமைதல் இன்றியமையாதது. வரும் சந்ததிகள் நலமாக வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் நடப்பிலுள்ள மக்கள் தொகையை அதிகப்படியாக சிரமத்தில் ஆழ்த்துவது சீரிய முறையல்ல. தற்காலத்தில் குறிப்பிட்ட அளவில் முன்னேற்றத்திற்காகக் கழிவு (Discounting) முறையைன்று பயன்படுத்தி நடப்பில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்தலாம்.

தொடக்கத்தில் சில தொழில்களுக்கான உற்பத்தியின் அடக்கவிலை அதிகமாக இருக்கலாம். ஏனெனில், பொருள் வளர்ச்சியில் முன்னேறவியலும் நாட்டில்தான் இந்நிலை இருக்கக் கூடும். பொருள் வளர்ச்சி முன்னேற்றமடைந்த நாடுகளில் தொழில் பொருளுக்கான (Industrial Food) உற்பத்தி அடக்கவிலை மிகவும் குறைவாக இருக்கும் எனக் கருதலாம். தொடர்ந்து வெகுகாலம் இந்த தொழிலுற்பத்திக்குப் போதிய தொழிற்காப்பளிப்பின் (Protection) இந்நாடுகளிலும் அவற்றின் அடக்கவிலை கண்டிப்பாகக் குறையக் கூடும் என திட்டமாகக் கூறலாம். நடப்பில் உள்ள பல முன்னேற்ற நாடுகளில் உற்பத்தியாகும் தொழில் பொருள்களின் அடக்கவிலை மிகவும் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று ஆலோசித்தால், இயற்கை வளம் அதிகம் உள்ள காரணத்தால் உற்பத்திச் செலவு குறைவு என்று கூற இடமில்லை. பொருள் வளர்ச்சியில் முன்னேறவியலும் நாடுகளில்தான் அம்மாதிரியான வசதிகள் அதிகம் எனக் கூறலாம். ஆயினும் முன்னேற்றமடைந்த நாட்டிலோ, மூலதனப் பெருக்கு, தொழில் நுண்ணியல் (Technology) திறம்பெற்ற தொழிலாளிகள், சீரிய நிருவாகத் திறன், செம்மையான போக்குவரத்திற்கான சாதனங்கள், புறச் சிக்கனங்கள் முதலியவை அங்கு நிலையாக உள்ளதாலும், பெரும் சந்தைகள் கூடுவதாலும் அவற்றின் அடக்கவிலை குறைவாக அமைய இடமுண்டு. ‘உற்பத்திப் பெருக்கில் ஒரு நாடு மற்றொரு நாட்டின் உற்பத்தியைவிட மேம்பாட்டடைந்ததாகக் கருதுவதற்கு முக்கியக் காரணம் அந் நாடு உற்பத்தியில் முன்னோடியாக இருப்பது ஒன்றே. எந்த நாடு எல்லா நாடுகளும் தொடங்குமுன்பே, உற்பத்தியைத் தொடங்கி நடத்துகிறதோ, அந் நாட்டில், தொழிலாளர்களுக்குத்

திறனறிவு, அனுபவம் முன்னதாகவே கிடைக்கின்றன. மற்றபடி இதர நாடுகளின் தனிப்பட்ட வசதிகளைக் (Inherent) காரணமாகக் கொள்ள இடமில்லை என்று ஜான்ஸ்டுவர்ட்மில் (J. S. Mill) அவர்கள் கூறுகிறார்.[1] பொருள் வளர்ச்சிக்காக விழையும் நாடுகளுக்கு முன்னேற்றமடைந்த நாட்டில் உள்ள வசதிகள் கிடைப்பின், முன்னேற்றமடைந்த நாடுகள் செய்யும் உற்பத்தியைவிடச் செம்மையாகவும் இயற்கைவளம் பொருந்திய காரணத்தால் அடக்கவிலையை நன்கு குறைத்தும் முன்னேறலாம்.

முன்னேற்ற நாடுகளில் உள்ள வசதிகளையும், உற்பத்தியில் பல வசதிகளையும் முன்னேற்றத்திற்கு விழையும் நாடுகளால் பெற இயலாதா? காரணிப்பேறுகளைப் (Factor Endorments) பொதுவாக மாறாதவை என்றும் நிலைநாட்டப் பெற்றவை என்றும் அடக்கவிலை ஒப்பிடல் விதி (Compensative Cost Theory) அனுமானித்திருக்கிறது. எனவே, வளர்ச்சியுறு நாடு இந்தக் காரணிப் பேறுகளை அடைவது கடினம் எனக்கொள்வது தவறு. வளர்ச்சியுறு நாடுகள் உண்மையாகவே போதிய முயற்சிகளை மேற்கொள்ளாவிட்டால் இக் காரணிப்பேற்றைஅடைவது எளிது. பல ஆண்டுகள் இம் முயற்சியில் ஈடுபடவேண்டியது இன்றியமையாததெனலாம். தொடர்ந்தாற்போல் நாடு முழுவதிலும் சேமிப்பு முறையையும், முதலீடு (Investment) வசதியையும் செய்து கொண்டேவரின் நாட்டின் உற்பத்திக்கான மூலதனம் பெருகும் எனலாம். பொது வசதி நிறுவனங்களைத் தோற்றுவிக்கலாம். தொழில்வளர்ச்சியுடன் தொழிலாளரின் திறனும் செம்மையாகக் கூடும். தொழில் நுண்ணியல் முறைகளை (Technology) இறக்குமதி செய்து நாட்டின் நிலைமைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

முன்னேற்ற நாடுகளில் அடக்கவிலை குறைவாக உள்ளதற்குக் காரணம் குறிப்பாக மாபெரும் சந்தைகளே; இச் சந்தைகள் இருப்பதால்அகச் சிக்கனம் (Internal Economics), புறச்சிக்கனம் (External Economics) இவை உண்டாக்குகின்றன. உற்பத்தி அளவை (Economics of Scale) நன்கு ஆய்ந்து செய்ய வேண்டும். ஏனெனில் குறையும் அடக்கவிலை விதி அல்லது அதிகமுறும் வருவாய் விதி (Increasing Returns or Decreasing Cost) என்ற நிலையைச் சமாளிக்க வேண்டும். அநேக வளர்ச்சியுறு நாடுகளில் மக்கள்தொகை மிகவும் அதிகமாக உள்ளபடியால், வருங் காலத்தில் செம்மையான சந்தைகள் உருவாகக் கூடும். நடப்பில் சந்தைகள் வளர்ச்சியுறு காரணம் என்னவெனில் நாட்டின் நபர்

[1] J. S. Mill—Principles of Marketing Economy (Bosmin, 1870), Vol. II p. 527-38.

சராசரி வருமானம் மிகவும் குறைவாகவே உள்ளது. அதன் விளைவாக நபர் சராசரிச் செலவும் மிகவும் குறைவாகவே இருக்கிறது. நாட்டில் தொழில் வளர்ச்சி நன்கு ஏற்படின் நாட்டின் நபர் சராசரி வருவாயும் அதிகரிக்கும். அதன் விளைவாகச் சந்தைகளும் அதிகரிக்கும் மேலும் பெரும்பகுதியான முன்னேற்ற நாடுகளின் சந்தைகள் பொருள் முன்னேற்றத்திற்கு விழையும் நாடுகளில்தான் உள்ளது. அந் நாடுகள் தங்கள் தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை ஒதுக்கிக்கொண்டு மீதியைக் கட்டுப்படுத்தக் கூடும். சந்தையின் பகுதியை மாற்றி வளர்ச்சியுறு நாடுகளுக்குக் கொண்டுபோனால் உற்பத்தி அடக்கவிலை மிகவும் அதிகமாகிவிடக் கூடும். இதர நாடுகளில் அடக்கவிலை குறையக் கூடும். இம் முறைகளால், இரு விலைகளில் உள்ள வேறுபாடு குறைந்துவரக்கூடும். மூலகாரணிகளின் இன்றியமையாத நிலை பண்டைய கால பன்னாட்டு வர்த்தகத்தையொட்டியிருந்தது,[1] திட்டமிட்டப் பன்னாட்டு வர்த்தகத்தின்வாயிலாக இவற்றை மாற்றியமைக்கக் கூடும்.[2]

ஒரு நாட்டில் மூலதனக் குறைவு ஏற்பட்டாலும், தொழில் நுட்பக் கல்வியில் குறைவு ஏற்பட்டாலும் இவற்றை இறக்குமதியின்மூலம் நிறைவேற்றலாம். நீண்டகால நோக்குடன் ஆலோசித்தால் இயற்கையில் எளிதாகக் கிடைக்கக் கூடியதும் பிறரிடமிருந்து பெற வேண்டிய மூலகாரணிகளையும் கொண்டு தான் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். நீண்டகாலப் பலன்களைப் பற்றி ஆய்ந்து நோக்கினால் தற்போது உள்ள உற்பத்தி முறையுடன் வைத்துப் பார்க்கின் மேலான அளவில் இலாபம் கிடைப்பதில்லை. மேலும் இந்த உலகின்கண் அதிகப்படியான உற்பத்தி செய்து அதன் வாயிலாக பல்வேறு நாடுகள் உற்பத்தியில் வளர்ச்சி அடைந்து அவற்றை ஏற்றுமதி செய்து அதன் விளைவாக நீண்ட காலம் அதிகப்படியான வருவாய் கிடைக்கும்படி செய்யலாம்.

தனிப்பட்ட முறையில் ஒரு நாட்டில் உற்பத்தி முறையில் மேம்பாடு அடைவதைச் செம்மையாகக் கருத இடமில்லை. ஏனெனில் நீண்ட கால இலாபம் எனப்படுவது குறைவு பெற நியதி உண்டு. இன்றைய நிலையில் அடிக்கடி மாற்றத்தை விரும்பும் மக்களும் சமுதாயமும் நீண்டகால உற்பத்தி முறையினால் பாதிக்கப்பட்டு தற்போது உள்ள போட்டியிலும் இலாபங்களைப் பிறரால் கையாளநேரும். நீண்டகால மேலான

[1] J. H. Williams—The Theory of International Trade and Reconsiderate
[2] R. Robinson—Factor Proportions and Compensation Advantage art I & II.

உற்பத்தித் தன்மை அடிக்கடி நிகழும் மற்ற செலவினங்களால் பாதிக்கப்பட்டு, முடிவில் இலாபம் குறையக்கூடும்.

அடக்கவிலை ஒப்பிடல் விதி உற்பத்திப் பகுதியையே நன்கு ஆய்கிறது. அது இவ்வுலகின்கண் உற்பத்தியை எவ்வாறு அதிகப் படியாக உருவாக்கலாம் எனத் தெரிவிக்கின்றது. ஆனால், அது வழங்குதல் பகுதியைப்பற்றி சிந்தனை செய்ய முற்படுவதில்லை. உலகின் உற்பத்தியை மட்டும் மேற்கொண்டு வழங்குதல் பகுதியை ஆராயாது விடுவது சிறந்த முறையன்று. உலகில் நாடு களின் வருமானத்தை சீராகச் அளவிட்டுப் பல்வேறு நாடுகளுக்குக் கொடுக்கும் ஒரு தனிப்பட்ட பன்னாட்டு நிறுவனம் இல்லாதபோது ஒவ்வொரு நாடும் தனது வருமானத்தை அறுதியிட்டு இவ்வளவு என்று தெரிய முற்படின் அதற்கு உற்பத்தியைமட்டிலும் தெரிந்து கொண்டால் போதாது, வழங்குதலையும் ஆய்ந்து கொள்ளுதல் வேண்டும். பொதுவாக வேளாண்மையில் ஈடுப்பட்ட நாடுகளை விடத் தொழில்துறையில் ஈடுபட்ட நாடுகளுக்கு வருமானம் அதிக மாகக் கிடைக்கும் என்பது ஒரு சாராரின் நோக்கு. உலகின் வருமானத்தின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் வளர்ச்சியுறு நாடுகள் உள்நாட்டுத் தொழில்களை ஆரம்பித்து அதன்மூலம் உற்பத்தியை அதிகரிக்க முயலவேண்டும். அவர்கள் வர்த்தகக் கட்டுப்பாடுகளைப் போட்டு அதன்மூலம் உலக வருவாயைக் குறைவுபடுத்த முயலக்கூடாது. தேசிய அரங்கில் இவை விரோதம் எனப்பட்டாலும் அறுதிநிலை அதிகரிப்பை மிகவும் சுன்னநிலைக்குக் (Zero) கீழ்போகக் கூடாது. உலகப் பொருளாதார நலம்பெற விழையும் நாடுகள் நலம் குறைய ஆரம்பிக்கும் தருணத்தில் கட்டுப்பாடுகளை அதிகம் விதிக்காமல் விட்டுவிடவேண்டும்.

அண்மையில் ஏற்பட்ட மாறுதல்களினால் மூலதார முதற் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் வர்த்தக மாற்று விதத்தில் மேம்பாடு அடையும் என்று கூறமுடியாது. சில பொருளியல் வல்லுநர்கள் இம்மாதிரியான நாடுகளுக்கு என்றும், வர்த்தக மாற்று விகிதத்தில் இலாபம் கிடைத்துக் கொண்டு இருக்கும் என்றும், இந்த மூலதனப் பொருள் உற்பத்தியில் அதிகப்படி செலவும், தொழில் நுட்பப் பொருள் உற்பத்தியில் இலாபம் கிடைக்க இடம் உண்டு என்றும் கருதுகிறார்கள். ஆயினும் வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு ஆராய முற்படின் இவை பொய்த்துப் போய்விட்டன. நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களை ஆராய்ந்து நோக்கினால் இந்த வளர்ச்சியுறு நாடு களில் வேளாண்மைக்கு முதலிடம் கொடுத்து இருக்கிறார்கள்.

இந் நாடுகள் தொழில் வளர்ச்சி எந்த அளவிற்கு இன்றியமையாததது என்று கருதுகிறார்களோ அந்த அளவிற்கு வேளாண்மைத் துறையிலும் வளர்ச்சி இருக்க வேண்டும் என்பது வரவேற்கத் தகுந்தது. எனவே தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் கிடைக்காத பஞ்சச் சூழ்நிலை ஏற்படாது என்று கருத இடம் உண்டு. இனி மூலதாரப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு வர்த்தக மாற்று விகிதம் ஒருவேளை குறைவதற்கு இடம் உண்டு. அதற்கான காரணங்கள் வருமாறு :[1]

(அ) இயற்கை மூலப் பொருள்களுக்குப்பதிலாகச்செயற்கை ஆக்கப் பொருள்களைப் பயன்படுத்துதல். (எடுத்துக்காட்டாக) செயற்கை இரப்பர், செயற்கை நூல், பிளாஸ்டிக், அலுமினியம் முதலியவை.

(ஆ) உள்நாட்டில் அதிகப்படியான கச்சாப் பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் அதிகரித்தல்.

(இ) பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் குறைந்த அளவு எரிபொருள்களையும் கச்சாப் பொருள்களையும் பயன் படுத்த முயலுதல்.

(ஈ) வளர்ச்சி பெற்ற நாடுகளில் சிறிது சிறிதாகத் துணி உற்பத்தித் தொழில் குறைந்து வருதல்.

(உ) வளர்ச்சியுற்ற நாடுகளில் மக்கள் தொகை குறைவாக அதிகரித்தலும், அதேபோன்று வளர்ச்சியுறா நாடுகளில் அவ்வாறு கடைபிடித்து ஒழுகுதலும்.

(ஊ) மூலதாரப் பொருள்களுக்கான தேவை குறைந்த வருமான நெகிழ்ச்சியின் மூலம் அறிந்து கொள்ளுதல்.

அடக்கவிலை ஒப்பிடல் விதி நாடு முழுமையும் முழு வேலை வாய்ப்பு இருக்கிறது என்றும் உற்பத்தி மூல காரணிகள் இயல்பாக இடம்விட்டுப் பெயரும் தன்மைபெற்றது என்றும் கருதலாம். இவ்வாறான அனுமானம் தவறு எனக் கருதப்படுகிறது. பல நாடுகளில் அளவு கடந்த எண்ணிக்கையில் வேலை வாய்ப்பின்மையும் மற்றும் சில நாடுகளில் குறைவாக வேலை வாய்ப்பு (Under Employment) உள்ளதென்றும், இதன் விளைவை இந்த விதி மேற்கொண்டு ஒன்றும் கூற இயலவில்லை.

[1] G. A. T. T. — International Trade 1955 & 1956 (Geneva 1956 & 1957), p. 6-15,9-17.

இந்த விதியின் கீழ் தனிப்பட்டவரின் அடக்க விலைகளைப் பற்றி ஆராயப்படுகிறதே அன்றி சமூக அடக்க விலைகளைப் பற்றி சிந்தனை செலுத்தப்படுவதில்லை. சமூக அடக்க விலைக்கும் தனியார் அடக்க விலைக்கும் உள்ள வேற்றுமைகள் உலகப் பொருளாதார நலனைப் பற்றிக் கூற இடம் அளிப்பதில்லை.

இந்த விதியின் கீழ் உலகனைத்திலும் நிறைவுப் போட்டி (perfect competition) உள்ளது என்று அனுமானிக்கப்பட்டுள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது. வளர்ச்சியுறு நாடுகளில் முன்னேற்றத் திட்டத்தையொட்டி விலை அமைப்பினைக் கட்டுப்படுத்தி நிறைவுப் போட்டியை நீக்குகின்றனர். ஆயினும் நிறைவற்ற போட்டியின் கீழ் (imperfect competition) இறுதி அடக்க விலை விற்பனை விலைக்குச் சமமானது அன்று. இது இந்த விதியின் கொள்கை.

**எக்ஸ்சர்-ஆக்லின் அவர்களின் பன்னாட்டு வர்த்தக விதி (Heckscher-Ohlin Theory of International Trade)**

ரெக்கார்டோ (Ricardo) மற்றும் இதர நபர்களால் மாற்றி அமைக்கப்பட்ட அடக்கவிலை ஒப்பிடல் விதி பன்னாட்டு வர்த்தகம் நடைபெறுவதற்கு இது மிகவும் பயனுள்ளது எனக் கூறுகிறது. ஆயினும் அவ்வாறு ஒப்பிடல் விதியின் கீழ் வேறுபாடுகள் ஏன் ஏற்பட வேண்டும் என்று விளக்கம் கூறப்படவில்லை. பல்வேறு நாடுகளில் உற்பத்தி அடக்கவிலையின் வேறுபாடுகளை எடுத்துக்காட்டும் வகையில் விளக்கம் செய்ய எக்ஸ்சர்-ஆக்லின் முன் வந்துள்ளனர். இவர்களுடைய விதி ஒப்பிடல் விதிக்குப் புறம்பானதன்று அதைத் தழுவியே விளக்கம் கொடுக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. அடக்கவிலை ஒப்பிடல் விதியைப் படிக்கத் தொடங்கு முன் எக்ஸர்-ஆக்லின் விதியைத் தெரிந்து கொண்ட பின்னர்தான் ஒப்பிடல் விதியைப் படிப்பது நலம். எனவே எக்ஸ்ர்-ஆக்லின் விதியை ஒரு முன்னுரையாகக் கருதலாம்.

**இந்த விதியின் அனுமானங்கள்**

1. இரண்டு நாடுகள் மட்டிலும் இருக்கும்.

2. அவற்றிடையே நிறைவுப் போட்டி பண்டத்திலும் மூல காரணிகளிலும் இருக்கும்.

3. ஒவ்வொரு பண்டத்தின் உற்பத்தி முறையும் வேறுபட்டு இருக்கும். ஆயினும் இரு நாடுகளிலும் ஒரே மாதிரியான உற்பத்தி முறை அமைந்திருக்கும்,

(4) பண்ட உற்பத்தியில் சம வருவாய் (Constant returns) இருக்கும் என்றும்,

(5) போக்குவரத்துச் செலவு, காப்பீட்டுச் செலவு, மற்ற இதர செலவுகள், சுங்கவரி முதலியவை இருக்காது என்றும்,

6. வர்த்தகச் செலாவணிக் கட்டுப்பாடுகள் இல்லை என்றும், காரணிகளின் உதவி தேவைக்கான அடிப்படைச் சட்டங்கள் உற்பத்திக்கான திட்டங்கள் நாடுகளில் வரையறுக்கப்பட்டுள்ளன என்றும்,

7. மூல காரணிகள் நாட்டை விட்டுப் பிறிதொரு நாட்டிற்கு மாறுவதில்லை என்றும், நாட்டினுள் எளிதாக மாறிக் கொண்டு வரும் என்றும்,

8. உற்பத்தி முறைகள் மூலகாரணிகளின் அமைப்பைக் கொண்டு நடந்துவரும் என்றும்,

9. நாடுகளில் உற்பத்திப் பெருக்கினுல் முழுவேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

# 3. பன்னாட்டு வர்த்தகத்தினின்று வரும் இலாபம்

**வர்த்தகத்தின் வாயிலாக வரும் இலாபத்தை அளவிடும் முறை**

அயல்நாட்டு வர்த்தகத்தின் வாயிலாகத் தேசிய இலாபத்தை அளவிடப் பண்டைப் பொருளியல் வல்லுநர் மூன்று வகையான அளவைகளைப் பயன்படுத்தி வந்தனர்.

1. அடக்கவிலை ஒப்பிடல் விதியின் மூலம் ஒவ்வொரு நாடும் தன் நாட்டின் வருமானம், எவ்வளவு சிக்கனமான முறையில் பெற விழையும்.

2. நாட்டு வருமானத்தின் ஏற்றத்தையோ இறக்கத்தையோ கொண்டு அளவிடல்.

3. வர்த்தக மாற்று விகிதத்தை (Terms of Trade) ஆய்ந்து அவற்றின்மூலம் பன்னாடுகளில் நிகழும் வழங்கு முறைக்குக் குறியீடாக (Index) அமைத்து இலாபம் எவ்வளவு என்று அனுமானிக்கப்படுகிறது.

இம் மூன்று முறைகளை விளக்கம் தராது தமது விருப்பத்திற்கேற்ப வசதிப்படி ஏதாவது ஒரு முறையைக் கையாண்டு அவர்கள் குழப்பத்தை விளைவித்தனர்.[1] கால அளவையின் அடிப்படையில் நோக்கினால், ஒன்றாவது இரண்டாவது அளவைகளுக்குள் யாதொரு வேறுபாடும் கிடையாது என்று புலனாகிறது. வருவாயின் அதிகரிப்பினால் அடக்கவிலை எவ்வண்ணம் குறைகிறது என்று சித்தரிக்க இயலும் அல்லது பண்டத்தின் விலை, அடக்கம் இவற்றின் அடிப்படையில் நோக்கின், அடக்க அளவையில் எவ்வளவு வருமான அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது என்றும் கண்டு

[1] Jacob Viner—Studies in the Theory of International Trade London, (1955), p. 47.

பிடிக்கலாம். இந்த ஒப்பிடல் முறை காலஅளவையின் வாயிலாகக் கருதப்படின் முன் கூறிய இரண்டும் ஒரே குணநலனைப் பெற்றவையாகா என்பது புலப்படும்.

வர்த்தகமில்லாத காரணத்தால் தோன்றும் நட்டத்தைக் கொண்டு பன்னாட்டு வர்த்தகத்தினின்று வரும் இலாபம் எவ்வளவு என்று கணக்கிடலாம். பல காரணங்களை முன்னிட்டு இறக்குமதிப் பண்டங்களின் உள்நாட்டு உற்பத்தி அடக்கவிலை அதிகரிப்பின் மாறுத அளவுள்ள ஏற்றுமதிப் பண்டங்களுக்கு மாற்றிக்கொண்டு அதன் மூலம் இலாபம் பெறக்கூடும். மாறிய நிலைமையில் தேசிய சுயதேவை அடக்கவிலை ஏறக்கூடும். மாறிய நிலையில் வர்த்தகத்திலிருந்து வரும் வருமானம் அதிகரிக்கிறது. தேசிய வருமானமோ, அல்லது செலாவணி விகிதமோ, அல்லது உற்பத்தி அடக்கவிலையோ மாறுத நிலையில் இருப்பினும் மேலே கூறியபடி வருமானம் அதிகரிக்கும். கொடுங்கோல் ஆட்சியில் உற்பத்தி அடக்கவிலை குறைந்தும் தேசிய வருமானம் அதிகரிக்கவும் செய்யும். அதேபோன்று இறக்குமதிப் பண்டத்தை உள்நாட்டில் உற்பத்தி செய்வதால் குறைந்த அடக்கவிலையாக இருப்பின் நாட்டின் சுயதேவைச் செலவு குறைவுபடும். எனவே, உள்நாட்டில் உற்பத்தியாகும் ஏற்றுமதிப் பண்டத்துடன் இவற்றை மாற்றிக் கொள்வதால் பெறக்கூடும் இலாபம் குறைகிறது. ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்தி விலையில் குறைவு உள்நாட்டு இறக்குமதிப் பண்டங்களின் உற்பத்தி விலைக்கு நிகராக இருப்பின் வர்த்தகத்தினின்று வரும் இலாபம் மாறுதிருக்கும்.

சில இறக்குமதிப் பண்டங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய இயலாது. அவ்வாறுன இறக்குமதிப் பண்டங்களின் உள்நாட்டு அடக்கவிலை மிகப் பெரியதாக இருக்கும். இறக்குமதிப் பண்டங்களில் ஏதேனும் ஒன்று உள்நாட்டில் உற்பத்தி செய்ய இயலாது என்று அனுமானித்துக் கொள்வோம். இந்தக் காரணத்தால் பன்னுட்டு வர்த்தகத்தினுல் பெரும்படியான இலாபம் அடையும் என்று கொள்ளமுடியாது. அவ்வாறுன பண்டங்களை இறக்குமதி செய்யவேண்டி ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டிய மூலப் பொருள்கள் போக மீதமுள்ள மூலப் பொருள்களின் நுகர் விலையை இறக்குமதிப் பண்டங்களின் நுகர்வு விலையில் இருந்து கழித்தால் ஏற்படும் நட்டம்தான் உள்நாட்டு இறக்குமதி விலைக்கும், மேற்படி பண்டங்களின் உள்நாட்டு அடக்க விலைக்கும் உள்ள வேறுபாடுதான் வர்த்தகத்தின் இலாபம் எனக் கருதலாம். திருப்தி என்ற பொருளுக்குப் பல்வேறு

விளக்கங்கள் தர இயலும். ஒரு நபர் அடையும் திருப்தியின் அளவை மற்றவரின் திருப்தியளவுடன் ஒப்பிடல் சரியானதன்று. ஏற்றுமதிப் பண்டத்தை உள்நாட்டில் நுகர்வதால் ஏற்படும் திருப்திக்கும் இறக்குமதி செய்து அவற்றால் வரும் திருப்திக்கும் வேறுபாடு உண்டு.

உள்நாட்டிலேயே எல்லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்வோம் என அனுமானித்தாலும் அதன் விளைவாக இறக்குமதியை ஈடுகட்ட ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்யாது நின்றுவிடும். இதனால் முன்னரே இருந்தே உற்பத்தி நுகர்வு விகிதம் மாறுபடும். பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட முறைக்கேற்ப உற்பத்தி நுகர்வு உள்நாட்டிலேயே நடப்பின் தேசிய சுய தேவையின்கீழ் நட்டம் குறையக் கூடும். உள்நாட்டில் உற்பத்தி செய்து நுகர்வு செய்வதால் என்ன விகிதம் இருக்குமோ அந்த விகிதத்தில் பன்னாட்டு வர்த்தகத்தில் கொள்முதல் செய்து நுகர்ந்தால் பன்னாட்டு வர்த்தகத்தில் இலாபம் ஏற்படும். சுய தேவை நுகர்வும் பன்னாட்டு வர்த்தகத்தில் நுகர்வும் ஒரே நேரத்தில் அமையாது. இரு நிலைமைகளிலும் நுகர்வு வகைகள் மாறக்கூடும். இதனால் பன்னாட்டு வர்த்தக இலாபம் குறையக் கூடும்.

தொன்மைப் பொருளியல் வல்லுநர் நாட்டின் இலாபத்தை அளவிட்டுக் குறிப்பிட்ட காலத்தினுள் நாட்டிற்கு வர்த்தகத்திற்கு எவ்வளவு வரும் என்று கணக்கிட்டனர். வர்த்தகத்தின் போக்கை (Trend) உள்நாட்டு உற்பத்தி அடக்க விலையையும் ஏற்றுமதி, இறக்குமதி விலைகள் விகிதத்தையும் கொண்டும் கணக்கிட்டனர். குறிப்பிட்ட கால வரையறையினுள் ஏற்றுமதி இறக்குமதியின் அமைப்பு, குணம் இவை எங்கும் மாறுவதில்லை. இதனால் அடக்க விலையும் மாறாது அமையும்.

அடக்க விலைகளில் ஏற்படும் மாறுதல்களால் ஏற்றுமதி இறக்குமதிகளின் அமைப்பும், குணங்களும் மாறக் கூடும். ஏற்றுமதி இறக்குமதிகளின் குணங்களும், அமைப்பும் அயல் நாட்டுச் செலாவணி விகிதங்களில் மாற்றமேற்பட்டாலும் நிகழும். ஜிவான்ஸ் (Jevons) வாணிப மாற்று விகிதத்தைக் (Terms of Trade) கண்டுபிடித்து, இது பன்னாட்டு வாணிபத்தில் இலாபம் எவ்வளவு என்பதைக் காட்டப் பயன்படும். இறுதிநிலைத் துண்டு (Marginal Unit) என்றும், முழு நுகர்வு உள்ள இறக்குமதியின் இறுதிநிலைத் துண்டும் நுகர்வு செய்ய இயலா. ஏற்று

மதியின் இறுதி நிலைத் துண்டு இவ்விரண்டிற்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக் காட்டும் என்கிறார்.

(i) இறக்குமதிகளின் நுகர்வு பற்றிய வாய்ப்பு

(ii) ஏற்றுமதிகளை நுகர வாய்ப்பு

(iii) நடக்கப் போகும் வர்த்தகத்தின் அமைப்பு, பரிமாணம் முதலியவைகளைப் பற்றிய விளக்கம். எந்த நிலைமையிலும் உள்நாட்டுப் பண்டத்திற்குப் பதிலாக அதிக அளவு அயல்நாட்டுப் பண்டங்களைப் பெறுவதால் இந்நாட்டிற்கு ஏற்ற அளவு பயனளிக்கும் என்று கூற இயலாது. இக் கொள்கையைச் சில எடுத்துக்காட்டுகளைக் கொண்டு விளக்க முயலுவோம்.

ஒரு நாட்டு தமது பண்டத்தின் வர்த்தகமாற்று விகிதத்தைச் செம்மையாக்கும் நோக்குடன் சுங்கவரி விதிக்கக் கூடும் அல்லது இறக்குமதியின் மீது அளவுக் கட்டுப்பாட்டை அமைத்து விடக் கூடும். உள்நாட்டில் மக்களுக்கு இந்தக் கட்டுப்பாட்டினால் ஏற்படும் மொத்த நட்டம் வர்த்தகத்தின் மாற்று விகிதத்தில் வரும் இலாபத்தைவிட அதிகரித்தால் அது பயனற்றுப் போய்விடும்.

**வர்த்தகத்தினின்று வரும் இலாபங்களை வழங்குதல்**

டேவிட் ரெக்கார்டோ தனது ஏட்டில், அடக்கவிலை ஒப்பிடல் விதி, உள்நாட்டு மதிப்பினைக் கொடுப்பதுபோல் பன்னாட்டு மதிப்பினை விளக்க இயலவில்லையாதலால் அது குறைவான அளவில் அமைந்தது எனக் கூறுகிறார். உற்பத்திக் காரணிகள் அனைத்தும் நிலைபெயராத்தன்மையுடையவை என்றும் அவற்றிற்குப் போதிய வருமானம் கிடைப்பது இல்லை என்றும் கூறியுள்ளார். ஜேம்ஸ் மில் (James Mill) தனது முதல் பதிப்பில்[1] (First Edition) வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பெறும் இலாபம் எனக் கருதுகிறார். இதனை தவறான கொள்கையெனலாம். இதனைத் தனது மூன்றாம் பதிப்பில் (Thrid Edition) நீக்க முயன்று தோல்வியுற்றார். வர்த்தகத்தில் பெறக்கூடிய இலாபத்தை இதில் பங்கு பெறும் நாடுகள் அனைத்தும் பகிர்ந்து பெற்றுக்கொள்ளும் எனக் கருதினார்.[2] பென்னிங்டன் (Pennington) தனது ஏட்டில் இதைப் பற்றிய விளக்கத்தை நன்கு மறுசீராய்வு செய்து கூறியுள்ளார். அடக்கவிலை ஒப்பிடல் விதி அதிகப்படியான எல்லைக் கோட்டையும்

[1] James Mill—Elements of Political Economy (London 1821), p. 86
[2] James Mill—Elements of Political Economy (London 1816), p. 122.

குறைந்தவிலைக் கோட்டையும் குறிப்பிடுகிறது. இவற்றின்மூலம் வர்த்தக மாற்றத்தின் நிலையை நன்கு தெரிந்து கொள்ளலாம். பொதுவாக எதிரெதிர்த் தேவை (Reciprocal Demand) உண்டாவதினின்று இதனைத் தெரிந்து கொள்ளலாம்[1].

**பன்னாட்டு ''திப்புக் கொள்கையைப் பற்றி மார்ஷல்லின் பொது விளக்கம்**

ஒரு நாட்டில் ஏற்றுமதிப் பண்டங்களும், இறக்குமதிப் பண்டங்களும் உள்ளன. எந்தெந்தப் பண்டங்கள் ஏற்றுமதியென்றும் எந்தெந்தப் பண்டங்கள் இறக்குமதி என்றும் வரையறுத்துக் கூறுதவரையிலும் வழங்கு தேவைகளைப்பற்றி விளக்கம் தர இயலாது. இந்த இடையூற்றைப் போக்குவதில் ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பண்டங்களை ஒரு பொது அளவாக மதிப்பிடுகிறார். ஜெர்மனி நாட்டு ஏற்றுமதிகளை ஜெர்மனி கட்டு மலடு (Bale) எனக் குறிப்பிடுகிறார். இதனால் எவ்வளவு ஜெர்மனியப் பாட்டாளிகளின் உழைப்பும், மூலதனமும் அதில் உள்ளதென்று அனுமானித்துக் கொள்கிறார். அவர் மேற்கொண்டுள்ள அனுமானங்கள் வருமாறு:

1. இரண்டு நாடுகளுக்கிடையே மட்டும் வர்த்தகம் நடைபெறும்; இதர நாடுகளுடன் வர்த்தகம் நடைபெறுவதில்லை.
2. ஒவ்வொரு நாட்டின் செலாவணியும் அதன் உள்நாட்டில் மட்டும் மதிப்பு பெற்றுள்ளது, மற்றபடி அயல்நாட்டில் மதிப்பு கிடையாது.
3. ஒவ்வொரு வர்த்தகரும் எல்லா நாடுகளிலும் வர்த்தகம் செய்கிறார். தங்கள் ஏற்றுமதிப் பண்டங்களுக்குப் பதிலாக அயல் நாட்டின், பண்டங்களைக் கொண்டு வருகிறார். ஏற்றுமதிக் கணக்கின் மீது பட்டியல்கள் (Bills) தயாரிப்பதில்லை. இதனால் அன்னியச் செலாவணி தொடர்பான பிரச்சினை இல்லை.
4. வர்த்தகத்தின் காரணமாக ஒரு நாட்டின் கடன் கொடுக்கல் நிலை ஏற்படாது. இதன்மூலம் மூலதனப் பெயர்ச்சி தடுக்கப்படுகிறது.
5. ஒவ்வொரு நாடும் தன் நாட்டு எல்லைவரை போக்குவரத்துச் செலவை மேற்கொள்ளும். அதற்குமேல் ஏற்படும் செலவை அந்தந்த இறக்குமதி நாடுதான்

[1] James Pennington—A Letter to Ikrmarphinlay (London 1811) p. 32-41.

மேற் கொள்ளவேண்டும். இதனால் போக்குவரத்துச் செலவு தொடர்பான பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

## சிறு நாடுகள் பெறும் தனிப்பட்ட இலாபம்

பன்னாட்டு வர்த்தகத்தில் சிறு நாடுகள் பொதுவாக அதிகமாக இலாபம் பெறக்கூடும் எனலாம். சிறு நாடு தன்னுடைய அன்னியச் செலாவணியைப் பாதிக்காமல் உற்பத்தியைப் பெருக்கி குறிப்பிட்ட ஒரேஒரு பண்டத்தின் உற்பத்தியைச் சிறப்பாக அமைக்கலாம். இதன் விளைவாக இதனுடைய இறக்குமதிகளின் விலைகள் குறையக்கூடும். ஒரு பெரிய நாட்டில் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியைப் பெருக்கினால், அதன் வழங்குதல் (Supply) அதிகரித்து அதன் காரணமாகப், பன்னாட்டு விலையில் விலை மாறக்கூடும். பன்னாட்டுச் செலாவணி விகிதம் எனப்படுவது பெரிய நாடுகளின் அடக்கவிலைகளினால் வெகுவாகப் பாதிக்கப் படுகிறது; சிறுநாடுகளின் அடக்கவிலைகளினால் பாதிக்கப் படுவதில்லை எனத் திட்டமாகக் கூறலாம். ஒரு நாடு தன் எல்லையை ஆக்கிரமிப்பின் மூலம் அதிகப்படுத்தி வந்தால், அந்நாட்டின் அடக்கவிலை பன்னாட்டுச் செலாவணி விகிதத்தைப் பாதிக்கும் எனலாம். மேன்மேலும் நாடுகள் ஒற்றுமையுடன் ஒன்றாகச் சேர்ந்தபின் உலக நாடுகள் எனப் பெயர்பெறும். பன்னாட்டு வர்த்தகத்தின் விளைவாக இலாபம் குன்றிப்போகும். உள்நாட்டு வர்த்தகத்தில் இலாபம் அதிகமாகப் பெறக்கூடும்.

ஒரு சிறிய நாடு பெரிய நாட்டுடன் வசதியான வர்த்தக மாற்று வீதத்தில் வர்த்தகம் செய்தால் பெரிய நாட்டிற்கு வசதியின்மை என்று கருத இடமில்லை. அல்லது பெரிய நாடு மற்றும் இதர பெரிய நாடுகளுடன் வர்த்தகம் செய்யின் வசதி யான வர்த்தக மாற்று விகிதம் (Terms of Trade) ஏற்பட இடம் உண்டு. உலகின் மொத்த வர்த்தக விகிதத்தில் இது மிகவும் குறைவான இலாபப் பங்கு எனக் கருத இடம் உண்டு. ஒரு சிறிய நாடு உலகச் சந்தையிலிருந்து நீங்கி விட்டால் இது உலக வர்த்தகத்தைப் பாதிக்காது.

ஒரு சிறிய நாடு தனது உருவத்தின் காரணத்தால் அதிகப்படி வர்த்தகமோ அல்லது குறைவான வர்த்தகமோ செய்கிறது என்று கருத இடமில்லை. அதனுடைய அடக்கவிலை உலக நாடு களின் அடக்கவிலைக்குச் சமமாக இருப்பின் அதற்குப் பெருத்த அளவில் வர்த்தகம் ஏற்படும் எனலாம். ஒரு பெரிய நாட்டின் வர்த்தக நிலையில் அதன் அடக்கவிலையில் உலக விகிதத்தினின்று மாறுபட்டதாகவும் இயற்கை ஆதாரங்களினின்று மாறுபட்டும்

இருப்பின் அந்தப் பெரிய நாட்டின் இலாபத் திட்டமாக அமையக் கூடும் என்று கருத இடமுண்டு.

**செல்வந்தர் நாடுகளுக்குக் கிடைக்கும் இலாபம்**

வறிய நாடுகளுக்குப் பன்னாட்டு வர்த்தகத்தினின்று இலாபம் வருவதைவிட செல்வமிக்க நாடுகளுக்குக் குறைவாகத்தான் இலாபம் கிடைக்கின்றது எனலாம். ஒரு நாட்டைக் குறிக்கும் போது அந் நாட்டின் நிலப்பரப்பைக் கொண்டு செல்வமிக்க நாடு என்றும், ஏழை நாடென்றும் முடிவு செய்ய இயலாது. நாட்டின் சராசரி வருவாயைக் (Per Capita Income) கணக்கிட்டுத்தான் வறிய நாடு அல்லது செல்வந்தர் நாடு என்று கூறுவோம். பொருளாதார அமைப்பின் அடிப்படையில்தான் இம் மாதிரி முடிவு செய்யப்படும். வர்த்தகத்தினின்று தோன்றும் இலாபத்தை வருவாயாகக் கருதி அதன் அடிப்படையில் நாட்டின் செல்வ நிலையை முடிவு செய்யலாம். நாட்டில் அதிகப்படியான இலாபம் வருகிறது என்றால் நாட்டின் இயற்கை வளத்தைப் பொறுத்தும், மிகச் சிறிய தொழில்நுட்பக் கலை பயின்ற மக்கள் வாழும் காரணத்தாலும், முன்னேறலாம் எனக் கூற இடமுணடு.

பல்வேறு பண்டங்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபம் மாறுபட்டு இருக்கும். இறக்குமதி செய்த பல்வேறு பண்டங்களின் அடக்கவிலை ஏற்றுமதிப் பண்டங்களின் அடக்க விலையினின்று மாறுபட்டு இருக்கும். சில பண்டங்களை உள் நாட்டில் உற்பத்தி செய்வதில் சில அதிகப்படியான செலவுகளுக் கிடையே உற்பத்தி செய்யவேண்டி ஏற்படுகிறது. அதன் காரணமாக அப் பண்டத்தை உள்ளூரில் உற்பத்தி செய்வதைவிட இறக்குமதி செய்வதே நலம் என்று இறக்குமதி செய்யக்கூடும். இதனால், இலாபம் தோன்றும் எனக் கருத இடமில்லை.

**வர்த்தக மாற்று விகிதங்கள்-வர்த்தக மாற்று விகிதத்தின் பல்வேறு வகைகள்**

டாஸிக் (Taussig) மொத்தப் பண்ட மாற்று விகித வர்த்தகம் (Gross Banker Term of Trade) என்பதைப் பற்றி விளக்குகிறார். நாட்டின் மொத்த அளவையில் இந்த அளவு ஏற்றுமதி, இந்த அளவு இறக்குமதி எனக் கணக்கிடலாம். அளவுக் கணக்கில் நாட்டின் இறக்குமதி அதிகரித்தும் ஏற்றுமதி குறைந்தும் இருப் பின் இதற்கு எதிரிடை முறையின்கீழ் வர்த்தக மாற்று விகிதம் குறைவுபடலாம். இதற்கான குறியீட்டைக் (Index) கணக்கிடும் போது டாஸிக் (Taussig) நிகர பண்ட மாற்றுடன் நாடு அளிக்கும் கொடைப் பணம் நாடு பெயருவோருடைய பண மாற்றுப்

இவற்றைக் கூட்டிக்கொள்கிறார். இம் மாதிரியான அதிகப்படியான கூட்டல்கள் உண்மையில் வர்த்தக மாற்று விகிதத்தை நன்கு எடுத்துக் காட்டுவதில்லை. ஏனெனில் இவையனைத்தும் பன்னாட்டு வர்த்தகத்திற்கு அப்பாற்பட்டவை. தொடர்பில்லாத பல்வேறு செலவினங்களையும் வரவினங்களையும் சேர்த்துக் கூட்டுவது தவறாகும்.

டாரென்ஸ் (G. S. Dorrence) வருவாய்த் தொடர்பான வர்த்தக மாற்று விகிதம் (Income Concept of Terms of Trade) என்ற புதிய முறையைப்பற்றிக் கூறுகிறார். ஏற்றுமதிக் குறியீட்டெண்ணை இறக்குமதிக் குறியீட்டெண்ணால் (Imports Index No) வகுத்து வரக்கூடிய ஈவு என்கிறார். புள்ளியியலின்படி நோக்கின், விலை குறைவு காலங்களில், வளர்ச்சிபெறவியலும் நாடுகள் தங்கள் ஏற்றுமதிகளில் அடிப்படைப் பண்டங்களின் தரத்தை உயர்த்தியும் ஏற்றுமதியை அதிகரிக்க விழைகின்றன. ஆயினும் வர்த்தகப்பின்னிரக்க நிலையில் (Recession) இந் நாடுகளில் ஏற்படும் வர்த்தக சீர்கேடான நிலையை எடுத்துக் காட்டுவதில்லை.

பொதுவாக நடைமுறையில் பண்டங்களின் வர்த்தக மாற்று விகிதங்களைத்தான் பயன்படுத்துகின்றனர். ஓர் அடிப்படை அல்லது இரு அடிப்படைப் பண்ட வர்த்தக மாற்று விகிதங்களைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் வர்த்தக உற்பத்தி எம் முறையில் அமைந்துள்ளது என்று கணக்கிடுவது கடினம். உண்மை அடக்க விலை மாற்று விகிதங்களையோ நுகர்வு மாற்று விகிதங்களையோ கணக்கிட முடியாத காரணங்களால் பயன்படுத்துவதில்லை.

**ஒரு நாட்டின் வர்த்தக மாற்று விகிதங்களைக் கணக்கிடும் முறை**

இரு நாடுகளின் வர்த்தக மாற்று விகிதங்கள் இந்த அளவு என்று ஆராயுமுன்னரே ஒவ்வொரு நாட்டின் பண்டங்களின் உற்பத்தியும் மற்ற நாடுகளில் எந்த அளவிற்குத் தேவை என்றும் கோரப்படுகிறது எனக் கணக்கிடல் வேண்டும். கணக்கிடும் முறைகள்:

(i) வழங்குதலுக்கான போதிய மூல காரணம்

(ii) மக்கள் தொகை

(iii) பண்டங்கள் அமைப்பு

(iv) வாங்குபவரின் திறமையும் விருப்பு வெறுப்பும்

(v) நாட்டின் கொள்கை

'அ' என்ற நாடு பல்வேறு வகைகளான பண்டங்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் என்று வைத்துக் கொள்வோம். 'இ' என்ற நாட்டு மக்களின் விருப்பம் இருப்பின், 'அ' என்ற நாட்டு உற்பத்திப் பண்டங்கள் இங்கு விற்கும். ஆயினும் 'இ' என்ற நாட்டு உற்பத்திகளுக்கு 'அ' என்ற நாட்டில் கிராக்கி இருக்குமா என்றால் இல்லை எனலாம். ஏனெனில் 'அ' என்ற நாடு தன் உற்பத்தித் திறனால் தேவையைச் சமாளிக்கலாம். அதற்கு இறக்குமதி தேவையில்லை. பெருமளவு மக்கள் தொகை உள்ள நாட்டில் உற்பத்தி அதிகம் இருப்பினும் இறக்குமதி அதிகமாகவும் ஏற்றுமதி குறைவாகவும் பொதுவாகக் காணப்படும். பலவகைப் பட்ட உற்பத்தி பெருமளவாக இருப்பின் அந்தப் பண்டங்களுக்குப் பொதுவாகக் கிராக்கி அதிகம் ஏற்படக்கூடும். ஆனால் தனிப்பட்ட ஒரு சாரார் மட்டும் உற்பத்தி செய்யின் அவ்வுற்பத்திக்குக் கிராக்கி இராது ஏற்றுமதி குறைந்துபோகும். மக்களின் விருப்பத்தைக் கொண்டு ஒரு நாட்டின் இறக்குமதி அளவைத் தீர்மானம் செய்யலாம். வாங்கும் திறமையைக் காட்டும் செல்வ நிலையைக் கொண்டு நாட்டின் கொள்முதல் அளவை முடிவு செய்யலாம். அரசின் கொள்கையையொட்டி இறக்குமதியின் மீதிடப்பட்ட தடையைக் கணக்கிட்டு, இயல்பாக எவ்வளவு இறக்குமதி எனக் கண்டுகொண்டு அதன் வழியே வர்த்தகமாற்று விகிதத்தை முடிவு செய்யலாம்.

வர்த்தகமாற்று விகிதத்தில் தேவையின் அளவை அறிய வேண்டுமானால் இரு நாடுகளின் தேவை, வழங்கு இவ்விரண்டின் நெகிழ்ச்சிகளை ஒப்பிட்டுக் கூற இயலும். எடுத்துக் காட்டாக, 'அ' என்ற நாட்டின் உற்பத்திப் பண்டங்களும் 'இ' என்ற நாட்டில் அதிகப்படியான கிராக்கியும் ஏற்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்வோம். இதற்கான ஒரு காரணம் 'இ' என்ற நாட்டில் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. வர்த்தக மாற்று விகிதத்தில் சீர்குலைவு ஏற்பட 'அ' என்ற நாட்டின் வழங்கு நெகிழ்ச்சியையும் 'இ' என்ற நாட்டின் தேவை நெகிழ்ச்சியை யொட்டியும் ஏற்படும். இவ்விரண்டிலும் நெகிழ்ச்சி இல்லை என்றால் வர்த்தக மாற்று விகிதத்தில் சீர்குலைவு ஏற்படலாம். நெகிழ்ச்சி மிதமிஞ்சி ஏற்படின் வர்த்தக மாற்று விகிதம் வேறுபாடு அடையாது. அது கொடுக்கல் வாங்கலையொட்டியும் அமையும்.

உலகின் எண்ணற்ற நாடுகள் நிருவகிக்கப்பட்ட செலாவணியில் (Managed Currency) பரிமளித்து வருகின்றன. சந்தையை(Market)யொட்டி இரு நாடுகளின் செலாவணிகளுக்கு மாற்று விகிதம் தீர்மானிக்கப்படுவதில்லை. அரசின் கொள்கையை யொட்டியே செலாவணி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது.

**வர்த்தக மாற்று விகிதங்களை அளப்பதில் ஏற்படும் புள்ளியியல் பிரச்சினைகள்**

இறக்குமதிப் பொருள்கள் அனைத்தும் ஒரே இனத்தைச் சார்ந்திருப்பின் அதிக சிரமமின்றி புள்ளி விவரத்தைத் தயாரிக்கலாம். அதே போன்று ஏற்றுமதிப் பொருள்களும், ஒரே இனத்தைச் சார்ந்திருப்பின் புள்ளி விவரம் தயாரிப்பதில் சிரமம் ஏதுமில்லை. ஒரு நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி, பற்பல வகையான பண்டங்கள், சேவைகள் இவைகளால் அமைந்திருப்பின் அவற்றைச் சீராக வகைப்படுத்திப் புள்ளி விவரம் தயாரிப்பது சற்று கடினம். அவற்றை அளப்பதும் அதிகக் கடினம் எனலாம்.

**குணத்தில் மாற்றம்:** காலத்தையொட்டி குணம், தரம் இவற்றில் மாற்றமேற்படின் அவற்றைச் சீராக விலையேற்றத்தில் காண்பிக்க இயலாது. அடிப்படைப் பண்டங்களைவிட உற்பத்திப் பண்டங்களின் தர உயர்வு கடந்த பல ஆண்டுகளாகக் கூடிவருவது தெரிந்ததே. கடந்த 60 ஆண்டுகளாக வளர்ச்சி பெறு நாடுகளின் விலை மாற்றங்கள் தெரிய வழி ஏற்படவில்லை.

**அமைப்பில் மாற்றங்கள்:** ஏற்றுமதி, இறக்குமதிகளில் அடிக்கடிப் பெரும் மாற்றங்கள் நிகழ்கின்றன. தேவைகள், நடப்பில் உள்ள மாற்றங்கள் இவைகள் மக்களின் தேவைக்கேற்ப விற்பனைகள் நிகழ்கின்றன.

**அலகின் மதிப்பைப் பயன்படுத்துதல்:** சுங்க அலுவலர்களிடம் விலைகளைப் பயமுறுத்தியபடி ஏற்றுமதி இறக்குமதி விலைகளையொட்டித் தயாரிக்கப்படும். உண்மை நிலை தெரியவேண்டுமானால் விற்பனை செய்த பிறகே தெரியவரும். நியாயமான விலையைச் சுங்க அலுவலர்களிடம் தெரிவிப்பது மிகவும் குறைவே. அன்னியச் செலாவணியைப் பெற அதிக விலைப் பட்டியல் (Over Invoicing) அல்லது குறைந்த விலைப் பட்டியல் (Under Invoicing) முறையைக் கையாளுகின்றனர். கம்பெனியின் பல்வேறு கிளைகளிலிருந்து பல தரமான விலைகளைக் கூறுவதால் அவை உண்மை விலையே எனக் கொள்ள இயலாது. ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும்ம திப்பிடும்போதும் இலாபத்தைக் கணக்கிடும்போதும், எந்த நாட்டில் இலாபத்தின் மீது வரி விகிதம் அதிகமாக உள்ளதோ அந் நாட்டில் குறைந்த இலாபம் காண்பிக்குமாறும் வரிதண்டல் நாட்டில் இலாபத்தை அதிகமாகக் காட்டும்படியும் கணக்குகளைத் தயாரிப்பார்கள்.

அடையிடுதலின் இன்றியமையாதப்பிரச்சினை: விலைக்குறியீடுகளை உருவாக்கும்போது ஏற்றுமதிகள், இறக்குமதிகள் இவற்றின் எடை அல்லது நிறுத்தல் இன்னதென்று எல்லாப் பண்டங்களுக்கும் முடிவு செய்யவேண்டிள்ளது. எல்லாப் பண்டங்களுக்கும் அதே அளவிட்டுப் புள்ளியியல் தயாரிக்கவேண்டிய தேவையில்லை. காலத்திற்கேற்ப எடையும், பண்டத்தின் தேவையும் மாறக்கூடும்.

போக்குவரத்து, கப்பல் செலவு, காப்பீட்டுறுதிச் செலவு : இறக்குமதிக்கு என்ன மதிப்பு எனத் தீர்மானிக்கும்போது பொதுவாக எல்லா நாடுகளும் அடக்கவிலை, கப்பல் செலவு, காப்பீட்டுறுதிச் செலவு (C.I.F.) இவற்றை கணக்கில் சேர்த்துக் கொள்வார்கள். ஏற்றுமதிகளைப் பொறுத்த மட்டில் இந்தச் செலவுகளை நீக்கி (F.O,B.) (கப்பல் கட்டணமன்றி) முன்னேற்றமடைந்த நாடுகள் தாம் இந்த கப்பல், காப்பீட்டுறுதி நிறுவனங்களை செவ்வனே நடத்தி வருகிறபடியால் அன்னியச் செலாவணியைப் பொருத்த மட்டில் வளர்ச்சி பெறாத நாடுகள் அதிகப்படியாக இவைகளுக்காகக் கூடுதலாகத் தேடவேண்டி ஏற்படும். ஆயினும் இறக்குமதிகளிலோ போக்குவரத்து, கப்பல் செலவு, காப்பீட்டுறுதிச் செலவு இவற்றை முன்னேற்ற நாடுகள் ஏற்றுக் கொண்டுக் கொடுப்பதில்லை. வளர்ச்சியுறு நாடுகளுக்கும் இந்தச் செலவுகள் திரும்பவும் கிடைப்பதில்லை. வர்த்தக மாற்று விகிதப்புள்ளி விவரம், சீராக அமைய வேண்டுமானால் பண்ட விவரங்களுடன் இதரப் பணிகளையும் கூட்டிக் கணக்கெடுத்தல் இன்றியமையாதது. ஏற்றுமதி இறக்குமதிகளின் ஒப்பிடத்தகு விலைகள் என்ற பன்னாட்டு நிறுவனத்தின் பரிந்துரையில் (Relative Prices of Exports and Imports Report by U.N.) விலைகளுக்கும் போக்குவரத்துச் செலவிற்கும் விகிதம் உள்ளபடியால் இவற்றைக் குறித்த புள்ளி விவரம் கட்டாயமாகத் தயாரிக்க வேண்டும்.

மாதிரிகள் : மாதிரிகளையொட்டி வர்த்தகப் புள்ளி விவரம் அமையும் எனக் கூறலாம். அதிகப்படியான பண்டங்களைக் கொண்ட ஏற்றுமதி, இறக்குமதி விவரங்களால் வர்த்தகப் புள்ளி விவரம் மாறுதலைக் காட்டுகிறது.

ஏற்றுமதி இறக்குமதி இவற்றிடையே உள்ள கால மாறுபாடு

ஏற்றுமதி இறக்குமதி குறியீட்டெண்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சுட்டிக் காட்டலாம். ஏற்றுமதியான காலத்திற்கும், இறக்குமதியான காலத்திற்கும் வேறுபாடு அதிகமாக இருப்பின், இதன் காரணத்தால் குறியீட்டெண்களின் அமைப்பும் மாறக் கூடும் எனலாம்.

பொருளாதார வளர்ச்சியும் வர்த்தகமாற்று விகிதமும்: நியாயமான வர்த்தக மாற்று விகிதம் ஏற்பட்டால்தான் வளர்ச்சியுறாத நாடுகள் முன்னேற்றம் பெற இயலும். குறிப்பாக அயல்நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு இது இன்றியமையாதது எனலாம். ஒரு நாட்டின் வர்த்தக மாற்று விகிதம் செம்மையாக இருப்பது என்ற கருத்தை குறைந்த ஏற்றுமதிக்குப் பதிலாக அதிக இறக்குமதிப் பண்டங்கள் அல்லது ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒரேஅளவில் இருக்கும் நிலை, இவை இரண்டும் நிகழ்வதிலிருந்து அறியக் கிடக்கிறது. இது நாட்டின் வருவாயை அதிகரிக்கப் பயன் படுகிறது. ஏற்றுமதியில் ஏற்படும் சேமிப்பு, அல்லது அதேஅளவு ஏற்றுமதிக்கென கிடைக்கும் அதிகப்படி இறக்குமதியின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கலாம்.

**பின் தங்கிய நாடுகளில் விற்பனை மாற்று விகிதம் சீர்கேடடைய காரணங்கள்**

அடிப்படைப் பொருள் உற்பத்தி நாடுகளில் வளர்ச்சி மிகவும் குறைவாகவே முன்னேறுகிறது. பொருளாதார முன்னேற் பாடடைந்துள்ள நாடுகளில் இவை வர்த்தகப் போக்குவரத்து பெற்றிருப்பதால், குறைந்த விலைக்கு இந்த நாடுகள் அவற்றை வாங்கிக் கொண்டு இலாப விகிதத்தில் பிற நாடுகளுக்கு விற்பனை செய்யக் கூடும். தொழிலுற்பத்தியில் ஈடுபட்டுள்ள நாடுகள் உலகவிலை எந்தப் பண்டங்களில் சரிகிறதோ அவற்றை நீக்கி இதர தொழில்களில் ஈடுபடுகின்றன. ஆனல் அடிப்படைப் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகள் இவ்வாறு தகுதியை மாற்றிக் கொள்ள இயலாத காரணத்தால் துன்பப்படுகின்றன. மூலப் பொருள் களுக்கும், தங்களுக்குத் தேவையுள்ள உணவுப் பொருள்களுக்கும் பின்தங்கிய நாடுகளை எதிர் நோக்கியிருந்தன. ஆனல் தற்போது அந்த நிலைமையில் அண்டிப் பிழைக்கும் நிலைமை மாறிவிட்டது. மூலப் பொருள்களுக்குப்பதிலாக செயற்கைப் பண்டங்கள் தயாரிக் கப்படுகின்றன. (செயற்கை இரப்பர், பெட்ரோல் எடுத்துக்காட்டு களாகும்). தொழில் வளர்ச்சியுடைய நாட்டின் தேசிய வரு வருமானம் மூலப்பொருள் உற்பத்திசெய்யும் பின்தங்கிய நாட்டை விட அதிகமாக உள்ளது என்பது நன்கறிந்த உண்மை. பொரு ளாதார முன்னேற்றமடைந்த நாடுகளில் வேளாண்மைத் தொழி லும் நன்கு முன்னேற்றமடைந்துள்ளபடியால் இதர நாடுகளிட மிருந்து இறக்குமதி செய்யத் துணிவதில்லை. பின்தங்கிய நாடுகளில் மக்கள் தொகை பெருகுவதிலிருந்து அதன் பொருளாதார நிலை மையில் அதிகப்படியான இடையூறுகள் நிகழலாம். குறிப்பாக ஏற்றுமதிக்கான பண்டங்களை உள் நாட்டிலேயே நுகர்வு செய்யப் படும்; அதிகப்படியான இறக்குமதி செய்யவும் கூடும்.

# 4. பன்னாட்டு வர்த்தகக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை

வர்த்தகக் கணக்கியலில் உள்ள இரட்டைப் பதிவு முறைக்குப் பன்னாட்டு வர்த்தகக் கொடுப்பல் நிலையில் வரும் கணக்கினை ஒப்பிடலாம். வர்த்தக இரட்டைப் பதிவு முறையில் பற்றுக் கணக்குடன் வரவினம் இணைகிறது. அதேபோன்று ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒன்றையொன்று சரிகட்டிக்கொண்டு பன்னாட்டு வர்த்தகக் கொடுப்பல் நிலையில் சமன்பாடடையும் என்று கூற இடமுண்டு. பன்னாட்டு வர்த்தகக் கொடுப்பல் நிலையில் மொத்தத்தில் வேறுபாடு உண்டாவதற்கு இடமில்லை. சமன்பாட்டின்மை நிலையைப்பற்றி ஆலோசிக்கும்போது நாம் அதில் ஈடுபட்டுள்ள சில குறிப்பிட்ட வரவினங்களுடன் சில பற்றினங்களைச் சரிகட்ட இயலா நிலையை ஆராய்கிறோமே ஒழிய கொடுப்பல் நிலையில் ஏற்படும் சமன்பாடினைக் கருதுவதில்லை.

முன்னாள் வர்த்தகக் கோட்பாட்டினர் (Mercantilists) பண்டு நடப்புக் கணக்கைக் கண்காணித்து அதற்கேற்பக் கொடுப்பல் நிலையில் தோன்றும் கூடுதல், குறைவினங்களைச் சரிகட்டப் பணத்தை அனுப்பி வந்தனர். வர்த்தகக் கோட்பாட்டினர் வாழ்ந்த காலத்தில் மூலதனத்தின் போக்குவரத்து அவ்வளவாக அதிகரிக்கவில்லை. வாணிபக் கொடுப்பல் நிலைப் புள்ளிவிவரம் நாட்டின் செலாவணியின் சக்தி இவ்வளவு என்பதைக் காட்ட முயன்றால் அது பலனளிக்கக் கூடும் எனலாம். பொன் உற்பத்தி செய்யும் நாடாக இருப்பின் பண்டங்களையும், பணிகளையும் மாற்றிக்கொண்டு அவற்றிற்கு ஈடாகப் பொன்னை ஏற்றுமதி செய்யும். இவ்வாறு செய்வதால் அந் நாட்டுப் பணச் செலாவணியின் மதிப்பு குறைவுபட்டதா (அல்லது) என்றும் ஒரே நிலையில் உள்ளதா என்றும் வரையறுத்துக் கூறமுடியாது.

மூலதனப் போக்குவரத்தின் இன்றியமையாத தன்மையைப் பற்றித் தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர். வாணிபக் கொடுப்பல் நிலைமையில் பாதகமாக இருக்கும்போது பொன்னைப் பெயர்ச்சி செய்தும், மூலதனத்தைக் கூட்டியும் சமன்படுத்தியும் நிலைமையைச்சமாளித்தனர். கூட்டியும் அல்லது ஊக்குவித்தல் (Indured) என்ற பதத்திற்கும் தானாகவே தம்மிச்சைப்படி (antonomous) மூலதனப் போக்குவரத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் பார்ப்போம். எந்த மூலதனப் பெயர்ச்சிகள் சந்தையின் (Market) இழுப்புகளுக்கேற்ப ஈடுபடுவதில்லையோ அல்லது மாறுவதில்லையோ அதைத் தத்தம் இச்சைப்படி நடப்பவை எனக் கூறலாம். சந்தையில் நிகழக் கூடிய வாணிபக் கொடுப்பல் நிலைக்கேற்ப ஏற்ற விளக்கங்களை யொட்டி மூலதனப் பெயர்ச்சி மாறினால் அதை ஊக்குவித்தல் எனக் கூறலாம். இவ்விதமாக இரண்டு வகைகளாக மூலதனப் பெயர்ச்சியைக் கூறுவது சற்றுக் கடினம் எனலாம். எந்த நோக்குடன் மூலதனப் பெயர்ச்சி ஏற்படுகிறது என்பதற்கு ரேக்னர்ஃப்ரீஷ் (Ragnar Frish) என்பவர் மூலதனப் பெயர்ச்சிக்குக் காரணத்தைக் காட்டும் வகையில்[1] சொத்துகள் எவ்வளவு நீர்மைத் தன்மையில் உள்ளன என்பதுதான், அவை எவ்வளவு காலம் உள்ளன என்பது கணக்கில்லை. எனவே, மூலதனப் பெயர்ச்சி குறுகிய காலத்திலோ அல்லது நீண்ட காலத்திலோ ஏற்படக் கூடும் என விளக்குகிறார். வாணிபக் கொடுப்பல் நிலையில் உள்ளதைப் பொறுத்துக் குறுகிய கால மூலதனப் பெயர்ச்சி நிகழ்ந்து வருகிறது. நீண்ட கால மூலதனப் பெயர்ச்சி எனப்படுவது அரசினரால் கடன் உருவில் பெறப்பட்டு வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக் குறையை அகற்ற முயலுவார்கள்.

பன்னாட்டுப் பண நிதி, அரசினரின் பதிலுதவிப் பணம், (Official Compensatory Finance) என்ற புதிய சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளனர். வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக்குறையை அளவிட இம்முறை பயனுள்ளதாகிறது. இந்தப் புதிய கொள்கையின் இலக்கணமாவது நாட்டின் நிதிக் காவலர்கள் போதிய செலாவணித் தொகையை ஏற்பாடு செய்து வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக்குறை நிலை அல்லது உபரி நிலையைச் சமாளிக்க முயலுகிறார்கள்.[2] இந்த அரசினரின் பதிலுதவிப் பணம் எனப்படுவதில் பணக் கணக்கில்

[1] Ragnar Frish-Austrid for Focusting and Multy Fedral Balance of Payments—September 1967, p. 536.

[2] International Monetary Fund-Balance of Payments Year Book 1938, p. 46, 47. (Washington 1949), p. 5.

பொன் கட்டி, அயல் நாட்டுச் செலாவணி ஒதுக்கு நிதிகள், கடன்கள், அரசின் பணக் கொடைகள் இவைகள்தான் காணப் படும். இதன் இலக்கணத்திற்கும் பண்டு கூறப்பட்டு வந்த சம நிலைப்படுத்தும் மூலதன, பொன் நிதி என்பதற்கும் வேறுபாடு உண்டு. பண்டை விளக்கத்தில் மொத்தமாகப் பொன்கட்டி, மற்றும் அன்னியச் செலாவணி இவற்றைப் பொதுவாகக் குறிக் கின்றன. ஆயினும் தற்போதுள்ள இலக்கணத்தில் அரசினர் (அ) காவலர்களால் எவ்வளவு உதவிஅளிக்கப்படுகிறது எனக்கூறப் படுகிறது. தனியார் செலுத்தும் பொன், பணத்தொகை கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இன்றைய உலகில் தனியார் கணக்கினைப் பற்றிய விவரம் தேவையற்றது. இன்றைய நிலையில் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் பொன்கட்டுப்பாடும், செலாவணிக் கட்டுப்பாடும் உள்ளன. நாட்டின் மத்திய நிதி நிறுவனம் இவற்றைக் கண்காணித்து வருகின்றது. வர்த்தக வங்கிகளும், தனி நபர்களும் நன்கு கட்டுப்படுத்தப்படுவதால் தனியார் துறையின் மூலம் பொன் போக்குவரத்து மிகவும் குறை வெனலாம். வர்த்தக வங்கிகளும், தனி நபர்களும் தங்களுடைய இலாபத்தைப் போக்கு வரத்து செய்வதிலும், பிறரால் பணம் அகற்றப்படாமல் இருக்கவும்தான் தனியார் துறையில் இந்த முயற்சி நடைபெறுகிறது.

பன்னாட்டுப்பணநிதியிலிருந்து ஒரு நாட்டிற்குப்பண உதவிக்குச் சென்றால் அது ஈடுகாட்டாகச் செல்லுமா அல்லது வேறெந்தக் காரணத்திற்காக அனுப்பப்படுவதா என வரையறுத்துக்கூற இயலாது.

'வாணிபக் கொடுப்பல் நிலையில் துண்டு விழுந்தால் அதற்காக அன்னியச் செலாவணியைப் பணமாகக் கொடுத்துவரின் அதனை ஈடுகாட்டியக்கடன் என்று பன்னாட்டுப் பணநிதியின் அலுவலர்கள் பண்டு கூறிவந்தனர். தற்காலத்தில் வாணிபம் கொடுப்பல் நிலையில் ஏற்படும் துண்டுத் தொகையை இன்னதென்று கணக்கிடு வதையே ஈடுகாட்டியப் பணவழி எனக் குறிப்பிடுகின்றனர்.[1]

ஈடுகாட்டிய பணஉதவி என்பதால் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமநிலை நிலவும் எனக் கூற இயலாது. அன்னியச் செலா வணியில் தேவை, வழங்குதல் இவை இரண்டினையும் சமநிலையில் வைக்கப் பதிலுதவிப் பணம் தேவையில்லை. அவ்வாறு செய்ய,

(i) இறக்குமதிகளைத் தடை செய்தும்,

[1] F. Machlup—Three Concepts of Balance of Payments and the so called Dollar shortage Economic Journal (March 1950), p. 66.

(ii) ஏற்றுமதிகளை அதிகரித்துச் செயற்கை வழியில் அதாவது அரசின் நன்கொடை முதலிய வழிகளைக் கையாண்டும்,

(iii) உள்நாட்டுச் செலாவணிக்குத் தேய்மானத்தைக் கணக்கிட்டும்,

(iv) உள்நாட்டு வருமானம், விலைகள் இவற்றின் மதிப்பைக் குறைத்தும்,

(v) வட்டி விகிதத்தைக் கூட்டியும், இதர சலுகைகளைக் கொடுத்தும் அன்னிய மூலதனத்தை நாட்டிற்குள் கொண்டு வந்தும்.

முடிவில் 1954ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வாபணிக் கொடுப்பல் நிலை ஆண்டறிக்கை 1947-53-ல் இந்தப் பதிலுதவிப் பணம் என்ற வாசகங்கள் அறவே அகற்றப்பட்டுவிட்டன.

. மிகவும் ஏற்றுக்கொள்ள இயல்பான இலக்கணம் என்ன வென்று ஆராயலாம். தேவைகளுக்கும் வழங்குதல்களுக்கும் இடையே ஏற்படும் இடைவெளியை, சரிகட்ட இயலாத நிலையைச் சமன்பாடின்மை (Disequilibrium) என்றழைக்கிறோம். இந்த அடிப்படையில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

(i) எந்தக் காலத்தினுள் கருதப்படவேண்டும்,

(ii) அவ்வயமத்திலுள்ள செலாவணி விகிதம்,

(iii) வருமானம், வேலை வாய்ப்பு விகிதம்,

(iv) பொருளாதார நிலை எந் நிலைக்குக் கட்டுப் படுத்தப் பட்டுள்ளதா அல்லது தடங்கலற்றுள்ளதா என்று நன்கு விளக்க முற்படுவோம்.

1. வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை ஏற்படுவது இயல்பே. இந்த நிலை ஒரு நாளிலோ, ஒரு வாரத்திலோ, ஒரு மாதத்திலோ, ஓர் ஆண்டிலோ, அல்லது வர்த்தகச் சுழல் (Trade Cycle) இயங்கும் கால வரையறைக்குள்ளோ நிகழக் கூடும்.

2. எந்த விகிதத்தில் அன்னியச் செலாவணித் தேவையும், வழங்குதலும் அமையும் என்பதை நோக்க வேண்டும். அன்னியச் செலாவணியில் பல்வேறு விகிதங்களிருப்பின் அதற்கேற்ப தேவை, வழங்கு இவையிரண்டும் மாறுபடும். பொதுவாக அதிக விகிதங்களிருப்பின் தேவை அதிகப்படும், வழங்கு குறையும். அன்னியச்

செலாவணி விகிதம் குறைவுபடின் தேவை குறையும், வழங்குதல் அதிகரிக்கும். சீரான மாற்று விகிதம் அமைவதில் அதிகப் படியான சர்ச்சைகளுக்கு இடம் கொடுக்கின்றன. சில ஆசிரியர்கள் சீரான மாற்றுவிகிதம் என்பது வாணிபக் கொடுப்பல் நிலையையொட்டி அமைவது என்று கருதுகிறார்கள். வாணிபக் கொடுப்பல் நிலை எனப்படுவது சம நிலையைக் காட்டுவதாகும்.

3. நாட்டின் வருமான நிலையையொட்டியும் வேலை வாய்ப்பு வசதிக்கேற்ப நாட்டின் அன்னியச் செலாவணி அமைகிறது. வாணிபக் கொடுப்பல் நிலையில் வேறுபாடு ஏற்பட்டால் அது அடுத்து செலாவணி விகிதத்தில் நன்கு காண்பிக்கிறது. அன்னியச் செலாவணி விகிதத்தில் மாற்றமில்லையானால் வாணிபக் கொடுப்பல் நிலையிலும் சமன்பாடு நிலைத்து இருக்கும் எனலாம். வருமானநிலை, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி இவற்றையொட்டிச் செலாவணி விகிதம் மாறும்.

(4) வாணிபக் கொடுப்பல் நிலையில் சமநிலை எய்த வழங்கு, தேவை இவைகளை ஒரேசீராக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இறக்குமதிகளில் கட்டுப்பாடு விதித்தும், ஏற்று மதியைத் தூண்டிவிட்டும் அதன் விளைவாகத் தீர்வைகளையும், சுங்கவரியையும் மற்றும் பங்குமுறைகளையும் உருவாக்கி நிலையைச் சரியாக அமைத்துவிட இயலாது போகும். உள்நாட்டுப் பண்டங் களுக்கும் தொழிலுக்கும் காப்புமுறைகளை அமைத்தலாலும், நாட்டின் செலாவணி விகிதம் பாதிக்கக்கூடும்.

மாச்லுப் (Machlup) என்பார் மூன்று வித வாணிபக் கொடுப்பல் நிலைகளைப் பாகுபாடு செய்கிறார். அவையாவன :

(i) சந்தையில் நிலுவை (Balance) தேவைக்கும், வழங்கு தலுக்கும் உள்ள வேறுபாடு,

(ii) நடத்திவைப்பதில் நிலுவை (விருப்பத்திற்கும், எதிர் நோக்கியிருத்தலுக்கும் உள்ள வேறுபாடு)

(iii) கணக்கில் நிலுவை வரவிற்கும் பற்று நிலைக்கும் வேறு பாடு. இம் மூன்றினையும் ஒன்றுபடுத்திக் கூறுவதால் பல குழப்பங்கள் நேரிடுகின்றன என அவர் கருதுகிறார்.

**வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் சமன்பாடின்மையின் பல வகைகள்**

பல காரணங்களையொட்டிச் சமன்பாடின்மை தோன்றலாம். குறிப்பாக அவை மூன்று வகைப்படும் :

(i) சுழலும் சமன்பாடின்மை

(ii) பன்னெடுங்காலச் சமன்பாடின்மை (Secular Disequilibrium)

(iii) அமைப்பின் சமன்பாடின்மை (Structural)

**சுழற்சிச் சமன்பாடின்மை** (Cyclical Disequilibrium): வர்த்தகச் சுழல்களின் காரணமாக இவை தோன்றக்கூடும். ஏற்ற அமைப்பில் வருமானமும் உற்பத்திப் பெருக்கும் சீராக அமையாத நிலையில் இருந்து வருகின்றன என்பதை வரலாற்று வாயிலாக அறிகிறோம். நீண்ட கால அமைப்பிலும் அடிக்கடி குறைந்த அளவுள்ள காலத்திலும் பெரும் வர்த்தகப் பொருளாதார வீக்கம் (Boom) ஏற்பட்டுள்ளது.

(i) ஒவ்வொரு நாட்டிலும் நிகழும் பணவீக்கமும், பின்னிறக்கமும் ஒரேவிதமாக அமையாது. அவை பலவிதமான மாற்றங்களுடன் காணப்படும்.

(ii) ஒரேகாலத்தில் எல்லா நாடுகளிலும் இம் மாதிரியான வீக்கமும், பின்னிறக்கமும் ஏற்படாது.

(iii) வருமான நெகிழ்ச்சிகளும், இறக்குமதிகள் தொடர்பான தேவைகளும் பற்பல சமயங்களில் மாறக்கூடும். சுழற்சிச் சமன்பாடின்மைக் காலத்திற்குள் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடு நிகழும்.

கொடுக்கப்பட்ட சூழ்நிலையில், 'அ' என்ற நாட்டில் வர்த்தகச் சுழல் 'ஆ' என்ற நாட்டில் ஏற்படுவதைவிட மிகவும் கடுமையாக நிகழ்கிறது என்று கொள்வோம். 'அ' என்ற நாட்டில் பண வீக்கம் (boom) காரணமாக வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை (deficit) தோன்றக் கூடும். 'ஆ' என்ற நாட்டில் வர்த்தக உபரி ஏற்படும். அதேபோன்று மந்த வர்த்தக நிலையில் 'அ' என்ற நாட்டில் உபரி ஏற்படும். ஆனால், 'ஆ' என்ற நாட்டில் அதே நிலையில் வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்படும்.

சுழற்சிக் காலத்தில் வாணிபக் கொடுப்பல் நிலையில் மாறுதல் ஏற்படும். பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளில் சுழற்சியின் விளைவுகளையொட்டி அயல்நாட்டு வர்த்தகத்தில் வேறுபாடு ஏற்படும். 'அ' என்ற நாட்டில் பணவீக்கம் ஏற்படும். அதே சமயத்தில் 'ஆ' என்ற நாட்டில் வர்த்தக மந்தம் ஏற்படும். இவ்விதம் ஏற்றுமதி, இறக்குமதிகள் மாறி மாறி நிகழவும் கூடும்.

வருமான நெகிழ்ச்சிகளையொட்டியும் சுழற்சி சமன்பாடின்மை ஏற்பட இடமுண்டு. 'அ' என்ற நாடு அதிகப்படி இறக்கு மதியை விரும்பக் கூடும். அதற்கான அடிப்படைக் காரணம் அவர்களுடைய வருமான நெகிழ்ச்சியெனக் கூறலாம். இதன் விளைவாகப் பொருள் வீக்கக் காலத்தில் பற்றுக்குறையேற்பட்டும் மந்த வர்த்தகக் காலத்தில் வர்த்தக உபரி நிகழவும் கூடும்.

தேவை நெகிழ்ச்சியினால் விலைகள் பாதிக்கப்பட்டு சுழற்சிச் சமன்பாடின்மை ஏற்படக்கூடும். பணவீக்கக் காலத்தில் விலைகள் ஏறியும், மந்த வர்த்தக நிலையில் விலைகள் சரசர என இறங்கியும் விடும். அதிகவிலையின் தேவை நெகிழ்ச்சிகளில் வாணிபக் கொடுப்பல் நிலையில் 'அ' என்ற நாட்டிற்கு உபரி நிலையும் 'ஆ' என்ற நாட்டிற்குப் பற்றுக்குறை நிலையும் ஏற்படலாம்.

**பன்னெடுங்காலச் சமன்பாடின்மை (Secular Disequalibrium)**

நீண்டகாலமாகவும் சற்று மெதுவாக அசைவு பெறக் கூடியதும் பொருளாதார நிலைமையை ஆழ்ந்து பாதிக்கக் கூடியது மான நிலையை எடுத்துக்காட்டக் கூடியதைப் பன்னெடுங்காலச் சமன்பாடின்மை (Secular Disequalibrium) எனக் கூறலாம். பல்வேறு காரணங்களால் இது பாதிக்கப்படும். குறிப்பாக மூலதனம் உருவாதல், மக்கள்தொகை அதிகரித்தல், தொழில் நுட்பக் கல்வியில் தேர்ச்சி, சந்தைகளும் அங்காடிகளும் தோன்று தல், மூலகாரணிகள் மாறுபடுதல் இவைகளைக் காரணமாகக் கருத இடமுண்டு. இதை விளக்கும் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டு களை இங்கு விளக்கமுறப்படுவோம்; வாணிபக் கொடுப்பல் நிலையில் நீண்டகாலமாக சமன்பாடின்மை ஏற்படுகிறது என்று கருதுவோம் ஆரம்ப காலங்களில் வளரும் பொருளாதார நிலையில் அதிவிரை வில் முன்னேற விழையக் கூடும். அவ்வாறு முன்னேற்றம் பெறக் கூடுதலாக முதலீடுசெய்ய வேண்டியேற்படுகிறது. அம் முதலீட்டுத் தொகை உள்நாட்டுச் சேமிப்பைக் காட்டிலும் அதிக அளவில் தேவைப்படும். இறக்குமதிகள் ஏற்றுமதிகளைவிட அதிகப்படக் கூடும். போதிய அளவிற்கு அன்னிய மூலதனம் நாட்டிற்குள் வரவில்லையானால் பன்னெடுங்காலப் பற்றுக்குறை தோன்றி வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடற்றத் தன்மையைத் தொடர்ந்து நிலையாக அமைத்துவிடக் கூடும். நன்கு முதிர்ந்த பொருளாதார நிலைமையில் உள்நாட்டுச் சேமிப்பு நிதி பெருவாரியாக அதிகரித்து அவற்றை இலாபம் பெறத்தகு முறையில் தொழில்வளர்ச்சியில் ஈடுபடுத்தி ஆண்டுதோறும் உற்பத்திப் பண்டங்களை ஏற்றுமதிசெய்து வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடுளை ஏற்படுத்தக் கூடும். நாளடைவில்

வாணிபக் கொடுப்பல் நிலையில் அதிக வருவாய் கிடைக்க வகை ஏற்படக் கூடும். இரண்டாவதாக, 'அ' என்ற நாட்டில் மக்கள் தொகை 'ஆ' என்ற நாட்டைக் காட்டிலும் அதிகம் எனக் கொள்வோம். 'அ' என்ற நாட்டு வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை ஏற்படும். இதற்கான காரணம் என்னவெனில் மக்கள்தொகை எந்நாட்டில் அதிகரிக்கிறதோ அந்நாட்டு இறக்குமதிகள் அதிகரிக்கக் கூடும். ஆனால், ஏற்றுமதி செய்வதற்கு எவ்வித ஊக்கமும் உண்டாவதில்லை.

**அமைப்பின் சமன்பாடின்மை (Structural Disequilibrium):** அமைப்பின் மாறுபாடுகளால் தேவை, வழங்கு இவையிரண்டும் மாறுபாடடைகின்றன. குறிப்பாக ஏற்றுமதியும் இறக்குமதியும் மாறக் கூடும். வாணிபக் கொடுப்பல் நிலையில் மாறுதல் அடைவதற்கான எடுத்துக்காட்டுகளை இங்கு விவரமாகக் குறிப்பிடுவோம்.

அயல் நாட்டில் ஏற்றுமதியான பொருள்களின் தேவை மாற்றம் ஏற்படுவதால் அமைப்பின் சமன்பாடின்மை உண்டாவது திண்ணம். எடுத்துக்காட்டாக இந்தியத் தேயிலையைப் பற்றிக் குறிப்பிடலாம். அயல் நாடுகளில் பயனடைந்து பழக்கப்பட்ட மக்கள் இந்தியத் தேயிலையை இனி பயன்படுத்துவது இல்லை என்ற குறிக்கோளுடன் பிறிதொரு நாட்டுத் தேயிலையைப் பயன்படுத்த ஆரம்பித்தால், இந்தியாவில் இத் தேயிலை உற்பத்திக்கென இடப்பட்ட மூலதனம் பயனற்றுப்போகும். உடனே அதை மாற்றி வேறு ஒரு தொழிலில் ஈடுபடுத்தவேண்டிய நிலை தோன்றும். இதைத்தான் அமைப்பின் சமன்பாடின்மை என்கிறோம். மக்களிடையே தற்போதுள்ள முறை மாறி நவீன மானல் (Fashion) அதன் விளைவாகவும், தொழில் நுட்பத்தில் மாற்றம் ஏற்பட்டாலும், அமைப்பில் சமன்பாடின்மை ஏற்படும்.

வழங்குதலில் மாற்றம் நிகழ்ந்தாலும் உடனே அமைப்பில் சமன்பாடின்மை (Structural Disequalibrium) ஏற்படும். அதே போன்று விளைச்சல் பாதிக்கப்பட்டாலும், உள்நாட்டில் இறக்குமதி அளவுகடந்து செய்யவேண்டி ஏற்படுகிறது. நாட்டில் வேலைநிறுத்தம் ஏற்பட்டாலும், அரசியல் கொந்தளிப்பின் காரணத்தாலும் வேலை நின்றுபோகும்.

அயல்நாட்டிலிருந்து பணத்திற்கான (Source) வருவாய்நின்று போயின் உடனே அமைப்பில் சமன்பாடின்மை நிகழும்.

**வளர்ச்சியுறும் பொருளாதார நிலையில் உள்ள நாட்டில் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை:** வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்படக் காரணம் என்ன என்று ஆராயு முன்னரே அடிப்படைவிதிகள் என்ன என்று ஆராய்ந்து அவற்றின் முடிவுகளை இங்கு விளக்குவோம்.

(1) விலை தொடர்பான விதி (பொதுவாகத் தொன்மைப் பொருளாதார விதி)

(2) புதியக் கொள்கை—கீன்ஸின் கொள்கை அல்லது வருவாய்க் கொள்கை

(3) செய்முறை—பலன்விதி

(4) வளர்ச்சியில் வேறுபாடு ஏற்படுவதைக் குறித்து உற்பத்தி விதி.

**தொன்மைப் பொருளாதாரக் கொள்கையினரின் விதி (Chemical Theory)**

இக் கொள்கை வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன் பாடில்லாத நிலையை விளக்க முற்படுகிறது. உலகின் எந்நாட்டில் அடக்கவிலைகளும், விலைகளும் மிகவும் அதிகமாக உள்ளனவோ அந் நாட்டிற்குப் பாதக வாணிப நிலை ஏற்படும். இந்த முடிவு எவ்வாறெனில் எல்லாப் பொருள்களுக்கும் உள் நாட்டின் உற்பத்தியில் தோன்றும் மாற்றுப் பண்டங்கள் உள்ளதென்றும், அல்லது அயல் நாட்டிலிருந்து மிகவும் விலை குறைவுள்ள பொருள்கள் எளிதில் கிடைக்கும் என்றும் அனுமானிக்கலாம். தொன்மைப் பொருளதாரக் கொள்கையினரின் அனுமானப்படி வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை ஏற்படின் அது தானாகவே சில காலம் கழித்துச் சீர்பட்டு விடும் என்றும் அதைச் சீர்ப்படுத்த முயற்சி தேவை இல்லை எனவும் கருதப்பட்டது. உள் நாட்டு விலைகள் பன்னாட்டு விலைகளை விட அதிகமாக இருப்பின் உடனே இறக்குமதிகளை அதிகரித்தும் ஏற்றுமதிகளைக் குறைத்தும் அதன் விளைவாகப் பற்றுக்குறை நிலை ஏற்பட்டு அதனால் ஏற்படும் கடன் நிலையை மாற்றக் கையிலுள்ள பொன் கட்டியை ஏற்றுமதி செய்யவேண்டும். இதன் விளைவாகக் கையிலுள்ள செல்வ நிலை குன்றி அன்னியச் செலாவணியும் குறைவுபடும்.

நாட்டின் செல்வநிலை குறைவதால் செலாவணி அலுவலர்கள் பணவழங்குதலைச் சுருக்கி விடுவார்கள். இதன் அடிப்படை என்ன வெனில் பணம் வழங்குதலுக்கு ஆதாரமாகப் பொன்கட்டி சேமித்து இருத்தல் இன்றியமையாததெனலாம். அதே

நிலைமையில் வங்கிகளிலும் கையிருப்பு சேமிப்புகள், வைப்புகள் குறைவாக இருப்பினும் கடனுதவி குறைவுபடும். செலாவணி மிகைவு பெற்ற நாட்டில் பொன் கட்டி இறக்குமதியாகக் கூடும். நடைமுறையில் தானாகவே இவை ஒன்றுக்கொன்று சரிகட்டிக் கொள்ளும் என்பது அவர்களுடைய வாதம்.

தொன்மைப் பொருளாதார வாதிகளின் கொள்கை தங்கு தடையற்ற வர்த்தக நிலை என்றும் உள்ளதென்று அனுமானிக்கப் பட்டுள்ளது. இவ்வுலகில் பெரும்பாலும் போட்டி நிறைந்த நிலைமையில் அதிக உற்பத்தி விலையிருப்பினும் தனது சரக்குகளின் குணவேறுபாட்டால் விற்பனை செய்ய முயலக்கூடும். பல தடவைகள் நுகர்வோர்கள் அதிகவிலைகளைக் கொடுத்து குறைந்த விலையுள்ள மிதமிஞ்சிய வழங்குதலுள்ள பொருள்களை வாங்குவார்கள்.

தொன்மைப் பொருளாதார வாதிகள் செய்துள்ள பல்வேறு அனுமானங்கள் வருமாறு. நாட்டில் என்றும் தடங்கலற்ற சந்தை (Market) உள்ளதென்றும், உள்நாட்டுப் பணச் செலாவணி, கடன் இவற்றை வழங்குதலில் தடங்கல் ஏதும் இல்லை என்றும், ஏற்றுமதி களும் இறக்குமதிகளும் விலைகளின் விகிதத்தையொட்டியே மாறக் கூடும் என்றும் இவையனைத்தும் தானாகவே இயங்குகின்றன என்பது நடைமுறையில் நிகழ்வதில்லை. எனவே தொன்மைப் பொருளாதாரக் கருத்து ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் இல்லை எனலாம்.

## கீன்ஸ் அவர்களுடைய விதி (வருமான விதி) (Keynesian Theory-Income)

கீன்ஸ் பிரபு அவர்கள் உருவாக்கிய இந்த விதி வருமான பொருளாதாரப் பகுத்தாய்வு (Macro Analysis) நுட்பங்களை (Techniques) இவர் பயன்படுத்தியுள்ளார். தொன்மைப் பொருளியல் வல்லுநர் கூறிய அடக்கவிலை முறையைக் கடை பிடிக்காது நாட்டின் வருமானத்தின் அடிப்படையில் பல்வேறு நாடுகளுடன் ஒப்பிடப்பட்டு முடிவு செய்யப்படுகிறது.

இக் கொள்கையின்படி ஒரு நாட்டின் வருமானம் சாதாரண நிலைமையில் ஏற்றமடையாது மிக அதிக வேகத்துடன் ஏற்ற மடைந்தால், அந் நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்படக் கூடும். இறக்குமதி செய்வதெனப்படுவது வருமானத்தின் ஒரு பணியாகும். ஆதலால் எந் நாட்டில் வருவாய் அதிகரிக்கிறதோ அந் நாட்டில் இறக்குமதி இதர

நாடுகளைக் காட்டிலும் கூடுதலாகிறது. இதன் விளைவாக வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடற்ற நிலை உருவாகிறது.

இக் கொள்கை மிகவும் எளிதில் புரியும்படிக் கூறப்பட்டுள்ளது இந்த நிலையில் இறுதி நிலை இறக்குமதி நாட்டம் (Marginal Propensity to Import) எல்லா நாடுகளிலும் சமமாக உள்ளது என்று அனுமானித்துக்கொள்ள வேண்டும். ஒப்பிட்டுப் பார்க்கின் இறுதிநிலை இறக்குமதி நாட்டம் எல்லா நாடுகளிலும் ஒரே சீராக அமைவதில்லை. இரு நாடுகளில் வருவாய் ஒரே அளவில் இருந்தாலும் இறுதிநிலை இறக்குமதியின் நாட்டத்தில் சமன் பாடின்மை (Disequalibrium) நேரக்கூடும். இயற்கை வசதிகள் நிரம்பியுள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட இறுதிநிலை இறக்குமதி நாட்டம் மிகவும் குறைவாகவே உள்ளது. எந்தச்சிறிய நாட்டில் இயற்கை வசதிகள் குறைவோ, உணவுப் பண்டங்கள் பற்றுக்குறை நிலையில் உள்ளனவோ, மூலதனப் பொருள்கள் இல்லையோ, அந் நாடுகளில் இறுதி நிலை இறக்குமதி நாட்டம் (Marginal P opensity Import) வெகு அதிகமாக உள்ளதெனக் கருத இடமுண்டு. குறிப்பாகப் பொருளாதார வளர்ச்சியுறு நாடுகளில் இறுதி நிலை இறக்குமதி நாட்டத்தின் அளவுஅதிகமாகக் காணப்படுகிறது. வருமானம் அதிகரித்தலால் விலை உயர்ந்த பண்டங்களுக்கும், செல்வந்தர்களுக்குந் தேவையான பொருள்களை நுகரும் நோக்குடன் தேவை அதிகரிக்கக் கூடும். இவை நாட்டினுள் கிடைப்பது அரிது. எனவே இறக்குமதி செய்யவேண்டி நேரிடும். ராஞர்நாக்ஸ் என்பவர் கீன்ஸினுடைய கொள்கையை பண வருவாயும், அதைச் செலவிடுதலின் விளக்க உரையும் என்று குறிப்பிடுகிறுர். சார்லஸ் கிண்டில் பர்க்கர் தனது பன்னாட்டுப் பொருளியல் என்ற நூலில் பண வருவாயின் மாற்றம் என்று இதைக் குறிக்கிறுர். ரேமாண்ட் எஃப் மிக்செல் பன்னாட்டுப் பற்றுக்குறையும் போர் கடந்த பின்னர் உலகின் நிலையும் என்ற கட்டுரையில் இதை உண்மையான வருவாயின் மாற்றங்கள் என்று குறிப்பிடுகின்றுர்.

இயல்பான வருவாயின் மாற்றத்தால் ஒரு நாட்டின் இறக்கு மதிகளின் மாறுதல்கள் தோன்றுவது வெள்ளிடைமலை. எடுத்துக் காட்டாக ஒரு நாட்டில் பணவருமானம் பத்து சதவிகிதம் அதிகரிக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். ஆயினும் இயல் பான வருவாய் மாறவில்லை என்று கொள்வோம். இதன் விளைவாக நாட்டின் விலைகள் 10 சதவிகித அளவில் அதிகரித்து விடும். ஆயினும் நாட்டில் உற்பத்தி ஆகும் பண்டங்களும் பொருளாதாரப் பணிகளும் மாற்றமடையா. இந்த நிலையில் வருவாயின் காரணத்தால் இறக்குமதிகள் அதிகரிக்குமா என்ற

ஐயப்பாடு எழும். இதன் விளைவாக இறக்குமதிகள் அதிகரிக்காது என்று திட்டமாகக் கூறமுடியும். நுகர்வோர்களிடம் வந்துள்ள பழைய இறக்குமதிப் பண்டங்கள், பொருளாதாரப் பணிகள், இவைகளுக்கான பணம் செலுத்திய பின்னர் அவர்களிடம் பணம் மீதமிருக்காது. இதனால் அவர்கள் அதிகப்படியான இறக்குமதியை எவ்வாறு செய்யமுடியும்? எனவே அதிகப்படியான இயல்பான வருவாய் நிலைத்த பின்னரே இறக்குமதிகளின் மட்ட நிலைமாற்றம் பெறலாம்.

மற்றொரு எடுத்துக்காட்டாக பணவருவாய் அதிகரித்ததை யொட்டி அதே அளவு இயல்பான வருவாய் ஏறுவதாக வைத்துக் கொள்வோம். இந்த நிலைமையில் விலைகளின் மட்டம் அதிகரிப்பதில்லை. நாட்டின் பொருள் உற்பத்தி, பணிகள் இவை அதிகரிக்கக்கூடும். இந் நாட்டின் நுகர்வோர்கள் தேவையான பண்டங்களை முன்னரே இறக்குமதி செய்து அதன் பின்னர் கையிருப்பிலுள்ள பணத்தைக் கொண்டு அதிகப்படியான இறக்குமதிகளைச் செய்ய முன்வரக் கூடும்.

அடுத்த எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் கருதுவோமாக! நாட்டின் இயல்பான வருமானத்தையொட்டிப் பண வருமானம் ஏதும் அதிகரிக்கவில்லை என்று அனுமானித்துக் கொள்வோம். இந்த நிலையில் நாட்டின் வருமானமும் விலைகளும் மாற்றம் அடைவதில்லை. விலை ஏற்ற இறக்கத்தால் இறக்குமதிகள் தளர்ந்து போய்விடும். இயல்பான வருமானம் குன்றினால் நாட்டிலுள்ள ஏற்றுமதியை அதிகப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

பிறிதொரு நிலையில் உண்மையான வருவாய் (Real Income) பணவருவாயைவிட அதிகம் என்று கொள்வோம். இதன் விளைவாக மொத்தப் பண்டங்களின் பணிகளின் விலைகள் ஏறத் தொடங்குகின்றன. இதனால் வருவாய் நிலையும் விலைகளும் நமக்குப் பயன்படாது போகக்கூடும். வாணிபக் கொடுப்பல் நிலையும் பாதகமாகவே முடியும்.

ஜே. ஈ. மீட் (J. E. Meade) அவர்கள் ‘வாணிபக் கொடுப்பல் நிலை’ (Balance of Payments) என்ற நூலில் 75ஆம் பக்கத்தில் இதை அழகாகச் சித்தரித்திருக்கிறார். வருமான விளைவும், விலைகளின் விளைவும் ஒன்றையொன்று பாதிக்கும். ‘ஆ’ என்ற நாட்டின் வாணிப மாற்று விகிதம் (Terms of Trade) இயல்பான நிலையில் அமையும் என வைத்துக் கொள்வோம். தொடர்பான

விலைகள் மாற்றத்தால் இது தெரியவரும். இதன் விளைவாக இயல்பான வருவாய் அதிகரிக்கும். வருவாய் விளைவால் இறக்குமதிகள் அதிகரிக்கும். அதிகப்படியான இறக்குமதிகளால் உள்ளூர் விலைகள் குறைந்து விலையின் விளைவுகள் ஏற்படும்.

### செயல்முறை விளைவுக் கொள்கை (Demonstration Effect Theory)

இக் கொள்கையைப் பேராசிரியர் ராஞர் நர்க்ஸ் (Ragnar Nurkse) உருவாக்கியுள்ளார். பின்னடைந்த நாடுகளைவிட முன்னேற்றமடைந்த நாடுகளில் வருவாய் மிக வேகமாக அதிகரித்து வருவது காணப்படுகிறது. தற்போதுள்ள நிலைமையில் புதிய வசதிகளைக் கொண்டுள்ள போக்குவரத்து முறைகளாலும், தகவல்களை எளிதில் அறியக்கூடிய காரணங்களாலும், வறிய நாடுகள் செல்வந்தர் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றித் தெரிந்து கொள்கின்றன. வறிய நாடுகள் செல்வந்தர் நாடுகளைப் போலவே உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கடைப்பிடிக்க முன்வருகின்றன. இதனுல் நுகர்வு இறுதிநிலை நாட்டத்தை (Propensity to Consume) அடைகிறுர்கள். அதிக நுகர்வு இறுதி நிலை இறக்குமதி நாட்டத்தை (Propensity to Import) அதிகரிக்கிறது. இறக்குமதி அதிகரிப்பதால் வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை நிலை உருவாகிறது.

இந்தக் கொள்கை புதியதென்றுலும் ஒருமனைப் பாங்கானது. அதிகரித்த இறக்குமதிகளைக் காரணம் காட்டி இந்தக் கொள்கை விளக்கம் தருகிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதிகளைப் பற்றி ஆலோசிக்காது இறக்குமதிகளை மட்டும் எடுத்து விளக்கம் தருவது சரியன்று.

### உற்பத்தி வளர்ச்சிக் கொள்கைகளிலுள்ள வேற்றுமைகள் (Disparities in the Growth of Prdouctirty Theory)

எல்லாத் தொழில்கள் (பொது) மீதும் வேற்றுமைகள் ஒரே சீராக நிறைந்துள்ளன. குறிப்பாக ஏற்றுமதித் தொழில்களில் வெகு அதிகமாகப் பரவியுள்ளன. அல்லது இறக்குமதித் தொழில்களில் வியாபித்து அதிகமாகப் பரவியுள்ளன. உற்பத்தியில் ஏற்படும் வேறுபாடுகளால் வாணிபக் கொடுப்பல் நிலையில் இரு வழிகளில் மாற்றம் தோன்றும். ஒன்று, வருமான அதிகரிப்பினுல், மற்றொன்று, விலைகளின் காரணத்தினுல் ஏற்படும் மாறுதல்களை இங்கு விளக்க முற்படுவோம். ஏற்றுமதியில் விருப்பம் நிகழா தொழில்கள் (Extort-biassed) இவற்றுல் இறக்குமதி நாடுளுக்குப் பலன்கள் ஏற்படுகின்றன. அவைகளின்

விலையைக் குறைத்து விடுகின்றன. அதனால் இறக்குமதிகளின் விலை குறைவாகின்றன. ஏற்றுமதி செய்யும் நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலை இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அன்னியச் செலாவணி விகிதத்தைக் குறைத்து அதன் விளைவாக ஏற்றுமதி குறைந்து ஏற்றுமதி விலைகளும் குறையத் தொடங்குகின்றன. இதன் விளைவாகப் பலனுள்ள நிலைமை உருவாகும். எனினும், ஏற்றுமதிகள் தேவையின் நெகிழ்ச்சி சமநிலைக்கும் (Unity) அதிகப் படின், வாணிபக் கொடுப்பல் நிலை பாதிக்கப்படும். ஏற்று மதிகள் தேவையின் நெகிழ்ச்சி சமநிலையிலும் அதிகமாவதற்குள்ள காரணங்கள் வருமாறு;

(i) விலைகள் இறங்குவதால் மொத்தத் தேவைகள் (Total Demands) அதிகரிக்கின்றன. அல்லது,

(ii) போட்டிகள் நிறைந்துள்ள காரணத்தால் ஏற்றுமதிகள் சந்தையில் விலை குறைவு காரணத்தால் சந்தையில் இப் பண்டங்கள் முழு அளவில் ஏற்றுமதியாகக் கூடும். இதை ஒரு முக்கியக் காரணமாகக் கருதலாம். ஆயினும், வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன் பாடின்மை தோன்றுவதற்கான விளக்கத்தை இதன் மூலம் பெறுவது கடினம்.

**வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை உருவாகியுள்ளதற் கான காரணங்கள்**

வளரும் நாட்டில் தோன்றும் சமன்பாடற்ற வாணிபக் கொடுப்பல் நிலைக்கான காரணங்கள் இன்னதென்று வரையறுத்துக் கூற இதுகாறும் நாம் ஆராய்ந்த எந்தக் கொள்கையையும் விளக்க முற்படவில்லை. ஒரே சமயத்தில் பல் வேறு காரணிகள் (factors) ஒன்றிப் பணிபுரியும் காலத்தில் மேலும் பல்வேறு நாடுகளில் உருவாகும் பற்றுக்குறைக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கக்கூடும். அதேபோன்று ஒரே நாட்டில் பல்வேறு சமயங்களில் தோன்றும் பற்றுக்குறைக்கும் பல்வேறு காரணங்கள் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

(i) வளரும் நாட்டில் பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு முதலீட்டுத் தொழில்களைத் தொடங்க இறக்குமதி பெருமளவில் நிகழக்கூடும். புதியதாகத் தொடங்கிய தொழில்களுக்குத் தேவையான இயந்திரங் களின் உருப்புகள் (Spare parts) மற்றும் தொழில் நுட்ப ஆலோசகர்கள் தேவைப்படக்கூடும்.

(ii) இதுகாறும் ஏற்றுமதியாகி அதனால், பலன் தரும் பொருள்கள் ஏற்றுமதியின்றி உள்நாட்டிலேயே இந்தத்

தொழில்களால் பயன்படுத்தப்படும். இதன் காரணமாக வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை தோன்றும்.

(iii) திடீரென வளர்ச்சி ஏற்படுவதால் மறைமுகமாக விலை காரணத்தாலும், வருமானத்தாலும் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை தோன்றுகிறது. திடீர்வளர்ச்சியின் காரணமாக, நுகர்வோர்களிடம் அதிகப்படி வருவாய் வந்து சேருகிறது. அவர்கள் நுகர்வுப் பொருளை அயல் நாடுகளினின்று இறக்குமதி செய்யத் தொடங்குவதால் மறைமுகமாக வாணிபக் கொடுப்பல் நிலை சமன்பாடற்றதாக மாறுகிறது.

(iv) விலை உயர்வினுல் ஏற்றுமதி குறைந்து இறக்குமதிக்கு இடமளிக்கிறது. இது முடிவில் வாணிபக் கொடுப்பல் நிலையை வெகுவாகப் பாதிக்கிறது.

**வாணிபக்** கொடுப்பல் நிலையில் சாதகமான நிலை ஏற்படுதல் (Favoruable effects in Balance of Payments)

வாணிபக் கொடுப்பல் நிலையைச் சீராக்கி சாதகமான சமன்பாட்டை ஏற்படுத்துகிறது. ஏற்றுமதிகளை ஊக்குவித்து இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தலால் சமன்பாடின்மை உண்டாகக் கூடும். இதுகாறும் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த பண்டங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்ய உதவுகின்றன. உற்பத்தியின் தொடக்கத்திலும், வளர்ச்சி முழுமூச்சுடன் தொடங்கிய காலத்திலும் சமன்பாடற்ற நிலை மிகவும் கடுமையாக இருப்பினும் நாளடைவில் வருமானநிலை அதிகரிக்கிறது. தொடர்ந்தாற்போல் உண்மை உற்பத்திப் பெருக்கத்தால் பண்ட வளர்ச்சி அதிகரிக்கக் கூடும்.

# 5. அயல்நாட்டுச் செலாவணி-செலாவணி விகிதம்

தடங்கலற்ற பன்னாட்டுச் சந்தையில் உள்நாட்டுப் பணத்திற்காக ஏற்படும் தேவை, வழங்கு இவ்விரண்டினையும் ஒட்டியே செலாவணி விகிதம் அமைகிறது. உள்நாட்டுப் பணத்தின் தேவைக்கேற்ப அந்நாடு தன் பணச் செலாவணியை வழங்க இயலுமா என்பது பிரச்சினை ஆகும்.

சொத்துரிமையை ஒரு நாட்டின் பணச் செலாவணியில் அளவிட்டு அதே சொத்துரிமையை இன்னொரு நாட்டின் பணச் செலாவணியில் அளவிட்டுக் கணக்கிடும் வழிமுறையே அயல் நாட்டுச் செலாவணி முறையாகும். இப் பெயரின் இலக்கணத்தின் வழியே ஒரு நாட்டின் பணச் செலாவணி வேறு ஒரு நாட்டின் பணச் செலாவணியுடன் ஒப்பிட்டு அவ்விரண்டிற்கும் உள்ள விகிதத்தைக் கணக்கிடப் பயன்படுகிறது. அயல்நாட்டுச் செலாவணி என்ற சொற்கள் பொதுவாக ஒரு நாட்டு வங்கி அயல் நாட்டுச் செலாவணியை வாங்கி விற்கும் முறையினைச் சுட்டிக் காட்டும். மேலும் பொதுப்படையில் இவ்வேறுபாடு செலாவணி என்பது பன்னாட்டுச் செலாவணி விகிதங்களை அன்றாடம் வெளியிடும் பொதுத் தாள்களின் வர்த்தகச் செய்தியைக் குறிப்பிடுகிறது.[1]

அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவை, வழங்கு இவ்விரண்டும் கீழ்க் கொடுக்கப்பட்டக் காரணங்களால் ஏற்படும்.

(1) பண்டங்கள், பொருளாதாரப் பணிகளுக்கான ஏற்றுமதி, இறக்குமதி.

(2) மூலதனத்தின் பெயர்ச்சி.

(3) பொன் (தங்கத்தின்) பெயர்ச்சி.

இவை மூன்றும் ஒன்றையொன்று ஒட்டி நிற்கின்றன.

H. E. Evitt–A Manual of Foreign Ex:hange-5th Edition-London, Issc Pitman & Sons Ltd, P. 5, 6].

அயல் நாட்டிற்குக் கடன் உதவியளிப்பின், உள்நாட்டில் இறக்குமதி குறையக் கூடும். அன்னியச் செலாவணி வழங்குதல், தேவை இவைகளையொட்டிச் செலாவணி விகிதம் தீர்மானம் செய்யப்படும். அதேபோன்று செலாவணி விகிதத்தின் காரணத்தால் தேவை, வழங்குதல் மாறக்கூடும். செலாவணி விகிதம் என்பதற்கும் மொத்தச் செலாவணித் தொகை என்ப தற்கும் வேறுபாடு உண்டு. அன்னியச் செலாவணிக்கான தேவை வழங்கு பட்டியல்களைக் கொண்டு செலாவணி விகிதம் என்ன வென்று முடிவு செய்யப்படும். அதேபோன்று விகிதத்தை யொட்டி எவ்வளவு செலாவணிகள் தேவைப்படும் என அறியக் கூடும்.

இரு நாடுகளும் மாற்றயியலாத காகிதச் செலாவணியில் இருப்பின் இவ்விரண்டிற்கும் உள்ள மாற்று விகிதம் அன்னியச் செலாவணிக்கு உள்ள தேவை, வழங்குதலையொட்டி அமைந் திருக்கும். முழு பொன் கட்டித் திட்டத்தில் இரு நாடுகளும் இருப்பின் செலாவணி விகிதம் தம்மிச்சைப்படி மாறக் கூடும் என்று கூற இயலாது. அவை பொன் பெயர்ச்சி எல்லைக்குள்தான் அமையும். இரு நாடுகளும் பொன் கட்டித் திட்டத்தின் கீழ் இருப்பின் குறைந்த பொன் பெயர்ச்சி (lower specie point) எனப் படுவது நாணயச் சாலை மாற்றீடு விலையினின்று (Mintan of Ex-change) அனுப்பும் செலவு, காப்புறுதிச் செலவு இவற்றைக்கழித்து விட்ட பின் தங்குவது. செலாவணி விகிதம் உயரிய பொன் பெயர்ச்சி விலையை (Upper specie price Unit) விட அதிகரித்தால் பொன் ஊக வர்த்தகர்கள் (Arbitrageurs) பொன்னை அரசின் மத்திய வங்கியிலிருந்து கொள்முதல் செய்யக் கூடாது, அயல் நாட்டில் பொன்னை விற்பனை செய்து அதன் மூலம் நம் நாட்டின் சந்தைக்கு அயல்நாட்டுச் செலாவணி கிடைக்க ஏற்பாடு செய்யக் கூடும் என்றும் உயரிய பொன் பெயர்ச்சியில் அயல் நாட்டுச் செலாவணி வழங்கென்பது மிகவும் நெகிழ்ச்சி பெற்றது எனலாம். அதேபோன்று அன்னியச் செலாவணி வழங்கு குறைந்த பொன் பெயர்ச்சி விகிதத்தைவிடக் குறைவுபெற நேர்ந்தால் பொன் ஊக வர்த்தகர்கள் அயல் நாட்டுச் செலாவணியை வாங்கி அயல் நாடு களில் விற்பனை செய்து பதிலுக்குப் பொன்னை வாங்கி அவற்றை உள்நாட்டு மத்திய வங்கிக்கு உள்நாட்டுச் செலாவணியைப் பெற்று விற்றுவிடுவார்கள். இதன் மூலம் அன்னியச் செலாவணிக் கான தேவை என்றென்றும் நெகிழ்ச்சி உடையதாகத் தெரி கிறது.

கீழ்க்கண்ட படத்தில் அன்னியச் செலாவணிக்கான தேவை வளைவு கோடு தே தே என்ற இடத்திலிருந்து தே' தே' என்ற இடத்திற்கு நிலை காரணங்களை முன்னிட்டு மாறுகின்றது எனக் கொள்வோம். இயல்பான மாறும் செலாவணியின்கீழ் செலாவணி விகிதம் அதிகமாகி நா கா-லிருந்து நா-க்கு உயர்கிறது. வி எனப்படுவது புதிய தேவை வளைவுகோடும்




படம் 6

வழங்கு வளைவு கோடும் ஒன்றையொன்று வெட்டிக் கொண்டு போகும் குறியிடத்தைக் காட்டுகின்றது. பொன் கட்டித் திட்டத்தின்கீழ் செலாவணி விகிதம் ந வி வரை வி லை எட்டாது. ஏனென்றால், அது பொன் ஏற்றுமதி வரம்பினைவிட அதிகமாக ம ல அதேபோன்று செலாவணி விகிதம் ஓ ஈ என்பதன் கீழ்போக இயலாது. ஏனென்றால் அதுவே பொன் இறக்குமதி வரம்பு ஆகும்.

நிலைத்த நிலையற்ற சந்தைகள்

பொதுவாக வழங்குதலும் தேவையும் ஒரேசமமாக இருப்பதால் அன்னியச் செலாவணி வீதம் மாறாத நிலையை எய்துகிறது. ஒரு சந்தையில் எப்பொழுது அன்னியச் செலாவணி வழங்குதல், தேவையைவிட அதிகமாக இருப்பின் அச் சந்தை நிலைபெற்ற சந்தையாகத் திகழும். காரணம் என்னவெனில்

சமநிலை (equilibrium) விகிதத்தைவிடக் குறைவான விகிதத்தில் வழங்குதல் (supply) செய்யப்படுவதேயாகும். சில காலங்களில் சமநிலை (equilibrium) விகிதத்தைவிட அதிகப்படி விகிதத்தில் தேவை ஏற்பட்டு அதற்கேற்ப வழங்குதல் நடக்கமுடிவதில்லை. அந்நிலையில் சந்தை நிலையற்ற நிலைமையை அடைந்துவிடுகிறது. நிலையற்ற சந்தையில் சமநிலை விகிதத்திற்கும் தேவை கோரும் விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு அதிகரிக்க அதிகரிக்க பெரும் பிளவு (gap) ஏற்படுவது இயல்பே. சமநிலை விகிதத்திலும் தாழ்ந்து வழங்குதல் விகிதம் நடப்பின் வழங்குதல் தேவையைவிட அதிகரித்துவிடக் கூடும்.




படம் 7

வழங்குதல் வளைகோடு எதிர்மறைச் (Overative) சரிவில் தேவை வளைகோட்டைவிட அதிக செங்குத்தாக அமைந்தால் அந்தச் சந்தையின் அன்னியச் செலாவணி நிலையற்றதாக அமையும். மேலே காட்டியுள்ள படத்தில் சமநிலை வி என்ற இடத்தில் நிலையற்றதாக உள்ளது. டாலர்களுக்கான தேவைகளை கோடு தே தே என்ற நிலையிலிருந்து தே' தே' என்ற நிலைக்கு மாறிவிட்டது என்போம். இதன்விளைவாக வழங்கு வளைவு கோட்டில் ''வி என்ற இடத்தில் வெட்டுகிறது. இந்தப் புதிய நிலையில் டாலர் தேவை வழங்குதலைவிட விவி'' என்ற நிலைக்கு அதிகரிக்கிறது. டாலரின் விலை ஒ ஏ – லிருந்து ஒஏ'' - க்கு

அதிகரித்தால் பற்றுக்குறை விவி'' - யிலிருந்து கக'' -க்கு அதிகரித்து விடும். அதேபோன்று சலனநிலை (disequalibrium) ஐச் சீர் செய்யும் நோக்கத்துடன் ரூபாயின் மதிப்பை இறக்கினால் (dapreciete) பிளவு (gap) அதிகரிக்கிறது. இந்த நிலைமையில் சமநிலையை அடைய டாலரின் விலையை ஒஏ''-க்கும் குறைத்து (அதாவது ரூபாயின் விலையை அதிகரித்து) விடுதலாகும். இந்த மாற்றத்தினால் டாலரின்.தேவையும் வழங்குதலும் ஏ'' வி-க்குச் சமமாக இருக்கும். இயல்பாக நடைமுறை விலைவிகிதம் (Working Price) இந்த நிலையை அடைவது கடினம். நாட்டரசின் தனிப்பட்ட நிதிக் காவலர்கள் மேற்கொள்ளும் கொள்கையை யொட்டித்தான் இந்த நிலையை அடைய முடியும்.

ஒவ்வொரு நாட்டிலும் அன்னியச் செலாவணி நிலையற்ற தன்மையில் இருப்பதற்கான காரணங்கள் பல அவற்றில் குறிப் பிடத்தக்கவை. ஊக வர்த்தகம், செலாவணியின் மீது நம்பிக்கை யற்றநிலை, பணவீக்கம் ஏற்படுதல், பணவாட்டநிலை அல்லது அன்னியச் செலாவணி கேட்ட அளவிற்குக் கிடைக்காத தன்மை.

**குறுக்கு விகிதங்கள்**

இரு நாடுகளுக்குமிடையே நிலவிவரும் அன்னியச் செலாவணி விகிதங்களை மூன்றாவது நாட்டின் பிறிதொரு அன்னியச் செலாவணியில் கணக்கிட்டு முடிவு செய்வதே ஆகும். பவுண்டுஸ்டர்லிங்கிற்கும் டாலருக்கும் இடையே உள்ள குறுக்கு விகிதத்தை இங்குக் கணக்கிடலாம். இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்குமிடையே நிலவி உள்ள அன்னியச் செலாவணி இந்தியாவில் டாலருக்கும் ரூபாய்க்கும் உள்ள விகிதம் 1:5. அதே போன்று இந்தியாவிற்கும் இங்கிலாந்து ஸ்டர்லிங்குபவுண்டிற்கும் ரூபாய்க்கும் உள்ள விகிதம் 1:15. பவுண்டிற்கும் டாலருக்கும் இடையே உள்ள குறுக்கு விகிதம் 1:3. குறுக்குவிகிதமும் நேர்முக (Direct) விகிதமும் கூடியவரை ஒரே அளவில் அமைதல் வேண்டும். எளிதில் மாற்ற இயலா செலாவணிகளில் இவ்வாறு வேறுபாடு தோன்றும் என்பது திண்ணம். ஆனால் எளிதில் மாற்றக்கூடிய செலாவணிகளில் குறுக்கு விகிதத்திற்கும் நேர்முக விகிதத்திற்கும் அதிக வேறுபாடுகள் இருப்பின் அதன் விளைவாக செலாவணிகளில் மிகுந்த குறைபாடுகள் தோன்ற இடமுண்டு. செலாவணி ஊக வர்த்தகர்கள் (Arbitragenrs) தோன்றி இந்த வேறுபாட்டை நேராக்கிவிடுவார்கள். ஒவ்வொரு நாட்டிலும் நிதிக் காவலர்கள் அன்னியச் செலாவணிக் கட்டுப் பாட்டு முறைகளைப் புகுத்துவதால்தான் இம்மாதிரியான வேறுபாடு காட்டும் தன்மை உருவாகிறது. குறுக்கு

விகித வேறுபாட்டால் உலக வர்த்தகம் சிதறிவிடக் கூடும். அதன் விளைவாக உற்பத்தித் துறையும் அதிகமாகப் பாதிக்கப்படும். நிலைபெறு குறுக்கு விகிதம் உள்ள அன்னியச் செலாவணி என்பது அந்தந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விடும். உலக அன்னியச் செலாவணிச் சந்தையில் சமநிலை எனப்படுவது கண்டிப்பாகத் தோன்றுது. குறுக்கு விகிதத்தில் ஒரு நாட்டில் டாலரின் விலை அதிகமாகிவிட்டதாக அனுமானித்துக் கொள்வோம். அந்த நாட்டு வர்த்தகர் இதர நாடுகளிலிருந்து கொள்முதல் செய்து, செய்தவற்றை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விற்பார்கள். டாலரின் இயல்பான விலையின்போது இதர நாடுகளுக்குக் கிடைக்கவேண்டிய இலாபம் டாலர் விலையேற்றம் செய்த நாட்டிற்குக் கிடைத்துவிடும். இதன் விளைவாக இதர நாடுகள் விலைகுறைத்து விற்க முன்வரக் கூடும். இதனுல் நியாய மற்ற போட்டி ஏற்படலாம்.

## முன்னேக்கியச் செலாவணிச் சந்தை (Forward Exchange Market)

முன்னேக்கியச் செலாவணிக்கெனத் தனிப்பட்ட சந்தை ஒன்றுகூட கிடையாது. முன்னேக்கியச் பேரங்கள் (Forward Transactions) சாதாரண செலாவணிச் சந்தைகளிலேயே நடக்கின்றன. அன்னியச் செலாவணிச் சந்தை இரு பெரும் பிரிவுகளாக அமைந்திருக்கும். அவற்றில் ஒன்று உடனடி பேரச் சந்தை (Spot Transaction) என்றும், மற்றொன்று முன்னேக்கியச் (Forward) செலாவணி பேரச் சந்தை எனவும் கொள்ளலாம். கடைகளில் ரொக்கப் பணம் கொடுத்துப் பண்டத்தைப் பெறுவது போன்று உடனடி பேரச் சந்தையில் அவ்வப்போதே பணம் செலுத்திச் சரக்கை வாங்குவது ஆகும். சரக்கைக் குறிப்பிட்ட தினத்தில் வருங்காலத்தில் கொடுக்க ஒப்பந்தம் செய்துகொண்டு அதற்கான விலையையும் ஒப்பந்தத் தினத்தன்றே முடிவு செய்வதும் முறை. சரக்கைக் கைவசம் பெறும் சமயத்தில்தான் பணம் கொடுக்கப்படும்.

வருங்காலத்தில் குறிப்பிட்ட தேதியன்று விலை மதிப்பிடப் பட்ட செலாவணிக்கு இன்ன விலை எனத் தீர்மானித்து அதைச் செலுத்த வேண்டியது. வழக்கமாக முன்னேக்கிய விலையைக் குறிப்பிடுவதில் உடனடி விலையில் சிறு தள்ளுபடி (discount) அல்லது கட்டணம் (premium) கூட்டியும் கூறப்படும். சில புத்தக ஆசிரியர்கள் இதை 'முன்னேக்கிய இறுதிநிலை' (margin) என்றும் 'வர்த்தக விகிதம்' (Swap Raio) என்றும் கூறுகின்றனர்.

முன்னேக்கியச் செலாவணிச் சந்தைகளில் வங்கிகளின் செயல்படும் திறன்.(Role of Banks in Forward Exchange Markets)

குறிப்பாக அநேக வங்கிகளில் அன்னியச் செலாவணி வசதி இருப்பது அறிந்ததே. இந்த வசதியைச் செயல்படுத்தும் வகையில் தனது வாடிக்கையாளரிடமிருந்து ஒரு சிறிய வட்டம் (Commission) பெறுகின்றனர். இவ்வசதியளிப்பதில் வங்கிகள் எவ்விதமான நட்டம் விளைவிக்கும் ஆபத்தையடைவது (risk) இல்லை. இறக்குமதியாளர்கள் பின்னர் நிகழவிருக்கும் அன்னியச் செலாவணி விகித மாற்றத்தால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் காப்பு முறை (Insurance) போன்று முன்னேக்கியச் செலாவணி விகிதத்தை நாடி, வங்கிகளில் முன்னதாகவே தெரிவித்துப் பெறவிழைகின்றனர். அதே சமயத்தில் முன்னேக்கியச் செலாவணியை விற்பதற்குத் தயாராக பல ஏற்றுமதியாளர்களும் உளர். வங்கிகள் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் இடையே வாங்கி விற்பதால் கமிஷன் பெறுகிறார்கள். வங்கிகளின் மூலம் அன்னியச் செலாவணியை வாங்க விரும்புவோரும் அதே அளவினை விற்க விரும்புவோரும் இருப்பின் அவற்றை எளிதில் ஈடுகட்டி (match) விடுவார்கள். இம் மாதிரியான பேரத்தில் வங்கிகளுக்கு எந்தவித நட்டமும் ஏற்படாது. அதே சமயத்தில் வங்கிகள் வாங்கி விற்கும் எல்லா வற்றிலும் இதே போன்று ஈடுகட்டக் கூடிய வர்த்தகமாக அமையும் எனக் கூறுவது கடினம்.

அன்னியச் செலாவணியை ஒரு வங்கி அதிக அளவில் விற்று ஆனால் குறைவாகக் கொள்முதல் செய்தால் விற்பனை செய்ய வேண்டிய ஒப்பந்தப்படி அன்னியச் செலாவணியைக் கொடுப்பதில் சிரமம் ஏற்படும். அன்னியச் செலாவணியைக் கொடுக்கும் தினத்தன்று விலைமாற்றம் ஏற்பட்டு அதன்விளைவாக வங்கி சம்பாதித்த இலாபத்தை இழக்கநேரிடும். வங்கி, தான் ஒப்பந்தம் செய்து கொண்டபடி வர்த்தக முறைப்படி செலாவணியைக் கொடுக்க முன்வருமன்றி ஊக வர்த்தகத்தில் ஈடுபடுவதில்லை. வங்கி தன் நிலைமையைச் சமாளிக்கக் காப்பு முறையை ஏற்றுக் கொள்ளும். ஓர் எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி 90 நாள்கள் தவணையுள்ள முன்னேக்கிய ஸ்டர்லிங் (Sterling) விற்பனை செய்ய முன் வரும் என்போம். அது கொள்முதல் செய்யும் ஸ்டர்லிங் மிகவும் குறைவாக இருக்கும். 90 நாள்கள் கழித்து அந்த வங்கி அதிகப்படியான ஸ்டர்லிங் பணத்தைக் கொடுக்க வேண்டி நேரிடும். இதைச் சமாளிக்க ஒரு வழி என்னவெனில் 90 நாள் களில் தவணை உள்ள கடன் பத்திரங்களை வாங்கி ஈடுகட்டலாம். 90 நாள்கள் கழிந்தவுடன் அந்தப் பத்திரத்திலிருந்து போதிய

பணம் கிடைக்கும். அதைக் கொண்டு ஸ்டர்லிங் கடனை ஈடு கட்டலாம். இரண்டாவது முறை என்னவெனில் ரொக்கக் கொள் முதல் (spot) செய்தல். ஏற்றுமதியாளர்களிடமுள்ள அதிகப்படி யான ஸ்டர்லிங் பணத்தை வாங்கலாம். அல்லது அளவு கடந்த எண்ணிக்கையில் உள்ள வங்கிகளிலிருந்து பெறலாம். இவ்வாறு வாங்கிய ஸ்டர்லிங் பணத்தை இலண்டனில்தான் வட்டிக்கு விட்டு வைக்கக் கூடும். மூன்ருவதாக ஊக வர்த்தகர்களிடமிருந்து ஸ்டர்லிங் பணத்தை வாங்கலாம். ஊக வர்த்தகர்கள் காப்பீட்டுள்ள செலாவணியை வழங்க மாட்டார்கள். இவர்கள் விலை வேறுபாட்டைக் கொண்டு இலாபம் பெறுகிருர்கள். வங்கி அதிப்படியான ஸ்டர்லிங்கை நட்டத்தில் கொள்முதல் செய்ய முன்வராது.

### முன்னேக்கியச் செலாவணி விகிதம் முடிவு செய்யும் முறை

ரொக்க விற்பனையில் உள்ள வழியில் கொள்முதல் விற்பனை இவற்றையும், வழங்கு, தேவை இவைகளைபொட்டியும் விலைமுடிவு செய்வது போன்று முன்னேக்கியச் செலாவணிக்கும் அவ்வாறே முடிவு செய்யப்படும் தேவையைவிட அதிகப்படியான அளவில் வழங்குதல் ஏற்படின் அந்த நிலையில் முன்னேக்கியச் செலாவணியைக்குறைந்த தள்ளுபடி கழித்து விற்பனை செய்ய முன் வருவார்கள். அதன் பொருளாவது ரொக்கச் செலாவணி விகிதத்தைவிட முன்னேக்கியச் செலாவணி விகிதம் குறைவாக இருக்கும். தேவை அதிகரித்தால் முன்னேக்கியச் செலாவணியின் விலை அதிகரித்து மொத்த விகிதத்தைவிட அதிகரிக்கும்.

### முன்னேக்கியச் செலாவணி வசதிகளால் ஏற்படும் நன்மைகள்

அன்னியச் செலாவணி விகிதம் மாறுவதால் ஏற்படும் இடையூறு களையும் நட்டங்களையும் களையும் நோக்குடன் வர்த்தகர்கள் முன்னேக்கியச் செலாவணி முறையைக் கடைப் பிடிக்கிருர்கள். பொதுவாக வர்த்தகர்கள் கொள்முதல் விலையின் மீது ஒரு குறிப் பிட்ட சதவிகிதம் கூட்டித் தங்கள் இலாபத்தைச் சம்பாதிப்பது வழக்கம். அன்னியச் செலாவணி விகிதம் திடீரென ஏற ஆரம் பித்தால் இலாபமாகப் பெறக்கூடிய தொகையைச் செலாவணிக்கு ஈடு கட்டித் துன்புற வேண்டியிருக்கும். இம் மாதிரியான சிரமத்தை நீக்க, வியாபாரி சாதாரணமாக என்ன அளவு பணம் வரக்கூடும் என்று கருதுகிராரே அதையொட்டித் தனக்கு உத்தரவாதத்துடன் அந்தத் தொகை கிடைக்க ஒரு குறிப்பிட்ட செலாவணி விகிதத்தை முன்னதாகவே தீர்மானம் செய்து கொண்டு அதன்படி வர்த்தகம் முடிவடைந்த பின்னர் பணத்தைப் பெறுவர். மிதமிஞ்சிய விலை ஏற்ற, இறக்கங்களைக் கட்டுப்

பாடற்றச் செலாவணி முறைகளில் காணலாம். ஆயினும் கட்டுப்பாடுள்ள சந்தையில் அம்மாதிரிச் செலாவணி விகிதம் காரணமின்றி ஏறுவதில்லை. அதேபோன்று 90 நாள்கள் முன்னதாகவே தனது வங்கிக்குத்தான் குறிப்பிட்ட செலாவணி விகிதத்தில் விற்பனை செய்து கொடுக்க ஒப்பந்தம் செய்து கொள்கிறார். உள்நாட்டு இறக்குமதியாளர் இம் முறையின் கீழ் 90 நாள்கள் முன்னதாகவே தனது அன்னியச் செலாவணித் தொகையை வங்கிக்கு ஓர் உத்தரவாத விலைக்கு விற்க முன் வருகிறார். இதே போன்று அயல்நாட்டு இறக்குமதியாளர் இந்நாட்டுச் செலாவணியை 90 நாள்களுக்குமுன் என்ன விகிதத்தில் உள்ளதென்று இந்நாட்டு வங்கிகளுடன் தொடர்பு கொண்டு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அயல்நாட்டுக் கடன்பட்டார் இம் முன்னோக்கியச் செலாவணி விகிதத்தைத் தெரிந்து கொண்டு அதனடிப்படையில் நட்டத்தை நீக்குவார்கள். அதேபோன்று அயல்நாட்டு ஆவணங்களில் (Investments) பணமிட விரும்பப்படுபவர்களும் அம்மாதிரி முன்னோக்கியச் செலாவணி விகிதத்தைத் தெரிந்துகொண்டு அதன்படி வங்கிகளுடன் 3 மாதங்களுக்கு முன்னரே ஒப்பந்தம் செய்து கொள்வர்.

**இதன் குறைபாடுகள்**

காப்பீட்டுறுதி முறையின் கீழ் செலாவணி விகிதத்தைக் கட்டுப்படுத்த தேவையற்ற அதிகப்படி செலவை ஏற்கநேரிடுகிறது. இம்மாதிரியான அதிகப்படி செலவு பொதுவாக இறக்குமதியாளரோ ஏற்றுமதியாளரோ கூடுதல் செலவிட நேர்ந்தால் இயல்பாகக் கிடைக்கும் இலாபமும் குறைவு படக்கூடும். பொதுவாக வர்த்தக நட்டம் ஏற்படுவது இயல்பே எனின் செலாவணிக் காப்பீட்டுத் தொகைவேறு அதிகரித்து இன்னும் நட்டம் அதிகப்படும். முன்னோக்கியச் செலாவணி விகிதத்தின் கீழ் நடைபெறும் வர்த்தகப் பண்டங்களின் விலை கூடுதலாகும் என்பது நன்கு விளங்கும். எல்லாப் பண்டங்களுக்கும் நட்டத் தடுப்புப்பேரம் (Hedging) இருக்கும் என எதிர் நோக்கியிருப்பது கடினம். அவ்வாறு நட்டத் தடுப்புப் பேர வர்த்தகத்திற்கு (Hedging) அதிகப்படி செலவுசெய்ய நேரிடுகிறது. தேசியச் (நாட்டு) செலாவணியின் தேய்மானத்தையொட்டி இறக்குமதிப் பண்டங்களின் உள்நாட்டு விலைகள் ஏறுகின்றன என வைத்துக்கொள்வோம். காப்பீட்டு முறையைக் கடைப்பிடிக்காத இறக்குமதியாளர்களும், மற்றும் இதர நபர்களும் இலாபம் பெறக்கூடும். இதேபோன்று உள்நாட்டு விலைகள் சரிந்தவுடன் காப்பீட்டு முறையைக் கடைப்பிடிக்காத இறக்குமதி

யாளரும் மற்றவர்களும் நட்டம் அடைவர். எனவே முன்னேக்கியச் செலாவணியினுல் எவ்விதப் பயனும் இல்லை.

**வட்டி விகிதங்களும் முன்னேக்கிய (Forward) விகிதங்களும்** நாட்டிற்கு நாடு வட்டி விகிதத்தில் மாறுதல் உள்ளது தெரிந்ததே. வட்டிவிகித வேறுபாடுகளையொட்டி முன்னேக்கியச் செலாவணி விகிதம் அமையும். இந்த விவரத்தை ஒரு தக்க சான்றுடன் விளக்க முற்படுவோம். இந்தியப் பொதுச் சந்தையில் வட்டிவிகிதம் 2% என வைத்துக்கொள்வோம். அதே சமயத்தில் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் பொதுச் சந்தையில் வட்டிவிகிதம் 3% என்று உள்ளதாகக் கணக்கிடுவோம். இந்த நிலைமையில் இந்தியாவில் இருந்து பணத்தை இலண்டனுக்கு அதி விரைவில் மாற்றி உபரி வட்டி விகிதத்தினுல் உள்ள பலனை அனுபவிக்க முயலலாம். அவ்வாறு ரூபாய்களை இலண்டனுக்கு மாற்ற முயலுவார்கள். உடனே முன்னேக்கியச் செலாவணி விகிதத்தில் மாற்றம் செய்ய விழையும்போது ரூபாய்க்கான முன்னேக்கிய தேவை முன்னேக்கிய வழங்கை விட அதிகமாகிவிடும். ரொக்க வர்த்தகத்திற்கான ரூபாய் அதிகமாக வழங்குதலில் உள்ளபடியால் ரொக்க (Spot) விகிதம் குறைவுபட்ட முன்னேக்கிய (Forward) விகிதம் அதிகரிக்கும். இந்தியாவிலிருந்து ரூபாய்கள் இலண்டன் போக ஆரம்பித்தவுடன் முன்னேக்கியச் செலாவணி விகிதத்தில் காட்டப் படும் தள்ளுபடி அதிகரித்துக் கொண்டு வரும். ரொக்க வர்த்தக விகிதத்திலும் இது அதிகரிக்க ஆரம்பிக்கும். முன்னேக்கிய வர்த்தகத்தில் கிடைக்கும் இலாபம் குறைய ஆரம்பிக்கும். இலண்டனுக்குப் பணத்தை மாற்றம் செய்வதால் கிடைக்கும் பலனும் குறையும். இதே சமயத்தில் இந்தியாவினின்று பணம் வெளியேறிய காரணத்தால் பணப்புழக்கம் குறைவுபெற்று அதன் விளைவாக வட்டிவிகிதம் 2%-லிருந்து அதிகரிக்கும். முடிவில் இரு நாடுகளிலிருக்கும் வட்டிவிகிதங்களும் ஒரே அளவில் அமையும். இதன் விளைவாகச் சமன்பாடு (Equalibrium) ஏற்படும். ரொக்க முன்னேக்கிய விகிதங்களிலும் சமன்பாட்டுடன் காணப்படும்.

**ஊக வர்த்தகமும் (Speculation) முன்னேக்கிய விகிதங்களும்**

வர்த்தகர்கள், வங்கிகள், ஊக வர்த்தகர்கள் (Arbitragenus) போலன்றி ஊக வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் நட்டத்திற்கும் துணிவுடன் முன்னேறி, காப்பின்றி, விலை ஏற்ற இறக்கத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஸ்டர்லிங்கின் விலை இறக்கமுக மாகும் என்ற ஐயப்பாடு தோன்றியவுடன் அதிக விலைக்கு ஸ்டர்லிங் பணத்தை விற்கத் தலைப்படுவர். அதே போன்று வருங்காலத்தில் ஸ்டர்லிங் விலை உறுதியாக நிலையான விலையில்

நிற்கும் என்றவுடன் பொதுச் சந்தையில் குறைந்த விலையில் ஸ்டர்லிங்கை வாங்கிக் குவிப்பார்கள். எதிர் நோக்கியதற்குப் புறம்பாக ஏற்படின் ஊக வர்த்தகநிலை இறங்கற்பாலது, நட்டம் கொண்டு வர்த்தகத்திற்கு முடிவு காணவேண்டி நேரிடும். ஊக வர்த்தகர்களின் கைவரிசை முன்னோக்கியச் செலாவணி விகிதத்தில் பெரும் தள்ளுபடியாகக் காட்டப்படும். இந்த நிலையையொட்டி ஊக வர்த்தகம் இறக்கமுகமாக அமையும். அதேபோன்று எருதைப்போன்ற ஏற்றுமுக வர்த்தகமாக ஊக வர்த்தகமும் உண்டு. இம் முறையில் முன்னோக்கிய விகிதத்தை அதிக விலையில் (Premium) காட்டுவார்கள்.

முன்னோக்கிய விகிதமும் ரொக்க விகிதமும் ஒன்றையொன்று பாதிக்கின்றன. முன்னோக்கிய விகிதத்தைத் தெரிவிக்கும்போது ரொக்க விகிதத்தை மனதில் இருத்தி அதையொட்டியே முன்னோக்கிய விகிதத்தைக் கூறுவர். ரொக்க விகிதத்தில் ஏற்படும் அசைவுகள் (Movements) கண்டிப்பான முன்னோக்கிய விகிதத்தையும் பாதிக்கும். ரொக்க விகிதத்தின்பேரில் காலத்தையொட்டி வட்டியையும், அனுப்பு செலவையும், காப்பீட்டுத் தொகையையும் கூட்டி முடிவாக வருவதுதான் முன்னோக்கிய விகிதம். எனவே, ரொக்க விகிதம், முன்னோக்கிய விகிதம் முடிவடையும் தருணத்தில் சமமாக இருக்கும்.

**முன்னோக்கிய விகிதம் அமைவதற்கான சூழ்நிலை**

(i) பயனற்ற, தேவையற்ற கட்டுப்பாடுகளைப் போட்டு வர்த்தகம் புரிய முடியாத சூழ்நிலை இருக்கக்கூடாது. ஆர்பிட்ரேஜ், ஊக வர்த்தகம் இவற்றின்மீது கட்டுத் திட்டங்கள் அமைதல் சரியில்லை.

(ii) குறிப்பிட்ட மாற்ற இயலா அன்னியச் செலாவணி விகிதத்தில் நாட்டின் செலாவணியை முளையடித்துக் கட்டிவைக்கக் (Pegging) கூடாது.

(iii) குறிப்பிட்டச் செலாவணி என்றும் அதிகப்படி புழக்கத்தில் இருக்க வேண்டும். சில நாடுகளில் முன்னோக்கிய வர்த்தகத்தைத் தடை செய்துள்ளனர்

**வாங்குத் திறன் சமநிலைக் கொள்கை** (Purchasing Power Parity Theory): சுவீடன் நாட்டுப் பொருளியல் வல்லுநர் பேராசிரியர் கஸ்டவ்கேஸல் (Prof. Gustav Cassel) என்பவர் முதன்முதலில் 'வாங்குத்திறன் சமநிலை' (Purchasing Power Parity) என்ற பதங்களை நடப்பில் அமைத்தார். பல்வேறு நாடுகளில் புழங்கி

வரும் பல்வேறு செலாவணிகளுக்குள்ளான மாற்று விகிதத்தைத் தீர்மானிக்கும் முறையை விளக்கியுள்ளார். இது இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளது.

(i) சிறப்பு முறை

(ii) ஒப்பிடத்தகு முறை. சிறப்பு முறையின் கீழ் எல்லா நாடுகளிலும் உள்ள செலாவணிகள் ஒரே விகிதத்தில் அமைந்தால் எல்லாச் செலாவணிகளும் சமநிலையில் (equalibrium) ஒப்பிடத்தகும் நிலையில் ஒரு நாட்டின் வாங்குத்திறன் மற்றொரு நாட்டின் வாங்குத்திறனுடன் ஒப்பிடப்படுகிறது. பல்வேறு நாடுகளில் உள்ள விலைகளின் ஈவுகளைக் கண்டு அதன் மூலம் சமநிலை (equalibrium) என்னவென முடிவு செய்யப்படுகிறது.

அன்னியச் செலாவணி விகிதங்கள் தமதிச்சைப்போன்று மாறி அமைந்த காலத்தில் குறிப்பாக முதல் போரின் சமயத்திலும் இரண்டவாது போரின் சமயத்திலும் அதன் பின்னரும் மாறி அமைந்திருந்தன. ஒரு குறிப்பிட்ட பண்டத்தை ஃப்ரான்சு நாட்டில் உற்பத்தி செய்ய 4,00,000 ஃபிராங்குகள் தேவைப்படும் எனில் அதேபண்டம் ஐக்கிய நரட்டில் 1,000 டாலர் ஆகும் என்றல் ஒரு டாலர் 400 ஃபிராங்குகளுக்குச் சமம் என்று மதிப்பீடு செய்தனர். ஏற்றுமதியையும், இறக்குமதியையும் ஈடுகட்டும்பொருட்டு ஒவ்வொரு நாட்டிலுள்ள இறக்குமதியாளர்களும் தங்கள் நாட்டினுள் வரும் இறக்குமதிப் பண்டங்களை உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். இறக்குமதிப் பண்டங்கள் உள்நாட்டுப் பண்டங்களைவிட மலிவாக இருப்பின் அவற்றை வாங்குகின்றனர். இந்த உள்நாட்டு அயல் நாட்டுப் பண்டங்களின் போட்டி விலைகள் முடிவில் இந் நாட்டுச் செலாவணிகளுக்கும் உள்ள விகிதத்தைக் குறிக்கின்றன.

இதன் பெருங் குறைபாடுகள் வருமாறு :

(i) பன்னுட்டு வர்த்தகத்தில் பல்வேறு பொருள்களும், செயல்பாடுகளும் (Services) வருவதில்லை. காரணம் என்னவெனில், இரு நாடுகளிலும் அவை பயன்படுத்தப் படுவதில்லை. பொதுவாக அளவுகடந்த போக்குவரத்துச் செலவும், அரசினரின் கட்டுப்பாடுகளுமே சிறந்த காரணங்கள்.

(ii) அன்னியச் செலாவணியை வர்த்தகப் பண்டங்களை இறக்குமதி செய்ய மட்டும் பயன்படுத்துகிறார்கள்

என்று கூற இயலாது. அயல்நாட்டில் முதலீடு செய்யவும், ஊக வர்த்தகம் (Speculation) செய்யவும் அன்னியச் செலாவணியைப் பயன்படுத்துகிறார்கள். மாற்ற இயலா காகிதச் செலாவணிகள் உள்ள நாடுகளின் உள்நாட்டு விலைகளையொட்டியே அவற்றின் செலாவணி விகிதம் இருக்கும் என்பதில் உண்மை உள்ளது.[1]

## மாறாச் செலாவணி விகிதங்களும் மாறும் செலாவணி விகிதங்களும் (Fixed Versus Flexible Exchange Rates)

**மாறும் செலாவணி விகிதங்கள் வேண்டும் என்பதற்கான காரணங்கள் :** அன்னியச் செலாவணியின் தேவை, வழங்கலை யொட்டிச் செலாவணி விகிதம் மாறுவதால் இதனை இயல்பான முறையாகக் கருதலாம். இதில் தோன்றும் மாறுதல்கள் தொடர்ந்தாற்போல் தானாகவே சடுதியில் உண்டாகின்றன. மாறாச் செலாவணி விகிதத்தின்கீழ், பற்றாக்குறை தீர்வு காணாது பெரும் நோய் போன்று துன்புறுத்திப் பொருளாதாரக் குழப்பத்தை (Crisis) உண்டுபண்ணிவிடும்.

மாறாச் செலாவணி விகிதங்கள் நடைமுறையில் உள்ள காலத்தில் வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றாக்குறை அல்லது சமன்பாடின்மை தோன்றினால் அதை எவ்வாறு சமாளிப்பது என்பதுதான் பிரச்சினை. அதற்கான சில மாற்றுகள் இங்கே கூறப்பட்டுள்ளன.

(i) அரசின் நடவடிக்கைகளின் காரணமாக அன்னியச் செலாவணி விகிதத்தை மாற்றியமைத்தல்,

(ii) உள்நாட்டு விலைகளும் வருவாயும் பணவாட்டம் அடைதல் (Deflation),

(iii) வர்த்தகச் செலாவணிக் கட்டுப்பாடுகளை அமலாக்குதல் அரசினர் நடவடிக்கையெடுப்பது சாதாரணமாகத் தானாக மாறும் செலாவணி விகிதம் மாறும் செலாவணி முறையில் அமைவதுபோலத் தோன்றும். அரசாங்கம் போடும் கட்டுப்பாடு தற்காலிகமானது. மாறும் செலாவணியின்கீழ் தோன்றும் மாற்றம் இயல்பாக நடைபெறுகிறது.

[1] Enke & Salera—International Economics - London - Dennis Brown-1959, p. 159.

தானகவே மாறுபடும் செலாவணி விகிதத்திற்கும் அரசினரின் காரணத்தால் மாறுபடும் செலாவணி விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு வருமாறு ; இதில் செலாவணி மாற்றம் தொடர்ந்து நடந்துவரும். அரசினர் செய்யும் கட்டுப்பாட்டு முறையில் மாறுதல் எப்போதாவதுதான் தோன்றும். குறிப்பாக பொருளாதார மாற்றம் (Transmisson) உள்ள காலத்தில் இறக்குமதிக் கட்டுப்பாடு உள்ள நிலையிலும் மற்றும் பண நிதி செய்யும் காலத்திலும் இவ்வாறு நிகழக் கூடும். ஊக வர்த்தகத்தின் காரணத்தால்கூட விகிதம் மாறக்கூடும். அரசினர் இடையில் புகுந்து கட்டுப்படுத்தும் நோக்குடன் சந்தையின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளாது அதிக விகிதத்திலோ அல்லது குறைந்த விகிதத்திலோ முடிவு செய்துவிடுவார்கள். சந்தையில் உண்மையான விகிதம் என்னவாயிருக்கவேண்டும் என்பதைப் பல்வேறு விகிதங்களில் அவ்வப்போது ஏற்றியும் இறக்கியும் அளவிட்டே அறிய இயலும்.

உள்நாட்டுப் பொது விலையளவைக் குறைப்பதால் வர்த்தகத்திற்குத் தேய்மானம் (depreciation) ஏற்படுகிறது. குறிப்பாக உள்நாட்டுப் பொது விலையை 20% குறைப்பதால் என்ன தோன்றுமோ அதே முடிவை 20% உள்நாட்டுச் செலாவணியைக் குறைப்பதால் ஏற்படும் பொது விலையைக் குறைப்பதில் பல இடையூறுகள் உள்ளன. குறிப்பாகத் தொழிலாளர் சங்கங்கள் இதை வரவேற்கா. ஏதோ குறிப்பிட்ட சில பண்டங்களுக்கான விலைகளைக் குறைக்க முற்படலாம். பணவாட்ட முறையைக் (deflation) கையாண்டு மக்களின் வருவாயைக் குறைக்கப் பாடுபடுவது தவறான முறையெனலாம். இம் முறைகளால் வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக்குறையைச் சீர்படுத்த முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் தற்போதுள்ள நிலைமையில் வருவாய் (income), வேலை வாய்ப்பு (employment), மாறாவிலை (stable price) விகிதம் இவையனைத்தும் பெரும் வாய்ப்பு எனக் கருதப்படுகிறது. எந் நாடும் தன் உள் நாட்டு நிலையை மாற்றியமைத்து அன்னியச் செலாவணியை ஈடுகட்டப் பாடுபடாது. மாறும் செலாவணி விகிதம் உள்நாட்டுப் பொருள் நிலைமையைக் காக்கிறது. வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக்குறையைச் சீர்படுத்த உள்நாட்டுப் பொருள் நிலையைச் சீர்கேடடையவிட மாட்டார்கள். மாறும் தன்மையுள்ள செலாவணி விகிதங்கள் உள்நாட்டுச் செலாவணியைப் பாதிக்காது. வெளி அல்லது அயல் நாட்டுச் செலாவணியை மட்டும் தேவைக்கேற்ப சீர்செய்யப் பயன் படுகிறது. அயல் நாட்டொன்றில் பின்னிறக்கம் (recession)

ஏற்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். மாறுத (fixed) செலாவணி விகிதங்கள் நடப்பிலிருந்தால் நமது ஏற்றுமதி களுக்கான போதிய தேவை அயல் நாடுகளில் ஏற்படாது. இதனால் நாட்டினுள் பின்னிறக்கம் உண்டாவதற்கு இடமுண்டு. அதன் விளைவாகப் பண நிலை நிறைவேற்படும். மாறும் செலாவணி விகிதங்கள் இருப்பின் அது நமது அன்னியச் செலாவணியை மட்டும் குறைக்கும். செலாவணி விகிதம் குறைந்தால், நமது ஏற்றுமதிகள் ஊக்குவிக்கப்படும், இறக்குமதிகள் தவிர்க்கப்படும். எனவே,பின்னிறக்கம் (recession) நம் உள்நாட்டுப் பொருளா தார நிலையைப் பாதிக்காது.

**பணமதிப்புக் குறைப்பு முறை(Devalution)**

அன்னியச் செலாவணிக்கான தேவை (demand), வழங்கு (supply) வட்டக் கோடுகளையொட்டித்தான் வாணிபக் கொடுப்பல் நிலையில் தோன்றும் சமன்பாடற்ற நிலையைச் சமாளிக்கப் பண மதிப்புக் குறைப்பு முறை பயன்படுமோ இல்லையா எனக் கருத முற்படலாம். தேவை, வழங்கு இவற்றிற்கான வட்டக் கோடு களின் போக்கை அறிந்துகொள்ள வேண்டுமானால், அன்னியச் செலாவணியில் நடக்கும் வர்த்தகத்தையொட்டியே அதனை ஆராயவேண்டும்.

பணமதிப்புக் குறைப்பு முறை எனப்படுவது அயல் நாட்டுச் சந்தைகளில் இந் நாட்டின் பணமதிப்பைக் குறைத்துக் கொள்ளு தலேயாகும். எடுத்துக்காட்டாக 'அ' என்ற நாட்டின் செலா-வணிக்கும், 'ஆ' என்ற நாட்டின் செலாவணிக்கும் முன்னரே உள்ள விகிதம் 1 : 2 என்று வைத்துக் கொள்வோம். தற் போதுள்ள வர்த்தக மாற்றங்களாக விகிதம் 1 : 5 : 2 என்று மாறக்கூடும். இதன் விளைவாக உள்நாட்டுச் செலாவணிகளில் மாறுதல் ஏதும் நிகழாது.

பல்வேறு நாடுகள் தங்கள் வாணிபக் கொடுப்பல் நிலையைச் சீராக்கிக் கொள்ளப் பணமதிப்புக் குறைப்பு முறையைப் (devaluation) பயன்படுத்திக் கொள்வது வழக்கம். இரண்டாம் உலகப் போரின் இறுதியில் பிரிட்டன் தன்னுடைய செலா வணியைக் குறைப்பு செய்தது. இதையொட்டிக் காமன்வெல்த் நாடுகளும் இந்தியாவும் தமது செலாவணிகளை மதிப்புக் குறைப்பு செய்துகொண்டன.

இதன் விளைவாக ஏற்றுமதிகளை நன்கு ஊக்குவிக்க முடிந்தது. இறக்குமதிகளைக் குறைக்க முடிந்தது. உள் நாட்டுத் தொழில் களுக்குப் போதிய ஆதரவு ஏற்பட்டு இறக்குமதிப் பண்டங்

களுக்குப் பதிலாக மாற்றுப் (import substitution) பண்டங்களை சிக்கனமாக உற்பத்தி செய்ய முடிந்தது.

## வாணிபக் கொடுப்பல் நிலையை அன்னியச் செலாவணி விகிதங்களைக் கொண்டு சரிப்படுத்துதல் (Adjustment through Exchange Rates)

சாதாரண நிலைமையில் இரு நாடுகளுக்குமிடையே நிலவி வரும் செலாவணி விகிதம் பல்வேறு மாறத்தகு வர்த்தக இனங்களால் ஏற்ற இறக்கத்தைக் காண்பித்து வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாட்டு நிலையை அடைய வைக்கும். எனவே, ஒரு குறிப்பிட்ட செலாவணி விகிதத்தில் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடு ஏற்படும் என்றால் ஒரு குறிப்பிட்ட செலாவணி விகிதத்தில் சமன்பாடற்ற நிலை (disequalibrium) உருவாகியுள்ள தென்றால், அந்தச் செலாவணி விகிதத்தைக் கூட்டியோ, குறைத்தோ சரியாக்கினால் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடு நிகழக்கூடும் எனலாம்.

பொதுவாக செலாவணி விகிதங்களில் ஏற்றம் ஏற்படின் தானாக ஏற்படக்கூடும் பன்னாட்டுக் கொடுக்கல்களில் (payments) மிகைவு உண்டாகக் கூடும். இதற்கெதிரிடையாக விகிதங்களில் இறக்கம் தோன்றின் பன்னாட்டுக் கொடுக்கல்களில் குறைவுபாடு தோன்றக் கூடும். செலாவணி விகிதத்தில் ஏற்றம் உண்டாகிற தென்றால் அதைச் செலாவணித் தேய்மானம் (exchange depreciation) எனலாம். ஒரு நாட்டுச் செலாவணியின் பன்னாட்டு மதிப்பு இதர தேசியச் செலாவணி மதிப்புகளைவிடக் குறைகிறது. ஆனால் இதர தேசியச் செலாவணி மதிப்பு ஏறத் தொடங்கும். இந்தச் செலாவணித் தேய்மானம்தான் பண மதிப்புக் குறைப்பு (devvluation) எனக் கூறப்பட்டு வருகிறது இதைச் செம்மையான இலக்கண நோக்குடன் ஆராய்ந்தால் ஒரு செலாவணியின் மதிப்பைத் தங்க மதிப்புடன் ஒப்பிட்டுத்தான் அதன் மதிப்பைக் குறைப்பதாகக் கூறலாம்.

செலாவணி மதிப்பேற்றம் (exchange appreciation) எனப் படுவது ஓர் நாட்டுச் செலாவணியின் பன்னாட்டு மதிப்பு இதர தேசியச் செலாவணி மதிப்புகளைக் காட்டிலும் உயருகிறது. எனவே, இதர தேசியச் செலாவணிகளின் மதிப்பு தாழ ஆரம்பிக்கும்.

குறிப்பிட்டஅளவு அடிப்படை நெகிழ்ச்சி (elasticity) இருந்தால்தான் செலாவணித் தேய்மானமோ, ஏற்றமோ வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக்குறை அதிகரிப்பை உண்டாக்கும்.

# 6. வர்த்தகக் கட்டுப்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியும்

தடங்கலற்ற வர்த்தகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற பழைமைக் கொள்கை அடக்கவிலை ஒப்பிடல் விதியையொட்டி உள்ளது. இரண்டாவது அதிகாரத்தில் அடக்கவிலை ஒப்பிடல் விதியை விளக்கும்போது இந்த விதி வளர்ச்சி பெரு பொருளியலில் உள்ள நாடுகளுக்குப் பயன்படாது எனக் கூறியுள்ளோம். வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கான காரணங்களை இங்கு ஆராய்வோம்.

தொழிலாக்கமும் நிலையான வளர்ச்சியும்: அண்மையில் வர்த்தகக் கட்டுப்பாட்டினை இடுவதன் மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம். இது வேளாண்மையில் ஈடுபட்ட நாடுகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். 1791ஆம் ஆண்டிலேயே அலெக்ஸாந்தர் அமில்டன் (Alexander Hamilton) 'தொழிலைப் பற்றிய பரிந்துரை' (Refort on Manufacture) என்ற நூலில் வர்த்தகக் கட்டுப்பாட்டினை மிகவும் உயரிய ஓர் உபாயம் எனக் கூறியுள்ளார். நாட்டின் தொழில் வளர்ச்சியைப்பற்றி மிகவும் இன்றியமையாத ஒரு தேவையென்றும் கருதுகிருர். வளமிக்க வேளாண்மையுடன் தொழில் வசதிகளும் பெருகினுல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகவும் உச்ச நிலையை அடையக் கூடும் என்று அவர் கருதுகிருர். விவசாய வளர்ச்சி மட்டும் போதாதென்றும், தொழில் வளர்ச்சியுயில் நாட்டிலுள்ள மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்கு இடமுண்டு என்றும் நாட்டிலுள்ள கனி வளத்தையும் நன்கு பயன் படுத்தலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளார். இவ்விரண்டும் உள்நாட்டிற்குத் தேவையுள்ள பண்டங்களைக் கொடுக்கும் நிலையில் அமைதல் வேண்டும். அயல்நாட்டினர்களுக்குப் பலவகையான பண்டங்களை வாங்கும் அளவிற்கு உற்பத்தி

செய்வதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். ஏதாவது ஒரு பண்டத்திற்காகப் பிற நாட்டை அண்டி வாழ்வது பெருந் தவறு எனக் கருத இடமுண்டு. பெருமளவில் வேளாண்மையில் ஈடுபட்ட நாட்டில், திடீரெனப்பெரும் தொழில் வளர்ச்சி ஏற்படக் கூடுமெனக் கருதமுடியாது. ஏனெனில், தொன்மைக் கொள்கை களையும் பழக்கவழக்கங்களையும் மேற்கொண்ட மக்கள் திடீரெனப் புதிய பாதையில் இறங்க விரும்பமாட்டார்கள்.

அவ்வாறான நாடுகளுக்குக் தொழில் வளர்ச்சியின் இன்றியமை யாத தன்மையை வளர்க்கப் போதிய ஆதரவு அளித்தும், பண நன்கொடைகளை அளித்தும், பிற நாட்டுத் தொழில்களால் போட்டி ஏற்படா வண்ணம் காப்பாற்றியும் நாட்டின் தொழில்களை வலுப்படுத்தலாம்.[1] ஹென்றிகேபட்லாஜ் தனது பரிந்துரையில் அரசு நன்கொடைமூலம் உள்நாட்டுத் தொழில்களை வலுப்படுத்தலாம் எனக் கூறுகிறார். கண்மூடித்தனமான வேறுபாடு காட்டும் முறையை அவர் எதிர்க்கிறார். எந் நாட்டில் போதிய அளவு கச்சாப் பொருள்களும், விற்பனைக்கு ஏற்ற சந்தையும் நிலைத்து நிற்குமோ அந் நாட்டில் காப்புமுறையைக் (Protection) கடைப்பிடிக்கலாம்.

அமெரிக்க நாட்டில் முன்னாள்களில் தொழிலைக் காக்கும் நோக்கத்துடன் காப்பு முறைகளை நடைமுறையில் கொண்டு வந்தனர். ஃபிரடரிக் லிஸ்ட் (Fredrick List) செர்மனி (Germany) நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க அமெரிக்க நாட்டைப் போன்று காப்பு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறார். தொழில் வளர்ச்சி எனப்படுவது நாட்டின் சக்தியை ஊக்குவிக்கும் உறுதுணை எனக் கருதவேண்டும். வேளாண்மையில் ஈடுபடா மக்களின் தேவையை என்றென்றும் பூர்த்தி செய்யும் எனக் கூறுகிறார். இயற்கை அன்னையின் படைப்பினை முழுமையும் நல்ல முறையில் தொழிலில் ஈடுபடுத்தலாம். இதன் விளைவாக மூலதனம் பெருகக்கூடும். வர்த்தக, நாவாய், மற்றும் இதர போக்குவரத்துகள் அதிகரிக்கக் கூடும். தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பொருளாதாரத் துறைக்கு மாபெரும் சாதனை போன்று முன்னேற்ற முறைகள் தோன்றுகின்றன. இவற்றால் சமூக அரசியல் மற்றும் நிதித் துறைகளிலும் மாபெரும் வளர்ச்சி ஏற்படுவது திண்ணம்.

'ஒரு நாட்டில் தொன்மைமிக்க வளர்ச்சியுறு வேளாண்மை யைக் கடைப்பிடித்து வந்தால் மந்தமான மனோ நிலையும்,

[1] Henry Cobot Lodge—The works of Alexander Hamilton, (New York, 1944) p. 124.

பெருக்கத்தக்க உடல் நிலையும், புதுமையை ஏற்க மறுக்கும் பிடிவாதத் தன்மையும், மூடக் கொள்கைகளும், நாகரிகமற்றத் தன்மைகளும், அடிமைத் தளையில் கட்டுண்ட நிலைமையும், வறிய நிலைமையிலும் மக்கள் உழலுகிறார்கள். ஆயினும், வர்த்தகமும், தொழில் வளர்ச்சியும் உள்ள நாட்டில் மனவெழுச்சி, உடலுழைப்பு, சுதந்தரத்தை விரும்பி மேலெழும் எண்ணங்களும் வறிய நிலையினின்று விடுபட்டுச் செல்வ நிலையை எய்த உறு துணையும் காணப்படும்'.[1]

நாட்டின் பொருளாதார நிலைமையில் இசைவுகாண விவசாயமும், வர்த்தகமும், தொழிலும் ஒருங்கே நடைபெற்று அதன் மூலம் ஏற்றுமதியை அதிகரித்து திறனாய்வு பெற்ற தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று லிஸ்ட் அவர்கள் கருதுகிறார்கள். அவர் காப்புமுறையே நல்லதென்றும் நாடு வேளாண்மைக் கட்டத்திலிருந்து தொழில் வளர்ச்சி நாடாக மாறும் நிலைமையில் காப்புமுறையினை வைத்திருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார்.

'தொழில் வளமாக்கு; இல்லையேல் மடிந்துபோ' என்ற கூக்குரல் பல்வேறு நாடுகளில் கேட்கப்படுகிறது. தொழில் வளர்ச்சி வேண்டும் என்பதையொட்டி பல்வேறு காரணங்கள் காட்டப்படுகின்றன. தொழில் வளம்பெற்ற நாட்டிலுள்ள தொழிலாளர்கள் தங்கள் வறுமையைப் போக்கி முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்றும் ஆயினும், அதே நாட்டிலுள்ள உழவர்கள் வறுமையில் உழலுகிறார்கள் என்றும் கருதப்படுகிறது. இக் கொள்கையைச் சேக்கப்பு வைனர் (Jacob Vinar) அவர்கள் எதிர்க்கிறார்கள்.

'ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, டென்மார்க், அயோவா, நெப்ராஸ்கா போன்ற விவசாயமிக்க இடங்களைக் கண்ணுற்றால் வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் எத்தகைய பொருள் முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள் என்றுகூற வேறு ஆதாரம் வேண்டுமா எனக் கேட்போம். அதேபோன்று தொழில் வளர்ச்சியினால் ஒரு நாடு செல்வ நிலையை அடைந்தது என்ற முடிவையும் தகர்க்கப் போதிய ஆதாரங்கள் உள. எடுத்துக் காட்டாக ஸ்பெயின், இத்தாலி இவ்விரண்டு நாடுகளிலும் தொழில் வளமிருந்தும் வறிய நிலை மாறவில்லை என்பது வெள்ளிடைமலை'.[2]

[1] Fredrick List—National System of Political Economy - Translated by G. A. Mandel Stephen Golwel Edition (Philadelphia), p. 139.

[2] Jacob Vinar—International Trade&Economic Development (Oxford, 1953) p. 45.

திரு. லாவெப் (Loeb) அவர்கள் மேற்கூறிய கருத்தை ஆமோதித்துள்ளார். அதிகப்படியான தனிநபர் வருமானம் அதிகரிக்கப் போதிய தொழில் வளர்ச்சி தேவை என்ற கருத்து ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. இயற்கை வளம் பொருந்திய சூழ்நிலை, தொழிலுற்பத்தி செய்யத்துணிவு, தொழில் நுட்பம் தெரிந்த மக்கள், தொழில் வளர்ச்சிக்கான தட்பவெப்ப நிலை பாட்டாளருக்கான அதிகப்படியான நிலஅமைப்பு, இவை ஒருங்கே அமைந்தால், அந்நிலையில் அதிகப்படியான நபர் வருமானம் வர இடமுண்டு. ஒரு தொழிலில் அதிகப்படியான மூலதனமும் பாட்டாளியின் உழைப்பும் ஒருங்கே அமைந்தால்தான் நபர் வருமானம் அதிகரிக்கலாம். அதே அளவில் மூலதனமும், பாட்டாளியின் உழைப்பும் வேளாண்மையில் ஈடுபட்டால் வேளாண்மையின் வருவாயும் அதிகரிக்கும் என்பது திண்ணம். தக்க புள்ளி விவரமின்மையால் தொழில் வளர்ச்சியின் காரணத்தால் தனிநபர் வருவாய் அதிகரிக்கிறதா இல்லையா என்பது பிரச்சினையாகவே உள்ளது.

பொருளாதார நோக்குடன் பார்த்தால் நீண்டகால வளர்ச்சியின் அடிப்படையில் தொழில்வளர்ச்சி இன்றியமையாதது எனலாம். உழுது பயிரிடப் போதிய நிலப்பரப்பு கிடையாது. மேன்மேலும் அதிகரிக்கும் மக்கள் தொகையை அவற்றில் இருத்தி வேளாண்மையை நடத்த போதிய வசதி இல்லையாதலால் தொழில் வளர்ச்சியை அதிகரிக்க விழைகின்றனர். வேளாண்மையிலும் இயந்திர வாகனங்களைப் பயனுக்குவதால் அதிகப்படியான மக்கள் தொழிலில் ஈடுபடக்கூடும். போதிய மூலதனம் மட்டும் கைவசம் இருப்பின் தொழிலில் அளவுகடந்த எண்ணிக்கையில் தொழிலாளர்களை அமர்த்திக் கொள்வது எளிது. வேளாண்மையில் குறைந்து செல் விதி (Law of Diminishing Returns.) வெகு விரைவிலேயே வந்துவிடுகிறது. இறுதி நிலை உற்பத்தி (Marginal Productivity) எனப்படுவது சராசரி உற்பத்தியினின்று (Average Productivtiy) மாறுபட்டது. இறுதிநிலை உற்பத்தி தொழிலில் அதிகரித்தும் வேளாண்மையில் குறைந்தும் காணப்படும். ஏனெனில் தொழிலில் மூலஆதாரங்கள் அதிகமாகவும் வேளாண்மையில் குறைந்தும் காணப்படும். வர்த்தகச் சுழலின் (Trade cycle) போது வேளாண்மைத் தொடர்பான பொருள்களின் விலைகள் நட்பு ஏற்றத்தையொட்டி ஏறவும் இறங்கவும் கூடும். ஆயினும் தொழிலுற்பத்திப் பண்டங்களின் விலைகள் சமமாக அதிக ஏற்றவிறக்கம் இன்றிக் காணப்படும். தொழில் சிக்கனத்தைத் விட விவசாயச் சிக்கனம் நிலையற்றதாக அமையும். நாட்டுப் புறங்களிலுள்ள மக்களின் மகப்பேறு

அடையும் விகிதம் நகர்ப் புறங்களில் தொழிலாளர் மக்களின் மகப்பேறு அடையும் விகிதத்தினும் கூடுதலாக உள்ளது. அதிகப் படியான விவசாய உற்பத்தியைத் தாங்கமுடியா மக்கள் தொகை தோன்றி உடனே தீர்த்துவிடக் கூடும்.

தொழில் நுட்ப முறைகள் தொழில் வளர்ச்சியில் உண்டாகி யிருப்பது போன்று விவசாயத்தில் காணப்படவில்லை. விவசாயத்தில் தொழில்நுட்ப முன்னேற்றம் அடைந்தால் அதன் விளைவாகக் குறைந்த விலையில் உயர்ந்த வேளாண்மைப் பொருள்கள் பெற இடமுண்டு. பன்னாட்டு வர்த்தகத்தில் சாதகமான வாணிபக் கொடுப்பல் நிலையேற்படலாம். அனுபவத்தை யொட்டி நம்மால் என்ன காண முடிகிறது என்றால் குறைந்த விலையுள்ள தொழில் பண்டங்களால் விலை குறைவு ஏற்பட்டு மக்கள் அனைவரும் நலமடையவில்லை. அதற்குப் பதிலாக அந் நாட்டவர் அதிக இலாபம் பெற்று வருவது தெரிந்ததே. தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக் கிடைக்கக் கூடிய இலாபம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட நாடுகளுக்குக் கிடைப்பதை விட அதிகம் எனலாம்.

பேராசிரியர் ஹிர்க்மென் (Hirchmen) தொழிலாக்கம் செய்வதை நன்கு வரவேற்கிறார். அவரது கருத்து என்னவெனில் நாட்டில் தொழில் உற்பத்திக்கு வேண்டிய முதல் தேவைப் படுகிறது. இதையடுத்துத் தொடர்ந்து இரண்டாம் வகை மூலதனம் உருவாகிறது எனலாம். ஆயினும் வேளாண்மையுள்ள நாட்டில் இவ்வாறான இரண்டாம் வகை மூலதனம் உருவாகும் எனக் கூறயியலாது.

எச். டபிள்யு. சிங்கர் (Singer) மேற்படி கொள்கையை ஆமோதிக்கிறார். வரலாற்று வாயிலாகப் பார்த்தால் முன் 70-ல், வேளாண்மைப் பொருள் விற்பனையாளர்கள் அதிக அடக்க விலையின் காரணத்தால் இலாபம் அதிகம்பெறாது சிரமப்பட்டனர். ஆயினும் அதே நிலையில் தொழில் உற்பத்திச் சரக்கினை விற்றவர் நன்கு பலனடைந்தது தெரிந்ததே.

இலத்தீன் அமெரிக்காவை முன்னேற்றமடையச் செய்யும் நோக்குடன் சென்ற பொருளாதாரக் குழு திரு. ப்ரேபீச் (Prebysch) தலைமையில் சென்றது. 'தொழில் கேந்திரங்களிலும் (Centres) அதன் சுற்றுப்புறங்களிலும் (Penphercy) அதிகப்படி வளர்ந்த தொழில்கள் காரணமாக வருமானம் அதிகரித்தது. மூலாதாரத் தொழில்களுக்கும் உற்பத்தித் தொழில்களுக்கும் உள்ள விலை விகிதங்களாக அமைந்திருப்பின் வருவாயும் விலைகளும்

விகிதத்தில் அமைந்திருக்கும். ஆயினும் நுகர்வோரிடம் அதிகப்படி ரொக்க வருமானம் கூடிவிடுவதால் அவர்கள் அதை நுகர்வுப் பொருள்களை இறக்குமதிசெய்வதில் செலவிடுகிறார்கள். சுற்றுப் புற வட்டாரங்களில் ஏற்படும் தொழில் முன்னேற்றத்தின் ஒரு பகுதியைக் கேந்திரத்திற்கு மாற்றி வருகிறார்கள்'. இதே கொள்கைகளை விளக்கும் காலையில் மக்கள் தொகை கூடிவருதல் தேவைகளின் ஏற்றம் மற்றும் இதர காரணங்களையும் காண்பித்துள்ளனர்.

### வேளாண்மை முன்னேற்றம்

நாட்டின் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியுடன் தொழில் வளர்ச்சியும் வேளாண்மைக்கு முன்னோடியாக அமைய வேண்டும். விவசாயத்திற்கான முன்னேற்றச் சீர்திருத்தங்கள், கூட்டுறவுப் பண்ணை முறை (Co-operative Farming) இவைகளால் அளவு கடந்த மிதமிஞ்சிய மனித உழைப்பு ஒன்றுதிரளும். விவசாயத்தில் ஈடுபட்டவர் போக எஞ்சியவர்களை வாய்ப்பின்றி வாளாவிருக்கச் செய்யாது தொழில்களில் பயனுறும்படிப் பணித்து விடலாம்.

நாட்டில் திடீரெனத் தோன்றும் திக்குமுக்காடும் (bottle necks) நிலைமைகள், பற்றாக்குறைகள் மற்றும் பின்னிறக்கம் போன்ற நிலைமைகளைச் சமாளிக்கவேண்டுமானால் வேளாண்மையுடன் தொழிலும் இரண்டறக் கலந்து இருப்பது நல்லது. வளர்ச்சி அளவு கடந்து ஒரு துறையில் ஏற்படின் மற்றொரு துறையின் முன்னேற்றத்தை அது பாதிக்கக் கூடும். இந்தக் கொள்கையை ஆதரித்துத் தொழிலும், விவசாயமும் ஒரே அளவில் முன்னேற்றம் அடைவது இன்றியமையாததென்று ஆல்பிரட்மார்ஷல் அவர்கள் கூறுகிறார்கள்.

தளிர்த் தொழில்கள் (Infant Industries) : நாட்டின் தொழில் வளம் பெருக வேண்டும் என்ற வாதத்தையொட்டித்தான் தளிர்த்தொழில்கள் அல்லது இளந்தொழில்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற உறுதிப்பாடு உருவாகிறது. 'பச்சிளங்குழவியைக் காத்துப் பாலகனைப் பாலூட்டி வளர்த்து ஆண் செம்மலைத் தம் மிச்சைப்படிப் போகவிடு' என்பது பண்டை செர்மானியக் கொள்கை (Protect the babe, nourish the child and free the adult). நாட்டின் தொழில்கள் உருவாகியத் தொடக்கத்தில் அத்தொழில்கள் தாமே வளர வேண்டிய சூழ்நிலை உண்டாகுமென்பது ஐயப்பாடெனலாம். எனவே, அயல் நாட்டுப் போட்டியினின்று விடுபட காப்புமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் போடவேண்டிய இன்றியமையாத நிலை தோன்றுகிறது. இதைப் பண்டைப் பொருளியல் வல்லுநர்கள் ஆமோதித்தனர். புதிய கொள்கைக் கருத்துடைய தொன்மைக் கோட்பாட்டினர் (Neo Classical Econo-

mists) இக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளனர். என்கே சாலேரா (Enke and Salera) தனது பன்னாட்டுப் பொருளியல் என்ற நூலில் தளிர்த் தொழில்கள் என்று கருதப்படுவதற்கான மூன்று காரணங்களை குறிப்பிடுகிறார் அவை வருமாறு :

(i) அவ்வாறு அழைக்கத் தகுதியுள்ளவையென்றும் அவற்றிற்கான பண வசதிகள் நீண்ட நாள் கழித்துத் தானே ஏற்பாடு செய்யும் என்றும்,

(ii) தொடங்கிய சிறிதுகாலம் வரை நட்டத்தில் நடை பெறும் என்றும்.

(iii) காப்புமுறையின்றி (Protection) இவை இயங்கமாட்டா என்றும் வரையறுத்துள்ளனர்.

எந்தத் தொழிலும் எவ்வளவு காலமாக அமைந்திருப்பினும் தமது கால்களிலே தாமாகவே இருப்பதாகக் கருதுவது தவறு. ஒரு நாட்டில் 'க' என்ற தொழில் உருவாக்கப்படுகிறது என வைத்துக் கொள்வோம். ஆரம்பத்தில் இதற்கான மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதாக அனுமானிப்போம். நாளடைவில் இதன் உற்பத்திப் பண்டங்களை இதர தொழில்கள் கோரக்கூடும்.' சுருக்கமாகக் கூறின், பல்வேறு இதரத் தொழில்கள் இதன் உற்பத்திப் பண்டங்களைப் பயனுறுத்துகின்றன. ஒன்றையொன்று தொக்கி நிற்கும் நிலை ஏற்படுவதால் தொழில்கள் வளர்ந்து முன்னேறுகின்றன. ஓர் உற்பத்தித் தொழிலுடைய பண்டம் மற்றொரு உற்பத்தியின் மூலப்பண்டமாக அமைகிறது. இதையே செங்குத்துத் தொழில்கள் (Vertical Industries) எனலாம். பஞ்சாலையின் கொட்டை நீக்கியப் பஞ்சு நூற் பாலையின் மூலப்பொருள் நூற்பாலையின் உற்பத்தியாகிய நூல்கள் நெசவாலையின் மூலப்பொருள்கள். எனவே உற்பத்தித் தொழில்களுக்குக் காப்பு தேவையில்லை என்ற வாதம் வரவேற்கத்தக்கதே. தனியார் நடத்தும் தொழில்களில் முன்பகுதிகளில் தோன்றும் நட்டத்தைச் சமாளிக்கப் பணம் உதவி செய்து பிற்காலங்களில் தோன்றும் மிகுந்த இலாபத்தைப் பெறும் நோக்குடன் வருவதும் தெரிந்ததே. முற்காலங்களில் தொழிலதிபர்கள் தொடங்கியத் தொழில்களில் நட்டம் விளைந்த தென்ற கூற்றிற்கான காரணம் என்னவெனில் உலக வர்த்தகத் தில் போட்டியின் காரணத்தால் என்பதன்று. ஆனால், தொழில் உருவாக்குவதில் ஏற்பட்ட பெருந்தவறுகளேயாம். இன்றைய சூழ்நிலையில் முன்னேறும் நாடுகளில் தோன்றும் தொழில்கள் இக்கட்டான உலக வர்த்தகத்தின் கடும் போட்டியை எதிர்த்து அதன் விளைவாக நட்டம் பெறுவது காரணமாகக் கொள்ளலாம்.

# 7. சுங்க வரி

(முறை, அமைப்பு மற்றும் இதனுல் ஏற்படும் நன்மைகள்கள்)

சுங்க வரி எனப்படுவது அரசினரால் விதிக்கப்படும் ஒரு வகை வரி. இந்த வரி பொதுவாக ஒரு மாநில அல்லது நாட்டெல்லையைக் கடந்து செல்லும் எந்தப் பொருளின் மீதோ அல்லது பண்டத்தின் மீதோ விதிக்கப்பட்டு வரி தண்டப்படுகிறது. சுங்க வரி மூன்று வகைப்படும். அவை தோற்றத்தையொட்டியும் நாட்டெல்லைக்கப்பால் உள்ள சேரிடத்தையொட்டியும் கணக்கிடப்படுகின்றன.

(அ) இறக்குமதியின் மீது இடப்படும் சுங்கவரி-இதனடியில் வரும் பண்டங்கள் அன்னிய நாட்டில் தோன்றிய நுகர்வு கொள்ள விழையும் நாட்டின் எல்லையைக் கடக்கும்போது சுங்கவரி கணக்கிடப்படும்.

(ஆ) ஏற்றுமதியின் மீது கணக்கிடப்படும் சுங்க வரி-இந்த வரி, எந் நாட்டில் உற்பத்தியாகிறதோ அந் நாட்டினரால் ஏற்றுமதி செய்யும் சமயத்தில் விதிக்கப்பட்டு வரி தண்டப்படுகிறது. இந்தப் பண்டம் அயல்நாடுகளின் நுகர்விற்குப் பயன் பெறவேண்டும்.

(இ) போக்குவரத்துச் சுங்கவரி : உற்பத்தி, நுகர்வு இவையனைத்தும் அயல் நாடுகளில் நிகழ்கின்றன. ஆயினும், அப் பண்டங்கள் இந் நாட்டெல்லையைக் கடந்து செல்லும் ஒரே காரணத்திற்காகச் சுங்க வரி விதிப்பு இடப்படுகிறது.

இந்த வரி விதிப்பால் பன்னாட்டு வர்த்தகம் பாதிக்கக்கூடும். எவ்வகையில் வர்த்தகம் பாதிக்கப்படும் என்பதை இங்கு ஆராய்வோம்.

**1. காப்பு முறைச் சுங்கவரி விதிப்பு**

நாட்டின் வருவாயினைப் பெருக்கும் நோக்கத்துடன் இறக்குமதிப் பண்டங்கள் மீது வரி தண்டக்காரணம் உண்டு. இன்

னொரு வாதம் என்னவெனில், நாட்டினுள் தோன்றியுள்ள அநேக தொழிற்சாலைகள் மூலம் உருவாகும் பொருள்களை உள் நாட்டில் நுகர்வு செய்ய விழையவும் அதற்குப் போட்டியாக நாட்டினுள் நுழையும் அயல்நாட்டுப் பண்டம் விலை சமமாயிருப்பதைத் தடுக்கவும் காப்பு முறையாக இந்தச் சுங்கவரி விதிக்கப்படுகிறது.

நாட்டினுள் நுழையவிருக்கும் எல்லா இறக்குமதிகளையும் தடுக்க மிகவும் பெருமளவில் சுங்க வரிகள் விதித்தால்தான் வருமானம் கூடுதலாகக் கூடும் எனலாம்.

நாட்டிலுள்ள தொழில்களைக் காக்கும் வண்ணம் சுங்க வரி விதிக்கப் படுவதோடல்லாது தனிப்பட்ட முறையில் வருமானத்தை அதிகப்படுத்தும் வண்ணம் சுங்கவரி விதிக்க முன் வருகின்றனர் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ள இயலாது.

பொதுச்சமநிலை எய்தும் காலத்திலும் அறைகுறைச்சமநிலையை அடைந்த காலத்திலும் காப்பு முறைக்கென விதிக்கப்பட்ட சுங்க வரியினால் ஏற்படும் விளைவுகளை இங்கு ஆராய்வோம். படத்தில்




படம் 8

அறைகுறைச் சமநிலையில் நிகழும் காப்பு, நுகர்வு, வருவாய், மறுவழங்கு விளைவுகள் எவ்வாறென விளக்கும் படம்.

காட்டப்பட்டுள்ள அ—$அ_3$ என்ற இறக்குமதிகளை ஒ-வி என்ற விலையில் சுங்க வரி விதிக்கு முன்னரே கணக்கிடப்பட்டுள்ளது. சுங்கவரி வி—$வி_1$ என்ற வரி விதிப்பு அயல் நாட்டு விற்பனை விலையைப் பாதிப்பதில்லை. ஏனெனில் ஒ வி விலையில் தானாகவே

சுருங்கி விரியும் தன்மை பெற்றுள்ளது எனலாம். இதனுல் உள்நாட்டில் உற்பத்தி அ—$அ_1$ அளவில் அதிகரித்துள்ளதை காப்பின் விளைவு எனக் கூறலாம். $அ_2$—$அ_3$-ன் மூலம் நுகர்வின் விளைவை மொத்த நுகர்விலிருந்து குறைவு பெற்றதைக் கண்டு அனுமானிக்கலாம். புதிய இறக்குமதி அளவினின்று அரசினருக்குக் கிடைக்கும் வருமானத்தை மேற்படி படத்தில் ஏ, பி என்ற நீண்ட சதுரங்களிலிருந்து கணக்கிடலாம். புதிய இறக்குமதி $அ_1$—$அ_2$ ஐ சுங்கவரி வ—$வ_1$ பெருக்கினுல் ஏற்படும் நீள் சதுரங்களாகும்.

படத்தில் வரும் நாற்கோட்டம் 'ஏ' என்பது உள்நாட்டில் உள்ள தொன்மை உற்பத்தியாளர்களுக்கும் அரசு பெருமளவு வாடகை போன்று அளிக்கும். இத்துடன் புதிய உற்பத்தியாளர் களுக்கும் அவர்களுடைய வழங்கு விலைக்கு மேல் வாடகைபோன்று ஊதியம் அளிக்கும். வழங்குக் கோட்டின் சுருங்கி விரியும் தன்மையையொட்டியே காப்பு அளவைத் தீர்மானம் செய்து அதனுல் ஏற்படும் விளைவுகளைக் காண இயலும். கொடுக்கப்பட்ட சுங்க வரியின் அளவின் கீழ் வழங்கு கோடு அதிகமான அளவில் சுருங்கி விரியும் தன்மை பெற்றிருப்பின், காப்பின் விளைவு மிகவும் கூடுதலாக அமையும். வழங்கு கோடு அதற்கெதிரிடையாக இருப்பின் காப்பின் விளைவு மிகவும் சிறியதாக அமையும். அயல் நாட்டிலிருந்து வரும் இறக்குமதியைத் தடுத்து உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கி உள்நாட்டுத் தேவையைச் சமாளிக்கும் வகையில் இடப்படும் சுங்கவரி மிகவும் பெருவாரியாகத் தண்டப் படுவதெனலாம். காட்டப்பட்டுள்ள படத்தில் எல்லா இறக்குமதிகளையும் வராத வண்ணம் தடுக்கத் தேவையுள்ள குறைந்த அளவு சுங்க வரி விகிதத்தை வ—$வ_2$ குறிகளுக்கிடையே காணலாம்[1].

சாதாரண சமநிலையில் காப்பின் விளைவை நன்கு விளக்கும் வண்ணம் படம் 9-ல் காட்டியுள்ளோம். உள்நாட்டு விலைக்கும் அயல் நாட்டு விலைக்கும் உள்ள வேற்றுமையின் மூலம் சுங்கவரி விதிப்பு காட்டப்பட்டுள்ளது. இதில் எந்தப் பண்டத்தின் மீது சுங்க வரி விதிக்கப்பட்டுள்ளது என்று காட்டப்படவில்லை. அது கோதுமையின் மீது இடப்பட்ட இறக்குமதிச் சுங்க வரியாக இருக்கக்கூடும். அல்லது துணி ஏற்று மதியின் மீது இடப்பட்ட சுங்க வரியாக இருக்கக்கூடும். அகில உலகத் தடங்கலற்ற வர்த்தக விலை 'விநு' மாறவில்லை எனக்

[1] Charles P. Kindleperkar—International Economics, Revised Edition Richard D. Irwin Inc. Homewood Ilianoice, p. 214.

கொள்வோம். $வி_1$—நு, $வி_1$—$நு_1$ இவற்றிற்கிடையே உள்ள சரிவு தான் சுங்க வரி எனக் கூறலாம். வி—$வி_1$ என்ப காப்பினது விளைவாகவும் நு—$நு_1$ என்பது நுகர்வின் விளைவாகவும் கருதலாம். இந்தப் படத்தில் துணியின் மீது இடப்படும் ஏற்றுமதி சுங்க




படம் 9

பொது சமநிலையில் காப்பின் விளைவு, நுகர்வின் விளைவு இவைகளை விளக்கும் படம்.

வரியாக இருப்பின் காப்பு விளைவைத் தவருனது எனக் கூறலாம். நாட்டின் வருவாயைக் குறைத்து முன்னேற்றத்திற்குத் தடங்கல் விளைவிக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் சாசனத்தில் ஏற்றுமதிச் சுங்க வரியைத் தடை செய்துள்ளனர். 1789ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளனைத்தும் மத்திய அரசிற்குப் பன்னாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையைக் கொடுக்க விரும்பவில்லை.

இறக்குமதிச் சுங்கவரி விதிப்பினால் ஒரே ஒருபொருளுற்பத்தியில் ஈடுபட்டுள்ள நாட்டில் அந்தத் தொழில் மேன்மேலும் வளர்ச்சியடைகிறது நாடு முழுமையிலும் நட்டம் தோன்றும். ஆயினும் அந்தத் தொழில் இன்னும் பலனளிக்கத் தக்க முறையில் முன்னேறலாம். இதன் மூலம் உற்பத்தி அடக்கவிலை குறைகிறது.

சுங்கவரி விதிப்பை நீக்கினால் எந்த உற்பத்தித் தொழிலும் பாதிக்கப்படுவது திண்ணம். சுங்க வரி விதிப்பை நீக்கம் செய்த பின்னர் பாதிக்கப்பட்ட தொழிலுக்கு எவ்விதமான வசதிகளை உண்டாக்கலாம் என்று ஆராய்ச்சி செய்து வருவது தெரிந்ததே. சுங்க வரி விதிப்பினால் பலன் பெறும் தொழில்களுக்கு உபரி சலுகைகள் கிடைக்கும் காரணத்தால் அவை சற்று மந்தமான முறையில் உற்பத்தி செய்து வருகின்றன. அவை புதிய உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துவது இல்லை. சுங்க வரி விதிப்பை நீக்கி

சாதாரண முறையில் போட்டியிடத்தகு நிலையை உருவாக்கி உற்பத்தியில் மேம்பாடு அடைவதற்கு முயல வேண்டும்.

**நுகர்வு பாதிக்கப்படுதல்**

சுங்க வரி விதிப்பின் காரணத்தால் இறக்குமதி விலையுடன் சுங்க வரியும் கூட்டப்பட்டு அதன் விளைவாக விற்பனை விலை ஏறக் கூடும். ஒரு நாட்டில் அயல்நாட்டு வர்த்தகத்தை வரி விதிப்பிற்கு ஓர் இலக்காகக் கொண்டிருப்பின் அம்மாதிரி நிலையில் நெகிழ்ச்சி (elasticity) உள்ள பண்டத்திற்கான தேவை பாதிக்கப்படும். எனவே, நுகர்வைப் பாதிக்காத வண்ணம் பாதுகாக்க இரு முறைகளைக் கையாளலாம். ஒன்று, எந்த இறக்குமதிப் பண்டத்தின் நெகிழ்ச்சி குறைவாக உள்ளதோ அவ்வகைப் பண்டத்தின்மீது விதிக்கலாம். இரண்டு, அந்தச் சுங்க வரியை மிகவும் குறைந்த அளவில் விதிக்கவும் முயற்சிக்கலாம்.

போதிய வருமானம் கிடைக்கும் நோக்குடன் உள் நாட்டில் உற்பத்தியாகும் பண்டத்தின்மீது ஆயத்தீர்வை (Excise Duty) விதித்தும் இறக்குமதியாகும் அதே பண்டத்தின்மீது அதே போன்று சுங்க வரி விதித்தும், போட்டி நிலையை உண்டாக்கலாம். உள்நாட்டு உற்பத்தியின்மீது ஆயத்தீர்வை விதிக்காது (வெளி நாட்டு) இறக்குமதிப் பண்டத்தின்மீது மட்டும் சுங்க வரி விதித்தால் வருமானம் கிடைப்பது நின்றுவிடும்.

உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியை முன்னிட்டு சுங்கவரி விதிப்பு முறை தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. இம் முறையைப் பாதுகாப்பு (Protection) சுங்கவரி எனலாம். இது நாட்டிற்குத் தேவை. அயல் நாட்டினரால் வன்முறை (aggression) செய்யாவண்ணம் இருக்கவே இம் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

வர்த்தகத்தில் விலையைப் பேரம் பேசவோ, விலையைக் குறைத்து வாணிபம் செய்யவோ இது பயனுள்ளதாகிறது. இறக்குமதியின்மீது சுங்க வரி விதிப்பை ஒரு நாடு நீக்க முன் வந்தால் அந் நாட்டின் ஏற்றுமதியை இந்நாடு வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளக் கூடும். சுங்கவரி விதிப்பை அகற்றும் நோக்குடன் ஒரு நாடு பிறிதொரு நாட்டின்மீது மிகவும் கூடுதலான அளவில் வரி விதிப்பு செய்யலாம்.

**ஏற்றுமதித் தீர்வை**

19ஆம் நூற்றுண்டின் இடைக் காலத்தில் இந்தத் தீர்வை நிலவி வந்தது. அக் காலங்களில் ஏற்றுமதியின்பேரில் இடப்படும்

தீர்வை இறக்குமதி நாட்டின் நுகர்வோரால் கொடுக்கப்பட்டு வரும் என்ற தவறான எண்ணமிருந்தது. ஆயினும் நாளடைவில் இது மாறி, தேசிய வளர்ச்சிக்கு எதிராக இது அமையும் என்று கருதி இதை நீக்கி விட்டனர்.

சாதாரணமாகப் பொருளாதார வளர்ச்சியற்ற நாடுகளில் இருந்து கச்சாப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் ஏற்றுமதி செய்து வந்தனர். அவர்கள் சரிவரக் கணக்கு வைக்கத் தவறியதாலும் போதிய படிப்பினை இல்லாத காரணத்தாலும், அரசு, அவர்கள் செய்யும் ஏற்றுமதியின் அளவின்மீது தீர்வை விதித்து வருவாயை நாட்டிற்கு சேர்த்துக் கொண்டனர் எல்லாத் துறைமுகங்களிலும் சுங்கவரி அலுவலர்கள் வெகு எளிதில் இந்தத் தீர்வையை வசூலித்தனர்.

அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மூலப் பொருள்களின் மீதும் கச்சாப் பொருள்களின்மீதும் தீர்வை விதித்து அதன் காரணமாக அயல் நாட்டினருக்கு அடக்கவிலையை அதிகரித்துப் போட்டியிட இடமுண்டு. தாய்நாடு சில சமயங்களில் தனது ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளை ஏற்றுமதித் தீர்வையை விதிக்கும் படிக் கட்டாயப்படுத்தி அதன் மூலம் உள்நாட்டுத் தொழிலை முன்னேற்றமடையச் செய்யக் கூடும். இதன் ஆதிக்கத்திற்குட் பட்ட நாடுகள் (Colonies) போட்டியிட முடியாது.

உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடன் நாட்டிலுள்ள கனி வளங்கள் தீரா வண்ணம் பாதுகாக்க ஏற்றுமதித் தீர்வையைப் பயன்படுத்தலாம்.

ஏற்றுமதி அதிகரிப்பு ஈடுபாட்டில் நிகழும் அதிகப்படி செலவைச் சமாளிக்கத் தேவையுள்ள பணத்தை ஏற்றுமதித் தீர்வையின்மூலம் எடுக்க முயலலாம்.

வழங்குதலுக்குக் குறைவாயுள்ள பண்டங்களை அயல் நாட்டினரிடம் அதிக விலையைக் கேட்கும் நேரத்தில் ஏற்றுமதித் தீர்வையைப் பயன்படுத்தலாம்.

**விலைகளும், உற்பத்திகளும் ஏற்றுமதித் தீர்வையால் பாதிக்கப்படுதல்**

போட்டி வர்த்தகத்தில் ஏற்றுமதித் தீர்வையின் பளுவை ஏற்றுமதி செய்யும் நாட்டின் உற்பத்தியாளர்களே சுமக்க வேண்டி நேரிடுகிறது. உலகச் சந்தையில் இதர நாடுகள் எந்த விலைக்கு விற்க முடியுமோ அந்த விலைக்குக் குறைவாக இந்த

ஏற்றுமதித் தீர்வையைக் கொள்ளும் நாடு விற்க இயலாது. தீர்வைபோக நிகரமாகக் கிடைக்கும் விலை உலக நாடுகளின் விலையை விட மிகவும் குறைவாகவே அமையும். இதனுல் நாளடைவில் ஏற்றுமதி குறைய ஆரம்பிக்கலாம்.

உலகில் பெருமளவு வழங்குதலுள்ள பண்டங்களின் மீது ஏற்றுமதித் தீர்வை போட்டால், மிகவும் நெகிழ்ச்சியின் காரணத்தால் தீர்வையின் ஒரு பகுதியை இறக்குமதியாளர்களும் அந் நாட்டவர்களும் சுமக்க நேரிடும். அவ்வாறு பெருமளவு வழங்குதலுள்ள பண்டங்களின் மீது இடப்படும் தீர்வையின் காரணத்தால் ஏற்றுமதியாளர்களுக்கும் மிகவும் குறைந்த விலையே கிடைக்கும். ஆயினும் அப் பண்டத்தின் உலக விலை அதிகமாகக் கூடும். இதனுல் உற்பத்தியாளர்களுக்கும் போதிய வருவாய் கிடைக்காத காரணத்தால் உற்பத்தி குறைய ஆரம்பிக்கலாம். இதன் விளைவாக விலையேற்றம் ஏற்படுவது திண்ணம். இதே தீர்வையை நெகிழ்ச்சியற்றப் (inelastic) பண்டத்தின் மீது விதிப்பின், ஏற்றுமதி செய்யும் நாட்டில் அதிகப்படியான வருமானம் கிடைக்கும்.

### போக்கு வரத்துத் தீர்வைகள்

19 ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் மெர்கண்டிலச (Mercantalist) சமயத்திலும் போக்குவரத்தின் மீது தீர்வை விதித்திருந்தனர். அவ்வமயம் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்தன. விரைவான போக்குவரத்து வசதி ஏற்படாத காரணத்தால் தீர்வை விதிக்கவேண்டிய நிலைமை உண்டாயிற்று. சுருக்கமான வழியில் போக்குவரத்தை நடத்திவர விழைந்தனர். நிலவழியில் (Geographical) அமைந்த நாடுகள் போக்குவரத்து வழியை நன்கடைந்தனர் போக்குவரத்து வசதிகள் முன்னேற்றம் அடைந்தவுடன் இந்தத் தீர்வையை நீக்க முடிந்தது. பன்னுட்டுப் பொருளாதார ஒற்றுமையை நாடி எல்லா நாடுகளும் ஒன்று சேர விரும்பிய காரணத்தால் இந்தத் தீர்வை நீக்கமுற்றது.

போக்குவரத்துத் தீர்வையை இறக்குமதியாளரோ அல்லது அந்நாட்டு நுகர்வோர்களோ கட்டி விட வேண்டும். இன்னும் சிலவற்றில் ஏற்றுமதியாளர்கள் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதுண்டு. இது இடப்படுவதனுல் வர்த்தகம் பாதிக்கப் படுவது நியதி.

### சுங்க வரியின் பல வகைகள்

பல வகைகளில் சுங்க வரியைத் தண்டலாம். அவைகள் பின்வருமாறு :

மதிப்பு விகிதத்தீர்வை தனிப்பயன் தீர்வை (Advalorem Specific): பண்டத்தின் மதிப்பையொட்டியும், அல்லது அதன் எடை பரிமாணம் இவற்றையொட்டியும் தீர்வைவிதிக்கக் கூடும். மதிப்பைத்யொட்டி தீர்வை விதித்தலே மதிப்பு விகிதத் தீர்வை (Advalorem) என்றும் எடை, பரிமாணம் இவற்றின் அடிப்படையில் தீர்வை விதிக்கப்பட்டால் அதை (Specific) தனிப்பயன் தீர்வை எனவும் கொள்ளலாம். இறக்குமதி செய்யப்படும் பொருளின் மதிப்பைக் கணக்கிட்டு அதில் குறிப்பிட்ட சதவிகிதத்தைக் (percentage) கணக்கிட்டுத் தீர்வையாக இடப்படும். ஆனால் தனிப்பயன் தீர்வை எனப்படுவது ஒரு குறிப்பிட்ட தொகை தீர்வையாக வசூலிக்கப்படுகிறது. ஒரு பண்டத்தின் மீது மதிப்பு விகிதத் தீர்வை, தனிப்பயன் தீர்வை இரண்டினையும் இட்டு வசூல் செய்ய இடமுண்டு. இத்தகுக் கூட்டுத் தீர்வை (Compound Duty) எனப் பெயரிடுகிறோம்.

தனிப் பயன் தீர்வையை நிலை நாட்டக் காரணங்கள் : தனிப்பயன் தீர்வையை நடத்துவதால் சிரமங்கள் எதுவும் கிடையாது. மதிப்பு விகிதத் தீர்வையைவிட இதை எல்லாரும் ஏற்க முன் வருகின்றனர். நேர்மையான முறையில் பண்டத்தின் மதிப்பீடு செய்யும் முறை சற்று கடினமானது எனலாம். பண்டத்தின் விலைகளை விலை காப்புறுதிக் கூலி (Cash Insurance freight) என்றும் கப்பல் ஏற்றும் வரை செலவு (F.U.B) என்ற வகையிலும் விலைகள் இருக்கக் கூடும் அல்லதுஇறக்குமதியாளர் இன்னதுதான் அடக்க விலை என்று உறுதிமொழி கொடுத்து சரக்குகளைப் பெறமுயலலாம். சந்தைவிலை ஒரே நாளில் பல முறைகள் மாற இடமுண்டு. அதே போல் பண்டத்தின் தேவை, அமைப்பு இவைகளைப் பொருத்தும் சந்தைவிலை மாறக்கூடும். வாங்குபவரின் பணம் பெறத்தகுதன்மை அவர் வாங்கக்கூடும் சரக்குகளின் எண்ணிக்கையைப் பொருத்தும் இருக்கும். ஏற்றுமதிகள் இறக்குமதிகள் இன்னமதிப்பு உள்ளன என்பதை நேர்மையுடன் கணக்கு ஒப்புவிக்க வேண்டி, வரிகளும், அபாரத முறைகளையும், தண்டங்களையும் வசூலித்து உண்மை நிலையை அரசினர் அறிய முயலுகின்றனர். வர்த்தகர்கள் தவறான மதிப்பினைத் தர முன்வரின், ஐயமுற்ற அரசு உடனே அவ்வாறான சரக்குகளைத் தாமேநேரில் கொள்முதல் செய்துவிடும். அல்லது வர்த்தகரின் கணக்குப் புத்தகங்களை அலுவர்கள் பரிசீலனைசெய்து உண்மையானவிலை இன்னதென்று கண்டுபிடித்து விடக்கூடும். மதிப்பு விகிதத் தீர்வையை அமலாக்க அதிகப் படியான மதிப்பிடும் அலுவலர்களை நியமனம் செய்யவேண்டிய அவசியம் உண்டாகிறது. மதிப்பீடு செய்தலில் தோன்றும் பூசல்களை அவ்வப்போது முடிவுசெய்ய ஓர் அரசியல் நியாயத்தலம்

ஒன்று ஏற்படுத்த வேண்டும். இந்த இடையூறு மதிப்பு விகிதத் தீர்வை முறையில் ஏற்படுகிறது. மதிப்பு விகிதத் தீர்வை மிக அதிகத் தொகையாக நேரிட்டால் கணக்குகளைக் காட்டாமல் ஏமாற்ற முயலக்கூடும்.

**தனி மதிப்புத் தீர்வையை நிலை நாட்டக் காரணங்கள் :** தனிப் பயன் தீர்வை நிலைப்பாட்டில் (Incedence) தேய்வு வீதமாக (Regressive) அமைகிறது. விலை சரசமான பண்டங்களின்மீது இந்தத் தனிப்பயன் தீர்வை அதிகமாக ஏறுகிறது. ஆகையால் ஏழை எளியவர்கள் அதிகப்படியான தீர்வையைச் செலுத்த நேரிடுகிறது. பணம் படைத்தவர்களும், உயர்தர வகுப்பினர்களும் பயன் செய்யும் பண்டங்களுடைய மதிப்பு அதிகமான காரணத்தால் தனிப்பயன் தீர்வை குறைவாகிறது. எனவே, இந்தத் தீர்வை விதிப்பு ஒரு தலைக் கொள்கையாகப்பலரால் கருதப் படுகிறது. எந்த வரியும் சமநோக்குடன் விதிக்கப்படவேண்டும்.

விலை ஏற்றத்தையொட்டித் தனி மதிப்புத் தீர்வையை வசூலிக்கலாம். உற்பத்தியாளர்கள் விலை ஏற்றத்தால் ஏற்படும் இலாபத்திலிருந்து தனி மதிப்புத் தீர்வையைக் கொடுக்கக் கூடும் பணவீக்க நிலைமையைச் சரிசெய்யத் தனி மதிப்புத் தீர்வை பயன் படுகிறது.

சில சமயங்களில் தனிப் பயன் தீர்வையைப் போடமுடியாது. வண்ணச் சித்திரங்கள், கையெழுத்துப் பதிப்புகள் இவற்றின்மீது எந்தக் கணக்கின்மீது வரி தண்ட முடியாது.

பல்வேறு நாடுகள் வசூலிக்கும் தனி மதிப்புத் தீர்வையை விவரமாகக் கணக்கிடலாம். மொத்த இறக்குமதிகளில் 24% (சதவிகிதம்) எனக் கூறுவதில் அர்த்தமுள்ளது. இவ்வளவு மொத்த எடையில் இவ்வளவு ரூபாய் தீர்வையாக வசூலிக்கப் பட்டது எனக் கூறினால் எளிதில் விளக்க இயலாது.

## காப்புத் தீர்வையும் வருவாய் தீர்வையும் (Protective Tariff and Revenue Tariff)

பொதுக் கருவூலத்திற்கு வேண்டிய வருமானத்தைத் தேடித் தருவது வருவாய்த் தீர்வை (Revenue Tariff). இறக்குமதியைத் தடங்கல் செய்யாது குறைந்த அளவில் தீர்வையை விதிப்பது தான் முறை. அயல் நாட்டு உற்பத்தியாளர்களையும்உள்நாட்டு உற்பத்தி யாளர்களையும் ஒரே சீரான நிலையில் இருக்கவைக்கும் நோக்குடன் உள்நாட்டுத் தபால் சுங்க வரியைப் (Exiese) போடக்கூடும்.

காப்புத் தீர்வை எனப்படுவது உள்நாட்டு உற்பத்தியாளர்களை அயல் நாட்டுப் போட்டியினின்று விடுவித்து உள்நாட்டில் போட்டியின்றி வர்த்தகம் புரிய உதவுகின்றனர். நாட்டின் முழு காப்புத் தீர்வை இறக்குமதி அனைத்தையும் தடுத்து வருமானம் இல்லாது போகும்படி செய்கிறது. சிற்சில சமயங்களில் அயல்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து தீர்வையை வருவாய் பெறும் நோக்குடன் வசூலித்தும், காப்புத் தீர்வையாகவும் பயன் படுத்தலாம்.

**சுங்க வரித் தீர்வையின் பாகுபாடுகள்**

பல்வேறு நாடுகளில் சுங்க வரித் தீர்வை முறையை ஒற்றைக் கலன் (Single Column) தீர்வையெனவும் இரட்டைக் கலன் (Double Column) தீர்வையெனவும், முக்கலன் (Triple Column) தீர்வையெனவும் பாகுபாடு செய்துள்ளனர்.

**ஒற்றைக் கலன் தீர்வை** : (Single Column Tariff) ஒரே ஒரு விகிதத்தில் தீர்வை போடப்பட்டு, சரக்கின் தோற்றுவாய் நாட்டைப்பற்றி எந்தவிதக் காரணத்தையும் கருதாது, ஒப்பந்தத்தையொட்டி ஒரே சீரான தீர்வை விகிதத்தைக் கணக்கிடுவார்கள். மற்றும் நாடுகளுக்கிடையே பாரபட்ச மனப்பான்மையிராது ; குறிப்பிட்ட முறையில் தீர்வையை விதிப்பார்கள்.

**இரட்டைக் கலன் தீர்வை** (Double Column Tariff) : சட்ட மன்றம் இன்ன தீர்வையைத்தான் விதிக்க வேண்டும் என்று முடிவு செய்கிறது. வர்த்தக ஒப்பந்தங்களின் விளைவாக இன்னொரு வகையான தீர்வை முடிவு செய்யப்படுகிறது. இரட்டைக் கலன் தீர்வையை எடுத்து நடத்துவதிலும், அமலாக்குவதிலும் அநேக சிரமங்கள் உள்ளன. வேற்றுமையை வளர்ப்பதில் இந்தத் தீர்வை மிகவும் பயன் படக்கூடும். இதன் விளைவாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குக் காப்புத் தீர்வை எவ்வளவு எனக் கூறவும் இயலாது. நாட்டின் வருவாய் இவ்வளவு என்றும் வரையறுத்துக் கூறமுடியாது. இவற்றில் இரண்டு வகைகள் உண்டு.

(1) பொது அமைப்பு, பழக்கமுறை அமைப்பு.

(2) குறைந்த அளவு, அதிக அளவுத் தீர்வை என்பன.

**பொதுத் தீர்வையும் பழக்கத் தீர்வையும்** (General and Conventional Tariff) : இதன் பட்டியல் முறை இரு வகைகளாகும். முதலாவது வகையெனப்படுவது சட்டமன்றத்தால் உருவாக்கப்படுவது. இதைப் பொதுத் தீர்வையெனலாம்.

பழக்கத் தீர்வையெனப்படுவது வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் தோன்றுகிறது. ஒப்பந்தத்தின் காரணத்தால் தோன்றிய தீர்வையை உடனே ரத்து செய்யமுடியாது. ஒப்பந்தத்தைக் குறைகூறி அதன் பின்னர்தான் தீர்வையை மாற்ற இயலும். பழக்கமுறைத் தீர்வையை எளிதில் தீர்மானம் செய்யவியலாது. நீண்ட கால அனுபவத்தைப் பெற்ற நாடுகள் இந்தப் பழக்க முறைத் தீர்வையைக் கடைப்பிடிக்கின்றன. ஆயினும், முன்னேற்றப்பாதையில் செல்ல விரும்பும் நாடுகள் இந்த முறையைக் கடைப்பிடித்தால் அதிக இலாபம் பெற முடியாது. அடிக்கடி ஒப்பந்தங்களும், அயல்நாட்டவருடன் பேச்சு வார்த்தைகளும் நடத்தி அதன் பின்னர்தான் மிகவும் சிரமங்களை மேற்கொண்டு தீர்வை விகிதங்களை மாற்றக் கூடும். பழைய தீர்வையிலேயே பலன் கண்டவர்கள் புதிய தீர்வை முறையைக் கடைப்பிடிக்காது இருக்க எல்லா இடையூறுகளையும் விளைவிப்பார்கள்.

குறைந்த அளவு அதிக அளவுத் தீர்வைகள் (Minimum and Maximum Tariff) : குறைந்தஅளவுத் தீர்வைப்பட்டியலும் அதிக அளைவத் தீர்வைப் பட்டியலும் சூழ்நிலைக்கேற்பப் பயன்படும். மிக அதிகப் பற்றுதல் உள்ள நாட்டினின்று வரும் இறக்குமதிப் பண்டங்களின் மீது குறைந்த அளவுத்தீர்வையை விதித்தும் இதர நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களின் மீது அதிக அளவுத் தீர்வையை விதிப்பார்கள். தனி சுதந்தரத்துடன் (Antonomous) தீர்வை விகிதத்தைத் தீர்மானம் புரிய இவ்விரண்டு பட்டியல்களும் பயன்பெறும். இவ்விரண்டு தீர்வைகளையும் பயன்படுத்தும் நாட்டிற்கு இதர சலுகைகளைக் காட்ட அனுமதியில்லை; உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குக் காப்புறுதி கிடைக்கும்.

முக்கலன் தீர்வை (Triple Column Tariff) : பிறர் தலையீடின்றித் தனிச் சுதந்தரத்துடன் மூன்று வகைத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. அவை :

1. பொதுத் தீர்வை,
2. மத்திய அல்லது இடை வகைத் தீர்வை (Intermediane)
3. சலுகைத் தீர்வை (Preferential Tariff) பொதுத் தீர்வையும் மத்திய அல்லது இடைவகைத் தீர்வையும் சாதாரணமாகக் காணப்படும் குறைந்த அளவு, அதிக அளவுத் தீர்வைகளைப் போன்றவை. குடியேற்ற (காலனி) நாடுகளிலிருந்தும், தாய் நாட்டினின்றும் வரும் இறக்குமதிகளின்மீது விதிக்கப்படும் சலுகைத் தீர்வையை இங்குக் கவனிப்போம். இம் முறைகளால் வேற்றுமையும் வஞ்சமும் (Discriminations) அதிகரிக்கக் கூடும்.

எனவே, வர்த்தகப் பேர முறையை அதிகமாகக் கடைப் பிடித்து வருகிறார்கள். பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களுக்குப் பல்வேறு தீர்வை விகிதம் இருப்பதால் எளிதில் கணக்கெடுக்க முடிவதில்லை. பல்வேறு நாடுகளிலிருந்து தோன்றும் ஒரே பண்டத்தை இறக்குமதி செய்தாலும் இதே தலைவிதிதான். சலுகைத் தீர்வை முறையால் நாடுகளுக்கிடையே ஒற்றுமை சீர்குலைந்து பன்னாட்டு அமைப்பில் விரோத மனப் பான்மை ஏற்படுகிறது. இது நாளடைவில் போர்க் கோலமாக மாற நியதி ஏற்படுகிறது.

**தீர்வையின் உச்சத்தைக் கணக்கிடல் :** ஒரு நாட்டின் தீர்வை எவ்வளவு என்பதையும் அல்லது பற்பல காலங்களில் எவ்வளவு இருந்தன என்பதையும் அல்லது ஒரே சமயத்தில் பல்வேறு நாடு களில் எவ்வளவு இருந்தன என்பதையும் ஒப்பிட்டு ஆராய உதவுவது இந்த அளவை முறை. இது மிகவும் சிக்கல் பொருந்திய பிரச்சினை. புள்ளி விவரக் கணக்கு ஒருபுறம் இருக்க, இதற்கான இலக்கண முறையும் சற்றுக் கடினமாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக, ஒரு நாட்டில் இறக்குமதியில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைத் தீர்வைச் சுவராக எழுப்பிக் கணக்கிடுவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு ஒரு தீர்வை இறக்குமதியைத் தடுக்கும் வகையில் அதை இந்தக் கணக்கில் எடுத்து வரிசைப்படுத்துவதில் சில இடையூறுகள் உண்டாகின்றன. தீர்வை விதிக்கும் முன் 100 பண்டங்களை இறக்குமதி செய்து வந்தனர். கண்டிப்புத் தீர்வையின் விளைவாக 99 பண்டங்களின்மீது தீர்வையிட்ட பின்னர் ஒரு பண்டத்தை மட்டும் தீர்வையின்றி இறக்குமதி செய்தால் அங்கு எழுப்பப்பட்ட தீர்வைச் சுவரைக் கணக்கிட முடியாது. இரண்டவதாக இறக்குமதி சுங்க வரிச் சுமை எவ்வளவு என்பதைக் கணக்கிடமுயலுதல். சுங்க வரி விதிக்கக்கூடிய பண்டங் களின் விலையைக் கணக்கிட்டவுடன் அதில் உள்ள சதவிகிதமே வரிச் சுமை எனப்படும். இதில் தடுப்புத் தீர்வையைக் கூட்டிக் கொள்ளாத காரணத்தால் இந்தக் கணக்கெடுப்பு முறையும் தவறானது. மூன்றாவதாக மொத்த இறக்குமதிகளில் சுங்கவரியிடப் படாத பண்டங்களின் மொத்த மதிப்பைக் கணக்கிடுதல், இதன் மூலம் சில இடையூறுகள் உள்ளன. கணக்கில் தடுப்பு சுங்க வரி விடப்படும். எனவே இந்தக் கணக்கும் தவறானதெனலாம். மிகவும் குறைவாகச் சுங்க வரி விதிக்கும் நாடுகளை மிகவும் அதிகமான தடுப்பு சுங்க வரி விதிக்கும் நாடாகவும், மிக அதிகமான தடுப்பு வரிவிதிக்கும் நாட்டினைக் குறைந்த தீர்வை நாடாகவும் இதில் காணப்படும். நான்காவதாக, மொத்த இறக்குமதிகளில் இத்தனை

சதவிகிதமாகக் கணக்கிடப்படும் சுங்க அலுவலர்களின் ஆவணங்களிலிருந்து (Record) மொத்த இறக்குமதிகளைக் கணக்கிட்டு அதன் மீது இன்ன தீர்வையென விதிக்கப்படுவதே ஆகும். இது மதிப்பு விகிதத் தீர்வை முறையில் மிகவும் பயனுள்ளதாக அமையலாம். ஆயினும், தனிப் பயன் தீர்வை உள்ள பண்டங்களின் கணக்கைச் சதவிகித அளவில் கூறவேண்டுமானால் பண்டங்களை மதிப்பு விகிதத்தில் மாற்றிப் பின்னர் அதன் மொத்தத்தில் இன்ன சதவிகிதம் என்று கணக்கிடல் வேண்டும். ஒரு நாட்டின் தீர்வைச் சுவரின் உயரம் என்னஅளவுடையது என்று கணக்கிடுவது மிகவும் கடுமையானதும் கணக்கிடுவதில் இடையூறுகள் உள்ளன என்றும் அதைக் கூறலாம்.[1] முதல் இடையூறு யாதெனில் தனிப் பயன் தீர்வையைத் தனி மதிப்புத் தீர்வையாகக் கணக்கிடுவதில் இடையூறு ஏற்படும் எல்லாப் பண்டங்களுக்கும் ஒரே தரமான விலை சந்தையில் (Market) இருக்கும் எனக் கருத இடமில்லை. ஒரே பண்டத்தில் பலவகைகள் இருக்கலாம், அவற்றின் விலைகளும் மாறியிருக்கும்.

இரண்டாவதாக புள்ளி விவரத்தேவைகளுக்காக இப் பண்டங்களின் விலையுடன் இன்ன நிறுத்தம் அளவு (weight) என்று அறுதியிட்டுக் கூறுவதில் சிரமம் ஏற்படக் கூடும். எல்லா வகைத் தீர்வைகளும் அவ்வளவு முக்கியம் எனக் கருத இடமில்லை. ஒரு காலத்தில் துணி இறக்குமதி இன்றியமையாத நிலையில் இருக்கலாம். அதே சமயத்தில் கிராமஃபோன் ஊசிகளை இறக்குமதி செய்வது தேவையற்றதெனக் கருதலாம். ஒரு பண்டம் நாட்டின் இறக்குமதியில் எவ்வளவு பங்கு என்றோ, ஏற்றுமதியை என்ன பங்கென்றோ, உலக வர்த்தகத்தில் இன்ன பங்கென்றோ கணக்கெடுத்து அதன் பின்னர் அதன் நிறுத்தக் கணக்கினைச் சீர்படுத்தலாம். எந்த முறையின் கீழ் கணக்கெடுத்தாலும் தீர்வை விதித்த பின்னர் அந்தப் பண்டத்தின் பங்கு விகிதம் பாதிக்கப்படுவது அறிந்ததே.

மூன்றாவதாகப் பன்னாட்டு வர்த்தகத்தில் பெரும் எண்ணிக்கையாகப் பல்வேறு பண்டங்கள் நுழைவதால் அவற்றைக் கணக்கெடுப்பதில் சில இடையூறுகள் உள்ளன. சிலபண்டங்கள் தனிப்பட்ட உற்பத்திக்காக வேண்டியும், மற்றும் சில பண்டங்கள் பதில் முறையாகவும் இறக்குமதியாகின்றன.

நான்காவதாக எல்லா நாடுகளிலும் ஒரே உச்சத்தில் தீர்வைச் சுவர் எழுப்பப்படின் பல்வேறு நாடுகளில் இறக்குமதிக் கட்டுப்பாடு

[1] G. Halber—Theory of International Trade, (London), 1956. p. 56-56

ஒரே மாதிரியமையாது. சிலவிடங்களில் தேவை, வழங்குதலை யொட்டி மாறுபடும் தீர்வைச் சுவரை மட்டும் உயரத்தின் அளவைக் கொண்டு கணக்கிடுவதால் இலாபமொன்றுமில்லை. ஏன் சில பண்டங்களுக்கு இறக்குமதிக் கட்டுப்பாடிட்டனர் என்பதை அளவிடப் பல்வேறு சூழ்நிலைகளும் காரணமாக அமையலாம்.

ஐந்தாவதாக, ஒரே தீர்வை விகிதத்தை எல்லா நாடுகளும் கடைப்பிடித்து வரும் என்ற கோட்பாடு கிடையாது. எனவே, எல்லா நாடுகளையும் அனுசரித்த தீர்வைப் புள்ளி விவரம் (Stiatstical) தயாரித்து ஒப்பிட்டு நோக்கின் பலனுண்டாகக் கூடும்.

இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சீரான முறை என்னவெனில் புள்ளி விவரத்திற்குக் குறியீட்டு எண்ணின் மூலம் தீர்வையை நன்கு அளந்து ஆய்ந்து முடிவுசெய்வதே சாலச் சிறந்தது ஆகும்.

**அரசின் பண உதவி அல்லது உதவிக் கொடை (Subsidy)**

உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் காப்புமுறையைக் கடைப்பிடிக்க மிகவும் உயர்ந்த முறை அரசின் பணஉதவி நன்கொடை முறையாகும். தீர்வைகளும், பங்கு விதிப்பு முறைகளும் நன்கு தெரியாது மறைந்துகிடக்கும். ஆயினும், அரசு முன் வந்து நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக அளிக்கும் பண உதவிக்கான வரி செலுத்துவோர் அனைவரும் தெரிந்து கொண்டு உதவியை ஆதரிப்பார்கள். தீர்வை களையும், பங்கு முறைகளையும் தவறான பாதையில் செலவிட முயலுவார்கள். ஆயினும், பண உதவித் தொகையை அவ்வாறு செய்யமாட்டார்கள். ஏனெனில் வரி செலுத்துவோர் எதிர்ப்பைத் தெரிவித்து வரி கொடாமை முறையைக் கையாளுவார்கள்.

பண உதவித் தொகையின் மூலம் உதவிபெறும் தொழிலில் தோன்றும் பண்டங்கள் ஏற்றுமதிக்குத் தயாராகின்றன. தீர்வை பங்கு விதிப்பு முறைகளால் இப் பண்டங்களின் விலைகள் சர சர என்று ஏறி, அதன் பயனாக ஏற்றுமதி குறைந்துபோகக் கூடும். எந்தெந்தப் பண்டங்களில் நெகிழ்ச்சி அதிகம் உள்ளதோ அவைகளில் பணக் கொடை வசதியிருப்பின் அவற்றின் ஏற்றுமதி அதிகரிக்கும். ஆயினும், தீர்வை விதிப்பின் மூலம் பண்டத்தின் விலை பாதிக்கப்பட்டு உள்நாட்டு உற்பத்தி குறைந்து போகக் கூடும்.

தீர்வை விதிப்பதால் ஏற்படும் விலை வேறுபாட்டையும் அதன் சுமையையும் ஒரு சிலரே தாங்கவேண்டி ஏற்படுகிறது. ஆயினும்,

பண உதவித் தொகை என்பது அரசு தமது பொது வருவாயினின்று கொடுக்கிறபடியால் இந்தச் சுமை வரி கொடுப்போர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வளர்ச்சிக்காக விழையும் நாடுகளில் வரி விதிப்பு மிகவும் கொடூரமாக அமைகிறது என்பதற்கு இதுவே தக்க சான்று.

இறக்குமதிக் கட்டுப்பாடெனப்படுவது நாட்டின் பணவீக்க நிலையைப் போற்றும் முறையாகக் கருத இடமுண்டு. ஆயினும் பணக் கொடை உதவி முறை நாட்டின் பணவீக்க நிலையை ஆதரிப்பதில்லை. (இந்த அனுமானம் தவறெனக் கொள்ள இடமுண்டு).

வளர்ச்சியுறு நாடுகளைப் பொறுத்தமட்டிலும் உதவித் தொகை மூலம் உள்நாட்டுத் தொழிலுக்கு ஊட்டமளிக்கிறோம் என்ற கருத்து தவறானது. ஏனெனில் அயல் நாட்டுப் பண்டங் களின் விலையின் காரணத்தால் இறக்குமதி நடப்பதில்லை. அயல் நாட்டுப் பண்டங்களின் மீதுள்ள மோகத்தினால் இறக்குமதி நடைபெறுகிறது. இந் நாடுகளில் கொள்கையின்படி உதவித் தொகையால் அவ்வளவு பலன்கள் ஏற்படுவதில்லை. இவை நடை முறையில் தகுந்த பலன்களையளிப்பதில்லை. அரசு பணக் கொடை வழங்க வேண்டுமானால் இதற்கு வருமானம் எவ்வாறு கிடைக்கும்? நாட்டு மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கச் சக்தி யற்ற நாட்டரசு எங்கிருந்து பணக்கொடையைக் கொடுக்கும்? தொழிலாளர்களுக்கான பயிற்சி வசதி, போக்குவரத்து வசதிகள் இவைகளைச் செப்பனிட்டு நாட்டின் வளர்ச்சிக்கு அடிகோலிடுவதே சிறந்த முறையகுாம்.

பணக்கொடை மட்டிலும் ஓர் உயர்ந்த முறையெனக் கருத இடமில்லை. நடை முறையில் இதை மற்றுமுள்ள இதர முறை களுடன் கூட்டி நடத்திவரலாம். தீர்வை, சுங்கவரி இவற்றினின்று கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நாட்டில் உள்ள தொழில் களுக்குக் காப்பளிக்கும் நோக்கத்துடன் பணக் கொடையை அளிக்கலாம். இவ்வழி பெற்ற அனேகர் நாட்டினுள் தொழில் களைத் தொடங்கி, போட்டியின் மூலம் நல்லமுறையில் உற்பத்தியை அதிகரிக்கலாம். ஏற்றுமதிச் சந்தையிலும் நுழைய இடமுண்டு. தீர்வை விதிக்கப்படின் அந்தப் பொருள்களின் விலை யேற்றம் அடைந்து அதன் விளைவாக தேவை குறைந்து சந்தையில் புழக்கம் குறைவுபட ஆரம்பிக்கலாம்.

# 8. பங்குவிதிப்பு முறை
## (Quota)

ஒரு குறிப்பிட்ட காலவரம்பினுள் ஒரு பண்டத்தின் அளவை அல்லது அதன் மதிப்பீடுள்ள தொகையை ஏற்றுமதி அல்லது இறக்குமதியில் கட்டுப்படுத்துவார்கள்.

**மூலகாரணம்:** ஏற்றுமதி, இறக்குமதி இவற்றைச் சீரான முறையில் மேற்பார்வையிட்டு, அவற்றைச் செம்மையான வகையில் நடத்திவர விரும்புவது. பல்வேறு காரணங்களை யொட்டிப் பங்கு விதிப்பு முறை கையாளப்படலாம்.

வாணிபக் கொடுப்பல் நிலைமையில் சமன்பாடின்மை ஏற்படு வதைத் தடுக்க இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பங்கு விதிப்பு முறையிடப்படும். ஏதேனும் சில நாடுகளுடன் கடன்நிலை, வாணிபக் கொடுப்பல் நிலை ஏற்படின் அந்நாடுகளைப் பொறுத்தமட்டில் இறக்குமதி கட்டுப்படுத்தப்படலாம்.

போட்டியிடத்தகு பொருள்களின் இறக்குமதியை வன்மை யாகக் கட்டுப்படுத்தி உள்நாட்டுத் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்குடன் பங்குவிதிப்பு முறையை ஏற்படுத்தக் கூடும்.

நாட்டில் இயற்கையில் ஏற்படும் பொருளாதார மந்த (depression) நிலைமையில் உள்நாட்டு விலை சரிந்துகொண்டே இறங்கும். அயல் நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிப் பண்டங் களே இதற்குக் காரணம். மந்த நிலைமையில் உள்நாட்டு விலைகள் சரியாவண்ணம் நிலைநாட்டப் பங்கு விதிப்பு முறையின் வழியே இறக்குமதியைக் கட்டுப்படுத்தக் கூடும்.

வர்த்தகப் பேரம் புரிய இம் முறை பயன்படுகிறது. ஏற்றுமதியையும் இறக்குமதியையும் சரிகட்டும் நோக்குடன்

தம் நாட்டின் பண்டங்களை இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந் நாடுகளுக்கு இறக்குமதியைப் பங்கு விதிப்பு மூலம் கட்டுப் படுத்தக் கூடும். பன்னாட்டு வர்த்தகத்திலீடுபட்ட ஒரு நாடு இறக்குமதிப் பங்கு விதிப்பு முறையைப் பின்பற்றினால் போட்டி மனப்பான்மையினால் பிறிதொரு நாடு தன் நாட்டினுள் வரும் இறக்குமதியை அதேபோன்று பங்கு விதிப்பு முறையில் கட்டுப் படுத்தலாம்.

பங்கு விதிப்பு முறையின்கீழ், பல்வேறு நாடுகள் பண்டமாற்று முறையீன்கீழ் அயல் நாட்டு வர்த்தகத்தை நடத்த முன்வரக் கூடும்.

பன்னாட்டு ஏற்றுமதி ஒப்பந்தங்களை நிறைவேற்றப் பங்கு விதிப்புமுறை பயன்படுகிறது. பன்னாட்டு ஏற்றுமதி ஒப்பந்தங் களில் தங்கள் நாட்டிற்கு அனுமதித்த பங்கு விதிப்பிற்கு மேலாகவோ அதிகப்படியாகவோ ஏற்றுமதி செய்ய முன்வர மாட்டார்கள்.

சுங்க வரி விதிப்பிற்கான சட்டம் உருவாகி அமலில் வரும் இடைக் காலத்தில் ஊக வர்த்தகத்திலீடுபட்டோர் இதைத் தக்க வாய்ப்பெனக் கருதிப் பெருமளவில் இறக்குமதி செய்து சுங்க வரியில்லாத சரக்கைத் தேக்கமாகக் கொண்டு வர்த்தகம் செய்து பெருமளவில் இலாபம் பெறக்கூடும். பங்கு விதிப்பு முறையை அமைத்து ஊக வர்த்தகத்தை ஒடுக்கும் நோக்குடன் இறக்குமதியைக் கட்டுப்படுத்தலாம். சுங்கவரி விதிப்புச் சட்டம் உருவாகி அமலில் வந்தவுடன் பங்கு விதிப்பு முறையை அகற்றிவிடலாம்.

வழக்கமாகத் தொடர்ந்து நம் நாட்டிலிருந்து பண்டங்களைக் கொள்முதல் செய்துவரும் அயல்நாட்டினருக்கு, நிரந்தரமாகத் தொடர்ந்து அப் பண்டங்கள் கிடைக்கும் நோக்குடன் பங்கு முறையின்கீழ் ஏற்றுமதியைப் பங்கு விதிப்பு செய்யலாம்.

வர்த்தக உடன்படிக்கைகளின் காரணமாகக் கடந்த முப்பதில், பல்வேறு நாடுகள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற விருப்பமில்லாது பங்கு விதிப்பு முறையை ஏற்பாடு செய்து கொண்டனர். ஒப்பந்தத்திலீடுபட்ட நாடுகள் சுங்க வரியை ஒரு குறித்த அளவிற்குமேல் அதிகப்படுத்துவதில்லை என்று உறுதி கூறினார்கள். ஆயினும் இறக்குமதிப் பங்கு விதிப்பு மூலம் அளவைக் கட்டுப்படுத்தினார்கள். ஏனெனில் ஒப்பந்தத்தின் சரத்துப்படி அளவுக் கட்டுப்பாட்டைப் பற்றிய ஏற்பாடு இல்லை.

நாட்டின் நெருக்கடி நிலைமையில் நாட்டின் ஆளுநர் பங்கு விதிப்பு முறையைச் சட்ட முறையில் அமலாக்கக் கூடும். சில சமயங்களில் இதை நடத்துனர் தவறான பாதையில் செல்லா திருக்கச் சட்ட மன்றத்தினர் இந்தத் தற்காலிகச் சட்டத்தை அங்கீகாரம் செய்யவும்கூடும்.

**பங்கு விதிப்பு இன்ன அளவுடையது என்று முடிவு செய்தல்**

அளவையின் பேரிலோ, பண மதிப்பின் பேரிலோ, அப் பண்டத்தின்மீது பங்கு விதிப்புமுறை கணக்கிடப்படும். பண்டத்தின் குண நலனையொட்டியும், பங்கு விதிப்பின் நோக்கத்தையொட்டியும் அளவு முறை ஏற்பாடு செய்யப்படு கிறது. வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்படின் அதை நேர்படுத்த பண மதிப்பின் கணக்கில் பங்கு விதிப்பை அமலாக்கலாம். இதன் வாயிலாக அயல்நாட்டுச் செலாவணி எவ்வளவு தேவைப்படும் என்று எளிதில் கணக்கிடலாம். அளவின் அடிப்படையில் இறக்குமதிக் கட்டுப்பாடு இருப்பின் அந் நிலையில் பற்றுக்குறையை அகற்றுவது கடினம் எனலாம். ஏனெனில், எதிர் நோக்கா இறக்குமதியின் விலையேற்றத்தாலும், விலையிறக்கத்தாலும் தடங்கலேற்படும். நாட்டின் தேவைக்குத் தகுந்தாற்போல் இறக்குமதியைக் கட்டுப்படுத்தமுற்படின், பங்கு விதிப்பு முறையை அளவு முறையில் அமைத்தலே நலம். இறக்குமதிக்கேற்ப உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியைக் கூட்டியோ குறைத்தோ செம்மைப்படுத்தலாம். பண மதிப்பீட்டின்கீழ் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதால், இறக்குமதியாளர்கள் மிகவும் சரசமான சந்தையில் கொள்முதல் செய்து இலாபம் பெற விழைவார்கள்.

சுங்க வரியின்றி குறிப்பிட்ட அளவைப் பங்கு விதிப்பின்கீழ் கொள்ளலாம். அல்லது மிகக் குறைவான சுங்க வரி விதிப்பைத் தாங்கிய மிகவும் குறைந்த அளவுள்ள பங்கு விதிப்பும் ஏற்படலாம். கூடுதல் இறக்குமதியின்மூலம் சுங்க வரி விதிப்பும் அல்லது அதிகப்படியான சுங்கவரி விதிப்பும் நிகழலாம். அம் மாதிரியான ஏற்பாட்டைச் சுங்க வரிப் பங்கு விதிப்பு(Tariff Quota) எனக் கூறுவோம். இவை அளவு கடந்த பங்கு விதிப்பு (Absolute Quota) முறையிலும் வேறுபட்டது. பின்னர் கூறப்பட்ட முறையின்கீழ் பங்கு விதிப்பிற்குமேல் அதிகப்படியான அளவை இறக்குமதி செய்ய எக் காலத்திலும் அனுமதியளிப்பதில்லை. சுங்க வரிப் பங்கு விதிப்புமுறையின்கீழ் மட்டுமே அதிகப்படியான இறக்குமதியை அனுமதிப்பது வழக்கம். ஏனெனில், ஏற்றுமதி, இறக்குமதி நாட்டினிடையே உள்ள விலை, ஏறிய சுங்க

வரியைக் காட்டிலும் குறைவாக உள்ள காரணத்தால்தான் இறக்குமதியாகும் நாட்டில் அதிகப்படியான பண்டங்கள் சுங்க வரிப் பங்கு விதிப்பின்கீழ் வருவதால், இங்கு தேவை விலை குறைய ஆரம்பிக்கும். ஏற்றுமதியாகும் நாட்டினின்று பண்டங்கள் வெளியேறுவதால் அங்கு வழங்கு விலை ஏறக் கூடும். இவ்வாறான நிலை முடிவில் ஏறிய (கூடிய) சுங்க வரி விதிப்பிற்குச் சமமான அளவில் விலை வந்தமையும் இந்த நிலையை அடைந்த பின்னர் அதிகப்படியான இறக்குமதி தவிர்க்கப்படும்.

சுங்க வரிப் பங்குவிதிப்பு முறை சற்று வஞ்சிக்கும் தன்மையது (discriminatory). ஏழ்மைத் தாண்டவம் புரியும் நாடுகளுக்கு அதிகப்படியான சுங்க வரி கொடுக்கயியலாதாகையால் இது அவ்வளவாக வரவேற்கக் கூடியதன்று. செல்வம் விழுமியுள்ள நாட்டினரே இந்தச் சுங்க வரிப் பங்கு விதிப்பை மேற்கொள்ள இயலும். இன்பம் நுகரும் பண்டங்களை விரும்புவோர் அதிகப் படியான சுங்க வரியைக் கொடுத்து வாங்க முற்படுவார்கள். அதன் விளைவாக நாட்டின் அன்னியச் செலாவணியை பெருமளவில் எடுத்து வீணுக்குவார்கள். நாட்டின் பொருள் வளர்ச்சி தொடர்பாக அன்னியச் செலாவணியைப் பயன்படுத்தினால் நாட்டிற்கு நன்மையுண்டாகும். நாட்டுச் சந்தையின் தேவை வழங்கினையொட்டிச் சுங்க வரிப் பங்கு விதிப்பு முறை ஓரளவு நெகிழும் தன்மை (flexible) பெற்றுள்ளது. சுங்க வரி விகிதம் அதிகப்படியான இறக்குமதியை அனுமதிக்க, அளவு கடந்து ஏற்றப்படின், அதிகப்படி அளவில் இறக்குமதி செய்ய இயலாத நிலையை உருவாக்கிவிடும். அந்த நிலையில் அளவுகடந்த பங்கு விதிப்பிற்கும் (absolute quota), சுங்கவரிப் பங்கு விதிப்பு முறைக்கும் வேறுபாடில்லாது போகக்கூடும். மறைமுகப் பங்கு விதிப்பின் (Indirect quota) கீழ் உள்நாட்டு உற்பத்தியில் இன்ன அளவு உள்நாட்டுக் கச்சாப் பொருளை இறக்குமதிக் கச்சாப் பொருளுடன் இணைத்து உற்பத்தியை நடத்த வேண்டும் என்று உள் நாட்டரசு பங்கு விதிப்புக் கட்டுப்பாட்டை அமைக்கக் கூடும்.

### பங்கு விதிப்பை ஒதுக்கும் முறை

இரண்டு முறைகளில் பங்கு விதிப்பை ஒதுக்கக் கூடும். அவை யாவன:

(i) பல்வேறு ஏற்றுமதியாளர் நாடுகளுக்குள் பங்கு விதிப்பை ஒதுக்கல்.

(ii) உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்குள் இன்ன அளவு என்று பங்கு விதிப்பை ஒதுக்குதல். பல்வேறு வழிகளில் பங்கு விதிப்பை ஏற்பாடு செய்யக்கூடும்.

**உலகப் பங்கு விதிப்பு**

குறிப்பிட்ட கால எல்லைக்குள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து எவ்வளவு இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்று அளவிலாவது பணமதிப்பிலாவது கணக்கிட்டுப் பங்கு விதிப்பை மேற்கொள்ளலாம். குறைந்த அளவுடைய பங்கு விதிப்பில் பல்வேறு நாடுகள் ஒன்றுக்கொன்றாகப் பலத்த போட்டியில் இறங்கக் கூடும். பங்கு விதிப்பின் கீழ் அமைந்துள்ள அளவு தீரும் வரை ஒவ்வொரு நாடும் விரும்பிய அளவு இறக்குமதி செய்யக் கூடும். தனிப்பட்ட இறக்குமதியாளருக்கோ அல்லது தனிப்பட்ட ஏற்றுமதி செய்ய விழையும் நாட்டிற்கோ இந்தப் பங்கு விதிப்பு ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

உலகப் பங்கு ஒதுக்கு முறையினால் இறக்குமதியாளர்கள் தாங்கள் விரும்பும் நாட்டினின்று இறக்குமதியைச் செய்யலாம். இதனால் பலத்த போட்டி ஏற்பட்டு, ஏற்றுமதிக்கென அதிகப்படியான வழங்குதல் செய்ய விழைவோர் தோன்றி, போட்டியிட்டு அதனால் பலன் அடையக் கூடும். எந்த ஏற்றுமதி செய்யும் நாட்டின் மீதும் வேண்டுமென்றே வஞ்சிக்கும் நோக்குடன் அமையும் எனக் கருதக்கூடாது.

பல்வேறு இடையூறுகளின் காரணத்தால் உலகப் பங்கு விதிப்பு முறை பயனற்றதாகிறது. முதன்முதலாக, இவ்வுலகின்கண் எண்ணிறைந்த சுங்கச் சாவடிகள் உள்ளன. இவற்றின் மூலம் மொத்தமாக எவ்வளவு இறக்குமதி அன்றாடம் நடைபெற்று வருகிறது என்று கணக்கிட வழியில்லை. சிற்சில காலங்களில் மொத்த இறக்குமதிப் பங்கு விதிப்பின் எல்லையைக் கடந்துவிடக் கூடும். சுங்க வரி அலுவலர்களுக்கு இந்தத் தகவல் கிடைப்பதே சற்றுக் கடினம் எனலாம். இரண்டாவதாக இறக்குமதியாளர்கள் அனைவரும் பங்கு விதிப்பு செய்தவுடன் கால ஆரம்பத்திலேயே எல்லா இறக்குமதிகளையும் உடனே நழுவ விடாமல் பார்த்து முடிக்கின்றனர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிதானமாகச் சிறிது சிறிதாக இறக்குமதி செய்யத் தொடங்கினால், பண்டக சாலையில் இட நெருக்கடி ஏற்படாது. அதன் விளைவாகப் பண்டக சாலையின் வாடகை அதிகரிக்காது. எளிதில் வீணாகி அழுகிப்போகும் பண்டங்களுக்குக் குடிக்கூலி மிக அதிகம் என்பது தெரிந்ததே.

ஆண்டுத் தொடக்கத்தில் பங்கு மதிப்புக் காலத்தினுள் திடீர் தேவை ஏற்படுவதால் பண்டத்தின் விலே ஏறி அதன் விளேவாக உலகப் பங்கு விதிப்பு அளவில் வர்த்தக மாற்று விகிதம் (Terms of Trade) குறைந்துவிடும். எந்தச் சந்தையில் மிகவும் குறைவான விலேயில் பண்டம் கிடைக்கும் என்ற தகவல்களேச் சேகரிக்கக்கூட நேரமில்லாது இறக்குமதியாளர்கள் விரைவில் இறக்குமதிப் பங்கு விதிப்பை உடனுக்குடன் இறக்குமதி செய்து விடுவார்கள். உலகப் பங்கு விதிப்பால் தூர நாட்டினின்று வரும் பண்டங்கள்மீது வஞ்சனே ஏற்படுகிறது.

நாட்டையடுத்த நாட்டினின்று இறக்குமதிப் பொருள்கள் வெகுவிரைவில் எல்லேயைத் தாண்டி உடனே வந்து விடும். ஆயினும், தூர நாடுகளிலிருந்து வரும் பண்டங்கள் வந்தடையும் முன்னரே பங்கு விதிப்பு தீர்ந்து போகக் கூடும். இதன் விளேவாகத் தூரத்திலுள்ள நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி நட்டத்துடன் செயலாற்ருது விட்டு விடும். ஏனெனில், எல்லேக்கப்பாலுள்ள நாட்டிலிருந்து பண்டங்கள் பங்கு விதிப்பின் அளவில் வந்து குவிகின்றன. அவை குவிந்தவுடன் எல்லேயும் மூடப்படும். அதிகப்படியான இறக்குமதியும் தடை செய்யப்படும். இன்ன பங்குதான் என்று விதித்தவுடன், கடல் மடையைத் திறந்தாற்போல்-வெள்ளப் பெருக்கெடுத்ததுபோல் இறக்குமதிகள் வந்து நாட்டில் சூழ்ந்து சரேலென விலேயைக் குறைத்து விடக்கூடும். பங்கு விதிப்பில் வந்த சரக்கு முழுமையும் தீர்ந்து போனவுடன் போட்டியிட ஒருவருமிலர் என்று சரக்கைத் தேக்கி வைத்துள்ளோர் விலேயேற்றி விற்பனேயைச் செய்ய முன் வருவார்கள்.

பங்கு விதிப்புச் செய்தி வந்தவுடனேயே விலேசரிய ஆரம்பித்து அதன் விளேவாக உள்ளூர் உற்பத்தியாளர்களும் நட்டமடைந்து தொழிலே மூடவேண்டிய நிலேயை அடைவர். உலகப் பங்கு விதிப்பு முறையை ஓர் உயர்தரக் கருவியாக உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் எனக்கருத இடமில்லே. காப்பளிப்பது வெற்றிகரமாக அமைய வேண்டுமானுல் அது தங்கு தடையின்றி தொடர்ந்தளிக்கப்படவேண்டுமே ஒழிய விட்டுக் கொடுக்கப் படக் கூடாது.

ஏல வழியே ஒதுக்கல் முறை : நாட்டிலுள்ள ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர், நுகர்வோர், மொத்த விற்பனேயாளர் இவர்கள் அனேவரும் ஏலத்தில் பங்கு கொண்டு, அதிகப்படி ஏலத் தொகையைக் கேட்ட காரணத்தால், அவர்கள் எவரேனும் ஒரு வருக்கு உரிமத்தை (Licence) விற்று அதன் மூலம் பங்கு விதிப்பை

நிலை நாட்டும். இதில் பங்குபெறுவோர் அனைவரும் ஒரே தகுதி யுடன் நோக்கப்படுவர். இம் முறை, கைக்கூலி, ஒரு தலை நோக்கு, நயவஞ்சகம் இவைகளுக்கு இடமின்றி நேர்மையுடன் வர்த்தகம் நடைபெற ஊன்றுகோலாகும். செம்மையான முறையில் வர்த்தகம் புரிபவர் தன்னைவிட மட்டமானவர்களை எதிர்த்து முன்வர இயலக்கூடும். உள்நாட்டு விலைக்கும் அயல் நாட்டு விலைக்கும் உள்ள வேறுபாடு ஏதோ சில தனிப்பட்ட நபர்களுக்குக் கிடைத்துவரும் நிலை மாறி அரசிற்குக் கிடைக்கத் தொடங்கும்.

நாட்டினுள் இயல்பாக நடந்து வரும் போட்டி அடிப்படையில் எல்லா வர்த்தகர்களும் ஈடுபடுவதே இந்த முறை வெற்றிக்குறியது எனக் கூறலாம். ஆயினும், பொருள் வளர்ச்சியில் முன்னேற்ற மடையா நாடுகளில் இம் முறையை அமலாக்குவதில் சில இடை யூறுகள் உள்ளன. பொருள் வளர்ச்சியில் முன்னேற்றமடையா நாடுகளில் குறைந்த எண்ணுள்ள இறக்குமதியாளர்களே உள்ளனர். அவர்கள் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்து ஒன்றாகக் கூடி ஆலோசித்து ஏலத்தில் விலையை ஏற விடாது பார்த்துக்கொண்டு மிகவும் குறைந்த ஏல விலைக்கு எடுத்து, மறு படியும் தங்களுள் எவருக்குத் தேவையோ அவருக்கு உயர்ந்த விலைக்குக் கொடுத்து அதனால் வரும் இலாபத்தைப் பகிர்ந்து கொள்வர். உண்மையில் இதுநாட்டரசுக்குக் கிடைக்கக் கூடும் இலாபம் ஆகும்.

நுகர்வாளரின் மீதுசுமத்தப்பவது மிகுதியானசெலவேயாகும். உரிமம் வழங்கிய பின்னர் இறக்குமதியாளர்களைக் கட்டுப் படுத்துவது கடினம். அவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப விலையை ஏற்றி விற்றாலும் கட்டுப்பாடு செய்ய அரசிற்கு வழி இல்லை. இதனால் முழுவசதியைப் பெறக்கூடும் அல்லது பெருத்த நட்டமும் அடைய இடமுண்டு. எடுத்துக்காட்டாக (ஏற்றுமதி நாட்டின் வழங்குவிலை அதிகரித்தால், இறக்குமதி நாட்டில் தேவை விலை குறைவதால், பின்னர் நடத்தப்படும் ஏலங்களில் விலை மாற்றங்கள் நிகழ்வதால்) இதன் விளைவாகப் பண்டத்தின் உள் நாட்டு விலை நிரந்தர நிலையை அடையாது ஏற்ற இறக்கத்துடன் அசைவு பெற்ற நிலையில் ஆட்டமுற்று இறக்குமதியாளர்களை நட்டத்திலும் துன்பத்திற்குள்ளும் ஈடுபடுத்தும். எனவே, இயல் பான உள்நாட்டு விலைக் கட்டுப்பாடும் உரிமம் வழங்குமுறையும் தான் ஏற்றதெனக் கூறலாம். இறக்குமதி விலையை இவ்வளவுதான் என்று வரையறுத்து அதற்குமேல் சிறிதளவு இறக்குமதியாளர் களுக்கு இலாபம் இவ்வளவு என்று வகுத்து பின்னர்முடிவு கட்டப்

பட்ட விலைக் கட்டுப்பாடு முறை வரவேற்கத்தக்கது எனக் கூறலாம். குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உணவுப் பொருள்கள், மருந்து சாமான்கள், இயந்திரங்கள் இவற்றின் இறக்குமதிக்கு இம் முறை உகந்ததல்ல. ஆடம்பர நுகர்வுப் பொருள்களை இறக்குமதி செய்ய இம் முறை ஏற்ற தெனலாம். ஆயினும் பொருள் வளர்ச்சியில் ஈடுபடும் ஒரு நாடு அன்னியச் செலாவணியை வெறும் ஆடம்பரப் பண்டங்கள் இறக்குமதியில் வீணாக்குவது வரவேற்கத்தக்கதல்ல. அதனை நாட்டின் முன்னேற்றப் பாதைக்குச் செலவிடலே மேலானது.

**ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு ஒதுக்கிடும் முறை**

பன்னாட்டுப் பங்கு விதிப்பில் ஏற்படும் இடையூறுகளால் எந்நாடு பங்கு விதிப்பு முறையைக் கட்டுப்படுத்துகிறதோ, அந்நாடு இறக்குமதிப் பண்டத்தை ஏற்றுமதி செய்யும் பல்வேறு நாடுகளுக்குப் பங்கிட்டு வைக்கும். பாரபட்சமன்றி வேற்றுமை காட்டாது ஒரே நோக்குடன் பங்கு முறையைச் சமமாகப் பங்கிட்டு ஏற்றுமதி புரியும் எல்லா நாடுகளுக்கும் சமமாக வழங்கக் கூடும். இம் முறை பெரும் வர்த்தக நாடுகளுக்கு, எதிரிடையில் சிறிய நாடுகளை ஊக்குவிப்பதாகும். மேலும் இச் சிறிய நாடுகள் ஏற்றுமதியை முழுவதும் செய்ய இயலாது அறை குறையாக விட்டு விடக் கூடும். இதனல் பங்கு ஒதுக்கிய நாட்டில் இறக்குமதி குறைந்து விடக் கூடும்.

பாரபட்சமின்மையை நிலை நாட்ட இறக்குமதியாளர்களுக்கு உரிமம் வழங்கி அவர்களை மிகவும் இலாபம் கொடுக்கவல்ல இடங் களிலிருந்து இறக்குமதி செய்யச் சொல்லலாம். இதிலுள்ள இடையூறு என்னவெனில் நாட்டரசு உரிமம் பெற்ற இறக்குமதி யாளர்களைக் குறிப்பிட்ட ஒருசில நாடுகளிலிருந்துதான் இறக்கு-மதி செய்யலாம் என்று வலுக்கட்டாயப்படுத்தக் கூடும். உரிமம் வழங்கும் போது உற்பத்தியாளர் அரசு சுட்டிக் காட்டும் வழங்கிருப்பிடத்திலிருந்துதான் இறக்குமதி செய்யவேண்டும் என்று நடைமுறையில் பணித்து விடும். அரசு கூறிய பரிந்-துரையை ஏற்காத உற்பத்தியாளர்களுக்கு உரிமத்தைப் புதுப்பிக்காது நிராகரித்து விடும்.

கடந்த ஆண்டுகளில் மொத்த இறக்குமதிகளில் ஒவ்வொரு நாடும் எவ்வளவு ஏற்றுமதி செய்தது என்று விகிதக் கணக்கெடுத்து அதற்கேற்ப பங்கு விதிப்பைச் செய்யக் கூடும். எந்த ஆண்டு அடிப்படையில் மொத்த இறக்குமதியைக் கணக்கிட வேண்டும் என்பது பாரபட்சமற்ற இறக்குமதி நடந்த ஆண்டைக் கொள்வது

நலம். தங்கள் விருப்பத்திற்கேற்ப இறக்குமதி குறைவாக எந் நாட்டிலிருந்து வந்ததோ அந் நாட்டைக் கணக்கிலெடுக்காது விடக் கூடும். இறக்குமதி தொடர்பான புள்ளி விவரம் இருந்தாலொழிய நடைமுறையில் இதனைச் செய்வது கடினம். இறக்குமதிப் பண்டங்களின் தோற்றுவாய் பெரும் நாடுகள், முடிவு பெறும் நாடுகள் இவைகளைப் பற்றிய தகவல்கள் இருந்தா லொழியச் சரிவரக் கணக்கெடுப்பது சிரமம். தகவல்களும் புள்ளி விவரங்களும் நேர்மையான வகையில் அமையவில்லை என்ற தாக்குதல்கள் ஏறபடலாம். பெருமளவில் பாரபட்சம் உண்டா வதற்கு இடமிருக்கிறது. பழைய முறையில் நடந்து வந்த வர்த்தகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறது. முன்னேற்றப் பாதையில் வெகு விரைவில் முன்னேறும் நாடுகளின் பொருள் களின் ஒப்பிடல் அடக்கவிலையும் மாறக்கூடும். எனவே உலகின் உற்பத்தி ஆதாரங்களையும் பயனற்றதாக்கி விடக்கூடும். மிகவும் போற்றத்தகு ஆண்டென்று கொண்டு கணக்கிட்ட ஒரு நாட்டில் பயிரின்மை, வேலை நிறுத்தம், பொருள் மந்தம் நிகழ்ந்து எதிர் நோக்காவண்ணம் ஏற்றுமதி குறைவுபட நேரிடும்.

உற்பத்திப் பெருக்கமின்மையால் ஏற்றுமதி செய்யும் ஒரு நாட்டின் அளவு குறைவுபடலாம். இதன் விளைவாகப் பங்கு விதிப்பு முறையையொட்டி ஏற்றுமதி செய்ய இயலாது. எடுத்துக் காட்டாக விவசாயத்தில் ஈடுபட்ட ஒரு நாட்டின் உற்பத்தி இயற்கையின் விளையாட்டால் குறைவுபட நியாயமுண்டு. அந் நாட்டின் பங்குவிதிப்பு அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் செவ்வனே செய்ய இயலாது போகும். இதற்கு எதிரிடையில் குறைந்த பங்கு விதிப்பு செய்யப்பட்ட ஒரு நாட்டில் ஏகபோக விளைச்சலின் காரணமாக அதிகப்படி ஏற்றுமதி செய்யலாம். இறக்குமதி செய்யப்படும் நாட்டினரின் பழக்க வழக்கங்களையொட்டி மாற்ற மேற்படக்கூடும். பண்டை நாள்களில் இறக்குமதி செய்து வந்த பண்டங்களைத் தொடர்ந்து கேட்பாரற்று நின்றுபோகக் கூடும். இது நாகரிகத்தையொட்டி ஏற்படுவது எனலாம்.

### உரிமம் வழங்கு முறை

உரிமம் வழங்கு முறையின் மூலம் பங்கு விதிப்பு முறை கட்டுப் படுத்தப்படுகிறது. பங்கு விதிப்பின்கீழ் இன்ன அளவுதான் இறக்குமதி செய்யலாம் என்று வரையறுத்திருப்பின் அதற்கென இறக்குமதியாளர் உரிமத்தின் ஆதரவில்தான் இறக்குமதி செய்ய லாம். சில நாடுகளில் பங்கு விதிப்புமுறையின்கீழ் எந்தெந்த இறக்குமதியாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று முன்னதாகவே அறிவிக்கப்படும். தங்களுடைய வசதிக்கேற்ப உரிமம் வழங்கும்

நோக்குடன் தகவலை வெளியிடாது நடத்தக் கூடும். உரிமம் கோரும் மனுதாரரின் தனிப்பட்ட மதிப்பையொட்டித்தான் உரிமம் வழங்கப்படும். உரிமம் வழங்கும் அலுவலர்கள் உரிமம் வழங்குவதற்குத் தகுந்த கெட்டிக்காரத் தன்மையுடன் ஆலோசனை செய்து உயரிய போட்டியை ஏற்றுக்கொள்வர். இதனுல் பங்கு விதிப்பு முறை செவ்வனே அமலாக்கப் படுவதோடல்லாது சீராகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தனிப் பட்ட இறக்குமதியாளர்களின் ஆவணங்களை நன்கு துருவிப் பார்க்கலாமே ஒழிய நாட்டினுள் வரும் மொத்த இறக்குமதியைக் கட்டுப்படுத்த முடியாது. உலகப் பங்கு விதிப்பின்கீழ் விலையை ஏறுது, இறங்காது கட்டுப்படுத்த ஒரேவழிதான் உள்ளது. அதாவது உரிமம் வழங்கு பங்கு விதிப்பின்கீழ் உள்ள கால எல்லைக் கோட்டின்கீழ் எல்லா இறக்குமதிகளையும் சமமாக இறக்குமதி செய்யலாம்.

உரிமம் வழங்குதலிலும் அந் நாட்டரசு பெயர் பெற்ற இறக்குமதியாளர்களையே தேர்ந்தெடுக்கும். காலத்திற்கேற்ப வர்த்தக நிறுவனங்கள் இலாபமோ நட்டமோ அடையும் என்பது நோக்கத்தக்கதே. சில வர்த்தக நிறுவனங்கள் வர்த்தக்த்தை அதிகரிக்கலாம் அல்லது குறைவுபடுத்தலாம். புதியதாகவும் வர்த்தக நிறுவனம் ஈடுபடக்கூடும். பழைய ஆண்டின் அனுபவத்தையொட்டி வர்த்தக நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கு தலில் சில சிக்கல்கள் ஏற்படும். வர்த்தகம் புரிந்து ஓய்ந்துபோன நிறுவனங்களுக்கு உரிமம் தொடர்ந்து கிடைக்கக் கூடும். புதிய நிறுவனம் வர்த்தகம் புரிந்தாலும் கவனிக்கப்படாது விடப் படும். இதனுல் வர்த்தகம் குறிப்பாக பல காலங்களாக ஈடுபட்ட நிறுவனங்களுக்குக் கிடைத்து அதன் வழியாக ஏகபோக உரிமை கிடைக்க ஆரம்பிக்கிறது. பொதுவாக ஒரு குறிப்பிட்ட பண்டத்தில் வர்த்தகம் புரியும் நிறுவனங்கள் உள் நாட்டிலும் அயல்நாடுகளிலும் கொள்முதல் செய்வது வழக்கம். ஒரு குறிப்பிட்ட நிறுவனம் எதிர்பாராத விதமாக உள்நாட்டில் அதிகப்படியாகக் கொள்முதல் செய்து அயல்நாடுகளில் மிகவும் குறைவாகக் கொள்முதல் செய்தால் அதற்கு அளிக்கப்படும் பங்கு விதிப்பு குறைக்கப்படும். இவ்வாறு ஊக வர்த்தக முறையில் இறக்குமதி செய்து உள்நாட்டு உற்பத்தியைக் குறைவுபடுத்து கின்றது. நியாயமான முறையில் உரிமம் வழங்கவேண்டுமானுல் அதிகப்படியாக வர்த்தகம் செய்யும் நிறுவனங்களுக்கு யாக அதிகப்படி குறைவாக வர்த்தகம் செய்யும் நிறுவனங் களுக்கு குறைந்த அளவிலும் உரிமம் வழங்க வேண்டும். உரிமத்தின் ஒரு பகுதியைப் புதியதாக நுழையவிருக்கும் புதிய

நிறுவனங்களுக்கு அளித்தல் இன்றியமையாதது. ஈரிடை வர்த்தகக் காப்பீடு முறையின்கீழ் வர்த்தகம் செய்யவிழையும் புதிய நிறுவனங்களுக்கு உரிமம் வழங்க வேண்டும்.

சில சமயங்களில் இறக்குமதி செய்யும் நாடுகள் உரிமம் வழங்குதலை ஏற்றுமதியாளர்களுக்கோ, ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கோ, உரிமம் வழங்கும் அதிகாரத்தைக் கொடுத்து நேர்மையாகக் கட்டுப்படுத்துகிறார்கள். இம் முறை சர்ச்சைக்குரியது. நாட்டில் உள்ள எல்லா இறக்குமதியாளர்களுக்கும் உரிமம் வழங்குவதில் அதிகப்படியான சிரமங்கள் ஏற்படுகின்றன. வேண்டுபவர், வேண்டாதவர் என்ற ஓரவஞ்சனை மற்றும் நேர்மையின்மை இவைகள் நிகழ்வதோடல்லாது இலஞ்சப்பேயும் தலைவிரிகோலமாக ஆடி நாட்டின் நேர்மையைக் குலைக்கும் என்பது திண்ணம். இந்தச் சிக்கல்களைத் தவிர்க்கச்சட்ட முறையில் உரிமம் வழங்கும் வழக்கத்தையும் பங்குவிதிப்பு முறையையும் தவிர்க்க வேண்டும். ஏற்றுமதி செய்யும் நாடுகள் இந்த முறையைக் கடைப்பிடிப்பதால் நாட்டிற்கு நல்ல பலன் தரக் கூடும். இறக்குமதி செய்யும் நாடு இம் முறையைச் சிறப்புடன் நடத்த இயலாது. ஏற்றுமதி செய்யும் நாடுகள் பங்கு விதிப்பு முறையைச் செம்மையாக நடத்தினால் இலாபம் பெறுவார்கள் என்பது அறிந்ததே. அந்நாட்டவர்கள் மேன்மேலும் வர்த்தகத்தை அதிகரிக்கவும் புதிய சரத்துகளைக் கூட்டவும் முடியும். ஏற்றுமதி செய்யும் நாடுகள் உரிமத்தை வழங்கினால் அவற்றின் மூலம் ஏற்றுமதி நாடுகளின் வழங்கு விலைக்கும் இறக்குமதி செய்யும் நாடுகளின் தேவை விலைக்கும் உள்ள வேறுபாட்டைச் சொந்த இலாபமாகப் பெறக் கூடும். எனவே, இறக்குமதி செய்யும் நாடுகளில் பங்கு விதிப்பு முறையை ஏற்றுமதி செய்யும் நாடுகளே முன்னின்று ஏற்றெடுத்து நடத்தி வருகின்றன. ஆயினும் இது இறக்குமதி செய்யும் நாடுகளால் வரவேற்கப் படுவதில்லை. இறக்குமதி செய்யும் நாட்டின் தேசிய நலனை உத்தேசித்து ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்குச் சில கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடும்.

1. அனுமதித்த பங்கு விதிப்பிற்குமேல் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

2. இறக்குமதி செய்யும் நாட்டின் தேவையையொட்டிப் பங்கு விதிப்பைக் குறிப்பிட்ட காலத்தினுள் சமமாக ஏற்றுமதி செய்ய வேண்டும்.

3. ஏற்றுமதியாளர்கள் தங்கள் விலையை ஏற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு விலை ஏற்றம் செய்தால் பங்கு அளவைக் குறைத்து அதனால் ஏற்படும் நட்டத்தை அவர்கள் ஈடு செய்ய வேண்டியது.

**ஒரே வகைப் பங்குவிதிப்பு**

இந்த முறையின் கீழ் இறக்குமதி செய்யும் நாடு ஏற்றுமதி செய்யும் பல்வேறு நாடுகளுக்குச் சில கொள்கைகளின் அடிப்படையில் திருத்திக் கொடுக்கின்றது. இன்ன அளவு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும், அந்த அளவை ஏற்றுமதியாளர்கள் இடையே இன்ன விகிதத்தில் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்பதை இறக்குமதி செய்யும் நாடு ஏற்றுமதியாளர்களைக் கலந்தாலோசிக்காமல் தாமாகவே முடிவு கட்டிவிடும்.

**இருவழிப் பங்கு விதிப்புமுறை**

இம் முறையின் கீழ் இரு வகைப் பங்கு விதிப்பு முறை நடைபெறுகிறது. இறக்குமதிப் பங்குவிதிப்பு இன்னது என்று ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் கலந்து ஆலோசித்து ஏற்றுமதி செய்யும் நாடு, இறக்குமதி செய்யும் நாடு இரண்டும் உரிமத்தைக் கட்டுப்படுத்திச் சீராகவோ தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ நடத்தி வரும். இம் முறையைக் கையாளுவதால் பிரிவினை மனப்பான்மை நீங்குகிறது. பிறரை வஞ்சிக்கும் எண்ணம் அகற்றப்படுகிறது. இருநாடுகளும் தம்மிடையே பரஸ்பர நல்லெண்ணத்துடன் தங்களுக்கான பங்குவிதிப்பு முறையைத் தீர்மானிக்கின்றன. இம் முறையால் நாடுகளுக்கிடையே ஏற்படும் வேற்றுமை மனப்பான்மை நீங்குகிறது. பன்னாட்டு உறவில் ஒற்றுமை ஏற்படுகிறது. பங்குவிதிப்புக் காலத்திற்குள் சரக்குகளைக் கப்பலில் ஏற்றுமதி செய்யமுடிகிறது. இருவழிப் பங்கு விதிப்பு முறையினால் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகள் தங்களுடைய உற்பத்தியாளர்களைக் கலந்தாலோசித்து முடிவு செய்கின்றன.

**பங்குவிதிப்பு முறையும், சுங்க வரி விதிப்பு முறையும் :** அடக்க விலை ஒப்பிடல் விதியின் கீழ் கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் உற்பத்தி, தேவை, வழங்கு இவை ஒரு நாட்டில் சுங்கவரி விதிப்பின் கீழ் இறக்குமதியைக் கட்டுப்படுத்தக் கூடும். அதே நிலைமையில் சுங்கவரி அல்லது பங்கு விதிப்பு முறையின் கீழும் பலன்களைப் பெறலாம். எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்பாடு முறையைக் கையாளச் சுங்க வரி விதிப்பு முறை பயனுள்ளதா அல்லது

பங்குவிதிப்பு முறை பயனுள்ளதா என்று செம்மையாக ஆராய்ந்து முடிவு செய்யலாம். முன் பாடத்தில் நாம் சுங்க வரி விதிப்பின் குண நலன்களை விளக்கியிருந்தோம். அவற்றுடன் இதை ஒப்பிட்டு எது சிறந்தது என்று பின் வரும் விளக்கத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம்.

பங்குவிதிப்பு முறையின் இன்றியமையாத் தன்மை: பொதுப் படையில் இவ்வுலகனைத்தும் வரவேற்பு செய்வது சுங்க வரி விதிப்பு முறையே அன்றிப் பிறிதொரு முறையை அல்ல. தேசிய அமைப்பின்கீழ் குறிப்பாக வளர்ச்சியுறு நாடுகளுக்கு அளவுக் கட்டுப்பாடு முறைகள் சுங்க வரி விதிப்பு முறையைக் காட்டிலும் மேலானதாகக் கருதப்படுகின்றன. பன்னாடுகள் இம் முறையை ஏற்க விருப்பப்படவில்லையானாலும், வளர்ச்சியுறு நாடுகளுக்கு இதை ஒரு போற்றத்தகு முறையாகக் கருதலாம். உலக வருமானத்தைச் சீராக எல்லா நாடுகளுக்கும் பிரித்துக் கொடுப்பதற்குத் தனிப்பட்ட ஒரு நிறுவனம் ஏற்படாத வரையிலும், உலகிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் தேசிய உணர்வைப் புறக்கணிக்காது நாட்டின் தேவையைப் பெரிதெனக் கருதி உலகத் தேவைகளைக் கவனிக்கமாட்டார்கள்.

வளர்ச்சியுறு நாடுகளுடைய பெரும் பிரச்சினைகளைக் கருதுவோமானால் சுங்க வரி விதிப்பு முறை உகந்ததன்று. ஏனெனில் இந் நாடுகளுடைய பிரச்சினைகளும், முன்னேற்றமடைந்த நாடுகளுடைய பிரச்சினைகளும் மாறுபட்டவை.[1] முன்னேற்றமடைந்த நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டத்தின் விலை சிறிதளவு விலை ஏறினாலும் உடனே இறக்குமதிகள் தடுக்கப்படும். ஆயினும் வளர்ச்சியுறு நாடுகளிலோ நுகர்வாளர்கள் அதிக விலை கொடுத்தாவது அயல்நாட்டின் பண்டங்களையே வாங்கி நுகர விரும்புகின்றனர். அயல் நாட்டுப் பண்டங்களின் தரம் மிகவும் மேன்மையாக இருக்கும் என்று கூறவும் முடியாது. குறிப்பாக இந்நாடுகளில் உற்பத்தியாகும் பண்டங்களுக்கு உள்ளூரில் கிராக்கி ஏற்படுவதில்லை. ஆயினும் அவை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், இங்கிலாந்திலும் நன்கு வரவேற்கப்படுகின்றன. உள் நாட்டிலுற்பத்தியாகும் பொருள்களும் பண்டங்களும் எவ்வளவு உயர்வாக இருப்பினும் இங்கிலாந்திலும், அ.ஐ. நாட்டிலும் உற்பத்தியாகியது என்ற முத்திரையிடப்பட்ட பண்டங்களுக்கு ஏக கிராக்கி ஏற்படுவது தெரிந்ததே. அம்மாதிரிச் சூழ்நிலையில் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மிகவும் அதிக அளவில் சுங்க வரி விதிப்பு செய்வது வரவேற்கத்தக்கதல்ல. அதன்

[1] Ministry of Commerce and Industries (Government of India), Review of the Accountant General on Tariff and Trade, (New Delhi) 1955, p. 4.

விளைவாக ஏற்றுமதி செய்யும் நாடும், இறக்குமதி செய்யும் நாடும் எந்த வகையிலும் பலனடைவது கிடையாது. பெருமளவில் சுங்க வரி விதிப்பால் இறக்குமதிப் பண்டங்களின் விலை மிகவும் அதிகரிக்கும். அதன் விளைவாகத் தேவை சுருங்க ஆரம்பிக்கும். தேவை நெகிழ்வுள்ள பண்டங்களின் விலை அதிகரிக்கும். இதனல் அயல்நாட்டு உற்பத்தித் தொழிலும் பாதிக்கப்படுகிறது. அதே போல் உள்நாட்டில் உற்பத்தித் தொழிலும் ஊக்கம் பெறுகிறது.

எல்லா இறக்குமதி, ஏற்றுமதிப் பண்டங்களின் வழங்கு, தேவைகளின் நெகிழ்ச்சிலையப் பற்றி நன்கு அறிந்திருந்தால்தான் உள்நாட்டின் வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்றும், கட்டுப்பாடு முறைகள் எவ்வாறு அமைக்கலாம் என்றும் திட்டமாகக் கூற இயலும். இதைப் பற்றிய விவரம் தெரியாவிடின் சுங்க வரி விதிப்பை அளவுகடந்த முறையில் அமைத்து நாட்டிற்குத் தீமையை விளைவிப்பார்கள். எதிர்பார்க்குமளவிற்கு இறக்குமதியைக் கட்டுப்படுத்தப் பங்கு விதிப்புமுறை இலாபமுள்ளது. சுங்க வரி விதிப்பினல் எதிர்பார்த்த முறைக்கேற்றபடி கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது. ஏனெனில் சந்தை அதற்கேற்பச் சீர்படுவதற்கு காலமாகிறது. போதிய அளவு தங்கமும் ஏற்றுக்கொள்ளத்தகு காகிதப்பண முறையுள்ள நாடுகளில் குறுகியகாலச் சந்தையில் சுங்க வரி விதிப்பு முறை பயனற்றதாகிறது. இம் மாதிரியான நாடுகளில் பங்கு விதிப்பு முறையின் மூலம் இறக்குமதியை நன்கு கட்டுப்படுத்தலாம். பண்டங்களின் நெகிழ்ச்சியைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டியதில்லை.

சுங்க வரி விதிப்புமுறையினும் வன்மையாக அமைவது பங்கு விதிப்புமுறையே. சுங்க வரி விதிப்பைப் புகுத்தவியலாப் பகுதியில் பங்கு விதிப்பையிடலாம். இறக்குமதிப் பண்டங்களுக்கான தேவைவளைவும், வழங்குவளைவும் நெகிழ்ச்சியின்றி இருப்பின் அந்நாட்டில் சுங்க வரி விதிப்பு ஏற்கத்தக்கதன்று. ஏற்றுமதியாளர்களுக்கு உதவித் தொகை (Subsidy) அரசினராலும், தனியாராலும் வழங்கி இறக்குமதியின் மீதுள்ள சுங்க வரி விதிப்பைத் தவிர்க்கலாம். அயல்நாட்டிலுள்ள உற்பத்தியாளர்கள் விற்பனை முற்றுரிமை விலையினல் அதிக இலாபம் பெறுவர். சுங்க வரி விதிப்பினல் அவர்கள் தங்கள் இலாபத்தைத் துண்டித்து இறக்குமதி விலையைப் பாதிக்காமல் வர்த்தகம் புரிவார்கள். உயரிய சுங்க வரி விதிப்பை எதிர்நோக்கியே அதிகப்படி இறக்குமதி நடக்கலாம். எதிர்பார்க்கும் இம்மாதிரியான சூழ்நிலைகளில் பங்குவிதிப்பு முறைதான் மிகவும் ஏற்றதாக அமையும் எனலாம்.

பாதுகாப்பளிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பங்கு விதிப்பு முறையின்கீழ் நன்கு காப்பளிக்கப்பட்டதாகக் கருதுகின்றனர்.

எனவே, அவர்கள் தங்கள் மூலதனத்தை மேன்மேலும் பங்கு விதிப்பின்கீழ் பாதுகாப்பளிக்கப்பட்ட தொழிலில் இட முன் வருகிறார்களேயன்றிச் சுங்க வரி விதிப்பின்கீழ் கட்டுப்படுத்தப் பட்ட தொழிலில் இட முன்வருவதில்லை.

தேவைக்கேற்ப, பங்கு விதிப்பு முறையின் கீழ், கட்டுப் பாடுகளை விதிக்கவும் வர்த்தகப் பேரத்திற்கு உகந்ததும் எளிதான முறையில் ஏற்றுமதி இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தக் கூடியது மான முறைஇது ஒன்றேதான்.

திட்டமிட்டப் பொருளாதார முறையின்கீழ் அளவு கட்டுப் பாடு முறை சுங்க வரி விதிப்பினும் மேலாகக் கருதப்படுகிறது. பங்கு விதிப்பு முறையின் கீழ் இறக்குமதியாளர்கள் தங்களுக்கு இவ்வளவு அளவுள்ள பண்டங்கள்தான் இறக்குமதியாகும் என்று முன்னரே அறிவராதலால் அதற்கேற்பத் தங்கள் திட்டங்களை வகுத்துக் கொள்வார்கள். ஏற்றுமதியாளர்களுக்கும் முன்ன தாகவே அயல்நாட்டுச் சந்தையில் இன்ன அளவுதான் தேவைப் படும் என்று தெரிந்திருக்கக் கூடும். அதற்கேற்ப அவர்களும் தங்களுடைய உற்பத்தித் திட்டத்தை வகுத்துக் கொள்ளக்கூடும்.

சுங்க வரி விதிப்பு முறையைச் செயலாக்குவதில் நாட்டின் சட்டமன்றம் அதை மாற்றி அமைக்க முன்வரும் என்பது மிகவும் கடினம். பங்குவிதிப்பு முறைகள் கட்டுப்பாடு விதிகளை விதிப்பது செயல்படுத்தும் அலுவலர்களும், அரசின் அலுவலக அலுவலகர்களும்தான். அரசின் அலுவலகங்களும் சற்று முன்பின் வேண்டியவாறு அமைத்துக் கொடுத்து உதவக்கூடும். ஆயினும் வரிமுறையை மாற்றியமைப்பது மிகவும் சிரமமான செயலாகும். ஆயினும் எந்த நாட்டரசிற்கு வரிவிதிப்பை மாற்றி அமைக்கும் உரிமையுண்டோ அந்த நாட்டில் தற்காலிக வரிவிதிப்பை அமல் படுத்த உரிமை உண்டு. மாறிய நிலைமையில் அளவுக் கட்டுப்பாடு முறைகளைப் பயனுள்ளதாகச் செய்ய இயலாது.

சுங்க வரி விதிப்பின் கீழ் உள்நாட்டு விலைகள் ஏறக்கூடும். ஆயினும் பங்கு விதிப்பின் கீழ் விலைக் கட்டுப்பாடும், பங்கீட்டு முறையும் இருப்பின் உள்நாட்டு விலை அதிகரிக்கக் காரணமில்லை. பங்கு விதிப்பு முறையின் கீழ் நாட்டரசு நேர்மையாக அதை நடத்தாது, விலையைக் கட்டுப்படுத்தாது நடத்தி வந்தால் உள் நாட்டு விலை ஏறுவது தெற்றெனத் தெளிந்ததே. சுங்க வரி விதிப்பின் கீழ் இறக்குமதியாகும் மூலப் பொருள்களின் விலை கூடிப் போகிறது. அதன் விளைவாக உள்நாட்டு உற்பத்தித் தொழிலும் பாதிக்கப்பட்டு உள்நாட்டு உற்பத்தி விலை அதிகரித்து அதன் உள் நாட்டு அயல் நாட்டுச், சந்தையை இழக்கும்படித் செய்கிறது.

# 9. அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடு

முகவுரை

அயல்நாட்டுச் செலாவணி விகிதங்கள் திடீரெனச் சரியா வண்ணம் ஒரே நிரந்தரமான அளவில் நிலை நிறுத்த அந்நாட்டரசு தலையிட்டு அதிகாரப் பூர்வமாக இன்ன விகிதம்தான் என்று சட்ட திட்டமாகக் கூறும். இதில் அரசின் தலையீடு காரணமாகப் பல முறைகளைக் கையாளக் கூடும். அவையாவன: உள்நாட்டுப் பணப் புழக்கத்தை நாட்டின் மத்திய வங்கி ஒழுங்காகக் கட்டுப் படுத்துதல், மூலதனப் போக்குவரத்தைக் கட்டுப் படுத்துதல், நிதி நிலையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் செலாவணி விகிதங்களை முனையில் கட்டுவது போன்ற முறை, அயல்நாட்டுச் செலாவணிச் சந்தைக்கு அதிகாரமற்றோரின் ஆதரவு காட்டுதல் தன்மை, இதன் குறுகிய விளக்கத்தின் கீழ் அயல் நாட்டுச் செலாவணியைக் கட்டுப் படுத்துவது என்று பொருள். கட்டுப்படுத்துவது என்றால் தேவை, வழங்கு இவை இரண்டினையொட்டி அதற்கேற்பக் கட்டுப்பாடு முறைகளை அமைத்தல் என்பது பொருளாகும்.

இவ்வனைத்தும் நன்கு அரவணைக்கப்பெற்றுத் திட்டமாக அன்னியச்செலாவணிக் கட்டுப்பாட்டினைப் புகுத்தியுள்ளனர். இதன் படி எவருக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறதோ அவர் தன்னிச்சைப்படி அன்னியச் செலாவணியைப் பயன் படுத்தக் கூடாது. கையில் கிடைத்தவுடன் அதை மத்திய வங்கியில் வைப்பாகக் கொடுத்துவிட வேண்டும். மத்திய வங்கியில் உள்ள அன்னியச் செலவாணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு இந்த வைப்புகளை மேற்பார்வை செய்து வருகிறது. வைப்பாளர்களுக்கு உள்நாட்டுச் செலாவணியைப் பதிலுக்குக் கொடுத்து விடுகிறது. இறக்குமதி யாளர்கள் தங்களுக்குத் தேவையான அன்னியச் செலாவணியை மத்திய வங்கியில் உள்ள அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவினின்றுதான் பெறவேண்டும். ஆயினும் நடப்பு விகிதத்தில் தேவையுள்ள அளவிற்கு அந்தப் பிரிவால் (Department) கொடுக்க சாத்தியப்படுமா என்பது பிரச்சினை தான்.

இக் கட்டுப்பாட்டினை வெற்றியுள்ளதாக அமைத்து நடத்த முதல் அடிப்படையாகப் பண்ட வர்த்தகக் கட்டுப்பாட்டினை அமலாக்குகின்றனர். எனவே இதன்கீழ் வர்த்தகக் கட்டுப்பாட்டு முறைகளைப் படிப்போம்.

**கட்டுப்பாட்டின் குறிக்கோள்**

**நாட்டினின்று மூலதனம் பெயர்ச்சியடையாதிருப்பதற்கான தடுப்பு முறைகள்** : அரசியல் கொந்தளிப்பின் காரணத்தாலும், மனோநிலையின் போக்காலும் நாட்டிலுள்ள மூலதனம் திடீரென அகற்றப்படக்கூடும். வட்டி விகித வேற்றுமையின் காரணமாக மூலதனம் கூடுதலாகவோ குறைவாகவோ நுழையக்கூடும். முன்னரே கூறியுள்ளது சற்று அதிர்ச்சியைத் தரக் கூடிய காரணம் எனலாம். பின்னர் கூறியுள்ளது சாதாரணமாக நாட்டில் நிலவி வருவதைக் குறிக்கிறது. இவ்வாறு அதிர்ச்சியைத் தரக்கூடிய மூலதனப் பெயர்ச்சியினால் நாட்டின் செல்வநிலை முறியக்கூடிய அளவில் தாழ்ந்து அதன்விளைவாக நாட்டின் சமூகநிலை சீர்குலைந்து போகக்கூடும். உலகின் பல்வேறுநாடுகள் தங்களது பொருளாதார அமைப்பைக் கட்டுப் (திட்டப்) படுத்தி வைத்துள்ள இந்த நாள் களில் வெளியேறும் மூலதனத்தை அளவையிட்டுக் கட்டுப்படுத்த வேறு எந்த மறைமுக முறைகளும் இல்லை. மிகவும் லாகவமாகவும், கண்டிப்புடனும் கட்டுப்படுத்தவல்ல முறை வர்த்தகக் கட்டுப் பாடு முறையே ஆகும்.

**வாணிபக் கொடுப்பல் நிலையில்ஏற்படும் சமநிலையற்ற தன்மையைத் திருத்தம் செய்ய முயலுதல்:** அன்னியச் செலாவணி குறைந்து வருவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இது ஏற்பட்டுள்ளது. நாட்டின் மத்திய வங்கியில் எந்த அளவிற்கு அயல் நாட்டுச் செலாவணி கிடைக்குமோ அந்த அளவிற்குள்ளாக இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வரலாம்.

**செலவாணி விகிதத்தை உறுதிப்படுத்துதல்:** அன்னியச் செலாவணி மாற்று விகிதத்தில் திடீரென்று ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு அதன் விளைவாக உலக வர்த்தகம் வளர்ச்சியடையாது பின்தங்க நேரிடலாம். பல்வேறு நாடுகள் தங்கள் நாட்டில் அன்னியச் செலாவணி விகிதத்தைத் தம்மிச்சைப்படி ஒரு குறிப் பிட்ட அளவில் அசைவற்ற நிலையில் வைக்க முற்படுவர்.

**இன்றியமையாப் (essential) பண்டங்களை இறக்குமதி செய்ய முற்படுதல்** : அன்னியச் செலாவணி பற்றாக்குறையினால் துன்புறும் எந்நாடும் கண்ட கண்ட பொருள்களையும் பண்டங்

களையும் இறக்குமதி செய்ய அனுமதிப்பதில்லை. கையில் விழுமியுள்ள செலாவணியை வீணடிக்காமல் மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவதே அதன் நோக்கமாகும். போகப் பண்டங்களையும் (luxurious goods) தேவையற்ற இதர பொருள்களையும் இறக்குமதி செய்யுமுன் கட்டுப்பாடுகளை விதித்துக் குறிப்பிட்ட அளவிற்குமேல் இறக்குமதி செய்ய அனுமதி கொடுப்பதில்லை. இந்தக் கட்டுத் திட்டம் இல்லையேல் நாட்டின் அன்னியச் செலாவணியனைத்தும் இப் போகப்பொருள் கொள்முதலிலும் இறக்குமதியிலும் செலவிடப்பட்டு நாட்டின் செலாவணி நிலை பரிதவிக்கும் வகையில் கீழிறங்கிவிடக் கூடும். பொருளாதார முன்னேற்றத்திற்கு விழையும் நாடுகள் முன் யோசனையுடன் அன்னியச் செலாவணியை மூலதனப் பொருள்களையும், தொழிற்சாலைகளுக்குத் தேவையுள்ள இயந்திர சாதனங்களையும், தொழில் நுட்ப விவரங்களையும் இறக்குமதி செய்யப் பயன்படுத்துகின்றனர். இவற்றால் நாடு முன்னேற்றமடைய இடமுண்டு.

உள்நாட்டுத் தொழில்களைக் காக்க : அயல்நாட்டிலிருந்து வரும் இறக்குமதிப் பண்டங்களை உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களுடன் போட்டியிடாவண்ணம் காக்கும் நோக்கத்துடன் செலாவணிக் கட்டுப்பாடு விதிக்க நேரிடுகிறது. இதனால் உள் நாட்டுப் பண்டங்களை எளிதாக விற்பனை செய்ய இடம் உண்டாகிறது.

நாட்டிற்கு வருமானம் பெறவேண்டி : நாட்டின் கருவூலத்திற்குப் போதிய அளவு வருவாய் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சில நாடுகள் செலாவணிக் கட்டுப்பாட்டை அமைத்து வருமானம் பெறுகிறார்கள். அலுவலர்கள் குறைந்த விகிதத்தில் அயல்நாட்டுச் செலாவணியைப் பெற்று மிகவும் அதிகப்படியான விகிதத்தில் விற்பனை செய்ய முற்படின் அவர்கள் அதிகப்படியான இலாபத்தைப் பெறுகிறார்கள். இது நாட்டின் வருமானத்தை ஊக்குவிக்கும் எனலாம்.

அதிகம் மதிப்பீடு கொடுக்கப்பட்ட செலாவணியை ஆதரித்தல் : உள்நாட்டுச் செலாவணியின் மதிப்பை அதிகரித்து அந்த மதிப்பீட்டினைக் குறையாது கண்காணித்துவரச் செலாவணிக் கட்டுப்பாடு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். இயல்பாக உள்நாட்டுச் செலாவணியைத் தேவை, வழங்கு முறைகளின் கீழ் இயல்பான அளவில் விட்டால், அதன் மதிப்பு உடனே குறைந்துவிடக் கூடும். ஆட்சியினரின் சட்ட திட்டத்தையொட்டி இந்தச் செலாவணி

விகிதம் தீர்மானித்து அதன்படி மதிப்பை அளவிடக் கூடும். ஆட்சியினர் இச் செலாவணி மதிப்புச் சந்தையில் வழங்கு, தேவை முறைகளில் உண்டாகும் மதிப்பைவிட அதிகமாக இருக்கக் கூடும்.

**அயல் நாடுகளில் வைத்துள்ள தேசிய (முதலீடுகளின்) விலைகளைக் குறைத்தல்** : தன் நாட்டவர் பிற (இதர) நாடுகளிலிருந்து தேசியக் கடன் பத்திரங்களை வாங்காது தடைசெய்யும் பொருட்டு அன்னியச் செலாவணியை அமலாக்குகின்றனர். இதன் விளைவாக அந்த அன்னிய நாட்டுக் கடன் பத்திரங்களை உள் நாட்டில் மிகவும் குறைந்த விலைக்குக் கொடுத்து அதனால் நட்டம் அடையக்கூடும். எனவே, அயல் நாட்டிலிருந்து தேசிய ஆவணங்களை வாங்காது கட்டுப்படுத்துவார்கள்.

**அயல் நாட்டில் பட்ட கடன்களைக் கொடுக்காதிருத்தல்**: இந்நாட்டு மக்கள் அயல்நாடுகளில் கொண்டுள்ள கடன்களைத் திருப்பிக் கொடுக்காதிருக்கும் வகையில் திட்டமிட்டு அயல்நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டை அமலாக்குகிறார்கள். இதனால் கிடைக்கப்பெறும் அன்னியச் செலாவணியை இறக்குமதி செய்யப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

**கடன்பட்ட நாடுகளிலிருந்து கடன் தொகையைப் பெறும் நோக்குடன்**: கடன் கொடுத்த நாடுகள் செலாவணிக் கட்டுப்பாடு முறையின் கீழ் கடன் பெற்ற நாடுகளை எளிதில் கடனை அடைக்கச் செலாவணி முறையை அமைத்தும் இறக்குமதிப் பண்டங்களுக்கு என்று கட்டுப்பாடு விதித்தும் தாங்கள் கொடுத்த கடன்களைத் திரும்பப் பெறுகிறார்கள்.

**அரசினர்பட்ட அயல் நாட்டுக் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் வண்ணம் செலாவணியை அமைத்துக் கொடுக்கிறார்கள்**: பிற நாடுகளிலிருந்து அதிகப்படியான அளவில் ஆளுநர் கடன்களை வாங்கி நாட்டைப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வகைப்படுத்துகிறார்கள். எந்த நாடு பெற்ற கடனைக் குறித்த காலத்திற்குள் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலையில் உள்ளதோ அந்த நாட்டின் வருங்காலம் மிகவும் கீழ் நிலையை அடையக் கூடும். இதர நாடுகள் அந் நாட்டை மதிக்கமாட்டா. கடன் நிலைமையும் இன்னமும் மோசமாகி விடும். எனவே கடன் பெற்ற நாடுகள் அன்னியச் செலாவணியைக் கட்டுப்படுத்தி அயல் நாட்டுக் கடன்களைக் கொடுக்கப் பயன்படுத்தக் கூடும்.

வர்த்தகப்பேரம் செய்ய நாடுகளுக்கிடையே வேற்றுமை வகையில் இறக்குமதியின் மீது தீர்வை விதிக்கக்கூடும் : செலாவணி பெறுதல் மூலமாகவும் நாடுகள் ஒன்றையொன்று ஒப்பந்தத்தின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டை நீக்கி வர்த்தகப்பேர முறைகளைக் கையாளக் கூடும்.

பொருளாதாரத் திட்டத்தின் மூலம் : திடீரென அயல் நாட்டுச் செலாவணியில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டு அதன் விளைவாக உள் நாட்டுத் திட்டங்கள் கைகூடாவண்ணம் நின்று விடும். எந்தத் தேசிய அரசும் இந்த ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே செலாவணிக் கட்டுப்பாட்டின் மூலம் எதிர் பாராத ஏற்றத் தாழ்வுகளை நீக்கலாம்.

### செலாவணிக் கட்டுப்பாட்டின் அமைப்பு

செலாவணி விகிதங்களை இரு வழிகளில் கட்டுப்படுத்தக் கூடும். அச்சுறுத்தப்பட்டுள்ள செலாவணி விகிதத்தில் அமோக அளவில் அலுவலர்கள் வாங்கி விற்பனை செய்யக் கூடும். மக்கள் தங்கள் தேவைக்கேற்ப இவற்றை வாங்கிக் கொள்ளலாம். இவ்வாறு கொள்முதல் செய்யவோ வாங்க மேற்கொள்ளவோ கட்டுப்பாடு ஒன்றும் இல்லை. விகிதமாற்றம் ஏற்படும் போது பொன் இருப்பினைக் (reserve) கூட்டியோ குறைத்தோ சீர் செய்வார்கள். எடுத்துக்காட்டாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் பணம் தொடர்பான அலுவலர்கள் செலாவணி நிலை நாட்டக் கணக்கினை (Exchange Stabilisation Account) அமைத்துள்ளனர். அதேபோன்று இங்கிலாந்தில் செலாவணிச் சமன்பாட்டுக் கணக்கினைத் (Exchange Equalisation Account) திறந்துள்ளது. இரண்டாவது முறையின் கீழ் அன்னியச் செலாவணி வாங்குவதைக் கட்டுப்படுத்தி அந்தத் தொகையைச் சீராக விநியோகித்தல் அல்லது பங்கீடு செய்தலே முறையாகும். இந்த முறை சற்றுக் கடுமையானதெனக் கருதப்படுகிறது.

### செலாவணிச் சமன்பாட்டுக் கணக்கு (The Exchange Equalisation Account)

செலாவணி விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களையும், எதிர் பாராத குறுகியகால ஏற்றத் தாழ்வுகளைச் சீர்படுத்தவும் பிரிட்டன் நாட்டில் செலாவணிச் சமன்படுத்துக் கணக்கை (Exchange Equalisation Account) 1932ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கினார்கள். இதன் விளைவாக வாணிபக் கொடுப்பல் நிலையில் எவ்விதமான ஏற்றத் தாழ்வும் இல்லை, ஆனல் நீண்டகாலச்

செலாவணி விகிதத்தைப் பற்றி இதை மேற்கொள்ள இயலாது. அளவிற்கு மீறி அன்னியச் செலாவணி நாட்டினுள் வரினும், அல்லது உள்நாட்டுச் செலாவணி நாட்டை விட்டகன்ருலும் செலாவணிச் சமன்பாட்டு அலுவலர்கள் உள்நாட்டுக் கருவூல (Treasury) உண்டியல்களைச் சந்தையில் (market) விற்பனை செய்து அதன்மூலம் வர்த்தக வங்கிகளில் இந்தத் தொகையை ஈடுபடுத்த முயல்கின்றனர். அன்னிய நிலுவைத் தொகையை உடனடியாகப் பொன்னுக (gold) மாற்றிக் கணக்கைச் சரிப் படுத்திக் கொள்கின்றனர். இவ்விற்பனையிலிருந்து வரும் பணத்தைக் கொண்டு கருவூல உண்டியல்களைத் திரும்ப வாங்கிக் கொள்கின்றனர். இம்மாதிரி சேமித்த பொன்னில் ஒரு பகுதியைப் பாங்க் ஆஃப் இங்கிலாந்தில் (Bank of England) வைத்து அதன் மூலம் அயல் நாட்டுச் செலாவணி உள்நாட்டின் செலாவணியைப் பாதிக்காது பார்த்துக் கொள்கின்றனர்.

### அமெரிக்கச் செலாவணி நிலைநாட்டு நிதி (Exchange Stabilisation Account)

1934ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த நிதி தொடங்கப் பெற்றது. டாலரின் செலாவணி நிலையைச் சமப்படுத்தி அதன் வழியாக அன்னியச் செலாவணி விகிதத்தைச் சீர்படுத்த முயன்றனர். இது பிரிட்டிஷ் முறையிலும் மாறுபட்டது. இதில் பொன்கட்டி இருந்ததே ஒழிய பணம் கணக்கிட இயலவில்லை. அமெரிக்க ஃபெடரல் மத்திய வங்கியினின்று (Fedral Reserve Bank) பொன்கட்டி கொள்முதல் செய்தனர். இதற்குப் பதிலாகப் பொன் ஈட்டுச் சான்றிதழ் (Gold Certificate) கொடுத்தனர். இதன் விளைவாக உள்நாட்டுச் செலாவணியில் போதிய அளவு கடன்வழி ஏற்பட்டது. உள்நாட்டு வங்கிகளில் இருந்து பணம் வெளியேறினுல் கடன்வழி குறைந்தது. வெளி நாட்டினின்று பணம் உள்நாட்டையடைந்ததும் கடன் வசதி பெருகியது. ஒதுக்கு நிதி (reserve) விகிதத்தை ஏற்றிய காரணத்தால் கடன் வசதி குறைந்து விட்டது. உள்நாட்டுக் கடன் வசதிநிலை வெளியிலிருந்து உள்நோக்கி வரும் பணம் மற்றும் பொன் இவைகளால் திடீர் மாறுதல்களைக் கட்டுப்படுத்த 1936ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கருவூலம் பொன் கட்டிகளை மொத்தக் கணக்கினின்று வேறுபடுத்தித் தனியாக்கி வைத்தது.

### செலாவணிக் கட்டுப்பாட்டு முறைகளில் சில வகைகள்

**பலவகைச் செலாவணி விகிதங்கள் :** சில நாடுகளில் உள் நாட்டுச் செலாவணிக்குப் பலவகை மாற்றுவிகிதச் செலாவணிகளை

அமைத்திருக்கலாம் சில காலங்களில் அரசின் அதிகாரப் பூர்வமான விகிதம் சில முக்கியமான செலவினங்களுக்கும் இதர செலவினங்களுக்கும் தடங்கலற்ற விகிதத்தைப் பயன்படுத்து வார்கள். ஏற்றுமதியாளர்கள் தாங்கள் வர்த்தகத்தில் பெற்றுக் கொண்ட அன்னியச் செலாவணியை அரசியல் அதிகார விகிதத்தில் திரும்பப் பெற்றுக்கொண்டு வருவார்கள். அதிகப்படியான ஏற்று மதியில் வரும் உபரி செலாவணியைச் சந்தை விகிதத்தில் விற்பனே செய்ய அனுமதிப்பார்கள். பொருளாதார அமைப்பில் செலா-வணி விகிதத்தில் கட்டுப்பாடின்றிப் போய்வர அனுமதி செய் வதே இதன் அமைப்பாகும்.

**அதிகார விகிதத்தின் மீது கூடுதல் விகிதத்தை அமைத்தல் (Premium Surcharge Over the Official Exchange Rate) :** அதிகார விகிதத்தின்மீது கூடுதல் தொகையைச் சேர்த்து விற்பனே, ஏற்றுமதி இவற்றை அந்தக் கூடுதல் விகிதத்தில் கொடுக்க அனுமதித்தல். ஏற்றுமதிக்கென எளிதாகத் தரும் உள்நாட்டுச் செலாவணி வசதியை அமைத்தல். அதேபோன்று இறக்குமதி களில் அதிகார விகிதத்தில் அமைக்கும்படி ஏற்பாடு செய்வார்கள்.

**கட்டுப்படுத்தப்பட்ட கணக்குகள் (Blocked Accounts)** இந்த முறையின் கீழ் இந் நாட்டினுள் கடன்பட்டவர் அயல் நாட்டின ருக்குச் செலுத்தவேண்டியதற்கெனத் தனியாக நியமிக்கப்பட்ட வங்கிகளில் செலுத்திவிடுவார்கள். கடன் கொடுத்தவர்கள் அந் நாட்டில் அந்தத் தொகையைச் செலவிடலாம். ஆனல், பணத்தை வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். பண்டு செர்மனிய நாடு இம் முறையில் கட்டுப் படுத்தப்பட்ட கணக்குகளேத் தன் நாட்டிற்குப் பயனுறச் செய்து கொண்டது. கடன் கொடுத்தவர்களின் வசதியின்மூலம் செர்மனி ஏற்றுமதிகளே அதிகரித்து நாளடைவில் அவர்களே நட்டத்தில் செலாவணியைக் கொடுக்கும்படிச் செய்தது.

**மூலதன ஏற்றுமதிக்கானக் கட்டுப்பாடுகள் :** மூலதன ஏற்றுமதி யைக் கட்டுப்படுத்த வேண்டிய நோக்குடன் உள்நாட்டுச் செலாவணி வங்கி உண்டியல்கள் (Bank Notes), விலே உயர்ந்த உலோகங்கள் இவற்றை ஏற்றுமதி செய்யக்கூடாதெனத் தடை விதித்தது. அயல் நாட்டிற்குச் செல்லவிரும்புவோர் உள் நாட்டில் இருந்து ஆவணங்கள் (Assets) எதுவும் கொண்டுபோகாது இருக்கக் கண்காணிப்பு செய்யப்படுகின்றனர். வெளிநாட்டிலிருந்து திரும்புவோர்கள் தங்களது அயல்நாட்டுச் செலவு இன்னதென்று பிரமாணத்தின் அடிப்படையில் கூறுதல்வேண்டும். அயல்நாட்

டினர் தன்னுடைய ஆவணங்களை இந் நாட்டில் விற்பனை செய்ய முயலுதல் கூடாது. இந்நாட்டிற்கு வரும் அயல்நாட்டினர் தங்கள் வசம் உள்ள அன்னியச் செலாவணி இவ்வளவுதான் உள்ளதென்று உறுதிப்படுத்திக்கூற வேண்டியது. அந்த அளவிற்கும் அதிகமாக அவர்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. கடந்த முப்பது ஊண்டுகளில் செர்மனி கட்டுப்படுத்தப்பட்ட கணக்கின் மூலம் பயன் பெற்றுள்ளது எனலாம். அவ்வமயம் கட்டுப்படுத்தப் பட்ட கணக்கின் வழியே மூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

வர்த்தகப் பேரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மேற்பார்வை செய்தல்: பண்ட வர்த்தகத்தின் மூலம் மறைவாக மூலதனம் ஏற்றுமதியாகாது தடுத்துச் செல்லாதிருக்க நேர்முகக் கட்டுப் பாடுகளை அமைத்து வருகின்றார்கள். இறக்குமதிகளில் அதிகவிலைப் பட்டியல் (over invoicing) செய்தும், ஏற்றுமதிகளுக்குக் குறைந்த விலைப் பட்டியல் (under- invoicing) தயார் செய்தும் மூலதனத்தைநாட்டிலிருந்து அப்புறப்படுத்துவார்கள். பட்டியலில் நேர்மையான விலை விதிக்கப்பட்டிருக்கிறதா என்று ஆலோசிக்க வேண்டும். செலாவணிக் கட்டுப்பாட்டு திட்டம் மிகவும் கடுமையான தண்டனையை விதிக்கிறது.

உள்நாட்டினர் தன் கைவசமுள்ள அன்னியச் செலாவணியை வற்புறுத்தலின் காரணமாக அரசினரிடம் ஒப்புவித்தல்: செலாவணிக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் இந் நாட்டு மக்களைத்தன் வசமுள்ள நாட்டு ஆவணங்கள் எவ்வளவு என்று தகவல் கொடுக்கும்படி ஆணையிடுவது போன்று, அவர்கள் அயல்நாட்டு ஆவணங்களிலும் வங்கிகளிலும் இன்னும் இதுகாறும் பெற்றுள்ள நிதிக் குவியல் எவ்வளவு என்றும் எழுதிக் கொடுக்கும்படி வற்புறுத்துகின்றனர்.

இருமுக வர்த்தக நிகரம் (Bilateral Balancing): அன்னியச் செலாவணி சேமிப்பு இல்லாத நாடுகள் இதர நாடுகளுடன் இரு முக வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டு உள்நாட்டுப் பொருள் களை ஏற்றுமதி செய்து அதற்குப் பதிலாக அந் நாட்டுப் பொருள் களைப் பெறுகின்றன.

கணக்குத் தீர்வு ஒப்பந்தங்கள் (Clearing Agreements): ஏறக் குறைய எல்லா நாடுகளிலும் செலாவணிக் கட்டுப்பாட்டின் காரணத்தால் இறக்குமதிகள் தடைசெய்யப்படுவது தெரிந்ததே. போதிய அன்னியச் செலாவணி கைவசம் இல்லாத காரணத்தால் பல நாடுகள் பெருவாரியான இறக்குமதிகளைச் செய்வதில்லை. எடுத்துக்காட்டாக இரு நாடுகள் அன்னியச் செலாவணி இல்லாத காரணத்தால் தத்தம் நாடுகளில் இறக்குமதிக் கட்டுப்பாட்டினை

செய்துவிட்டது. அவைகளுக்கு இறக்குமதியைத் தவிர்க்க இயலா ஒரு நிலையை அடைந்து விட்டபோது தம்மிடையே கணக்குத் தீர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு தொடர்ந்து இறக்குமதி செய்ய லாம். எனவே கணக்குத் தீர்வு ஒப்பந்தம் (Clearing Agreements) எனப்படுவது இறக்குமதியைத் தடைபடுத்துவது அல்லது ஊக்குவிப்பது எனக் கூறலாம். இந்த ஒப்பந்தத்தின்கீழ் நாட்டு இறக்குமதியாளர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை மத்திய நாட்டு வங்கியின் கணக்கில் கட்டி விடுவார்கள். இந் நாட்டு ஏற்றுமதியாளர்கள் தம் நாட்டு மத்திய வங்கியிலிருந்து சேரவேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்வார்கள்.

இரு நாடுகளின் மத்திய வங்கிகளும் தங்களுக்குள் ஏற்படும் கணக்கு பாக்கிகளை நேருக்கு நேராகச் சரிகட்டி நிகரம் எவ்வளவு என்று கணக்கிடுவார்கள். காலவரையின்கீழ் பாக்கி உள்ள கடன் பட்ட இறக்குமதியாளரிடமிருந்து வரும் தொகைகள் நேருக்கு நேராகக் கணக்கில் வரவு வைத்துவிடுவார்கள். சில காலங்களில் குறிப்பிட்ட பண்டங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு முதன் முதலாகப் பணம் பட்டுவாடா செய்யப்படும். சில சூழ்நிலைகளில் முன் பணமாகவும் கொடுக்கப்படும். இது இருமுக வர்த்தகத்தின் அமைப்பினைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் பல பிரிவுகள் உள்ளன. அவற்றில் குறிப்பாக நிதியை எவ்வகையின்கீழ் பிரிப்பது என்று கணக்கிடுவார்கள். நடப்பு ஏற்றுமதியாளர்கள் கோரும் தொகைகள், பண பாக்கி, முதலீடு செய்பவர்களுடைய பாக்கிகள் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இரு செலாவணிகளுக்கும் மாற்று விகிதம் எவ்வாறு முடிவு செய்யப்பட வேண்டும் என்பது ஒப்பந்தத்தில் விவர மாகக் குறிக்கப்பட்டிருக்கும். கீழ்க்கண்டுள்ள அடிப்படையில் இரு செலாவணிகளுக்கும் உள்ள விகிதத்தை நிருணயிப்பார்கள். அவையாவன :

(i) சட்டப்படிப் பொன்னின் மாற்று விகிதம்,

(ii) அரசினர் கூறும் செலாவணி விகிதம்.

(iii) பழக்கவழக்கத்திலுள்ள மாற்று விகிதம்.

(iv) சந்தையில் புழங்கும் விகிதம்.

(v) அன்றாட சராசரிச் செலாவணி விகிதம்.

(vi) பிறிதொரு நாட்டின் நிலையான செலாவணி.

இவ்வொப்பந்தத்தின் முடிவில் கிடைக்கும் வருவாயை எவ்வாறு பயன்படுத்துவது என்று தீர்மானிக்கப் பட்டிருக்கும்.

பொதுவாக வலிமையுள்ள கடன் கொடுத்துதவிய நாடுகள் கடன்பட்ட சக்தியற்ற நாடுகளின்மீது கணக்குத் தீர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படிக் கண்டிப்பு செய்வார்கள். இதன் விளைவாகப் பழைய கணக்கு பாக்கிகளைத் தீர்த்துக் கட்டலாம். இந்த ஒப்பந்தத்தில் வரும் பாக்கிக்கு வட்டி விகிதம் விதிக்க அனுமதியில்லை.

இந்த ஒப்பந்தம் சில சமயங்களில் மும்முக வர்த்தகத்தின் அடிப்படையில் தயாரிக்கக் கூடும். ஒரு நாட்டின் பற்றுக்குறையையும் இரண்டாவது நாட்டின் உபரியையும் பிறிதொரு நாட்டின் கணக்கில் சரிகட்ட இயலும். கொடுபடா பாக்கிகள், கப்பற் கட்டணம், பயணம், சுற்றுலா காண்போர்கள் செலவு, காப்பீட்டுக் கட்டணம் (Premium), தூதுவர்களின் செலவுகள் (Diplomatic Expenses), காப்புரிமைப் பட்டையங்கள் (Patent) முதலியனவற்றை இதன் கீழ்க் கணக்கிடலாம்.

1930-க்கு முன் செர்மனி தென் ஐரோப்பிய சிறு நாடுகளில் இருந்து அளவுக்கு மீறி இறக்குமதி செய்தது. இவைகளைக் கணக்குத் தீர்வு ஒப்பந்தங்களின்கீழ் செய்து வந்தது. அதிகவிலை கொடுத்து கச்சாப் பொருள்கள், உணவுப் பண்டங்களை யூகோஸ்லோவியா, ஹங்கேரி, பல்கேரியா ருமேனியா, போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது. மேற்கு ஐரோப்பாவில் விலை மலிவு ஏற்பட்ட வர்த்தக மந்தமும் பின்னிறக்கமும் நிகழ்ந்தன. அவ்வமயம் செர்மனி நாட்டில் மட்டும் முழு வேலை வாய்ப்பும், பொருளாதார நிலை செம்மையாகவும் அமைந்திருந்தன. இதன் விளைவாக செர்மனி நாடு பல்வேறு நாடுகளுக்குக் கடன் பட்டிருந்தது. செர்மனி ஆயுதமேற்ற (Rearmament) முறையைப் பாதிக்காமலும், தான் கொடுக்கக் கூடியதைத்தான் இதர நாடுகள் பெறலாமென்றும், தான் கோரும் விலைக்குத்தான் கணக்கை முடிவு செய்யப்படலாம் என்றும் நிபந்தனையிட்டது. இதன் விளைவாக செர்மனியப் பொருளாதார நிலை உச்சவரம்பை அடைந்தது.

**செலுத்து ஒப்பந்தங்கள் (Payments Agreements):** கணக்குத் தீர்வு ஒப்பந்தங்களைப் போன்று இவைகளும் கணக்கு பாக்கிகளுக்குத் தீர்வு கண்டு பண செலுத்துகளை ஏற்பாடு செய்யவேண்டியேற்படும். இயல்பான மார்க்கங்களில் பணம் செலுத்தும் முறைகளை இந்த ஒப்பந்த முறை ஒற்றுக் கொள்கிறது. ஆயினும் கணக்குத் தீர்வு ஒப்பந்தத்தில் இயல்பான முறையைக் கடைப் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. குறிப்பிட்ட காலத்தினுள்

இரு நாடுகள் தம்மிடையே உள்ள வாணிபக் கொடுப்பல் சமநிலை (equilibrium) ஏற்படுத்த முயலுகின்றன. கணக்குத் தீர்வு ஒப்பந்தத்தைவிட மிகவும் வறிய முறையில் அமைகிறது. செலாவணிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் நாடு தன் வசம் உள்ள அன்னியச் செலாவணியைக் கட்டுப்பாடில்லாத நாடுகளுக்கு எவ்வகையில் விநியோகிக்க வேண்டும் என வரையறுக்கிறது. எந்த விகிதத்தில் செலாவணிகளைமாற்ற வேண்டும் என்று கூறுகிறது. இந்த ஒப்பந்தம் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவோ அல்லது நீண்ட காலமாகவோ அமைத்துக் கொள்ளலாம். வேண்டாமென முடிவு செய்தால் உடனே ஒப்பந்தத்தை ரத்து செய்து தகவல் தெரிவித்துக் கொண்டு விடலாம்.

இந்த ஒப்பந்தத்தின்மூலம் ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் நேர்முகத் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுகிறது. இதனால் வாங்குபவர்களின் செல்வநிலை எவ்வாறுள்ளது என்று விற்பனையாளர்கள் நன்கு அறிந்துகொள்கிறார்கள். கணக்குத் தீர்வு முறையின்கீழ் கணக்கைத் தீர்க்க முயலும்போது அதிகப்படியான நாள்கள் ஆகின்றன. இம் முறையின் கீழ் அதிகப்படியான சிரமங்கள் ஏற்படுவதில்லை. இடையூறுகள் நீக்கப்படுகின்றன.

ஈடு கட்டும் ஒப்பந்தங்கள் (Compensating Agreements): அன்னியச் செலாவணி கிடைக்கவியலாத காலத்தில் ஈடுகட்டும் ஒப்பந்தம் பயன்படுத்தப்படுகிறது. இவை பொதுவாகப் பண்டமாற்று (Banker) முறைகளே அன்னியச் செலாவணியின்றிப் பண்டமாற்றம் செய்யக் கூடும். இவ்வொப்பந்தம் தனியார்களுக்கும் அரசிற்குமிடையே ஏற்படலாம். அல்லதுதனியார் தன்னில்செய்து கொள்ளலாம். இந்தியப் பருத்தி ஆடைகளுக்கு பதிலாகப் பங்களா தேஷின் சணலுக்குத் தேவை ஏற்படின் இதில் நால்வர் ஒன்று சேரவேண்டியேற்படுகிறது. இந்தியப் பருத்தித் துணி ஏற்றுமதியாளரும் பங்களா தேஷின் இறக்குமதியாளரும், அதேபோன்று பங்களா தேஷின் சணல் ஏற்றுமதியாளரும் இந்திய நாட்டின் சணல் இறக்குமதியாளரும் ஒன்றுகூடி இந்தியச் சணல் இறக்குமதியாளர் இந்தியப் பருத்தி ஆடை ஏற்றுமதியாளர் செய்ய வேண்டிய ஏற்றுமதி அளவிற்குத் தருவிப்பார்கள். இதனால் அந்தந்த நாட்டு ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தங்கள் நாட்டுச் செலாவணியில் மாற்றிக் கொள்ளலாம். ஈடுகட்டும் ஒப்பந்தத்தில் இன்ன விகிதத்தில் மாற்றப்படவேண்டும் என்று அறுதியிட்டுக் கூறுவது கடினம். அன்னியச் செலாவணிக் குறையினால் இறக்குமதி

செய்ய இயலாப்பண்டங்களை இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறலாம்.

இந்த ஒப்பந்தம் ஒரு சிக்கலான பிரச்சினை எனலாம். இருவருக்குப் பதிலாக நால்வர் கூடவேண்டியேற்படுகிறது. வந்து சேரும் நால்வரும் ஒரேமுகமாக ஒப்பந்தத்தின் விதிகளை ஏற்றுக் கொள்வார்கள் எனக் கூறவியலாது. பருவப் பொருள்கள் (seasonal goods) தொடர்பாக இந்த ஒப்பந்தம் அவ்வளவு பயனுள்ளதாக அமையும் எனக் கூற இயலாது. எடுத்துக் காட்டாகப் பல்வேறு பருவங்களில் தேவைப்படும் பண்டங்களுடன் தேவையில்லாப் பண்டங்களை ஈடுகட்டி நிகரம் சொல்ல விழைவது கடினம். உள்நாட்டிலுள்ள தேவையற்ற பண்ட இறக்குமதியாளர் தேவையுள்ள பண்ட ஏற்றுமதியாளருக்குப் பாக்கியைச் செலுத்துவார் என்று கொள்ளமுடியாது. அன்னியச் செலாவணிக் கட்டுப்பட்டாடு அலுவலர்கள், இதன் விளைவாக அதிக அளவு அன்னியச் செலாவணியைப் பெற்று சீராக அமைக்க முடியும் எனக் கூற இயலாது. இம்மாதிரியான ஒப்பந்தங்களின் விளைவாகச் சாற்றை விட்டுச் சக்கையை ஏற்றுக் கொள்வது போல் நாட்டின் பொருள் முன்னேற்றத்திற்குகந்த பண்டங்களை இறக்குமதி செய்வதை விட்டுவிட்டுக் கண்ட பொருள்களைத் தேவையின்றி இறக்குமதி செய்ய முயலுவார்ள்.

நாட்டின் நலனைக் கருதி அரசினர் இம்மாதிரியான ஒப்பந்தங்களை ஏற்பதில்லை. அன்னியச் செலாவணியின் உதவியின்றிப் பன்னாட்டு வர்த்தகத்தில் வர இயலாப் பண்டம் என்று தக்க சான்றுகள் காண்பித்தாலன்றிப் பொதுவாக அரசினர் இம்மாதிரியான ஒப்பந்தங்களை அறவே அகற்றிவிடுகின்றனர். சில அரசுகள் நாட்டிற்கு இன்றியமையாத பண்டங்களை ஈடுகட்டும் ஒப்பந்தத்தின் கீழ் கொள்முதல் செய்ய அனுமதிக்கின்றனர்.

**பன்முகச் செலாவணி விகிதங்கள்** (Multiple Exchange Rates)

**பன்முகச் செலாவணி விகிதத்தில் உள்ள நன்மைகள் :** வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றுக் குறையை நீக்க வல்ல சாதனம் இது ஒன்றே. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்குடன் சில பொருள்களின் செலாவணி விகிதத்தைக் குறைவான அளவில் வைக்கலாம். நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்கும் நோக்குடன் இறக்குமதி செய்யும் மூலதனப் பொருள்களின் செலாவணி விகிதத்தை மிகவும் குறைந்த அளவில் அமைத்து வைக்கலாம். பன்முகச் செலாவணி விகிதத்தின் மூலம் நாட்டின் ஏற்றுமதிகளை மிகவும் அழுத்தமான (hard) செலாவணி

(Currency) நாடுகளுக்கு அனுப்பவும் அவற்றினின்று இறக்குமதியைக் குறைவுபடுத்தவும் முயலலாம்.

இதனல் இறக்குமதிகளேக் குறைந்த விலேகளுக்குப் பெற முயற்சிக்கலாம். குறிப்பாகப் பல்வேறு ஆதாரங்களிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு நெகிழ்ச்சியையொட்டிப் பன்முக விகிதங்களே அமைத்து இறக்குமதி செய்யலாம். வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் சில குறிப்பிட்ட நாடுகளுக்கும்தான் வாணிபக் கொடுப்பல் நிலேயில் பற்ருக்குறை நிலேமை உண்டாகும். அந்த குறிப்பிட்ட நாடு மூலதனப் பொருள்களேக் கொடுப்பதாலும் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் காரணத்தாலும் அந் நாட்டுடன் மட்டிலும் பன்முகச் செலாவணி முறையைக் கடைப்பிடிக்கலாம். இதர நாடுகளுடன் செலாவணி விகிதத்தினேக் குறைக்க வேண்டியதில்லே.

நுகர்வுப் பொருள்களே அளவுக்குமீறி இறக்குமதி செய்யாது தடுக்க அதிகப்படியான செலாவணி விகிதத்தை நடைமுறையில் கொணர்ந்து கட்டுப்படுத்தலாம். உள்நாட்டிற்கு வரும் இறக்குமதிப் பொருள்களின் விலேயேற்றத்திற்கு ஒரு காரணமாக பன்முகச் செலாவணி விகிதம் அமையும். எந்தக் குறிப்பிட்ட நாட்டுடன் பொருளாதார உறவைப் பேணும் நிலேமை அடைகிறதோ அந்நாட்டிற்குப் போகும் ஏற்றுமதிகளுக்கும் அந்நாட்டில் இருந்து வரும் இறக்குமதிகளுக்கும் சலுகை காட்டும் அளவிற்கு பன்முகச் செலாவணி விகிதத்தை ஏற்படுத்தலாம். ஏற்றுமதியாளர் பெறும் மிதமிஞ்சிய இலாபத்தைப்த பன்முகச் செலாவணி விகிதத்தின் கீழ் பிரித்து எடுத்துவிடலாம்.

**இடையூறுகள் :** பிரித்தாளும் வேற்றுமைகாட்டும் தன்மையை இம் முறை வளர்க்கிறது. இதனல் நாடுகள் மனக்கசப்படைந்து பொருளாதார யுத்தத்தில் இறங்கலாம். இந்த முறை நியதிக்குட்பட்டதல்ல. எனவே, இலஞ்சம், கைக்கூலி முதலிய கெடுதலான வழிகளேப் புகட்டும் பொருளாதார வளர்ச்சிக்கு இது தக்க முறையன்று. பொருள் வளர்ச்சி இம் முறையின் கீழ் வளராது தேயக்கூடும். இதனல் நாட்டின் இயல்பான ஏற்றுமதிகள் இறக்குமதிகள் தோன்றக்கூடும். இறக்குமதிக் கட்டுப்பாட்டினல் வரும் உபரி இலாபத்தைப் பன்முகச் செலாவணி விகிதங்கள் நீக்கி விடுகின்றன.[1]

[1] E. R. Selasingar—Multiple Exchange Rates & Economic Development. (Prinston University, 1952), p. 17.

# 10. மாநில வர்த்தக அமைப்பு
## (State Trading Corporation)

ஒரு நாட்டிலுள்ள மாநில நிறுவனம் உள்நாட்டில் விற்பனைக்காகத் தேவைப்படும் நுகர்வுப் பொருள்களையும், உற்பத்திக்கான கச்சாப் பொருள்களையும் இறக்குமதி செய்கிறது. அதே போன்று உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.[1] விரித்துரைப்பின், இந்த நிறுவனம் அயல் நாடுகளுக்கு வேண்டியுள்ள தேவையையொட்டி ஏற்றுமதி செய்ய முன்வருவது தெரிந்ததே. அரசின் தேவைகளைக் கண்காணித்து அவற்றைத் தருவித்துக் கொடுத்து எஞ்சியவற்றை உள்நாட்டுச் சந்தையில்[2] விற்பனை செய்கிறது. இதுதொடர்பான பிரச்சினைகளை இங்கு ஆராய்வோம்.

முதல் உலகப் போருக்கு முன்னர் அரசின் வர்த்தக அமைப்பு என்ற ஒரு நிறுவனம் ஏற்படவில்லை அல்லது அரசின் சார்பில் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இது உருவாகவில்லை. முதல் உலகப் போர் நடந்த தருணத்தில், நாட்டின் இராணுவ முறையையொட்டியும், காப்பு முறையின் அடிப்படையில் அயல் நாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்பாட்டின் மூலம் அரசு நிறுவனத்தின் கையில் ஒப்படைத்தது. முதல் உலகப் போர் ஓய்ந்ததும், அமைதி நிலவிய காலத்தில் அயல் நாட்டு வர்த்தகத்தின் மீது விதித்திருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர். 1729ஆம் ஆண்டில் கட்டுப்பாடுகளனைத்தும் நீக்கப்பெற்று தடங்கலற்ற வர்த்தகம் தழைத்தோங்கியது. தடங்கலற்ற வர்த்தகத்திற்கு எதிரிடையாக இரு முக்கியக் காரணங்களை[3] இங்கு விளக்க முற்படுவோம்.

[1] Indian Government—State Trading Report of the Committee-(New Delhi, 1966), p. 5.

[2] Indian Government—State Trading Report of the Committee (New Delhi, 1966), p. 5.

[3] V. A. Sayed Mohamed—The Legal frame work of World Trade-(London, 1955) p. 226.

முதற்காரணமாக அவ்வமயம் சோவியத்து நாடு தனியார் துறையிலிருந்த அயல் நாட்டு வர்த்தகத்தைப் பிரித்துச் சட்டமியற்றி 1918ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் நாள் தனிப்பட்ட அரசின் வர்த்தக நிறுவனமாக உருவாக்கியது. இதன் பின்னர் அயல் நாட்டு வர்த்தகத்தைச் சோவியத்து நாடு ஏகபோக உரிமையாகக் கொண்டு வர்த்தகத்தை நடத்தி வருகிறது. இரண்டாவது காரணமாக அவ்வமயம் உலகின் பல பாகங்களில் பொருளாதார மந்தத்தினுல் சரக்கு தேங்கி விற்பனையில்லாது போய் விட்டது. இதனுல் உலகின் பற்பல நாடுகளில் விவசாயப் பொருள்களின் விலை சரிந்து அதன் காரணமாக வேலையின்மை என்ற கொடுமையான இடர்ப்பாடு தோன்றியது. இதன் விளைவாக அயல் நாட்டு வாணிபக் கொடுப்பல் நிலையில் மிகவும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டன. இதனுல் மூலதனத் தளவாட அமைப்பில் குறைவு ஏற்பட்டது. ஒவ்வொரு நாட்டரசும் தன் நாட்டினை மந்தத்தில் இருந்து விடுவித்தும், செல்வ நிலையைச் சீராக்கவும் விவசாயப் பொருள் தொடர்புடைய வர்த்தகத்தை அரசின் வர்த்தக நிறுவனமாகக் கொண்டது. இதில் ஈடுபட்ட தனியார் வர்த்தகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து அயல் நாட்டு வர்த்தகம் முழுவதையும் அரசே நேர்முகமாக நடத்தத் தொடங்கியது. வாணிபக் கொடுப்பல் நிலையைச் சமாளிக்கும் பொருட்டு அயல் நாட்டு வர்த்தகத்தின் மீது திடீரென்று கட்டுப்பாடுகளை விதித்தது. அல்லது தடங்கலற்ற வர்த்தகம் தலைதூக்கா வண்ணம் பல்வேறு சட்டங்களை இயற்றிக் கடும் மேற்பார்வையை மேற்கொண்டது.

இன்னெரு காரணம் என்னவென்ருல் இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்ததே எனலாம். போர் ஓய்ந்த பிற்காலத்தில் சோசலிச சமுதாயம் உருவாகியது. சோசலிச நாடுகள் திட்டமிட்டு நாடாளும் முறையைக் கையாண்டன. கம்யூனிச நாடுகளுடன் இதர நாடுகள் செய்யும் வர்த்தகமுறை தனியார் துறை வர்த்தகமில்லை, ஆயினும் அரசினர் நடத்தும் வர்த்தகத் துறையின் மூலம் இதையே கட்டுப்பாட்டினுள் அமைந்த வர்த்தகம் எனக் கூறலாம்.

சோவியத்து நாட்டிலுள்ள அயல் நாட்டு வர்த்தக விற்பனை முற்றுரிமை : முதல் உலகப் போரின் இறுதியில் சோவியத் நாடும் உலகில் மிகவும் சிறிய நிலப்பரப்புடைய நியூசிலாந்தும் ஏறக்குறைய ஒரே அளவில்தான் பன்னுட்டு வர்த்தகம் செய்து வந்தன என்று தெரிகிறது. இப் போரினுல் ருசிய நாட்டு அயல்நாட்டு வர்த்தகம் மளமளவென ஏற்றமெடுத்தது. ருசிய அரசியல் கொள்கையில் அதாவது பொதுவுடைமைக் கொள்கையில் ஈர்த்து

இழுக்கப்பட்ட நாடுகளும் அதில் அடைக்கலம் புகுந்த நாடுகளும் ரசிய நாட்டுடன் அயல் நாட்டு வர்த்தகம் புரிந்துவந்தன. பின்னர் சைனுவுடன் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தது.

அயல் நாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அந் நாட்டு அயல் நாட்டு வர்த்தகத் துறைக்கு மட்டுமே கொடுக்கப் பட்டிருந்தது. இத் துறை நாட்டின் மத்திய அரசு நடத்தும் பல் வேறு துறைகளில் ஒன்ருகும். அயல் நாட்டு வர்த்தகத் துறையின் கீழ் சோவியத் வர்த்தகக் கூட்டணிகளை (Combines) நிறுவி யுள்ளனர். இக் கூட்டணிகள் நேரிடையில் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான எல்லாப் பணிகளையும் மேற்பார்வையிட்டு அவற்றில் அப்பழுக்கின்றி செம்மையான முறையில் நடத்திக் கொடுக்கின்றன. இக் கூட்டணிகளுக்கு இடப்பெற்ற பெயர்கள் வருமாறு: சரக்குகளைத் தனித்து ஏற்றுமதி இறக்குமதி செய்வதால் அந்தச் சரக்கின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 'ட்ராக்டர் நிறுவனம்' 'மர அறுவை நிறுவனம்' முதலியன. மற்றும் சில கூட்டணிகளுக்கு அவைகளைப் பற்றி பரிந்துரைக்கச் சென்ற குழுவின் பெயரைத் தாங்கியிருக்கும். ஃப்ரான்சு நாட்டுடன் வர்த்தகம் புரியும் நிறுவனம், அதே போன்று எந்த நாட்டில் வர்த்தகம் செய்கிறதோ அந்நாட்டின் பெயரில் அமையும். எடுத்துக்காட்டாக 'அம்தார்க்' (Amtorg-Allmope) என்ற நிறுவனம் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் வர்த்தகம் புரிகிறது. இதை ருசிய மொழியில் அமெரிக்கால்காய தர்கோவிப்லியா (Amerukackal Tharckoviblla) என்பர். இதைச் சுருக்கமாக 'அம்தார்க்' என அழைக்கின்றனர். நியூயார்க் மாநில அரசின் சட்டத்தின்கீழ் இதற்கு 1942-ல் இணை புரிமம் வழங்கப் பெற்றது. இதில் பணியாற்றி வருபவர்கள் அனைவரும் ஏற்றுமதிப் இறக்குமதி வர்த்தகத்தில் பெரும் வல்லுநர்களாவர். மாஸ்கோ (Moscow) தலைமைச் செயலகத்திலிருந்து வரும் ஏவல்களுக்கேற்ப இந்த நிறுவனம் நடந்து வருகிறது. தம்மிச்சைப்படி இந்த நிறுவனத்துப் பணியாளர்கள் இயங்க முடியாது.[1]

அயல் நாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் வண்ணம் இந் நாட்டு அயல் நாட்டு வர்த்தகத் துறை ஏற்றுமதி, இறக்குமதிக் கான உரிமம் வழங்கிவருகிறது. சோவியத்து நாட்டுப் பொருளியல் அதன் திட்டங்களையொட்டி அமைந்திருப்பதால் இந்த நிறுவனமும் திட்டத்திற்குள்ளாக மிகவும் சீரிய முறையில் நடை பெறுகிறது. இன்று இந்த நிறுவனத்தை ஒரு பெரும் புதிர்

[1] Enke & Salera—International Economics, III Edition–London, 1957, Dennis Dobson p. 426.

போன்று இதர நாட்டரசுகள் கவனித்து வருகின்றன. அயல் நாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் தொடங்கப் பட்ட இந்த நிறுவனம் அவ் வர்த்தகத்தில் ஏகபோக உரிமை பெற்றுத் திகழ்வதைக் காணலாம்.[1]

**வளர்ச்சியின் வரலாறு**

1920ஆம் ஆண்டிறுதி வரை சோவியத்து நாட்டில் வர்த்தக மின்மை, உள் நாட்டுப் போர், பணவீக்கம் இவை மலிந்து கிடந்தன. அயல் நாடுகளுக்குச் சேரவேண்டிய கடன் பாக்கிகளை நிராகரித்தும், அயல் நாட்டவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்த காரணத்தாலும் பன்னாட்டு அரசியலில் சோவியத்து நாட்டை ஓர் அரசியல் பிரிவாக ஏற்க மறுத்தனர்.

1920ஆம் ஆண்டில் இறக்குமதி அதிகரித்ததால் அயல் நாட்டு வர்த்தக முற்றுரிமை ஆரம்பமாயிற்று. ஆயினும், இவ் வர்த்தகம் மிகவும் குறைவாகவே நடைபெற்று வந்தது. உள் நாட்டில் பொதுவுடைமைப் போர் (War Communism) நடந்த போது இதில் மேம்பாடு நிகழவில்லை. இதன் விளைவாகக் கொள்கையில் திருப்பம் ஏற்பட்டுப் புதியபொருளியல் கொள்கை (New Economic Policy) என்ற கொள்கையின்படித் தனியார் புரியும் அயல் நாட்டு வர்த்தகத்தை அனுமதித்தனர். இம் முறை மிகவும் குறைந்த அளவில் தான் அமலாக்கப்பட்டது. ஆயினும் வங்கிகளையும் திறவு கோல் போன்ற பெரும் தொழில்களையும் அரசினரே நேர்முக மாக நடத்தி வருகின்றனர்.

அயல் நாட்டு வர்த்தகத்தை பு. பொ. கொ. (N. E. P) சமயத்தில் சற்றுக் கட்டுப்பாடின்றித் தனியார்களும் பங்கு கொள்ளும் வண்ணம் அனுமதித்தனர். இதைக் கண்ணுற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் வெகுவாக ஆர்ப்பரித்து கம்யூனிசத்தின் தோல்வி என்று பறைசாற்றிப் பத்திரிக்கைகளில் ருசிய நாட்டின் போக்கை எள்ளி நகையாடின. இக் காலத்திலும் விற்பனை முற்றுரிமை என்ற கவசத்தினுள்தான் எல்லா வர்த்த கங்களும் அனுமதிக்கப்பட்டன. நுகர்வோர், வேளாண்மைத் துறை கூட்டுறவு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு அவை மூலம் அயல்நாட்டு வர்த்தகம் நடைபெற்றது. பு. பொ. கொ. (N. E. P) முடியும் காலத்தினுள் தனியார் தானகவே விலகும் வண்ணம் கடும் வரி தண்டியும், உரிமம் வழங்குதலை நிறுத்தியும், புதுப்பிக்காமலும், கூட்டுறவு நிறுவனங்களை ஊக்குவித்தும் நடத்தி

[1] Charles P Kindleperker—International Economics Revised Edition, 9581, Rechard D. Irwin Inc, Home Wood Ilionoise, p. 254.

வந்தனர். சிற்சில நாடுகளுடைய வர்த்தகத்தைக் கோரி சோவியத்து அரசின் மூலதனத்துடன் இதர நாட்டுத் தனியார் கம்பெனியும் கூட்டாக அமைத்து அந் நாட்டுடன் வர்த்தகம் புரியத் தொடங்கின. இம் முறையில் 20ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலேயே அரசினரின் கட்டுப்பாடுகளை உருவகப்படுத்தும் வகையில் இந்தக் கூட்டு நிறுவனம் நடந்து வந்தது.

வர்த்தக முறையில் விற்பனை முற்றுரிமையைக் கைவிட சோவியத்து நாட்டு அரசு முன்வரவில்லை. சோவியத்து அரசின் நடத்துனர்கள் பலர் விற்பனை முற்றுரிமை மிகத் தொன்மையான முறையென்றும் அதைக் களைந்து அதற்குப் பதிலாகக் காப்பீட்டுச் சுங்க வரி விதிப்பு முறையே மேலென்று (Protective Tariff) கூறினர். ஆயினும் உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சிக்குக் காப்பீட்டுச் சுங்க வரி முறை ஏற்றதன்று என்று நிராகரித்தது. அயல்நாட்டு மானிய முறை உதவிக் கொடையின் (Subsidy) கீழ் அயல்நாட்டு நிறுவனங்கள் தங்கள் பண்டங்களைச் சோவியத்து நாட்டில் இறக்குமதி செய்து திணற அடித்துவிடுவார்கள் என்ற ஓர் ஐயப்பாட்டின் காரணமாகத்தான் இந்த நடத்துனர் அம்மாதிரி காப்பீட்டுச் சுங்க வரி விதிப்பு முறையைப் பரிந்துரைத்துனர். சோவியத்து அரசு இதற்கு ஏற்ப விற்பனை முற்றுரிமையைக் காக்கத் தனியார் வர்த்தகத்தை வரையறுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அகற்றியது.

1928ஆம் ஆண்டினிறுதியில் பு.பொ.கொ. (N. E. P.) முடிவு பெற்று திட்டமிட்ட பொருளியல் முறை மேற் கொள்ளப்பட்டது. சோவியத்துப் பொருளியல் முறையிலேயே ஒரு போற்றத்தகு அங்கமாக அயல்நாட்டு வர்த்தக விற்பனை முற்றுரிமை அமைந்தது. பொருளியல் பரவலாக்கும் முறை (Decentralisation) கைவிடப்பட்டது. பொருளியல் மைய முறை (Centralised Economy), சிறப்பு வர்த்தக முறை (Specialisation) இவைகளைக் கொண்டு வர்த்தக முறை சிறப்பாக நடந்து வருவது தெரிந்ததே.

### சோவியத்து இராச்சிய வர்த்தகமும் வேறுபாடற்ற முறையைக் கையாளுதலும்

1930-1931ஆம் ஆண்டில் உலக முழுவதிலும் பொருள் மந்தம் (Depression) நிலவியபோது சோவியத்து நாடு மட்டிலும் தங்கள் பண்டங்களை இதர நாடுகளில் குவித்துத் திணர அடித்த தாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது பற்றி ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் விவாதித்தபோது சோவியத்து நாட்டுத் தூதர்

கூறியதாவது; சோவியத்து நாட்டின் பொதுத் திட்டத்தை யொட்டிக்கொள்முதல்களும் விற்பனைகளும் தீர்மானிக்கப்பட்டு அதன்அடிப்படையில் நடந்துவருவதால் எவருக்கும் இடையூறு ஏற்படாது என்று வாக்குறுதி கொடுத்தார். ஆயினும் அந் நாட்ட வர்கள் கொள்முதல் முற்றுரிமை (Monopsemy) பெற்று நல்ல இலாபம் பெற்றனர் என்று ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் முறை யிடப்பட்டது.

இராச்சிய வர்த்தக நிறுவனம் என்ற ஓர் அமைப்பு இப்போது எல்லா மாபெரும் நாடுகளிலும் தோன்றியுள்ளது. அண்மையில் பாங்காக் நகரில் நடத்திய கூட்டத்தில் வெகு தூரத்திற்கப்பால் உள்ள கீழை ஆசிய நாட்டின் பொருளியலைப் பற்றிய குழு (For East Asian Economic Commission) இராச்சிய வர்த்தக நிறுவனம் மேன்மேலும் தழைத்தோங்கி வளர்ந்து வருகிறது என்றும், 1963ஆம் ஆண்டில் ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் அயல்நாட்டு வர்த்தகத்தை எடுத்து நடத்த இது மிகவும் பயனுள்ளதாயுள்ளது என்றும் கூறியது.

அயல்நாட்டு வர்த்தகத்தில் நாட்டரசு ஈடுபடுவதற்கு அநேக நோக்கங்கள் இருக்கலாம். நாடாளும் கடமையினின்று இது வேறுபட்டது. அரசின் பல்வேறு கிளைகளுக்கும் அலுவலகங் களுக்கும் தேவையுள்ள பொருள்களை அயல்நாடுகளிலிருந்து கொள்முதல் செய்ய ஈடுபடக்கூடும். ஒரு கட்டாயமான நிலைமையில் (emergency) நாட்டின் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களைக் குவித்து வைத்துக் கொள்ளவும் நாட்டரசு அயல்நாட்டு வர்த்தகத்தை மேற் கொள்ளலாம். நாட்டின் பொதுக் கருவூலத்திற்கு வருவாய் சேர வேண்டும் என்ற நோக்கத்துடன் அயல்நாட்டு வர்த்தகம் புரிந்து வரலாம். உள்நாட்டின் தேவைக்கு மேல் அளவிலா உற்பத்திப் பெருக்குள்ள பண்டங்களை இயல்பான விலையில் உள்நாட்டில் கோர விரும்பாத பொருளை அயல் நாடுகளுக்கு விற்று இலாபம் சம்பாதிக்க விழையலாம். கிடைப்பதற்கரிய இறக்குமதிப் பண்டங்களையும் ஏற்றுமதிப் பொருள்களையும் தானே முன்னின்று பங்கீட்டு (ration) முறையைக் கையாளும் நோக்குடன் அயல் நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடலாம்.

நாட்டின் வர்த்தகச் சரத்துகள் நன்மை பயக்கும் வகையில் அமைவதற்கென்றே நாட்டரசு அயல்நாட்டு வர்த்தகத்தில் தலைமை தாங்கலாம். இறக்குமதி அடக்கவிலையைக் குறைக்க எண்ணிய நாடு அயல்நாடுகளிலிருந்து கொள்முதல் செய்யலாம்.

பன்னாட்டு வர்த்தகச் சட்ட திட்டங்களை மீறும் நோக்கத்துடன் கூட அயல் நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடக்கூடும். உள்நாட்டு உற்பத்திக் கொடைப் பணம் பெற்று அதன் காரணமாய் வேளாண்மைப் பொருள்களை அயல் நாடுகளில் விற்பனை செய்து இலாபம் பெறக்கூடும். வாணிபக் கொடுப்பல் நிலையைச் சரிகட்டத் தேவைப்படும் அயல்நாட்டுச் செலாவணியை ஒழுங்காக வழங்கும் நோக்குடன் நாட்டரசு முன்வரலாம். கிடைக்க இயலாப் பண்டங்களை அயல் நாடுகளிலிருந்து சேகரிக்கும் எண்ணத்துடன் இராச்சிய நிறுவனம் உருவாக்கப்படலாம். உள்நாட்டுத் தொழிலுக்குப் போட்டியாக வரும் அயல்நாட்டுப் பண்டங்களைத் தடுக்கும் நோக்குடன் அயல்நாட்டு வர்த்தகத்தை ஏற்று நடத்தக் கூடும். வர்த்தக முறையில் பேரம் பேசி விலையைத் தீர்மானிக்கத் தக்கவல்லது இராச்சிய வர்த்தக நிறுவனமே.

இடையூறுகள் : உற்பத்தியும், வழங்குதலும் தனியாரிடையே உள்ளபோது உள்நாட்டின் தேவை எவ்வளவு என்பதை இராச்சிய நிறுவனம் கணக்கெடுப்பது சாத்தியமில்லை. தனித்துத் தானே இயங்கும் தனி இறக்குமதியாளர்களுக்குச் சந்தையின் முழு விவரமும் அத்துப்படியாதலால் அவர்கள் நிலைமையை நன்கு சமாளிப்பார்கள். மையமாக அமைந்துள்ள இராச்சிய வர்த்தக நிறுவனத்திற்கு நாட்டின் பல மூலை முடுக்குகளிலுள்ள நிலைமையைக் கற்றறிந்து கொள்ள இயலாது. பல்வேறு தரம், குணம், அமைப்பு இவைகளையொட்டித் தனியார் விலையின் ஏற்றத்தாழ்வை அமைத்து வர்த்தகம் புரிகின்றனர். இம்மாதிரி யான பிரிவுகளை ஒரு மைய நிறுவனம் நன்கு ஆய்ந்து நடத்துமா என்பது ஐயமுற வேண்டியதே !

நாட்டின் வருங்காலத் தேவைகளைப் புரிந்து கொள்ளாது தவறுதலாகக் கணக்கெடுத்து முன்னதாகவே கொள்முதல் செய்து அவைகளைத் தேக்கி வைத்து வீணடித்து நாட்டின் வரிகொடுப் போரின் தலையில் பளுவைச் சேர்த்து வைக்கக் கூடும். சில சமயங் களில் நாட்டின் பற்றுக்குறை நிலையை உண்டுபண்ணக் கூடும். இந்த நிலை வளர்ச்சியுறு நாடுகளில் ஏற்படுவது இயல்பே! நுகர் வோரின் பண்டங்கள் எவ்வளவு தேவைப்படும் என்று கணக்கிட தனிப்பட்ட இறக்குமதியாளர்களே தகுதியுடையவர்கள். அதே போன்று மூலதனப் பண்டங்களைச் சரிவரக் கணக்கெடுத்து நாட்டின் தேவைகளைப் புரிந்துகொண்டு இறக்குமதி செய்யத் தவறி அதனால் நாட்டின் பொருள் நிலைமையை மோசமாக்கக் கூடும். பன்முக வர்த்தகத்தை (Multilateral Trade) ஆதரிக்காது இருமுக வர்த்தகத்தை (Bilateral Trade) மேற்கொள்ள

விழைகிறது. எந் நாட்டில் இந்த நாட்டின் சரக்கை இறக்குமதி செய்ய விருப்பம் உண்டோ அந் நாட்டினருடன் ஏற்றுமதி உடன்படிக்கை செய்ய முயல்கிறது. போட்டியிடும் மனப்பான்மையிருப்பின் விலை குறைவான நாட்டிலிருந்து கொள்முதல் செய்யலாம். அயல் நாட்டு வர்த்தக முறைகள் எளிதில் நடக்கக் கூடியதன்று. அவைகளில் பெரும்பாலும் அனுபவமுடையவர்களும் வர்த்தகப் படிப்பில் நிபுணர்களுமே தீரத்துடன் செயலாற்றக் கூடியவர்கள். இராச்சிய நிறுவனமோ அரசியல் அலுவலர்களால் நடத்தப்படுவது. அவர்களுக்கு என்ன வர்த்தக அனுபவம் இருக்கக் கூடும்! நாட்டுப் பொருளாதார நிலையில் மாற்ற நிலைமையில் இந்த நிறுவனம் நல்ல முறையில் நடந்தி நாட்டின் செல்வ நிலைமையை வீணுக்கக் கூடும்.

வர்த்தகப் போட்டியிருப்பின் நாட்டின் விலையும், வர்த்தகமும் நேர்மையுடன் நடக்கலாம். ஆயினும் இராச்சிய வர்த்தக நிறுவனம் போட்டி முறையை அகற்றி விற்பனை முற்றுரிமையைக் கொண்டுவர முயலும். வர்த்தகத்திலீடுபடுபவர்கள் உடனுக்குடன் முடிவெடுக்க வேண்டியிருக்கிறுர்கள். காலதாமதத்தினுல் கிடைக்கவிருக்கும் பலன்கள் பறிபோய் விடக் கூடும். ஆனுல், இந்த நிறுவனமோ அரசின் ஒரு பாகமானதால் நிதானமாகவே நடக்கக்கூடும். இதனுல் நாட்டின் பொருளாதார நிலைமை வீணுகக் கூடும். ஒரு வளர்ச்சியுறும் நாட்டில் பொதுவாக இம்மாதிரி நிறுவனங்கள் பிற்போக்கு முறைகளில் நடத்தப் பட்டு வருகின்றன. திறமை வாய்ந்த வர்த்தகர்கள் சம்பளத்திற்கு உழைக்க முன்வர மாட்டார்கள். எனவே, தொழில் தெரியாதவர்கள் நிரம்பிய நிறுவனமாகத்தான் இருக்கும். அப்படி சம்பளத்திற்குப் பணியாற்ற முன் வந்தாலும் மத்திய அரசின் உத்தரவுப்படி நடக்க வேண்டும். இந்த நிறுவனத்தில், கைக்கூலி, இச்சகம் பேசுதல், பரிந்துரை போன்ற தவருன முறைகள் மலிந்து கிடக்கின்றபடியால் முன்னேற்றப் பாதையில் செல்லும் என்று கூற முடியாது. அயல்நாட்டு வர்த்தகர்கள் இந்த நிறுவனத்தைச் சற்று ஐயத்துடன் ஒதுங்கி நின்றவண்ணம் வர்த்தகம் புரியக் கூடும்.

தடங்கலற்ற வர்த்தகத்தை விரும்பும் நாடுகள் அரசுடைமையில் வர்த்தகம் புரியும் நாடுகளை வெறுப்புடன் கண்காணித்து வருவது தெரிந்ததே. உலக வர்த்தகத்தின் பெரும் பகுதி அவர்கள் வசம் உள்ளபடியால் அவர்களுடன் விரோதம் செய்து கொண்டால் இந்த நிறுவனம் செயலற்றுப் பயனற்றதாக இருக்கும். வர்த்தகமெனப்படுவது வர்த்தகரின்

தனிப்பட்ட சாதனை என்று கூறுவதில் தவறொன்றுமில்லை. இந்த நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் கூலிக்குப் பணியாற்றுவார்களே அன்றி, தொழிலில் அக்கறையுடன் நடப்பார்கள் என்று கூற இடமில்லை ; அரசன் வர்த்தகனானுன், மக்கள் பிச்சைக்காரர்கள் ஆனார்கள் என்ற மூதுரைக்கேற்ப வர்த்தகத்தில் அரசியல் நுழைந்து சீர்கேடான நிலையில் முடிந்துவிடக் கூடும்.

**நன்மைகள் :** மொத்தமாகக் கொள்முதல் செய்வதால் பல நன்மைகள் உள்ளன. சில்லறையில் வாங்கும் பொருளுக்கு விலை அதிகம். மொத்தமாக வாங்குவதால் விலை குறைவது நியாயமே. மத்திய வர்த்தகர்கள் வந்து தரகு பெற்று அதன் காரணமாக விலை அதிகப்படுத்துவதை இவர்கள் தடுக்கக் கூடும். மிகவும் முன்னேற்பாட்டுடன் விலையை நன்கு கண்காணித்து மொத்த அளவில் கொள்முதல் செய்தல் வேண்டும்; இல்லையேல் வருங் காலத்தில் விலையிறக்கத்தினால் சிரமம் ஏற்பட்டு நட்டம் உண்டாவது திண்ணம். தனியார் துறை இறக்குமதியாளர்கள் அனைவரும் தவறான கணக்கில் இறக்குமதி செய்வார்கள் என்று எண்ணுவது தவறு. பரவலான முறையில் கொள்முதல் செய்ய ஆரம்பித்தால் இந்தச் சிக்கல் தீர்ந்து போகும். இராச்சிய நிறுவனம் தனிப்பட்ட வர்த்தகர்களைக் காட்டிலும் பிழையின்றிக் கணக்கிட்டு எவ்வளவு இறக்குமதி செய்ய வேண்டும் என்று அளவிட முடியும். நாட்டின் திட்டத்திற்கேற்ப மொத்தக் கொள்முதலைச் சீர் செய்துகொள்ள இயலும், பற்றாக்குறையேற் படாது. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை நன்கு நடத்துவதற்கு வர்த்தகத்தினால் செய்ய முடியும் என்று சொல்ல முடியாது. ஆயினும், இந் நிறுவனத்தால் முடியும். வங்கி முறை, கப்பல் போக்குவரத்து, காப்பு முதலிய துறைகளை எடுத்து நடத்த முடியும்.

தனிப்பட்ட இறக்குமதியாளர்கள் தொன்றுதொட்டு நடந்து வரும் வர்த்தகம் தொடர்பான சரக்குகளையும் பண்டங்களையுமே இறக்குமதி செய்து வருவர். ஆயினும் இராச்சிய வர்த்தக நிறுவனம் புதிய துறைகளிலும் புதிய பகுதிகளிலும் வர்த்தகம் புரியக் கூடும். தனியார் செய்து வரும் இறக்குமதிகளில் பற்பல இடையூறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக ஊக வர்த்தகம் (Speculative) நடைபெறுகிறது. இதனால் நுகர்வாளர்கள் அதிகப் படியான விலை கொடுத்துச் சரக்குகளை வாங்கவேண்டி ஏற்படு கிறது. வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் குறை பாட்டை இராச்சிய வர்த்தக நிறுவனத்தால்தான் சரிகட்ட இயலும் எனக் கூறலாம். இராச்சிய வர்த்தக நிறுவனம் பங்குவிதிப்பு

முறையிலும் மேலானது. இராச்சிய வர்த்தகம் பண்டத்தின் மதிப்பு, விலை இவற்றைப் பொறுத்துக் கொள்முதல் அளவைத் தீர்மானிக்கலாம். உலக விலைக்கும் உள்நாட்டு விலைக்கும் உள்ள விலை ஏற்ற, இறக்கத்தை நாட்டின் பொதுக் கருவூலம் ஏற்றுக் கொள்ளும்.

சு. வ. ச. பொது ஒப்பந்தமும் இராச்சிய வர்த்தக நிறுவனமும் (G. A. T. T. and State Trading)

சுங்கம், வர்த்தகம் தொடர்பான பொது ஒப்பந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளும் இராச்சிய வர்த்தக நிறுவனத்தின் கொள்கைகளும் பொருந்தாதவை. நாட்டின் வர்த்தகத்தை நாட்டரசு ஏற்றுக் கொண்டால் வர்த்தகத்திற்கு ஏற்படும் இடையூறுகளை நீக்க உண்டாகும் ஒப்பந்தங்கள் பயனற்றவையாகி விடும். ஏனெனில், நாட்டரசு மிகுதியான அளவில் கொள்முதல் செய்யவும் விற்பனை செய்யவும் வேண்டும். மேற்படி நாடுகளில் ஏற்றுமதி இறக்குமதி அளவுகளைத் தீர்மானம் செய்வது ஒரு பொது கொள்கையை ஒட்டி நிகழ்கிறது. வர்த்தக ஏற்றுமதி இறக்கு மதிக்குத் தடங்கல்கள் ஏற்பட்டாலும் ஏற்படாவிடினும் அந் நாட்டினருக்குக் கவலை இல்லை. தனியார் வர்த்தகத்தில் தடங்கல்கள் இல்லாதிருப்பின் பெருமளவில் வர்த்தகம் நடை பெறும். அதேபோன்று நாட்டரசு வேற்றுமைக் கொள்கையைப் புகுத்தாது என்று வாக்குறுதி கொடுப்பின் அதன் முழுப் பலனும் காணவேண்டுமாயின் நாட்டின் வர்த்தகம் தனியார் துறையில் தான் இருக்கவேண்டும். இல்லையேல் அவ்வாறு கொடுக்கும் வாக்குறுதி நியாயமற்றது. வர்த்தகத்தின் நிறுவனம் அரசுடைமை யாக இருக்கும்போது பிறிதொரு நாட்டின்மீது வேற்றுமைக் (discrimination) கொள்கையை வகிக்கலாம். அவ்வகையான வேற்றுமை ஆட்சிக் கொள்கை (administrative) சுங்க முறை யெனக் கருத இட்முண்டு. அம்முறையான சுங்க வரி விதிப்பின்கீழ் எடை எண்ணிக்கைக் கட்டுப்பாடு கொண்டுவரப்படும். நாட்டின் உற்பத்தி தனியார் கையிலும், வர்த்தகம் முழுமையும் அரசின் மேற்பார்வையிலும் இருப்பின் நாட்டரசு உற்பத்திக்குக் காப்பளிக்கும் இம் முறையின்கீழ் அயல் நாட்டிலிருந்து செய்த இறக்குமதிப் பண்டங்களை உபரி விலைக்கு விற்கும். உள் நாட்டின் உற்பத்திப் பண்டங்களைத் தக்க போட்டி நிலையில் விற்கும் நோக்குடன் இறக்குமதிப் பொருள்களை மிகவும் குறைவான விலைக்கு உள் நாட்டில் விற்பனை செய்யக் கூடும்.

ஒரு நாட்டின் அயல் நாட்டு வர்த்தக மொத்த அளவில் சிறு பகுதியான நாட்டரசு வர்த்தக நிறுவனம் அமைந்தால் அது

ஏற்றுக்கொள்ளத் தகுந்தது. தனியார் துறை வர்த்தகத்தில் தலையிடும் அரசியலின் சுதந்தர அமைப்பு என்ற வகுப்பின் கீழ் பொது ஒப்பந்த விதி 17-ன்கீழ் வர்த்தக நிறுவனத்தின் சட்ட திட்டங்களைக் கொண்டு வரலாம்.[1] ஒப்பந்த விதி 17-ன்கீழ் அரசின் வர்த்தக நிறுவனத்தின் கோட்பாடு விளக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் இராச்சிய வர்த்தக நிறுவன முறையை உள் நாட்டிலோ, அல்லது அயல் நாட்டிலோ மற்றும் ஏற்றுமதி இறக்குமதி முதலியவற்றில் ஈடு பட்டால், தனியார் வர்த்தகத்தைப் பாதிக்காத அளவில் நடந்து வேற்றுமை கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் வஞ்சிக்கும் (discrimination) முறையைக் கையாளுதல் கூடாது என்று பொது ஒப்பந்தத்தில் (General Agreement) கூறியுள்ளது.[2] இராச்சிய வர்த்தக நிறுவனங்கள் கூட வர்த்தக முறைகளுக்கேற்ப விலை, குணம், எடை, வர்த்தகம் செய்யத்தகு நிலை, போக்குவரத்து, கொள்முதல் விற்பனையை யொட்டித் தான் நடந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இதர வர்த்தக நிறுவனங்களும் ஒப்பந்தப்படி நடந்துகொள்ளப் போதிய காலமும், பழக்கவழக்கத்தையொட்டி விற்பனை, கொள்முதல் விலை இவைகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம். இவ் விதிகளை ஏற்காது எந்த நிறுவனமும் தம்மிச்சைப்படி நடக்கக்கூடா தென்றும், அரசின் கொள்முதலில் இந்தச் சட்டம் அமலாக்க வேண்டியதில்லை.[3] உள் நாட்டுற்பத்தியிலும் இதை ஏற்கவேண்டி டியதில்லை. ஒப்பந்தத்திற்கு வரும் நபர்களுக்கோ நிறுவனங் களுக்கோ போதிய நியாயமான முறைகளின் கீழ் உதவிபுரிதல் வேண்டும். தனியார் வர்த்தகத்தில் அடிக்கடி இம்மாதிரியான வேற் றுமைகள்(discriminations) காணப்படுகின்றன. வர்த்தகக்காரணங் களை யொட்டி பண்டங்களின் தேவையின் சுருங்கி விரியும் தன்மை பல்வேறு சந்தைகளில் பல்வேறு மாற்றங்களுடன் அமைகிறது. இராச்சிய வர்த்தக நிறுவனங்கள் வர்த்தக முறையில் விலை மாற்றத்தை நடப்பில் கொண்டு வரலாம். அரசினர் வர்த்தக நிறுவனங்கள் வர்த்தகத்தில் போட்டியுடன் பேரம் செய்யும் முறையைக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாதது. விற்பனை முற்றுரிமை சக்தி கிடைத்தவுடன் எந்தவிதமான நேர்மையான முறைக்கும் ஈடுபடாது பொருளாதார

[1] Clar Willcocks—A Centre for World Trade (New York, '49), p. 97, 93.

[2] Clar Willcocks—A Centre for World Trade (New York, '49), Section 17-1.

[3] Clar Willcocks—A Centre for World Trade (New York, '49), Section 17-2.

அடிப்படையில் நாட்டின் வர்த்தகம் அமைக்கப்படாது போய் விடும். விற்பனை முற்றுரிமைக் காலத்தில் அனைத்தும் தாமாகவே நடந்துவரக் கூடும். அதிகாரச் சக்தியைப் பயன்படுத்தி, முற்றுரிமையின் பலன்களைக் கையாளவே எண்ணம் தோன்றும். தாமாகவே தம்மை ஏமாற்றிக் கொள்ளும் வகையில் சட்ட திட்டமிட விரும்பினாலும் எதிர்ப்புகள் ஏற்படக் கூடும்.[1]

இராச்சிய வர்த்தக நிறுவனங்கள் பொதுவாக வேற்றுமை காட்டாதிருத்தலை (onn-iscerimination) சிரான முறையில் அமலாக்குவதில் சில இடையூறுகள் உள்ளன. ஆழ்ந்த கருத்துகளை எடுத்துக் காண்பிக்கும் அளவில் அடக்கவிலைக் கணக்கு முறையைக் கொண்டுவரின் வேற்றுமைகாட்டலைக் கடைப்பிடிக்கலாம். ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் இந்தத் தகவல்களைக் கொடுக்க வேண்டுமென்ற கடமை பெற்றவர்கள் அல்லர். அப்படியே அடக்கவிலைக் கணக்கை வெளியிட்டாலும் இதர நபர்கள் இவற்றைத் திரித்து வேறு கொள்கையின் காரணம் வெளி யிட்டனர் என்று கூறக் கூடும். நம்பிக்கையும் நல்லெண்ணமும் உருவாகும் நிலைக்கு இராச்சிய வர்த்தக நிறுவனங்கள் வேலை செய்தால் வேற்றுமை காட்டும் முறையை அகற்றிவிடலாம்.

ஒப்பந்தத்தில் இறங்கும் நபர்கள் இந்த இராச்சிய வர்த்தக நிறுவனம் தங்களுடைய வர்த்தகத்தை வீணாக்கிவிடும் என்ற எண்ணம் அவர்களிடையே நிலவி வருவது தெரிந்ததே. இராச்சிய வர்த்தக நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதி, இறக்குமதிக் கான வர்த்தகர்கள் தகவல்களைத் தெரிவித்துக் கொள்ளலாம். ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட எந்த நபரும் மிகவும் தேவை யான தகவல்களை வெளியிட வேண்டிய கட்டாயம் இல்லை. குறிப்பாக அவ்வாறான தகவல்கள் வர்த்தகத்தைப் பாதிக்குமென இருப்பின் அவ்வாறான தகவல்களை வெளியிட வேண்டிய தேவையில்லை.

**தனியார் துறை வர்த்தகரும் மத்திய திட்டப்படியுள்ள பொருளாதார நிலையாருக்கும் இடையே நடக்கும் வர்த்தகம்:** நடப்பில் உள்ள சு. வ. பொ. ஒ (G.A.T.T) விதிகளின்கீழ் அயல்நாட்டுடன் சிறிதளவு வர்த்தகத்தை இராச்சிய வர்த்தக நிறுவனத்தின் மூலம் நடத்த முடியும். ஆயினும் தனியார்துறை வர்த்தகர்கள் மத்திய திட்டப்படியுள்ள பொருளாதார அமைப்பிலுள்ள வர்த்தகத்தை நடத்த முடியும்.

[1] League of Nations—Trade Relations between Free Markets & Controlled Economics, (Geneva, 1943), p. 81.

# 11. மிகப் பரிவு காட்டப்படும் தேசத்தைப் பற்றிய பிரிவு

## (Most favoured Nation Clause)

மிக அதிக அளவில் பரிவு காட்டப்படும் தேசம் எனக் கூறும் வர்த்தகர்களின் பொருள் வேறென்று. தனிப்பட்ட முறையில் எந்த விகமான சலுகை காட்டப்படும் என்ற பொருளில் நோக்க யியலாது வேற்றுமை காட்டும் மனப்பான்மையை அகற்றிய நிலையை விளக்குகிறது. சமநிலையில் வர்த்தகப் போட்டி நடப்ப தில்லை எனலாம். ரிச்சர்ட்டு கல்பர்ஸ்தன் (Richard Culbertson) கூறியது போல மிகப்பரிவு காட்டப்படும் தேசம் எனக் கூறுவதைவிடச் சமமாகப் பரிவு காட்டப்படும் தேசம் எனலாம். இவ்வேறுபாட்டின் விளக்கமும் சரியில்லை. ஏனெனில் சம மதிப் புடன், நாடுகளிடையே போட்டி நிகழவில்லை. உற்பத்தி அடக்க விலையில் ஏற்படும் வேறுபாட்டை நீக்க முயல்வதில்லை. ஒப்பந்தத் தில் சேரும் நாடுகளுடன் சமமதிப்பில் வர்த்தகம் புரிய உதவு கிறது.

ஒவ்வொரு நாடும், பிற நாடுகளில் தாம் செய்யும் வர்த்தகத் தைச் செம்மையான முறையில் நடத்துவதையே விரும்புகின்றன. ஒரு நாட்டிற்கு அளிக்கப்படும் சலுகை தன் நாட்டிற்கும் அளிக்கப் பட வேண்டும் என்று ஒவ்வொரு நாடும் கோருகின்றன. இதனால் போட்டி வர்த்தகத்தில் வேற்றுமை காட்டும் மனப்பான்மை நீங்கும் எனக் கருத இடமுண்டு. இதன் விளைவாக மிகப் பரிவு காட்டப்படும் தேசத்தைப் பற்றி பரிவு வழக்கத்தில் வர ஆரம்பித்துள்ளது.

‘ இரு நாடுகள் தம்மில் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளும் போது அந்த ஒப்பந்த எழுத்தோலையில் இந்தப் பிரிவு எழுதப் படுகிறது, இந்த ஒப்பந்தத்தின் விளைவாக இரு நாடுகளும் பல்வேறு சலுகைகலையுல் அவர்களுடைய பண்டங்களின் மீதுவ்,

அவர்களுடைய வர்த்தகப் பதில் ஆள்களுக்கும் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கொடுத்து உதவுவார்கள். இதனுல் அந்த ஒப்பந்தத்தின் காரணமாக இவ்விரண்டு நாடுகளுக்கிடையே தொடர்ந்து இலாபமுள்ள வர்த்தகம் நடைபெறும் எனலாம்.' ஸ்னேடர் இவ்வாறு விளக்கம் தந்துள்ளார்.

தடங்கலற்ற பன்முக வர்த்தகம் கடந்த 1930ஆம் ஆண்டுக்கு முன் தடைபெற்றவுடன் ஒவ்வொரு நாடும் இதர நாடுகளுடன் தொடர்பு கொண்டு இருமுக (Bilateral) வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. இருமுக வர்த்தக ஒப்பந்தம் செயற்கைப் பொருளாதாரமற்ற வழிகளில் வர்த்தகம் போகக் கூடும். இருமுக (Bilateral) வர்த்தக ஒப்பந்தங்களால் ஏழ்மையுள்ள நாடுகளேப் பயன்படுத்தி அவைகளேக் குறைந்த விலேக்கு விற்கும்படி செய்ய முன் வருகின்றன.

மிகப் பரிவு காட்டப்படும் நாட்டைப்பற்றிய பிரிவின் இன்றி யமையாத தன்மையை இங்கு விளக்குவோம். இதன் மூலம் இருமுக வர்த்தக ஒப்பந்தங்களால் ஏற்படக் கூடிய நட்டங்களேயும் சிரமங்களேயும் நீக்கிவிடலாம். பரிவு காட்டும் நாடு எளிமை யுள்ள நாட்டைத் தேவையின்றிக் கட்டுப்படுத்தாது. அந்நாட்டின் நல்லெண்ணத்தைப் பெறும் நோக்குடன் தக்க உதவிகளேக் கொடுக்க முன்வரக் கூடும். இந்தப் பிரிவின்கீழ் இறக்குமதிகளுக்கு மிகவும் குறைந்த அடக்கவிலேகளில் கிடைக்கும் இருமுக வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் தம்மிச்சைப்படி ஏற்றுமதி செய்யும் நாடு அடக்கவிலேயை அதிகப்படுத்தி அனுப்பக் கூடும்.

**இப் பிரிவின் இன்றியமையாத தன்மை**

(i) இந்தப் பிரிவின் கீழ் எல்லா நாடுகளும் பொதுவாக சார்பின் கீழ் அல்லது சார்பின்றி முடிவு செய்து கொள்ளும்,

(ii) கட்டுப்பாட்டுக்குள்ளாகவோ அல்லது வரையறை யின்றியோ,

(iii) ஒன்றையொன்று இருமுக வர்த்தகத்துள்ளோ அல்லது மாற்றியோ அமைத்துக் கொள்ளும். சார்பின் கீழ் உள்ள ஒப்பந்தமாயின் இதில் அமையும் நாடுகள் ஒவ்வொன்றும் மற்ற நாடுகளுக்குப் போதிய சலுகைகள் (Concessions) கொடுக்க முன்வரும். இது உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் இல்லாத மூன்ரும் நாட்டிற்கு இந்த சலுகைகள் காட்டப்படமாட்டா. தரும சிந்தனேயுடன் காட்டப்

படின் அதனால் ஏற்படும் நட்டத்தைப் பற்றிக் கவலையுறாது ஒப்பந்த நாடுகளுக்கும் அந்தச் சலுகைகளை எதிர்ப் பயனின்றிக் கொடுக்க வேண்டும். இந்தப் பிரிவின் கொள்கை என்னவெனில் ஒப்பந்தத்தில் ஈடுபட்ட ஒரு நாடு மேற்படி வர்த்தகத்தில் ஈடுபட நேரிடின் அதற்கான சலுகைகள் கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டும். ஒரு மூன்றாம் நாட்டிற்கு அல்லது தொடர்பில்லாத நாட்டிற்குக் காட்டப்படும் சலுகைகள் இந் நாட்டிற்கு எதிர் ஈடின்றிக் (Compensation) கொடுக்கப்பட வேண்டும். மிகவும் வரையறுக்கப்பட்ட பிரிவின் கீழ் இந்த ஒப்பந்தம் குறிப்பிட்ட ஏதோ சில சரத்துகள் வரையிலும் நாட்டின் சில பொதுக் கொள்கைகள், சில குறிப்பிட்ட நாடுகள், சில குறிப்பிட்ட பண்டங்கள் இவைகளைப் பற்றி எழுது வார்கள்.

**பேரம் புரியாத நாடுகளைப் பற்றிய கொள்கை (Non-bargaining Countries)**

மிகவும் குறைந்த அளவுத் தீர்வை விதித்துள்ள நாடு, பிற நாடுகளுக்குச் சலுகைகள் காட்டவிருப்பப்படாவிடினும்கூட அந்நாட்டிற்கு மி. ப. கா. பிரிவைக் கடைப்பிடித்தல் நலம். மிகப் பெருமளவு தீர்வை விதித்துள்ள நாட்டைப்பற்றி என்ன செய்தல் நலம் என்று பேராசிரியர் ஏபர்லர் (Professor Haberler) வினவுகிறார். அம்மாதிரி நாடுகளுக்குக் காட்டப்படும் மி. ப. கா. பிரிவை நீக்க முயல வேண்டும். அம் மாதிரி நாடுகள் நேர்முகமாக (directly) சலுகைகள் அளிக்க உறுதியளிப்பின் மி. ப. கா. பிரிவை அவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

**மி. ப. கா. பிரிவைச் செயல்படுத்துதலில் சில முக்கிய இடையூறுகள்**

**பங்கு விதித்தல்:** 1860-1914ஆம் ஆண்டுகளில் இந்த மி. ப. கா. பிரிவை ஆதரிக்க எல்லா நாடுகளும் முன் வந்தன. குறிப்பிட்ட சில விதி விலக்குகள் போக சுங்க வரித்தீர்வை மட்டும் எதிர்ப்பாக இருந்தது. அளவுக் கட்டுப்பாட்டினை யொட்டி (Quantitive. Restriction) இந்தப் பிரிவு பயனாகவில்லை. பங்குவிதிப்பு முறை தீர்வைகளின் முக்கியத்தைப் போக்கி அதன் காரணமாக இந்தப் பிரிவின் செயலாக்கம் கட்டுப்படுத்தப் படுகிறது. எல்லா நாடுகளும் சமநிலை அல்லது தகுதி என்ற கொள்கையைப் பரப்பிவரும் இப் பிரிவை இந்தப் பங்குவிதிப்பு அடியோடு மாற்றிவிடுகிறது. பங்குவிதிப்பு முறை சமமாக

(equal), உலகமனைத்தும் (global) அல்லது விகிதப்படி (Proportional) என்ற மூன்று வகைகளாக அமையக் கூடும். சமமான பங்கு விதிப்பின் கீழ் ஏற்றுமதியாளர்கள் அனைவருக்கும் ஒரே அளவில் பங்கு அளவு கொடுப்பதுதான் உலகமனைத்துமுள்ள நாடுகளுக்குப் பங்கு அளவு கொடுத்து வேற்றுமை மனப்பான்மையின்றிப் பங்கீடு செய்வதாகக் கருதப்படும். ஏற்றுமதியாளர் இந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் அளவில் விகிதப்படுத்தி ஏற்றுமதிப் பங்கு முறை அமைத்தல். பங்குவிதிப்பு முறை மி. ப. கா. பிரிவின்கீழ் வரின் வேற்றுமை மனப்பான்மை நீக்கமுறும்.

**அன்னியச்செலாவணிக் கட்டுப்பாடு (Foreign Exchange Control):** எல்லா ஏற்றுமதியாளர்களும் தாங்கள் பெற்ற அன்னியச் செலாவணியைத் தத்தம் நாட்டு மத்திய வங்கி நிறுவனத்தில் வைப்பாக வைத்து அதற்கீடாக உள்நாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது மத்திய அரசின் உத்தரவு. அநேக இறக்குமதியாளர்களின் தேவைக்கேற்பச் செலாவணியைப் பங்கு விதித்து மத்திய அரசு மத்திய வங்கியின் மூலம் வழங்குகின்றது. இதன்கீழ் வேற்றுமை மனநிலை உருவாகிறது.

**முழுமையான பண்ட விவரங்களடங்கிய சுங்க வரி விதிப்புப் பட்டியல் (Refinement of Tariff Classification)**

பண்டங்களின் இலக்கணம் கூறுவதில் ஏற்படும் இடையூற்றைப் போக்கும் நோக்குடன் பிறிதொரு நாட்டிற்குச் சலுகைகள் கொடுப்பது நீக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் சுங்க வரிப் பட்டியலை முழு விவரங்களுடனும் பண்டங்களின் பற்பல வகைகளுடனும் விளக்கமாக வெளியிடக் கூடும். இதன் காரணமாக மி. ப. கா. (M. F. N.) பிரிவினையை நீக்கிவிடலாம்.

**பண்ட மாற்று ஒப்பந்தங்கள்**

பண்டங்களுக்குப் பதிலாகப் பண்டங்களையே மாற்றிக் கொள்வதால் பிறநாட்டவர்களது ஏற்றுமதிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஒன்றுமில்லை. எல்லா நாடுகளையும் சமமாக நடத்தும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட மி. ப. கா. பிரிவை நடைமுறையில் செயல்படுத்தாவண்ணம் இருக்க ஒவ்வொரு நாடும் தனது வர்த்தகக் கொள்கையை (Commercial Policy) அமைத்துக் கொள்கிறது. உலக வர்த்தகம் அதிகரிக்கும் இந் நாளில் எந்த நாடும் பிற நாடுகளுடன் சமமாக நடத்தப்படுவதையே விரும்புகிறது. தத்தம் ஏற்றுமதிகளைப் பெருக்க

என்ன வழிகள் உண்டென்பதையே ஆலோசிக்கின்றன. உள்நாட்டு வர்த்தகத்தை உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கே விட்டுவிட முயல்கின்றன. இதனுல் வாணிபக் கொடுப்பல் நிலையில் சமன்பாடின்மை உருவாகிறது. அம்மாதிரி நிலை தோன்றியதும் வர்த்தகக் கட்டுப்பாடுகள், திணறிக் கொட்டல், கொடை முறைகள் போன்ற முறைகளைக் கையாளுகிருர்கள்

மி. ப. கா. பிரிவிற்கு விதிவிலக்குகள் (Exception to M. F. N. Clauses)

ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் கீழ்க் காணும் விதிவிலக்கு முறைகளைக் காணலாம்.

எல்லைப் போக்குவரத்து (Frontier Traffic) : தேசிய எல்லைகளுக்குள் வாழும் மக்கள் அருகிலுள்ள மக்களுடன் வர்த்தகம் புரிகிருர்கள். இவ் வர்த்தகத்தைத் தடை செய்வது மிகவும் கடினம். அம் மாதிரியான வர்த்தகத்தைத் தடை செய்யாது நடந்து வரும்படி ஒப்பந்தம் செய்துகொள்ளுதல்.

சுங்க வரிக் கூட்டு நிறுவனம் (Customs Union) : இதைப் பற்றிய விவரங்களைத் தனிஅதிகாரத்தில் நன்குவிளக்கியுள்ளோம்.

வட்டார விதிவிலக்குகள் (Regional Exceptions) : வரலாறு, கலாச்சார, மொழி வேற்றுமைகளுள்ள வட்டாரங்களை விதி விலக்காகக் கூறுவார்கள். இது பண்டைய ஏகாதிபத்தியக்(Impenalitising) கொள்கையின் அடிப்படையில் உருவாயிற்று எனக் கூறுவர்.

சுகாதார விதி விலக்கு (Sanitary Exception) : இது பொருளாதாரமற்ற சமூக விதிவிலக்கெனலாம். ஒரு நாட்டில் பரவியுள்ள தொற்றுநோய் மற்றவிடங்களில் பரவாதிருக்கப் பிற நாடுகளின் வர்த்தகர்கள் நுழையக் கூடாதென்று தடுத்தல். இதை விதிவிலக்காக மி.ப.கா. பிரிவிற்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்ருர்கள்.

தேசிய மீன்கள் வர்த்தகமும் கடற்கரை வர்த்தகமும் விதி விலக்கு (Exceptions for National Fisheries and Coastal Work) பொதுவாக எல்லா நாடுகளும் இதை ஏற்றுக் கொள்கின்றன.

**திணறிக் கொட்டலின் எதிர்ப்பு முறைகள்** (Anti-dumping Speeches: ) மி.ப.கா. பிரிவின் கீழ் ஏற்றுக் கொண்டுள்ள நாடுகள் தமதிச்சைப்படி மானியங்கள் அல்லது கொடைகள் வழங்கிக் தனது ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்றன. இது திணறிக் கொட்டல் முறையைக் கடைப்பிடித்தல் முறையன்று. எனவே சுங்கவரி விதிப்பில் சற்றுச் சலுகைகள் காட்டித் தனக்கு வேண்டிய நாடுகளுக்கு உதவியளிக்கின்றனர்.

**பன்முக வர்த்தகக் கூட்டங்கள்** (Multilateral Conventions) ; வர்த்தகச் சுவர்களைக் குறைத்து அதிகப்படியான நாடுகளைப் பன்முக வர்த்தகத்தில் பங்கெடுக்கும் படியாகத் தூண்டி அவைகளை மிகவும் பரிவு காட்டப்படும் தேசத்தைப் பற்றிய பிரிவினின்று நீக்கம் பெற்றுத் தம்முடன் வர்த்தகம்புரிய முயற்சி செய்து அதன் மூலம் இந்த மி.ப.கா. பிரிவைப் பயனற்றதாகச் செய்ய முற்படுகின்றனர்.

# 12. திணறிக் கொட்டல்
## (Dumping)

**முகவுரை**

அயல் நாட்டில் உற்பத்தியாகும் பண்டத்தை இந் நாட்டின் உற்பத்தி விலையைக் காட்டிலும் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதாகும். உள் நாட்டில் விற்பனை விலையிலும் விற்க முன்வரக் கூடும். அதனால் போக்குவரத்துச் செலவுகள் மட்டும் இல்லாது போகும்.[1] உள்நாட்டு விலையையும் அயல் நாட்டு விலையையும் ஒப்பிடும்போது சில குறிப்புகளை மனதில் வைத்துக்கொண்டு கவனிக்க வேண்டும். இல்லையேல் காரணமற்ற முறையில் திணறிக் கொட்டல் தடுப்பு முறையைக் கையாளுவார்கள். முதன் முதலாக, குறிப்பிட்ட காலவரையறையுள் இரு நாட்டு விலைகளை ஒப்பிட்டுப் பார்த்தல் இன்றியமையாதது எனலாம். கால மாற்றத்தால் விலைகள் மாறுவது இயல்பே. இது ஒப்பந்தம் செய்துகொண்ட சமயத்திலிருந்து சரக்கு இறக்குமதியாகும் சமயம்வரை உள்ள காலஅளவைப் பொருத்தது.

இரண்டாவதாக, உள்நாட்டு விலையை ஏற்றுமதி விலையுடன் (கப்பல் கட்டணம் நீங்கலாக) ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஏற்றுமதி விலையில் கட்டணம், காப்பீட்டுக் கட்டணம் மற்றும் அடக்க விலை இவை ஒருங்கே சேர்த்துள்ளதால் உள்நாட்டு விலைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு காப்பீட்டுக் கட்டணம், கப்பற் செலவு, அடக்க விலை (C.I.F.) இவற்றைக் குறிக்கும். ஏற்றுமதி விலை உள்நாட்டு விலையைவிடக் குறைவாக இருப்பின் தீர்மானமாக அயல்நாட்டு உற்பத்தியாளர் திணறிக் கொட்டல் (dumping) முறையைக் கையாளுவர். ஏற்றுமதி விலைக்கும் உள் நாட்டு விலைக்கும் உள்ள வேற்றுமையைச் சீராக நோக்கும் முறை யாதெனில் ஒரு தொழிற்சாலை நுழைவிடத்தில் கொணர்ந்து

[1] G. Haberler—The Theory of International Trade, (London, 1956) p. 296.

வைக்கப்பட்ட உற்பத்திப் பண்டத்தின் விலை என்னவாகுமோ அதைத்தான் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். உள்நாட்டு விலையில் கூட இடத்திற்கு இடம் வேறுபாடு காணப்படுவது உண்டு. மூன்றாவதாக தனிப்பட்ட முறையில் காணப்படும் காரணங்களால் அயல் நாட்டு வர்த்தகம் தோன்றக் கூடும். ஒரு நாட்டில் தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் கூலியில் வேறு பாடு உள்ள காரணத்தால் கூட அயல் நாட்டிலிருந்து இறக்குமதி அல்லது இங்கிருந்து ஏற்றுமதியாகக் கூடும். கட்டுச் செலவு (cost of packing) ஏற்றுமதியில் உள்நாட்டு விற்பனையில் உள்ளதைவிடக் கூடுதலாக இருக்கும். மிகவும் கவர்ச்சியுள்ளதாகவும், நீண்டநாள் பிரயாணத்தில் வீணாகாது காப்பாற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் உயர்ந்த முறையில் கட்டித் (pack) தர வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஏற்றுமதி விலை கூடுவதற்கான மற்றொருகாரணம் என்னவெனில் பல்வேறு ஆபத்து ஏற்புகளைத் (risk securing) தாங்க வேண்டியுள்ள படியால் விலை அதிகமாகக் காணப்படும். திணறிக் கொட்டலின்றி அயல் நாட்டு விற்பனைகள் பெருவாரியாக உள்நாட்டு விற்பனையினும் கூடுதலாக அமைந்தால் அயல்நாட்டு விலை குறைவாக இருக்கும். அதே போன்று சுங்கவரி, தீர்வை முதலியவை அறவே நீக்கப் பெற்றிருப்பின் ஏற்றுமதி விலைகள் குறைவாகவே உள்ளன. அந்த நிலையிலும் திணறிக் கொட்டலைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையில்லை.

யேபர்லர் (Haberler) வினரின் (Vinar) இலக்கணத்தையே இங்கு விவரித்துள்ளார். 'இரு சந்தைகளுக்குள் (markets) உள்ள விலை வேற்றுமை காட்டும் தன்மையே (Price discrimination) திணறிக் கொட்டல் (dumping) எனலாம்'.

### திணறிக் கொட்டலின் வகைகள்

இது அடுத்தடுத்துத் திணறிக்கொட்டல், தொடர்ந்து திணறிக் கொட்டல் என இருவகைப்படும்.

**அடுத்தத்துத் திணறிக் கொட்டல் (Intermitting Dumping):** இதன் பொருளாவது சிற்சில காலத்தில் அயல் நாட்டு விலை உள் நாட்டு விலையைவிடக் குறைவாக இருக்கும் பொழுது அயல் நாட்டுச் சரக்குகளின் விற்பனை அதிகரித்து இம் முறையில் திணறிக் கொட்டப்படும். சந்தையுடன் தொடர்பு கொள்ளும் நோக்கத்துடன் விலைகள் தற்காலிகமாகக் குறைவாக வைக்கப் படும். சந்தையில் இடம்பிடிக்கும் நோக்கத்துடன் விலை குறைக்கும் முறை கையாளப்படும். போட்டி மனப்பான்மையை

உருவாக்கும் நோக்கத்துடன் திணறிக் கொட்டல் முறையைப் பழக்கத்தில் கொண்டுவரக் கூடும். தற்போது சந்தையிலுள்ள அயல் நாட்டு வர்த்தகப் போட்டியாளரை வெளியேற்றும் நோக்கத்துடன் இம் முறை அமலாக்கப்படும். உள் நாட்டில் ஏற்படும் அளவுகடந்த உற்பத்திப் பெருக்கினை ஈடுகட்ட வல்ல தேவை நேரிடாத காரணத்தால் திணறிக் கொட்டல் முறையைக் கையாளக் கூடும். இம் முறையான திணறிக் கொட்டல் இறக்குமதி செய்யும் நாட்டிற்கு இடையூற்றை உண்டாக்குகிறது.

தொடர்ந்த அல்லது நிரந்தரத் திணறிக் கொட்டல் (Peresistent-Dumping): அயல் நாடுகளில் நிரந்தர விற்பனை செய்ய முயலுதல் அந் நிலையை அடைய உள் நாட்டு விலையைவிட இன்னும் குறைத்து மிகத் தாழ்ந்த விலையில் வெளிநாடுகளில் விற்பனை செய்ய ஆரம்பித்தல். ஒவ்வொரு பண்டத்திற்கான தேவை வட்டக் கோட்டிலும் (demand cuvre) ஏற்ற, இறக்கத்தையொட்டி அயல் நாடுகளில் விற்பனை அதிகரிக்கவோ குறையவோ செய்யும். குறிப்பாக ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் தேவை உள்நாட்டில் நெகிழ்வற்றும் (inelastic) இதர நாடுகளில் அதிக நெகிழ்வுடன் (elastic) இருப்பின் அப் பண்டத்திற்குக் குறைந்த விலையில் அயல் நாடுகளில் பெருவாரியாக விற்பனை செய்து நிரம்ப இலாபம் பெறக்கூடும். இதில் ஏதாவது தவருன கொள்கை ஒன்றும் ஏற்படாது. இறக்குமதி செய்யும் நாட்டில் இந்தப் பண்டங்கள் மிகவும் குறைந்த விலைகளில் கிடைப்பதாலும், நிரந்தரமாகவும் எளிதாகவும் கிடைப்பதால் இதை வரவேற்கக்கூடும்.

நிரந்தரத் திணறிக் கொட்டலை அரசியல் அரங்கில் எதிர்க்கிருர்கள். ஏனெனில் தேசியப் பாதுகாப்பிற்குத் தேவையான தொழில்களை நடத்த முன்வராது அயல்நாட்டிலிருந்து இறக்குமதி நிரந்தரமாகச் செய்வது பெரும் தவருகும்.

உள் நாட்டரசினர் அல்லது ஏதேனும் வர்த்தக நிறுவனம் முன்வந்து நன்கொடைப் பணம் கொடுத்துத் தொழிலை ஊக்குவிப்பதாகக் கொள்வோம். அந் நிலையிலும்கூட எந்த உற்பத்தியாளரும் நட்டத்தில் திணறிக் கொட்டல் முறையை நிரந்தரமாகக் கடைப்பிடிக்க முடியாது. வரம்பிற்குட்பட்ட அடக்க விலையைவிட (Marginal cost) அதிக விலையில்தான் நிரந்தரத் திணறிக் கொட்டலைச்செய்யமுடியும். பெருவாரியான உற்பத்தியின் காரணமாக அடக்கவிலைகள் திடீரெனச் சரிந்து வரின் அந்தச் சூழ்நிலையில் திணறிக் கொட்டலைக் கடைப்பிடிக்கலாம். இதனுல் குறைந்த விலையில் உள்நாட்டு நுகர்வோர்

களுக்குப் பொருள் எளிதில் கிடைக்கக்கூடும். உள்நாட்டில் விற்கும் விலையைவிடக் குறைந்த விலையில் அயல் நாடுகளில் விற்பதால் அயல் நாட்டு விற்பனை பன்மடங்காகிறது.

## திணறிக் கொட்டலை வெற்றிகரமாக நடத்த வழிகள்

முதன் முதலாக ஏற்றுமதி செய்த நாட்டிற்கே அந்தப் பண்டங்கள் திரும்பி வருதல் கூடாது. இது தடை செய்யப்படாவிடில் உள்நாட்டு நுகர்வோர் இந் நாட்டுப் பண்டத்தை அயல் நாட்டில் மிகவும் குறைவான விலைக்குப் பெறுவர். உள்நாட்டு விலைக்கும், ஏற்றுமதி விலைக்கும் உள்ள வேறுபாடு ஒரு நாட்டினின்று மற்றொரு நாட்டிற்கு மாற்றடக்க விலையைவிடக் குறைவாக இருப்பின் ஏற்றுமதி நாட்டிற்கு அவைகளைத் திரும்பி அடையயியலாது. பெரும்படியான சரக்குகளையும் சிறிய பண்டங்களையும் பிற நாட்டிற்கு மாற்றம் செய்வதால் அதிகப்படியான மாற்ற அடக்கச் செலவுகள் (transfer cost) ஏற்படுகின்றன. ஏற்றுமதி விலையினும் உள்நாட்டு விலை அதிகமாயிருப்பின், அதைத் தடுக்கத் தீர்வையை (duty) விதித்து நிறுத்தக் கூடும்.

உள்நாட்டில் உற்பத்தி வழங்கு முற்றுரிமை இருக்க வேண்டியது இன்றியமையாத இரண்டாவது தேவை. நேர்மையான வர்த்தகச் சந்தை நடப்பின் சராசரி விலையும், வரம்படக்க விலையும் சமமாக அமையும். பல உற்பத்தியாளர்கள் போட்டியிட்டு விலையைச் சீராக வைத்திருப்பார்கள். அரசு நன்கொடையோ, பண உதவியோ அளிக்கவில்லை என்றால் அயல் நாட்டில் குறைந்த விலைக்கு எவ்வாறு விற்க இயலும்? முற்றுரிமையின் நிலையில் உள்நாட்டு விலை மிகவும் அதிகமாக இருக்கக் கூடும்.

## திணறிக் கொட்டும் நாட்டில் இதனால் விலைகளில் ஏற்படும் மாறுதல்கள்

உள்நாட்டு நுகர்வோர்கள் விற்பனையாளர் அயல்நாட்டு விற்பனையில் ஏற்பட்ட நடத்தைத் தன்மீது அதிக விலையேற்றிச் சரிகட்டுகிறார் என்று பொதுவாகப் புலம்புகிறார்கள். இது ஓரளவு ஏற்றுக் கொள்ளவேண்டிய வாதமே. ஆனால் இதனை முற்றிலும் உண்மை எனக் கொள்ள இயலாது.

# 13. பொருளாதார இணைப்புக் கொள்கை
## (Theory of Economic Integration)

நாடுகளுக்கிடையே வேற்றுமை காட்டும் தன்மையின்றி தேசிய உணர்வில் அநேக நாடுகள் பொருளாதார இணைப்பு பெற விழைகின்றன. பொருளாதார இணைப்பு என்பதற்கு பொருளாதாரக் கூட்டுறவு என்பதற்கும் ஒரே பொருள் இல்லை. கூட்டுறவு முறையின்கீழ் வேற்றுமைகாட்டும் தன்மை குறைகிறது. ஆயினும், இணைப்பு முறையின்கீழ் சில குறிப்பிட்ட வேற்றுமை காட்டும் தன்மைகளைத் தவிர்க்கலாம்.

பொருளாதார இணைப்பு எனப்படுவது பல உருவங்களில் அமையக்கூடும். எடுத்துக்காட்டாக தடங்கலற்ற வர்த்தகப் பகுதி, சுங்கத் தீர்வைக்கூட்டு, பொதுச் சந்தை, பொருளாதாரக் கூட்டு, மற்றும் அனைத்தும் இயங்கும் பொருளாதாரக் கூட்டு அமைப்பு என வகைப்படலாம். தடங்கலற்ற வர்த்தகப் பகுதி யுள்ள நாடுகள் தம் வசம் எவ்விதமான சுங்க வரியோ தீர்வையோ விதிப்பதில்லை. சுங்கத் தீர்வைக் கூட்டமைப்பு (Customs Union) ஏற்படுவதால் நாட்டிற்கு நாடு வர்த்தகத்தடையேதும் இல்லாது ஒன்றுக அமையும். அந்தக் கூட்டிலிருக்காத மூன்றும் நாடுகள்மீது ஒரேவகையான தடங்கலை மட்டும் விதிக்கக் கூடும். பொதுச் சந்தை (Common market) எனப்படுவது சீரியமுறையில் ஒன்று சேர்ந்த அமைப்பு. அதில் கட்டுபாடுகள் (restrictions) யாதும் இல்லை. குறிப்பாக வர்த்தகக் கட்டுப்பாடோ அல்லது மூலப் பொருள்களின் போக்குவரத்தோ யாதொன்றும் கட்டுப்படுத்தப் படுவதில்லை. இம்மாதிரியான பொருளாதாரக் கூட்டில் வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. மூலப்பொருள்களின் போக்குவரத்திலும் தடைகள் விதிக்கப்படுவதில்லை. அந்தந்த நாட்டின் தேசியக் கொள்கைகள் கூட்டமைப்பின் பொருளாதாரக் கொள்கைகளில் இணைந்து ஒற்றுமையுடன் அமைகின்றன. முடிவாகப் பொருளாதாரக் கூட்டமைப்பின் உதவியால் சமூக,

செல்வ வளர்ச்சி முறைகள் தீர்வை குறைப்பு வர்த்தகச் சுழற்சியை தடுக்கும் வழிகள் இவற்றை உருவாக்கி பொருளாதார வலுப் பெற்ற கூட்டமைப்பு ஏற்படுத்தி, அந்தக் கூட்டமைப்பு அவ்வப் போது எடுக்கும் முடிவுகளை உறுப்பினர்கள் அங்கீகரித்து ஒரு மனதாக ஏற்றுக் கொள்வார்கள்.

அ. பொருளாதாரக் கூட்டமைப்பும் நலனும் (Economic Integration and Welfare)

**நலன்களில் ஏற்படும் மாறுதல்கள் (Effects in Welfare) :** பொருளாதாரக் கூட்டமைப்பினுல் உற்பத்தி கூடுதலாகும், வர்த்தகமும் அதிகரிக்கும். அதன் விளைவாக வருவாயும் நிறையக்கூடும். எந்நாட்டு மக்களது வருவாய் அதிகரிக்கிறதோ அந்த நாட்டு மக்கள் அதிக நலன் பெறுவதில் வியப்பொன்றும் இல்லை. கூடுதல் உற்பத்தியைப் பெற எல்லா உற்பத்திக் காரணிகளையும் (Fators of Production) முழு நேரம் வேலை வாய்ப்பு பெறும் அளவில் பயன்படுத்தி அதன் முடிவில் கங்கு கரையில்லா உற்பத்தியைச் செய்யலாம்.

**வேலை வாய்ப்பில் உண்டாகும் மாறுதல் (Effect on Employment) :** பொருளாதாரக் கூட்டமைப்பினுல் உற்பத்திக் காரணிகள் அனைத்தும் சீரான வேலை வாய்ப்புத் தரத்தை அடைகின்றன. அவையாவன : சில மூலப் பொருள்கள் பயனற்றவையாகக் கிடக்கும். அவைகளைப் பயன்படுத்தவேண்டுமானுல், இதர நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்படும். வர்த்தகக் கட்டுப்பாடுகள் காரணத்தால் இறக்குமதி செய்யமுடியாது போய்விடுகிறது.

பொருளாதார, வரி விதிப்புக் கொள்கைகளுக்கேற்ப ஒவ்வொரு நாட்டிலும் முழு வேலை வாய்ப்பு வசதி ஏற்படலாம்.

முதலீட்டுச் செலவுகள் அதிகப்படியாகப் பெருகிக் கொண்டே போகும். தேய்மான முதலீடு நிதியில்(Depreciation Fund)இருந்து புதிய தொழில்களில் முதலீடு செய்யப்படும்.

பல்வேறு நாட்டவர் ஒருமித்துக் கூடும் முயற்சியின் பலனுக வறிய நாடுகளில் இம் மாதிரியான அதிகப்படி செலவுகள் அதிகரிக்கக் கூடும்.

முழு வேலை வாய்ப்பு அளிக்கும் முயற்சியில் வரக்கூடிய இடையூறு என்னவெனில், கூலி விலையேற்றச் சுழல் (wage price spiral) தொழிலாளர் சங்கங்கள் முழு வேலை வாய்ப்புக்

கொள்கையை ஒட்டி அதிகப்படி கூலி தர வேண்டும் என்று வாதாடக்கூடும். முழு வேலை வாய்ப்பினால் தோன்றக் கூடிய அதிகப்படி ஏற்றம் பெறக்கூடிய தேவைகள் இருந்தபோதிலும் தொழிலாளர் சங்கப் போராட்டங்களைத் தவிர்க்க முடியாது. பொருளாதார இணைப்பினால் இதர அயல் நாடுகளிலிருந்து ஏற்றுமதிகளில் போட்டி நிகழலாம். இதனால் சிறுகச் சிறுக வேலையில்லா நிலை உருவாகக் கூடும். ஆனால், எல்லா உற்பத்திக் காரணிகளுக்கும் முழு வேலை வாய்ப்பு ஏற்படலாம்.

**உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்கள்**

(i) உற்பத்தி மூலாதாரப் பொருள்கள் இவைகளை மாற்றி, அமைக்கக் கூடும்.

(ii) பெரும் உற்பத்திக்கான பொருளாதார நிலைகள்.

(iii) முதலீடு செய்வதில் பண அளவு மாற்றம், தன்மை முதலியவற்றில் மாற்றம்.

(iv) உற்பத்தி முறைகளில் மாற்றம், மக்கள் நடை உடை பாவனைகளில் மாற்றம்,

(v) உற்பத்திக் காரணிகளின் சலனம்.

(vi) நடத்து முறைக்கான பொருளியல் இலக்கணம்.

**மூலாதாரப் பண்டங்களை - மறு அமைப்பிடல் (Reallocation of Resources)**

அடக்கவிலை ஒப்பிடல் விதியை அடிப்படையாகக் கொண்டு ஒரு தக்க எடுத்துக்காட்டின் மூலமாக இதை விளக்கமுற்படுவோம். இந்தியாவில் தேயிலை உற்பத்தியில் ஒப்பிடத்தகும் முறையில் பயன் உள்ளதாகவும், இலங்கையில் காப்பி ஒப்பிடத்தகு முறையில் பயன் உள்ளதாகவும் உள்ளதென்று கருதுவோம். இந்திய காப்பி உற்பத்திக்குப் போதிய பாதுகாப்பு உறுதி (protection) கொடுப்பது எனவும், இலங்கையின் தேயிலை உற்பத்திக்குப் போதிய காப்புறுதி கொடுப்பது எனவும் அனுமானித்துக் கொள்வோம். பொருளாதார இணைப்புக் கொள்கையின் அடிப்படையில் இலங்கையிலுள்ள தேயிலைக்கான காப்புறுதியும் தாமாகவே நீக்கம் பெறும். இதனால் இந்தியத் தேயிலைக்கும் இலங்கை காப்பிக் கான காப்புறுதியும் இலங்கைக் காப்பிக்கும் ஊக்கம் கொடுக்கப் பட்டு உற்பத்தி வளம் பெறுகின்றன. அதிக அடக்கவிலையில் உற்பத்தி செய்யும் இந்தியக் காப்பி நிறுவனங்களும் இலங்கைத் தேயிலை நிறுவனங்களும் வர்த்தகத்தை நிறுத்தி விடுவதில்லை.

காப்புறுதியன்று இதர முறைகளில் குறிப்பாக தரத்தில்வேற்றுமை, இட அமைப்பில் வேறுபாடு, மற்றும் நுகர்வோரின் அறியாமை, வேற்றுமை இவைகளை ஒட்டி முன்னேற்றமடையக் கூடும். மறு அமைப்பிடல் முறை மிகவும் பயனளிக்கும் வகையில் அமைய வேண்டுமானல் நியாயமான போட்டி வர்த்தகமும் தூரத்தினல் ஏற்படும் போக்குவரத்துச் செலவின்மையும் ஏற்பட்டால்தான் நலம் விளையும்.

### மாற்றுவகை உற்பத்தி (Differentiation)

பலதரப்பட்ட வகைகளாக உற்பத்தியைச் செய்வதால் சந்தையில் புழங்கும் பண்ட வகைகளும் அதிகரிக்கும். விற்பனை அதிகரிப்பு முறைகளும் விறுவிறுப்புடன் முன்னேறும். இதன் விளைவாகப் பொருளாதார இணைப்பு அதிகரிக்கக்கூடும். சந்தை மிகவும் குறுகியதென்று அனுமானித்துக் கொள்வோம். மேற்படி சந்தையில் பண்டங்களின் பலதரப்பட்ட மாற்றுவகைகளை ஊக்குவிக்கச் செய்யப்படும் செலவு பண்ட அடக்கவிலையினும் அதிகரித்தால் அது இலாபகரமன்று என்று வலியுறுத்திக் கூறலாம். புதியதாக மாற்றுவகையாகக் கொண்டுவரப்பட்ட பண்டம் முன்னரே சந்தையில் பல்வேறு நாட்டின் மாற்றுவகை உற்பத்தியில் பண்டங்களும் போட்டியிட முற்படின் அது மிகவும் அடக்கவிலை ஏற்றத்துடன் நட்டத்தில் முடியும்.

**ட்ரஸ்ட்டுகளும் கார்டல்களும்** (Trusts & Cartels): இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் மூலம் அயல் நாட்டுப் போட்டியினின்று உள் நாட்டு வர்த்தகம் காப்பாற்றப்படும் நோக்குடன் இந்த நிறுவனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பொருளாதார இணைப்பின் காரணமாக இவைகள் பயனற்றுப் போகக்கூடும். வர்த்தக நிறுவனங்கள் அதிகமாக அதிகமாக அநேக இடையூறு களும் பெருகக்கூடும். ஒன்றிரண்டு வர்த்தக நிறுவனங்கள் இருப் பின், அவைகளனைத்தும் சேர்த்து ஒரு கார்டெல் (Cartel) உண்டாக்கலாம். ஆயினும் 50-க்கு மேலாக வர்த்தக நிறுவனங்கள் இருப்பின் அவைகளை இணைத்து கார்டெல் உண்டுபண்ணுவது கடினம்.

**தூரம்** (distance): நாடுகள் மிகவும் தொலை தூரத்தில் இருப்பதால் பொருளாதார இணைப்பு செய்வது கடினம் என்று நினைக்க வேண்டும். நாடுகளுக்கு இடையே தொழிலாளிகளையும் முதலீட்டுகளையும் தமதிச்சைப்படி இயங்க விட்டால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

நிலைபெற்ற தன்மை (Immobility) : பொருளாதார இணைப்பின் கீழ்வரும் நாடுகள் அடிக்கடி ஒன்றிணைந்து இயங்க ஆரம்பித்தவுடன் நிலைபெற்ற தன்மை மாறி பெயரும் தன்மை உருவாகலாம்.

அறியாமை (Innocence) : ஒரு நாட்டு மக்கள் மற்றொரு நாட்டு மக்களுடன் பழக ஆரம்பித்தால் அறியாமை நீங்கி நன்கு அறிந்தவர்களாக மாறக்கூடும்.

பகுத்தறிவின்மை (Irrationality) : ஒரு பொருளாதார இணைப்பின் கீழ் ஒரு நாட்டவர் மற்றொரு நாட்டவருடன் இணைந்தால் நாளடைவில் பகுத்தறிவு வளம் பெற்று நன்கு வளரக் கூடும்.

**விற்பனையாளர்களும் கொள்முதல் செய்வோரின் எண்ணிக்கையும் :** பொருளாதார இணைப்பின்கீழ்ச் சந்தை நிறைவு பெற்றுக் காணப்படும். அதில் எவ்விதமான குறைகளும் இருக்காது. கொள்முதல் செய்வோரும், விற்பனையாளர்களும் அதிகப்படி எண்ணிக்கையில் இருக்கக் கூடும்.

## வர்த்தகச் செலாவணிக் கட்டுப்பாடுகள் (Trade and Exchange Restrictions)

சாதாரணமாக உள்நாட்டு தளிர்த் தொழில்கள் சிதைந்து போகாமல் காக்கும் நோக்குடன் அயல்நாட்டுப் போட்டிகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வர்த்தகச் செலாவணிக் கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். இதன் விளைவாகப் பன்னாட்டு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். பொருளாதார இணைப்பின்கீழ் இம்மாதிரிக் கட்டுப்பாடுகள் பயனற்றுப் போய் விடுகின்றன. அதற்குப் பதிலாக இவர்கள் ஒன்றிணைந்து பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலிட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறார்கள்.

## முதலீட்டின் அமைப்பு, தொகை, திக்கு முதலியன (Volume, Nature and Direction of Investment)

பொதுவாக ஒரு நாட்டின் முதலீட்டை மற்றொரு நாடு எளிதாகப் பெறும் என்று கருத முடியாது. அநேக சிக்கல்களான சுங்க வரி, தீர்வை, மற்றும் இதரக் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ள நிலைமையில், சிற்சில வேளைகளில் பன்முக வர்த்தக முறைகளை அமைக்க விரும்புகின்றனர். அது மாறி இருமுக bilateral) வர்த்தகமாக மாறக்கூடும். உள்நாட்டு மூலதனம்

பெருகும் நோக்குடன் பொருளாதார இணைப்புக் கொள்கை மிகவும் பயன்படுகிறது. உள்நாட்டு மூலதனம் பெருகிய பின்னர் இணைப்புக் கொள்கையில் ஈடுபட்ட நாடுகளில் முதலீடு செய்ய அநேகர் முன்வரக் கூடும்.

பொருளாதார இணைப்பினுல் முதலீட்டில் பல மாறுதல்கள் தோன்றுகின்றன. முதலீட்டுப் பண்டங்கள் புதியதாக மாற்றப் படுகின்றன. புதிய தொழில்கள் உருவாகின்றன. மூடப்பட்ட தொழில்களின் பழைய இயந்திரச் சாதனங்கள் நன்கு பயன் படுத்தப்படுகின்றன. தடங்கலற்ற வர்த்தகங்கள் அதிகரிக்கின்றன. நிரந்தரமான அயல்நாட்டுச் செலாவணி விகிதங்கள் பழக்கத்தில் வருகின்றன. அடிப்படைத் தொழில்கள், கனரகத் தொழில்கள் முன்னேறுகின்றன. அரசினரால் நடத்தப்படும் தொழில்கள் நன்கு வளர்ச்சி பெறுகின்றன. இவற்ருல் வரும் பயன்களைப் பொருளாதார இணைப்பின்கீழ் உள்ள நாடுகள் நன்கு பயன் படுத்திக் கொள்ளக் கூடும். மூலதன ஓட்டத்தையும், முதலீட்டு ஓட்டத்தையும் தடை செய்வதற்கான கட்டுப்பாடு விதிகள் நீக்கப்பட வேண்டும். உற்பத்தியில் மாற்றங்கள் தோன்று கின்றன, மக்களின் வாழ்க்கைத் தரம் உயருகிறது. நுகர்வோர் களின் எண்ணிக்கை பெருகுகிறது.

# 14. முதன்மைப் பண்டத்தின் சந்தையைச் செம்மையாக்குதல்

## (Stabilisation of Primary Product Market)

**செம்மைப்படுத்துதலின் இன்றியமையாத தன்மை**: தேவை, வழங்கு இவ்விரண்டிலும் ஏற்றத்தாழ்வுகளைச் சீராக்கித் தடங்கல் அற்ற விலை அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தேவை, வழங்கு இவைகளை அதிக மாற்றமின்றிக் கட்டுப்படுத்தலாம். சந்தையில் இவைகளுக்கான விலை ஏறவோ குறையவோ செய்தால் சிறு மாற்றங்களே தோன்றும். நிரந்தரமான சந்தை ஏற்படும் என்று கொள்ள இடமில்லை. விலைகளில் அதிகப்படியான வேறுபாடுகள் ஏற்பட்டால் நுகர்வோர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் பெரும் வருமான மாற்றம் நிகழ்ந்து அதன் விளைவாகப் பொருளா-தார சமூக உறவுகள் துண்டித்துப் போய் விடக்கூடும். அனுபவத்தின் அடிப்படையில் தேவை, வழங்கு இவ்விரண்டினுள் ஏற்படும் நெகிழ்ச்சி (elasticity) அடிப்படைப் பொருள் தொடர்புடைய வரையிலும் மிகவும் குறைவாகவே அமைந்துள்ளது எனலாம்.[1] இதனால் ஏற்படும் பின் விளைவு மிகவும் கடுமையாகவும் ஆண்டு தோறும் கால மாற்றத்துடன் நீண்ட கால வர்த்தகச் சுழற்சியாக ஏற்படக் கூடும். அடிப்படைப் பொருள்களின் ஏற்றுமதி பாதிக்கப்படக் கூடும்.

தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் வருமானத்தில் ஏற்படக் கூடிய மாறுதல் என்னவெனில் அடிப்படைப் பொருள்களின் விலைமாற்றமே எனலாம். விலை இன்னதென்று நிலைத்த வண்ணம் இராவிட்டால் உற்பத்தியாளர்கள் பெறும் இலாபம் என்ன

[1] F. A. Reconsideration of the Economics of the International Wheat Agreement (Rome 1952), p. 3.

வென்று முன்னதாகவே கணக்கிட்டுக் கூறுவது மிகக் கடினம். இந்த அடிப்படைக் காரணத்தினுல்தான் நாட்டின் வேளாண் மையில் ஈடுபட்ட மக்கள் அதிக ஊதியம் தரக்கூடிய தொழில் இன்னதென்று முன்னதாகவே முடிவு செய்ய வாய்ப்பின்றித் துன்புறுகின்றனர்.

வளர்ச்சியுறு நாடுகளின் முன்னேற்றத் திட்டத்தில் தேவைப் படும் இறக்குமதி மூலதனம், தொழில் நுட்ப விவரங்கள் இவை இரண்டும் இன்றியமையாதவை. இவைகளை இறக்குமதி செய்ய வேண்டுமாயின் எண்ணிறந்த அன்னியச் செலாவணியைப் பயன் படுத்தவேண்டியது தேவையாகிறது. அன்னியச் செலாவணி விகிதங்கள் தான்தோன்றித் தனமாகச் சடுதியில் ஏற ஆரம்பித் தால் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களைக் கைவிடும் சூழ்நிலை உருவாகிவிடுகிறது. திட்டமிடுவதிலும் தடை ஏற்படுகிறது. இந்த நிலையில் நாட்டில் பொருளாதார மந்தம் (depression) ஏற்படின் கையில் உள்ள சிறிதளவு மூலதனம் கூடக் கரைந்து போய்விடும். ஏற்றுமதி வருமானம் குறைவதோடல்லாது பட்ட கடன்களுக்கும் தவணை செலுத்த இயலாத சூழ்நிலை ஏற்படும். பொருளாதார வீக்கங்களும் (booms) பின் இறக்கங்களும் (recessions) இவை இரண்டும் நாட்டில் பணவீக்கத்தை அதிகரித் துப் பொருளாதார இடையூறுகளை அதிகப்படுத்தும். பொருளா- தார வீக்கக் காலத்தில் (boom) எதிர்பாராத வகையில் ஏற்றுமதி அதிகமாகி அதன் விளைவாகப் பணவீக்கம் ஏற்பட்டுவிடக் கூடும். எதிர்பாராத அளவு ஏற்றுமதியினின்று கிடைக்கும் பணத்தைக் கொண்டு தேவையற்ற மிகுதியான போகப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதே சமயத்தில் நாட்டின் தொழில் துறையை வளமாக்கும் நோக்கத் துடன் புதிய உற்பத்தி நிறுவனங்களைத் தொடங்கி அவற்றை நடத்திப் பின்னர் அவற்றில் மந்தநிலை உருவாகலாம். இதில் முதலீடு செய்யப்பட்ட தொகை வீணுக வருவாயின்றி அந்தத் தொழில் நிறுவனம் வேலை தொடங்கும் வரை இருக்கக் கூடும். வர்த்தகப் பின்னிறக்கத்தினுல் அரசினரின் வருவாய் குன்ற ஆரம்பிக்கும்.

அடிப்படைப் பண்டங்களின் விலைகள் தாறுமாறாக ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுவதால் பண்ட உற்பத்தியில் மேம் பாடடைய இயலாது. இறக்குமதி-பதில் பண்டங்களை (import substitution) உற்பத்தி செய்யவும் ஏற்றுமதியைக் குறைக்கவும் நேரிடுகிறது. மேலும் இவை அன்னியச் செலாவணியின் மாற்றத்தில் சிரமங்களை உண்டாக்குகின்றன. அதன் விளைவாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், செலாவணிக் கட்டுப்பாடு

களையும் அமலாக்க நேரிடும். தடங்கலற்ற வர்த்தகமோ, பன்முக வர்த்தகமோ (multilateral) நடைபெறுவது இல்லாமற் போகிறது.

நிலையற்ற (instability) விலைகளின் காரணமாக உற்பத்தி மூலாதாரங்களுக்கான தேவைகளை மாற்றியமைக்க நேரிடும். இவ்வாறான செயல்களால் மதிப்பிற்குகந்த மூலப் பண்டங்களை வீணாக்கும் சூழ்நிலை உருவாகிறது.

நிலையற்ற விலைகளின் காரணமாக ஊக வர்த்தக மூலம் என்றுமே ஏற்ற இறக்க நிலையை ஏற்படுத்த முயல்வார்கள். இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கார்ட்டல்களை (Cartels) உருவாக்கி முற்றுரிமை ஏற்படுத்துவார்கள்.

வளர்ச்சியுறு நாடுகளில் உற்பத்தியமைப்பில் நெகிழ்ச்சி (flexible) இல்லை. எக் காலங்களில் ஏற்றுமதிகள் குறை கின்றனவோ அவ்வமயங்களில் மூலப் பொருள்களையும், ஆதாரங் களையும் (resources), பொது உற்பத்தியையும் விட்டு விட்டு இறக்குமதிப் பதில் (import substitute ) பண்டங்களை உற்பத்தி செய்ய மாறுவது சற்று கடினம். முன்னேற்றமடைந்த நாடுகளில் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. எந்தக் காலத்திலும் உற்பத்தி முறைகளை நிலைமையையொட்டி மாற்றிக் கொள்ள முடியும். முன்னேற்றமடைந்த நாடுகளில் வர்த்தகப் பின்னிறக்கம் அல்லது மந்தம் ஏற்பட்டாலும் சமாளிக்கமுடிகிறது.

ஆதார அடிப்படைப் பண்டங்களின் விலைகளில் கடும் ஏற்ற இறக்கங்கள் தோன்றுவது ஒரு வகையில் நலமே. நாட்டின் தொழில்வளத்தை உறுதிப்படுத்தும் வகையில் இது பயன்படுகிறது. கடந்த 1930ஆம் ஆண்டில் பலவகைப்பட்ட ஆதார அடிப்படைப் பண்டங்களின் விலைகள் மாற்றம் பெற்றதால் எல்லா முன்னேற்ற நாடுகளிலும் தொழில் வளர்ச்சியை மேற்கொண்டு உடனே தொழில்களை உருவாக்கினர். நாட்டைத் தொழில் மயமாக்கு வதற்கு இந்த முறை சற்றுக் கடுமையானதென்றும் சற்று அதிக செலவினமுள்ளதென்றும் கூறலாம். என்றும் நிரந்தரமான ஒரே விலையுள்ள அடிப்படைப் பண்டங்கள் உள்ளபடி முன்னேற்றம் அடைந்த நாடுகள் பார்த்துக் கொள்ளவேண்டும். இதில் விலை யேற்றம் நிகழ்ந்தால் உடனே வாணிபக் கொடுப்பல் நிலையைப் பாதிக்கக்கூடும். ஏனெனில் முன்னேற்றமடைந்த நாடுகள் அயல் நாட்டிலிருந்து இறக்குமதியைப் பெருமளவில் செய்வதால் இந்தக் குறை ஏற்படும். மேலும் அடிப்படை ஆதாரப் பண்டங்களில் இருந்து முன்னேற்றமடைந்த நாடுகள் பெருமளவில் இலாபத்தை நோக்கியிருக்கின்றனர்.

நிலையற்ற தன்மைக்கான காரணங்கள் (Causes of Instability)

வர்த்தகச் சுழல்கள் (Business Cycles) : முழுத் தேவைகளும் கால அடிப்படையில் மாறுபடுகின்றன. அடிப்படைப் பண்டச் சந்தைகளில் இவைகளை முக்கியக் காரணங்களாகக் கருதலாம்.

எப்போதாவது உருவாகும் மாற்றங்கள் (Incidental Fluctuations) : வேறு நாடுகளில் ஏற்படும் மாற்றங்களால் உள்நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. சூயஸ் கால்வாய் தொடர்பான தகராறு, கொரியாப் போர் இவை காரணமாக மொத்தச் செலவுகள் அதிகரிக்கக்கூடும். மூலதாரப் பண்டங்களைச் சேமித்து, கொரியாப் போரின் காரணத்தால் விலையேற்றம் பெற்றது.

தளவாடங்களின் மாற்றம் (Changes in Inventories) : உற்பத்தித் தொழில்களிலுண்டாகும் பண்டங்களுக்கான தேவைகள் குறைந்தால் அவைகளுக்கான மூலப் பண்டங்களின் தேவைகள் வெகுவாகப் பாதிக்கப்படும். அதற்கெதிரிடையாகத் தொழில்களால் உண்டாகும் பண்டங்களுக்குக் கிராக்கி ஏற்பட்டால் மூலப் பண்டங்களின் தேவை மிக அதிகமாகக் கோரப்படும்.

எதிர்நோக்கியிருத்தல் (Expectations): விலையிறக்கம் தென்பட்டவுடன் வர்த்தகர்கள் தங்கள்கையிலுள்ள பண்டங்களைச் சந்தையில் திணித்து அதன் காரணமாக விலையைக் குறைத்து விடுவார்கள். அதேபோன்று விலையேற்றமேற்படின் பங்கு வர்த்தகர் ஊக வர்த்தகத்தில் பங்குகளை அளவுகடந்து வாங்கி அதனால் விலை ஏற்றத்தை ஊக்குவிப்பார்கள். தேவைகளில் மாற்றம் ஏற்படக் காரணம் எதிர்நோக்கியிருத்தலேயாம்.

ஒப்பிடத்தகு அளவில் நெகிழ்ச்சியற்ற தேவைகளும் வழங்குதல்களும் (Comparatively Inelastic Demand and supply) : அடிப்படை மூல காரணிகளின் தேவை நெகிழ்ச்சியற்றதாக உள்ளது. ஆயினும், தொழில் காரணமாக உற்பத்திப் பண்டங்களுக்கான தேவை நெகிழ்ச்சியுள்ளது. வழங்குதலில் செய்யும் மாற்றங்களால் மூலாதாரப் பண்டங்களின் விலை ஏறவோ இறங்கவோ கூடும். தொழில்களில் தேவைப்படும் மூல காரணிகளை வழங்குதல்களையொட்டி விலையைச் சீர்படுத்த முடியும். ஆயினும் விவசாயத்தில் அதேமாதிரி வழங்குதல் முறையைக் கடைப்பிடித்தல் சுலபமானதன்று. குறுகிய காலத்திற்குள் இவ்வாறு செய்வதும் கடினம். பொதுச் செலவுகள் தொழிலைவிட விவசாயத்தில் அதிகம்.

# 15. அன்னிய மூலதனமும் பொருளாதார வளர்ச்சியும்

**அன்னிய மூலதனத்தின் இன்றியமையாத் தன்மை :** உலகின் பல்வேறு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத் திற்கும் அன்னிய மூலதனம் அடிகோலிட்டது. இன்று உலகின் கண் காணப்படும் வளர்ச்சியுற்ற பெரும் வல்லரசு நாடுகள் கூட தம் வளர்ச்சியில் ஈடுபட்ட காலத்தில் பிற நாடுகளிலிருந்து பெருமளவு கடன் வாங்கித் தம் கைவசம் சேர்ந்துள்ள சிறிதளவு உள்ள சேமிப்புத் தொகையைக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டது. கடந்த 17, 18ஆம் நூற்றுண்டு களில் இங்கிலாந்து, ஆலந்து (Holland) நாட்டினின்று கடன் பெற்று நாட்டின் பொருளாதார நிலையைச் செம்மைப் படுத்திப் பின்னர் உலகின் பல்வேறு நாடுகளுக்குக் கடன் உதவி செய்ய முன்வந்தது. அதேபோன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் 19ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் பெருமளவில் அந்நிய நாடுகளிலிருந்து கடன் பெற்றுப் பின்னர் 20ஆம் நூற்றுண்டில் கடன் அளிக்கும் பெரும் பணக்கார நாடாக இருந்து வருகிறது.[1]

ஆயினும், இது காறும் இரண்டு முக்கிய நாடுகள் அன்னிய உதவி குறிப்பிடத்தக்க அளவில் பெருது தம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கூடிய மட்டும் தமது சொந்தப் பொருள் வசதியைக் கொண்டே பெரும் வல்லரசு நாடு களுக்குச்சம மதிப்பு பெற்றுத் திகழ்கின்றன. அவை ரசியா நாடும் (Russia) சப்பான் நாடும் (Japan) ஆகும். இதர நாடுகளில் காணப்படாத சில அனுகூலங்கள் சப்பான் நாட்டில் ஏற்பட்ட தால் சப்பான் நாடு அதிகப்படியான அயல் நாட்டில் பொருள் வசதிகளைக் கோரவில்லை. சப்பான் நாட்டின் பட்டு உற்பத்தி

[1] W. Arthur Leuis—The Theory of Economics Growth (London, 1956) p. 244.

ஏற்றுமதிக்கு வேண்டிய அளவு அதிகரித்திருந்த படியால், அதைக் கொண்டு அயல் நாடுகளிலிருந்து மூலதனப் பொருள்களையும் தளவாடங்களையும் இறக்குமதி செய்தனர். சிறிதளவு தேவைப் படும் மூலதனமும் அதிகப்படியான தொழிலாளர்களையும் (பாட்டாளிகளையும்) கொண்டுள்ள தொழில்களை நடத்தி வந்த படியால் உற்பத்தி அடக்கவிலை மிகவும் குறைவாகவே இருந்து வந்தது. மூன்றாவதாக உள் நாட்டுச் சேமிப்புத் தொகை விகிதம் மிகவும் அதிகம். ஏனென்றால் சமூக நலத்தின் அடிப் படையில் வாழ்ந்த பணக்கார மக்கள் மிதமிஞ்சிச் செலவிடாது சேமிப்பை அதிகரித்தனர். நான்காவதாகத் தொழில் நுட்பக் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு சப்பானிய இளைஞர்கள் பதினாயிரக் கணக்கில் அயல் நாடுகளில் குறிப்பாக மேற்கு ஐரோப்பாவில் சென்று தொழிற் கல்வியைக் கற்றுக் கொண்டு திரும்பினர். ருசிய நாட்டில் 1881-1913ஆம் ஆண்டு வரையில் ஃபிரான்சு நாட்டிலிருந்து மூலதனம் சென்றது. இதைக் கொண்டு தொழில்கள் நிறுவப்பட்டன. உள் நாட்டுச் சேமிப்பு மிகவும் அதிகரித்திருந்தது. ஒரு சாதாரண மக்கள் ஆட்சியுள்ள நாட்டில் அவ்வளவு சேமிப்பு கிடைக்கும் எனக் கருத இடமில்லை.

பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள வாழ்க்கைத் தரம் பொருளாதார வளர்ச்சியடையா நாட்டிலுள்ள வாழ்க்கைத் தரத்தை விட மிகவும் அதிகம். இதன் விளைவாக உலக சமாதானம் சீர் குலைந்து போகும். பின் தங்கிய நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்தாலன்றி நிரந்தர உலக சமாதானம்த் ஏற்படும் என திட்டமாகக் கூற இயலாது. எந்த நாடும் தனது உள் நாட்டுச் செல்வ வசதிகளை மட்டும் வைத்துக் கொண்டு அதிக விரைவில் முன்னேறும் என்று கூற இயலாது. இந்நாடுகளில் சேமிப்பு விகிதம் மிகவும் குறைவாக இருப்பது அறிந்ததே. உடலினின்று உயிர் நீங்காதிருக்க எவ்வளவு குறைந்த அளவு உணவு, உடை, தேவைப்படுமோ அவற்றினும் குறைந்த அளவில்தான் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். உள் நாட்டில் சேமிப்பை அதிகரிக்க வேண்டுமானால் வாழ்க்கைத் தரத்தை இன்னமும் குறைத்தால்தான் செய்ய இயலும். எனவே பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகள் விரைவில் முன்னேற்றத்தைப்பெற விழைந்தால் அன்னிய மூலதனமின்றி செய்ய இயலாது.

வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றாக்குறை (deficit) ஏற்படுவது குறிப்பாக பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடு படும் நாடுகளில் காணலாம். இப் பற்றாக்குறையை நீக்க

அன்னிய மூலதனம் தேவைப்படுகிறது. உள்நாட்டுச் சேமிப்பு அதிகரிக்கிறது என வைத்துக் கொண்டாலும் மேலே சொன்ன நிலையைச் சரிகட்ட அன்னிய மூலதனம் தேவைப்படுகிறது. வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்படுகிறது. அவ்விதப் பற்றுக்குறை மறைமுகப் பற்றுக்குறையாகவும், அல்லது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் விளைவாக நிகழக்கூடிய பற்றுக்குறையாகவும் இருக்கலாம். மூலதனப் பொருள்களையும் உற்பத்திக்கான தளவாடங்களையும் இறக்குமதி செய்வதன் மூலம் துண்டு விழுகிறது. இரண்டாவதாக இதற்கு முன்னர் ஏற்றுமதி செய்யத்தகு பொருள்கள் இந் நிலைமையில் உள்நாட்டிலேயே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின்பின் விளைவாக வருவாய் குன்றிப் போவதாலும், விலையேற்றக் காரணத்தாலும் வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்படுகிறது.

வளர்ச்சியுறு நாடுகளில் போதிய மூலதனம் இன்மையாலும், தொழில் நுட்ப அறிவின்மையாலும், நடத்தப் போதிய திறம் படைத்த நடத்துனர் இல்லாமையாலும் இவைகள் பின்தங்கி துன்புறுகின்றன. அயல் நாடுகளிலிருந்து சாதாரணப் பங்கு மூலதனமாக வரும் உதவித்தொகை இந்த இல்லாமைகளைச் சரிகட்டி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். அன்னிய நாட்டினர் இவ்வாறான பின்தங்கிய நாட்டில் முதலீடு செய்வதால் பற்றுக்குறை நாட்டிலுள்ளவர்களுக்குப் போதிய பயிற்சியும், நடத்தக்கூடிய அனுபவத்தையும் அளிக்கப் பெறுகின்றனர். இதனால் தொழில் வளமுள்ள சூழ்நிலையை உருவாக்கப் பன்னாட்டு மக்களின் மூலதனமும், தொழில் நடத்தத் துணிவுள்ளமும் இவ்வளர்ச்சியுறு நாடுகளுக்குக் கிடைக்கின்றன.

புதிய தொழில்களை உருவாக்குதலிலும், அவற்றைத் தொடங்குவதிலும் அநேக இடையூறுகளும், முடிவாக நிர்மூலமாகக் கூடும் நிலையும் உண்டாகலாம். அன்னிய மூலதனம் இந்நாட்டிற்கு வரின் நாட்டின் தொழிலுற்பத்தியை மேற்கொள்ளயியலும். உள்நாட்டில் முன்வரும் கம்பெனிகள் (Companies) தொழிலை உருவாக்குவதிலும் தொடங்குவதிலும் ஈடுபட்ட மூலதனமிழந்து, விரைவில் அழிவு பெறக்கூடும். அன்னிய மூலதனம் ஒரு புதிய தொழிலில் ஏற்படும் நட்டத்தைச் சமாளிக்கிறது. புதிய தொழில்கள் செம்மையாக நடந்தால் அன்னிய மூலதனத்திற்குப்பெருமளவில்இலாபம் வந்தடைகின்றது.

### அன்னிய மூலதனத்தின் குறைபாடு

அன்னிய மூலதனத்தை அனைத்தையும் ஏற்றுக் கொள்ள இயலா பின்தங்கிய நாட்டில் அம் மூலதனத்தைக் கொண்டு

பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியாது. இந் நாட்டில் தொழிலாளர்களுக்கு எளிதில் பயிற்சி கொடுக்க இயலாது போகக் கூடும். தொழிலை எடுத்து நிருவாகம் செய்யப் போதிய திறன் படைத்த முதலுள்ளவர்கள் கிடைப்பதில்லை. தொழில் நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டுத் தொழிலாளர் வேலை செய்வதில்லை. நாட்டிலுள்ள சமூக, பொருளாதார, அரசியல் பிரிவுகள் இம் மாதிரியான தொழில் வளர்ச்சியை ஆதரிக்க முன் வருவதில்லை. போக்குவரத்து, மின்சாரம், மற்றும் பொது வசதி நிறுவனங்கள் இலாபத்தை அகற்றி மக்களுக்கு உதவிபுரியும் நோக்குடன் பணியாற்றுவதால் அவை இம் மாதிரியாகப் புதிய தாகத் தொடங்கப்பட்ட அன்னிய மூலதனக் கம்பெனிகளுக்கு உதவியளிக்க முன்வருவதில்லை.

அன்னிய மூலதனத்தினால் ஏற்படும் தீமைகள்: பெருமளவு அன்னிய மூலதனம் உள்நாட்டிலுள்ள தொழிலில் முடங்கி யிருப்பின் அவை இந் நாட்டின் அரசியல் கட்சிகளைத் தூக்கிவிட்டு, நாட்டை ஒற்றுமையின்றிப் பாழ்படுத்தக் கூடும். வரலாற்று வாயிலாக ருசிய நாட்டுப் புதிய அரசை எதிர்த்து மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் உள்நாட்டுத் தொழிலதிபர்கள் மென்ஷெவிக்குகளைக் (Mensheviks) கொண்டுள்ள வெண் படையினரை (White Army) உருவாக்கிப்போரிடும்படிச்செய்தனர். ஆயினும், நாட்டின் கொடியை அண்டித்தான் வர்த்தகம் நடை பெறும் என்ற கொள்கையை மறுக்க முடியாதென்பது அறிந்ததே. தற்போதுள்ள நிலையில் பன்னாட்டு நிறுவனம் இம்மாதிரியான பெரும் விபத்துகளை முறியடித்துக் கொண்டு வருகின்றது.

அடிப்படைத் தொழில்களுக்கான மூலதனம் அயல்நாட்டி லிருந்து உண்டானதென்றால் உள்நாட்டு மக்கள் அயல்நாட்டு உற்பத்தியாளர்கள் அண்டிப் பிழைக்க வேண்டும். மூலதன ஏற்றுமதி (Capital Exporting) நாடுகளில் தோன்றும் வர்த்தகச் சுழல்கள் மூலதனம் பெற விழையும் நாடுகளைப் பாதிக்கும். உள்நாட்டு முதலீடு (Investments) தவிர்க்கப்பட்டு அவை பயனற்று வீணாகிப் போய்விடும். நீண்ட கால முதலீட்டில் அவைகளைப் பயன்படுத்தித்தான் அயல்நாட்டு மூலதனத்தின் வரவால் உள்நாட்டு முதலீட்டினை நீக்கி அவர்களைத் தாழ்வு படுத்தி விடுவார்கள். அவர்கள் தம் பெரும் உழைப்பால் இவர் களுக்குச் சமமாக வர முயல்வார்கள். பழங்காலங்களில் அயல் நாட்டுத் தொழில்களில் உள்நாட்டு மக்களைச் சேர்த்துக் கொள்ளாமலும் அவர்களைத் தாழ்வாக நடத்தியும் வந்தனர். அயல் நாட்டின் மூலதனத்தின் காரணமாக உள்நாட்டில்

சுரண்டல்கள் (Exploitations) செய்து நிகழ்ச்சிகளை வந்த வரலாற்று வாயிலாக அறிகிறோம்.

கூட்டாக ஈடுபடல் (Joint Participation) : முன்னரே கூறிய குறைபாடுகளை நீக்க ஒரே வழி என்னவெனில் கூட்டுமுறையில் உள்நாட்டு மூலதனமும் ஒன்று சேர்ந்து தொழிலை உருவாக்கி நடத்தலாம். உள்நாட்டவர் வேற்றுமைகளை மறந்து நன்கு உழைப்பார்கள். உள்நாட்டு மூலதனம் இடுபவர் எங்கு குறைந்த விலைகளில் மூலப்பொருள் கிடைக்கும், தொழிலாளிகள் வேலை செய்வார்கள் என்ற தகவல்கள் தெரிந்து அதன்படி பயன் படுத்துவார்கள். இதன்மூலம் உள்நாட்டவர்களுக்குத் தொழிலின் நுட்பத்தைநன்கு தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகிறது.

உலக வங்கி அல்லது பன்னாட்டுப் புனர் நிர்மாண வளர்ச்சி வங்கி (World Bank or International Bank of Reconstruction and Development) : 1946ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த வங்கி உலகின் பல்வேறு நாடுகளின் முன்னேற்றத்திற்கு அடிகோலிட்டு வந்துள்ளது. கடந்தபோரின் இறுதியில் இதைத் தோற்றுவித்தனர். பன்னாட்டுப் பணநிதி தோன்றிய அதே காலத்தில்தான் இது உருவாயிற்று. ஆயினும், இது வெகுவாகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. உலகில் மாபெரும் போரின் பின்னர், பல்வேறு நாடுகளில் பொருளாதார இருட்டடிப்பு நிகழ்ந்துள்ள காலத்தில், போரின் வெறியாட்டங்களினால் சின்ன பின்னமடைந்தப் பல்வேறு நாடுகளுக்கும், போக்குவரத்து சிதைந்துள்ள தேசங்களுக்கும், எந்நிலையிலும் போர் மூளக் கூடும் என்று சச்சரவு மனப்பான்மை யுள்ள நாடுகளுக்கும் தக்க பண உதவியளித்துத் திரும்பவும் சமாதான நிலை உருவாகும் தருணத்தை உண்டுபண்ணி அந் நாடுகளில் சிதைந்த தொழில்களை மறுமலர்ச்சி செய்வதற்குப் போதிய உதவியளித்து, பாழடைந்த போக்குவரத்து முறைகளைச் செப்பனிட்டு, பாலைவனம்போன்று வெற்றிடமாகப் புரையோடிய சமுதாயங்களை மறுபடியும் ஊக்குவித்துத் தொழில் நகரங்களை நிலைநாட்ட முன்வந்தது. ஓர் அரசின் மூலம் மற்றொரு அரசிற்குக் கடன் உதவி கொடுத்து நிலைமையைச் சமாளித்தது.

நிறுவனத்தின் அமைப்பு

பன்னாட்டு மூலதனங்களை உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் நன்கு பணியாற்றியுள்ளது. 60 நாடுகள் இதன் உறுப்பினர்களாக உள்ளன. இதன் அதிகாரம் பெற்ற மூலதனம் பத்து பில்லியன் டாலர்கள். 100,000 பங்குகள், 100,000 டாலர்கள்வீதம் பங்கிடப் பட்டுள்ளது. சந்தாதாரின் மூலதனம் 9 பில்லியன் டாலர்

களுக்கும் அதிகமாக உள்ளது. அதில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்குத் தொகை 3.175 பில்லியன். அதையடுத்து பெரும் பங்குடையோர் பிரிட்டன், சைனு, ஃபிரான்சு, இந்தியா ஆகியவையாகும்.

இதன் மொத்த மூலதனச் சந்தாத்தொகை இரு பகுதிகளாகக் கணக்கிடப்பட்டு,

(i) முதல் 20% (சதவிகிதத்தில்) வங்கியினுடைய கடன் நிதியாக அமைத்து, தொடக்கத்தில் உறுப்பினர் நாடுகள் ஒவ்வொன்றும் 2% (சதவிகிதம்) செலுத்த வேண்டும். அது பொன்னுகவோ அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டு டாலரிலோ இருக்க வேண்டும். பாக்கி 18%-ஐ அந்தந்த நாட்டுச் செலாவணியில் செலுத்திவிட வேண்டும்.

(ii) 80% (சதவிகிதத்தை) வங்கிக்கு உடனே செலுத்தி விடவேண்டியதில்லை. தேவையேற்படும் பொழுது தான் தமது கடன்களுக்கு ஈட்டுறுதியாக அமைத்தல் வேண்டும்.

வங்கி நிருவாகத்தில் மூன்று மட்ட (Three level) அமைப்புகள் உண்டு.

(i) ஆளுநர் குழு (Board of Governors) ஒவ்வொரு நாட்டின் நிதி அமைச்சர் இதன் ஆளுநராக (Governor) இருப்பார். இவர்கள் ஒவ்வோர் ஆண்டிலும் சில நாள்கள் ஒன்று கூடி வங்கியின் பொதுக் கொள்கைகளைப் பற்றி வாதித்து முடிவெடுப்பார்கள்.

(ii) இதையடுத்து இடை நிலையில் 16 பேர்கள் கொண்ட செயலாக்கும் நெறியாளர்கள் (Executive Directors) குழு வாரம் ஒரு முறை வாசிங்டனில் (Washington) கூடுவர். முதல் ஐம்பெரும் பங்குடையோர்களின் நெறியாளர்கள் அவர்களில் இடம் பெறுகிருர்கள். இதர நெறியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுக்கப்படுகிருர்கள். மத்திய கிழக்காசிய நாடுகளைப் பற்றிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிருர்.

(iii) மிகவும் இன்றியமையாததும் அன்ருட வங்கிப்பணிகளைக் கண்காணித்து வரும் நிருவாகக் குழுவின் தலைவர் (President) மற்றும் அவர்களுடைய பணியாளர்களும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

எந்நாட்டவரும் கடன் கோரி மனு செய்தவுடன் இந்த நிருவாகக் குழுத் தலைவர் தமது பரிந்துரைகளைச் செயலாக்கும் நெறியாளர்களுக்கு அனுப்புகிறார்.

தனியார் நாட்டுச் செயலாக்கும் நெறியாளர் தன் நாட்டின் மத்திய வங்கி, நிதி அமைச்சர் இவர்களைக் கலந்து அதற்கேற்பத் தமது கொள்கைகளை எடுத்துரைப்பார்கள். ஒவ்வொரு நெறியாளருக்கும் 250 வாக்குகள் உண்டு. 100,000 டாலர்களுக்கும் அதிகமாகப் பங்குடையவர்களுக்கு அதே அளவில் ஒரு வாக்கு கூடுதலாகக் கிடைக்கும்.

**கடன்களும் உத்தரவாதங்களும்** (Loans & Guarentees): தனியார் நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றால் அவற்றிற்கு இந்த நிறுவனம் உத்தரவாதம் அளிக்க முன்வரும். அதேபோன்று ஒரு நாட்டின் தனியார் தொழிலுக்குக் கொடுக்கும் கடனுதவியை அந்நாட்டு அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

உலக வங்கியினுடைய 18% மூலதனச் சந்தாக்கள் (1955ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் நாளில்)

| வட்டாரம் | பயனுறும் அல்லது ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள கடன்கள் (1) | மொத்த 18% மூலதனம் (2) | (1)ஆம் (2)-ன் சதவீதமாக (3) |
|---|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடும் கானடாவும் ... | $ 624·9 | $ 630·0 | 99% |
| ஐரோப்பா ... | 133·6 | 586·8 | 23 |
| இலத்தீன் அமெரிக்கா ... | 0·2 | 60·5 | — |
| ஆஃப்பிரிக்கா ... | 5·8 | 28·1 | 21 |
| ஆசியா ... | — | 283·6 | — |
| ஆஸ்திரேலியா ... | — | 36·0 | — |
| மொத்தம் ... | $ 764·5 | $1,625·0 | 47% |

ஆதாரம்: உலக வங்கி 10ஆம் ஆண்டறிக்கை, வாசிங்டன் டி. சி. 1955. பக்கம். 14.

உலக வங்கி மிகவும் நியாயமான வட்டி விகிதங்களிலும் எளிய கட்டுப்பாடுகளிலும், கடனுதவியளிக்கிறது. இரண்டாவ தாக 20 முதல் 22 ஆண்டுகளுக்குள்ளாக எளிய தவணை முறை களில் திரும்பப் பெற்றுக் கொள்கிறது. மூன்றாவதாக நாட்டின் சீரான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகிறது. நான்கா வதாகப் பன்முக வர்த்தகத்தை நன்கு ஊக்குவிக்கிறது. ஐந்தா வதாகப் பன்னாட்டவர்களும் பங்கு கொண்டு அதன் விளைவாகப் பொறுப்புகளையும் சிரமங்களையும் மேற்கொள்கிறார்கள். முடி வாக இவ்வுலகின்கண் மெச்சத்தகும் முறையில் கடன் வசதியளிப் பதற்கு இதைவிட இச் சிறந்த ஒரு நிறுவனம் எதுவும் இல்லை.

## பன்னாட்டு நிதிக் கழகம் (The International Finance Corporation)

இந்நிறுவனம் கடனாக மூலதனமும், தொழில் துவங்குவதற் கான மூலதனமும் கொடுக்க முன் வருகிறது. இந் நிறுவனம் உலக வங்கியின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலதனம் 100 பில்லியன் டாலர்கள். இது கடன்கோரும் கம்பெனிகளின் டிபென்சர் கடன் பத்திரங்களின் (Debentures) வாங்கிக் கொண்டு அவற்றின் ஈட்டின் பேரில் கடனுதவியளிக் கிறது. தொழிலை நன்கு தூண்டிவிடும் நிறுவனமாக இது உள்ளபடியால் இதற்கு மாபெரும் வரவேற்பு எல்லா நாடுகளிலும் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. இது வளர்ச்சி பெறு நாடுகளின் தொழிலைத் தோற்றுவிக்கிறது; உள் நாட்டுத் தனியாரிடமிருந்து மூலதனத்தை சேகரிக்கிறது; அயல் நாடுகளில் தோன்றியுள்ள தொழிலை வெற்றிகரமாக நடத்தப் போதிய தொழில் அனுபவ மிக்க நடத்துனர்களைப் பயிற்சி கொடுத்து ஆங்காங்கே நடத்தி வைக்கிறது. ஆயினும், இந்த நிறுவனம் எந்தத் தொழிலையும் தாமே எடுத்து நடத்துவதில்லை. எல்லா நாடுகளிலும் உள்ள தனியார் நிறுவனங்களையும் நன்கு நடத்த இது பேருதவியளிக் கிறது.

## ஏற்றுமதி, இறக்குமதி வங்கி (Export and Import Bank)

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சொந்த நிறுவனமான இந்த வங்கி நீண்ட காலக் கடன் உதவியளிக்க வேண்டும் என்று அதன் சாசனத்தில் குறிக்கப்படுகிறது. இது கொடுக்கும் கடன் உதவிகள் அரசினரின் உத்தரவாதத்துடன் வெளி வருகிறது. அநேக வர்த்தகக் கொள்முதல் விற்பனைகளில் இந்த வங்கியி-னுடைய முழுப்பயனையும் இதர நாட்டவர் அடையவில்லை. 1934ஆம் ஆண்டில் பொருளாதார மாற்றத்தின் காரணமாக (depression) ஏற்றுமதிகளை ஊக்குவிக்க வேண்டி இதைத்

தொடங்கினார்கள். இதன் கடனளிக்கும் எல்லை 5 பில்லியன் டாலர்கள். இத்தொகையை நாட்டின் கருவூலத்திலிருந்து எவ்வயமும் பெற்றுக்கொள்ளலாம். 1935ஆம் ஆண்டு இதன் பொருள் நிலைமை வருமாறு :

(i) அதிகாரம் பெற்ற கடன்கள் 7·4 பில்லியன் டாலர்கள். (7.4 Billion Dollars)

(ii) நிராகரிக்கப்பட்டவை 1·4.

(iii) வழங்கப்பட்டவை 5·4.

(iv) திருப்பிச் செலுத்தப்பட்டவை 2·4.

(v) நிலுவையிலுள்ள கடன்கள்.

இதை நடத்தும் ஆளுநர் செலவு இதன் மொத்த வருவாயில் 1·6%தான். இந்த வங்கி தனிப்பட்ட முறையில் கடனாகவும், உத்தரவாதங்களாகவும், ஏற்றுமதி, இறக்குமதிக்கான வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான பண உதவியும் செய்கிறது. வர்த்தக வங்கிகளிலிருந்து எளிதில் கடன் பெறமுடியாத தொழில்கள் இவற்றினின்று பெறுகின்றன.

நேர்முகக் கடனாக இவ்வங்கி ஏற்றுமதியாளரிடம் இருந்து கொள்முதல் செய்கிறது, அல்லது இறக்குமதியாளர்களின் உண்டிகளை ஏற்று எடுத்து வர்த்தகத்தினை நடத்துகிறது.

உலக வங்கி மிகவும் அகன்ற வட்டாரத்திற்குப் பன்னாட்டு அளவில் உதவி புரிகிறது. ஏற்றுமதி, இறக்குமதி வங்கி குறுகிய எல்லைக் கோட்டினுள் அமெரிக்க அரசின் முத்திரைக்கு இணங்கிப் பணியாற்றுகிறது. இது இலத்தின் அமெரிக்காவிற்கு மட்டிலும் 9 பில்லியன் டாலர், ஆசியாவிற்கு ·3 பில்லியன் டாலர், ஆஃப்ரிக்காவிற்கு .1 பில்லியன் டாலர் ஐரோப்பாவிற்கு .5 பில்லியன் டாலர் கடன் உதவி அளித்திருக்கிறது.

சான்மேனார்ட் கீன்ஸ் பிரபு (John Meynarod keynes)

பொன் கட்டித் திட்டம் திரும்பவும் சரிந்து சீர்குலைந்த நிலையில் உள்ள காலத்தில் பல்வேறு நாடாளுனர்களும் பொருளியல் வல்லுநர்களும் இதற்கான மாற்று முறையைக் கொண்டு வரயியலாது தவித்த போது சான் மேனார்ட் கீன்ஸ்பிரபு அவர்கள் தற்காலிகமாக டாலர்-பவுண்டு ஒற்றுமை (Dollar-Pound Parity) விகிதத்தைக் கண்டுபிடித்தார். 1922ஆம் ஆண்டில் செனிவாவில் (Geneva)நடந்த மாநாட்டில் பொன்கட்டி மாற்று (Gold Exchange Standard) விகிதத்தைப் புகுத்தியவரும்

அவரே. ஸ்டர்லிங் வட்டம், டாலர் வட்டம் என்ற வெவ்வேறு வட்டாரப் பிரிவினைகள் தோன்றி பன்னாட்டின் வர்த்தக நிலையை வெகுவாகப் பாதித்தது. ஃபிரான்சு நாட்டின் ஃபிராங்கு (France) பிரிட்டனின் பவுண்டு ஸ்டர்லிங்கு, அமெரிக்க ஐக்கிய நாட்டின் டாலர் இம் மூன்றையும் இணைத்து முக்கூட்டு மாநாடு நடத்தி அதன் விளைவாகப் பன்னாட்டுப் பணநிதியை உருவாக்கும் சிற்பிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். பன்னாட்டு வர்த்தகத்தின் நிரந்தரத்' தன்மையை ஏற்படுத்தி எந்தெந்த விகிதங்களில் வாணிபக் கொடுப்பல் நிலையை அந்தந்த நாடுகள் சீராக்க வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தினர்—1944ஆம் ஆண்டில் பிரிட்டன் வுட்ஸில் (Bretton woods) நடந்த மாநாட்டில் கீன்ஸின் முடிவுரையின் குறிப்பாவது—'இந்த பெருமளவில் உருவாக்கப்பட்ட எளிதில் விளங்கக்கூடிய பொது அமைப்பு நிறுவனம்—பொது அளவைக் கொண்டது, பொதுச் சட்டத்தைப் பெற்றது-எந்நாட்டினரையும் பாதிக்காதது. எளிதில் புரிந்து அதன் படி நடத்திவரக் கூடியது...அரசியல் வாதிகள், சட்ட அறிஞர்கள், பொருளாளர்கள், நிதியாளர்கள், பிரச்சாரம் செய்வோர்கள் எழுத்தாளர்கள் இவர்களின் ஒத்துழைப்பின் மூலம்தான் இந்த நிறுவனம் நன்கு சீர்படும்—ஒருவேளை கடவுளின் கையிலும் குறி சொல்வோரின் போக்கிலும் இது சீர்படக் கூடும்'.[1]

[1] B. K. Madan—Echoes of Bretton Woods in Finance and Department Quarterly No. 2, 1969 p. 31.

# 16. பன்னாட்டுப் பணநிதி
## (International Monetary Fund)

**கோட்பாடுகள்**

ப்ரெட்டன் உட்ஸ் (Bretton Woods) என்ற இடத்தில் ஜூலை 1944ஆம் ஆண்டில் நடந்த மாநாட்டில் இந்தப் பன்னாட்டுப் பணநிதி தோன்றியது. 1947ஆம் ஆண்டு மார்ச்சு முதல் நாள் இது தன் வேலையைத் துவக்கியது. இந்த நிதியின் முக்கியப் பணியைப் பற்றிய விளக்கம் ஒன்ருவது சரத்தில் விளக்கப் பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

(அ) பன்னாட்டுப் பணக் கூட்டுறவை ஏற்படுத்தி அதன் மூலம் பல நாடுகள் ஒருமித்துத் தொழில், பண செலவினங்களில் ஈடுபட்டு, அதன் மூலம் முன்னேற்றமடையத் தக்க ஒரு நிறுவனம்,

(ஆ) பன்னாட்டு வர்த்தகம் ஒரேசீராக வளர்ச்சி பெறவும், அதன் மூலம் நாட்டில் உயரிய நிலையில் முழு வேலை வாய்ப்பு ஏற்படும்படியாகவும்,

(இ) செலாவணி மாற்று விகிதத்தில் ஒரு நிரந்தர நிலையேற்படவும், உறுப்பினரிடையே குழப்பமற்ற மாற்றுச் செலாவணி வர்த்தகம் நடைபெறும்படி தூண்டவும்,

(ஈ) உறுப்பினர்களிடையே நடைபெறும் நடப்பு வர்த்தகத்தைப் பன்முகக் கொடுப்பல் நிலையை உண்டாக்கி, அயல்நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டை அகற்றி, பன்னாட்டு வர்த்தகத்தைச் செம்மையாக நடத்த முன் வருதல்,

(உ) உறுப்பினர்களுக்கு நன்னம்பிக்கை உண்டாக்கி, வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் கடன் நிலையை மாற்றியமைத்து அவர்களுக்குப் போதிய நிதியளித்து நாட்டின் பொருள் நிலையைச் சீர்குலைக்காது பார்த்துக் கொள்ளுதல்,

(ஊ) மேலே கூறியவைகளை நடைமுறையில் செயல் படுத்தியும், சமநிலையற்ற தன்மையை நீடிக்கவிடாது கட்டுப் படுத்தியும், வாணிபக் கொடுப்பல் நிலையைச் சீராக்கி விடும்படியும் தூண்டிவிடுகிறது.

பங்கு விதிப்புகளும், ஒப்பியவைகளும் (Subscriptions) : இந்த நிதியின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இன்ன அளவென்ற பங்கு விதிப்பு செய்யப்பட்டுள்ளது. பங்கின் அளவைப் பொறுத்து அந் நாடு செலுத்த வேண்டிய மூலதனம் தீர்மானிக்கப்படுகிறது. அந்நாட்டின் கடன் வாங்கும் உரிமைகளேயும், வாக்களிக்கும் (Voting) உரிமைகளேயும் நிருணயிக்கிறது. ஒவ்வோர் உறுப்பினரும் குறைந்த அளவு பொன் கட்டியைச் செலுத்த வேண்டியது. அதாவது பங்கில் 25% அல்லது அதன் கையிருப்பில் 10% அமெரிக்க ஐக்கிய டாலரில் செலுத்த வேண்டியது. இது போக மீதியைத் தன் நாட்டுச் செலாவணியில் செலுத்த வேண்டியது. அநேக உறுப்பினர்கள் இந்த வசதியைப் பயன் படுத்திக் கொண்டுள்ளனர். பொன்னற்ற சொத்துகள் பொதுவாக உண்டியல்களாகவும் பத்திரங்களாகவும் உள்ளன.

பங்கு விதிப்புத் தீர்மானம் செய்யப்படும் முறை

நிதி துவக்கப்பட்ட போது ப்ரெட்டன் வுட்ஸில் குழுமியிருந்த நாட்டு உறுப்பினர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தி இசைவு கண்டு அதன் முடிவாகத் தத்தம் நாட்டின் பங்கு இன்னதென்று முடிவு செய்து கொண்டனர். பங்குவிதிப்பு முறையை முடிவு செய்ய நிதி நடத்திய அடிப்படைப் புள்ளி விவரங்கள் வருமாறு :

(i) நாட்டின் பன்னாட்டு வர்த்தகம்,

(ii) வர்த்தகத்தின் அமைப்பும் மாற்ற விகிதமும்,

(iii) பன்னாட்டு ஒதுக்கு நிதி (Reserves)

(iv) கடன் உதவியற்றவர் அல்லது கடன் உதவி அளிப்பவர்

(v) நாட்டின் தேசிய வருமானம்,

(vi) பன்னாட்டு வர்த்தகத்தின் இன்றியமையாத தன்மை

(vii) நாட்டின் அரசியல்நிலே.

ஒவ்வொரு நாட்டிற்கும் இன்ன விகிதம் என்று இது காறும் பன்னாட்டுப் பணநிதி வெளிப்படையாகக் கூறியது கிடையாது. இந்த நிதியின் சொத்துகள் பத்து பில்லியன் (Billion) என்றும் பங்கு விதிப்பு அங்கு ப்ரெட்டன் வுட்ஸ் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு மட்டும் 8 பில்லியன்

என்றும் இன்னும் பிற்காலங்களில் வந்து சேரும் புதிய உறுப்பினர்களுக்கென 2 பில்லியன் பங்கு என்றும் ஒதுக்கி வைக்கப்பட்டது. யுத்தம் முடிந்த பிற்காலங்களில் நாடுகள் பொன்னையும் (gold) டாலர்களையும் (dollar) தேவையெனக் கருதுவார்கள் என்ற காரணங்களால் இந்த நிதியின் சொத்துகள் அனைத்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து பெற்றனர். புதிய உறுப்பினர்களுக்கான பங்கு இன்னதென்று நிதிதான் முடிவு செய்யும். இப்போது உள்ள பங்கு முறையில் உள்ள திட்டத்தினுள் புதிய உறுப்பினர்களை அமைக்கும் நோக்குடன்தான் நிதி அவ்வாறு முடிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

உறுப்பினர்கள் பங்கு விகிதத்தைப் பொறுத்தே அவர்கள் அனுப்பவேண்டிய உதவித் தொகையும், பணம் கடனுதவி பெறும் தொகையும் முடிவு செய்யப்படும். நாட்டின் உதவித் தொகையையும் அது கடன் பெறும் தொகையையும் ஒன்றாக முடிவு செய்ய இயலாது. நாட்டின் அயல் நாட்டு வர்த்தகம் செம்மையாக நடந்து அதன் விளைவாக வாணிபக் கொடுப்பல் நிலை மிகவும் கிடைப்பதான முறையில் அமைத்தும், இதர நாடுகள் இதன் செலாவணியைத் தேடும் நிலையில் இருப்பின் அந்தக் குறிப்பிட்ட நாட்டிற்குச் செல்வநிலை உயரியது. அது நிதிக்கு உதவித் தொகை அளிக்கலாம்.

### பங்கு விதிப்பு இன்ன அளவு என்று முடிவு செய்யப்படும் முறை

இந்தப் பண நிதியில் உறுப்பினர்கள் கொடுக்கும் சந்தாத் தொகையில் இலாப நட்டங்களைச் சரி கட்டி விடுவார்கள். இந்த நிதி நிறுவிய காலத்தில் $ 8·10 பில்லியன் டாலர்கள் மூலதனமாக அமைத்தது, மிகவும் குறைவு எனப் பல்வேறு உறுப்பினர்கள் கருதினார்கள். கீன்ஸ் (Keyens) பரிந்துரை செய்திருந்த பன்னாட்டுத் தீர்வகத்தின் மூலத்தொகை 25 பில்லியன் டாலர்கள் என்பதைக் கருதும்போது இந்த 8·10 பில்லியன் டாலகர்ள் மிகவும் குறைவே எனலாம். சிறிது காலத்திற்குப் பிறகு உலக வர்த்தகம் பெருக ஆரம்பித்தவுடனும் விலைகள் சடுதியில் ஏற ஆரம்பித்தவுடனும் மூலதனம் மிகவும் குறைவு எனக் கூற ஆரம்பித்தனர். பெரும் பொருளாதார நிதி தொடர்பான மாற்றங்கள் நாடுகளை வெகுவாகப் பாதித்து அதன் விளைவாக இருமுறை எல்லா நாடுகளும் பன்னாட்டுப் பண நிதியின் கையிருப்பினை அண்டிக் கடன் பெற்றன. அவ்விரு காலங்கள் 1947-49-ம், 1956-57-ம் ஆகும். 1947-49-ல் கடனை வாங்கிய நாடுகள் திருப்பிக் கடனை அடைத்து விட்ட காரணத்தால் 1956–57-ல் புதிய கடன்தேவைகளை உடனே ஈடுகட்ட முடிந்தது.

1959ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பன்னாட்டுப்பணநிதி தனது மூலதனத்தை அதிகமாக்க முடிவு செய்தது. ஆதலால் உறுப்பினர்களுடைய பங்கு விகிதத்தை 50% அதிகமாக்கியது. உலக வர்த்தகத்தில் அந்த நிலைமையில் வர்த்தகப் பெருக்கும், பொருளாதார வளர்ச்சியும் அதிகரித்த நாடுகளான கனடா, மேற்கு செர்மனி, சப்பான் முதலிய நாடுகளுக்குள்ள பங்கு விகிதத்தை இன்னும் 50% அதிகமாக்கியது. இதன் விளைவாக பன்னாட்டுப் பண நிதியின் மூல நிதி 5 பில்லியன் தொகையாக அதிகரித்தது.

**பல்வேறு செலாவணிகளின் மாற்று மதிப்பு** (Pan value of Currencies)

நிதியின் ஒப்பந்தத்தில் கண்டுள்ள IVஆம் பிரிவின்கீழ் ஒவ்வோர் உறுப்பினரும் நாட்டின் செலாவணியைப் பொன்னுக்கு நிகரான மதிப்பு இன்னதென்றோ அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டின் டாலருக்குச் சமமான மதிப்பு இன்னதென்றோ பிரகடனம் செய்தல்வேண்டும். முன்னரே அமெரிக்க ஐக்கிய நாட்டுச் செலாவணியாகிய டாலர்கள் 35.00 ஓர் அவுன்சு பொன்னுக்குச் சமமான மதிப்பு எனலாம். நிதியின் எந்த உறுப்பினரும் பொன்கட்டியை வாங்கப்பிரகடனம் செய்த விகிதத்திற்கு அதிகமான தொகைகளைக்கொடுத்து வாங்கக்கூடாது. அதே போன்று எந்த உறுப்பினரும் அதே விலைக்குப் பொன் கட்டியை விற்கக்கூடாது.

இவ்வளவு கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் பொன்கட்டி தொடர்பான பேரங்கள் மிகுதியான விலை விகிதத்தில் நடந்து வந்தன. 1947ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிதி தமது உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி அதில்எந்த உறுப்பினரும் உபரி விலைக்குப்பொன் தொடர்பான பேரங்களைச் செய்தல் கூடாது என்று கண்டித்தது. இரு காரணங்களின் அடிப்படையில் பன்னாட்டுப் பணநிதி பொன்னை உபரி விலையிட்டு வர்த்தகம் புரிவதைக் கண்டித்தது. அவையாவன:

(i) செலாவணி மாற்று விகித உறவை இந்த உபரி விலை நிலைக்காவண்ணம் பாதித்து விடுகிறது.

(ii) செலாவணிக் கையிருப்பு நட்டப்பட்டு, அதன் விளைவாக மத்திய நிதியினின்று குறைவுபட்டுத் தனி நபருக்கு இலாபமாகப் போய்விடுகிறது.

ஊக வர்த்தகத்தில் ரொக்க விற்பனையையொட்டிச் செலாவணி விகிதத்தை மாற்ற உறுப்பினர்கள் முயற்சி செய்வதில்லை

என்று வாக்கு கொடுத்துள்ளனர். ரொக்கமல்லாத இதர விற்பனை களில், பன்னாட்டுப் பணநிதி குறிப்பிடும் விகிதத்திற்கு மேல் அமைக்கக் கூடாது. பண்டு பொன்கட்டி வர்த்தகத்தில் இருந்த விலையைக் காட்டிலும் ஏற்றமோ இறக்கமோ செய்ய வேண்டிய தில்லை. இந்த ஒப்பந்தத்தின் கீழ் உறுப்பினர்கள் தங்கள் நாட்டுச் செலாவணி விகிதத்தை என்றும் மாறக்கூடிய நிலைமையில் வைத்துக் கொள்வதில்லை என்று உறுதியளிக்கிறார்கள். பொன் கட்டி இருந்த காலத்தில் செலாவணி விகிதங்கள் பொன்னின் விகிதத்திற்கேற்பத் தாமாகவே ஏறி இறங்கியது. இவ்விரு மாற்றங்களும் பிறரின் தூண்டுதலின்றி நிகழ்வதால் (Automatic) தாமாகவே இயங்குகின்றன எனக் கருதலாம்.

பன்னாட்டுப் பணநிதியின் உறுப்பினர்கள் தத்தம் நாட்டுச் செலாவணி காரணமற்று மாறாது என்று உறுதி அளிக்கிறார்கள். எதிர்பாராத விதமாக மாற்றமேற்படின் அவர்கள், அதற்கு வேண்டிய அளவில் பணநிதியிலிருந்து கடன் வாங்கி, நிலைமையைச் சமாளித்துக் கொள்கிறார்கள். இப் பணநிதிக் கொள்கை என்ன வெனில் செலாவணி விகிதத்தை நிரந்தரமாக்குதலேயன்றி இறக்கிவிடுவது (not visit) அல்ல. ஓர் உறுப்பினர் இந் நிதியின் அனுமதியின்றித் தம்மிச்சைப்படிச் செலாவணி விகிதத்தை மாற்றினால், அந்தஉறுப்பினர் நாட்டுக்குஎவ்விதமான சலுகை களும் பணவசதிகளும் கொடுக்க பணநிதி விரும்பாது.

## ஆரம்பச் செலாவணி மாற்ற நிலையைத் தீர்மானித்தல் (Estrablishment of Initial Per Value)

இந்தப் பணநிதி தோன்றிய சமயத்தில் அதன் உறுப்பினர்கள் தத்தம் நாட்டுச் செலாவணியின் மாற்று விகிதங்கள் இன்ன தென்று பணநிதியிடம் வகுத்துக் கூறவேண்டும். பணநிதியின் அபிப்பிரயாயத்தில் இது சரியான விகிதம் இல்லை என்று தோன்றிய நேரத்தில் அந்த விகிதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து விடும். ஆயினும் நடைமுறையில் இந்தப் பணநிதி இதுகாறும் எந்த நாட்டுச் செலாவணி மாற்று விகிதத்தையும் நிராகரித்த தில்லை. 1946ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்து விகிதத்திலேயே இன்றுவரை மாற்று விகிதத்தை அனுமதித்து வந்திருக்கிறது.

இந்நிதி உறுப்பினரின் கடன் செலுத்தும் செயலில் சற்றுப் பெருந்தன்மையுடன் சில நன்மைகள் செய்யலாம். சட்டப்படி 25% தள்ளுபடி கொடுக்கலாம். பொன்னுக்குப் பதிலாக வெள்ளி முதலீடுகள் இவற்றை மதிப்பிட்டு ஏற்றுக்கொள்ளலாம்.

**ப. ப. நி. யின் கொடுக்கல், வாங்கல் முறைகள்**

ஓர் உறுப்பினர் தானாகவே முன் வந்து மற்றோர் உறுப்பினர் நாட்டின் செலாவணியைக் கோரின் பொன்னிற்கு ஈடாகவோ, அல்லது அவரது நாட்டுச் செலாவணி விகிதத்திலோ இது வழங்கும். அவ்வாறு கொள்முதல் செய்யும்போது கையாள வேண்டிய விதிகளாவன :

(i) நிலவியுள்ள கொடுக்கல்களுக்கான செலாவணிகளை வழங்கும்.

(ii) ப. ப. நி. அந்தக் குறிப்பிட்டச் செலாவணி கிடைப்பதற்கரிது என்ற தகவலை வெளியிடாதிருக்க வேண்டும்.

(iii) நடந்த ஆண்டிற்குள்ளாகக் கொள்முதல் செய்யும் உறுப்பினரின் பங்கு 25%-க்கு அதிகமாக வளரக் கூடாது. மேலும் தொடர்ந்து கூட்டாகச் செய்யப் பட்டக் கொள்முதல் (Cumulative Purchase) 200% அதற்கான பங்குத் தொகைக்கும் அதிகமாக இருக்கக் கூடாது. உறுப்பினரின் பங்குத் தொகை 75%-க்கு மேல் கூடாதிருப்பின் 25% வரை ப.ப.நி. தள்ளுபடி கொடுக்கும். வாணிபக் கொடுப்பல் நிலையில் திடீரெனச் சரிகட்ட இயலா நிலை உருவாகலாம். 25% கட்டாய இருப்பு நிலையைக் கடைப்பிடித்தால் கண்டிப் பாக வாணிபக் கொடுப்பல் நிலையைச் சமாளிக்கலாம்.

**செலவினங்கள் (Charges)**

ப.ப.நி. ஒரே சீரான அளவில் பணிபுரிவதற்கான கூலியைப் பெறுகிறது. இந்தக் கூலி முக்கால் சதவிகிதம் முதல் ஒரு சதவிகிதம் வரை இருக்கும். அத்தொகையை உறுப்பினர் நாட்டின் செலாவணியில் பெற்றுக் கொள்ளும். இதை ஒரு சதவிகிதம் வரை ஏற்றவோ அல்லது $\frac{1}{2}$ சதவிகிதத்திற்குக் குறைக்கவோ இதற்கு ஆதரவு இருக்கிறது. ப.ப.நி. யிடமிருந்து பொன் கொள்முதலோ அல்லது காப்பீட்டாகவோ வைப்பின் அதைக் கைவசம் வைத்துக் கொள்ள ஒரு தொகை கூலியாகக் கோரப்படலாம்.

**மூலதன மாற்றங்கள் (Capital transfers)**

மூலதன வெளியேற்றத்திற்கு இந்தத் தொகையைப் பயன் படுத்த ப.ப.நி. எந்த உறுப்பினரையும் அனுமதிக்காது. வா.கொ. நிலையைத் தற்காலிகமாகச் சமாளிக்கத்தான் இந்த நிறுவனம் பயன் அளிக்கிறதே அன்றி உறுப்பினர் மூலதன வெளியேற்றத்திற்கு இதைப் பயன்படுத்தக் கூடாது.

**கிடைப்பதற்கரிதான செலாவணிகள் (Scarce Currencies)**

ப.ப.நி.யின் உறுப்பினர் நாட்டுச் செலாவணி கிடைப்பதற்கு அரிது என்று வைத்துக் கொள்வோம். ப.ப.நி. அந்த உறுப்பினரின் உதவியுடன் ஓர் அறிக்கையைத் தயார் செய்து ஏன் அச் செலாவணி அவ்வாறாக மாறியது எனக் கூறும். அந்த உறுப்பினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு கடனாகவோ அல்லது வேறொரு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளவோ முயலும். ஆயினும் நியமனப்படி எந்நாட்டு உறுப்பினருடன் கடனைப் பெறக் கூடாதென்பதே. பின்னர் அச் செலாவணியைப் பங்கிட்டுத் தேவையுள்ள நாடுகளுக்கு வழங்கக்கூடும்.

# 17. சுங்கவரித் தீர்வை வர்த்தகத் தொடர்புடைய பொது ஒப்பந்தம்

## (General Agreement on Trade & Tariff)

### கொள்கைகள்

ஒப்பந்தத்தில் ஈடுபடும் நேசநாடுகள் தத்தம் நாட்டிற்கு நன்மையாக அமையக்கூடிய அளவில் கீழ்க்காணும் குறிக்கோள் களுடன் முன்வரும். அவைகளாவன:

1. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முற்படல்.

2. முழுவேலை வாய்ப்பு வசதியுடன் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கவும் பொதுத் தேவைகளை ஈடு கொடுக்கவும்.

3. உலகின்கண் உள்ள ஆதாரப் பொருள்களைப் பயன் படுத்தவும்.

4. உற்பத்திப் பெருக்கினைச் செய்து பன்னாட்டு வர்த்த கத்தை அதிகப் படுத்தவும்.

மேற்கூறிய கொள்கைகள் மிகவும் பொதுவானவை. இந்த ஏற்பாடுகள் மறைமுகமாக பன்முக (Multilateral) வர்த்தகத்தைச் செம்மைப்படுத்தப் பயன்படுகின்றன. நேர்முகக் கொள்கைகளைப் பரப்ப முயலவில்லை. இவ்வொப்பந்தத்தின் பிரிவுகள் முழு வேலை வாய்ப்பினைப்பற்றிக் கருதுவதில்லை. வர்த்தகத்தை அதிக மேம்பாடடையக் கூடிய நிலையில் கொணர்ந்து விட்டால் அதன் முடிவில் முழுவேலை வாய்ப்பு ஏற்படும் என்று கருத இடமுண்டு. உள்நாட்டு, பன்னாட்டு முறைகள் மூலம் முழு வேலை வாய்ப்பினை நன்கு உண்டாக்க இயலும். அதே போன்று வர்த்தக முறையல்லாது பிறிதொரு முறையின் மூலம் உலகின் கண்ணுள்ள நாடுகளில் மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியும், பயன்படுத்த

இயலா மூலப் பொருள்களையும், காரணிகளையும் முழுவதையும் பயன்படுத்தவும் வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டுவது இன்றியமை யாததெனலாம்.

சுங்கவரித் தீர்வைகளையும், வர்த்தகக் கட்டுப்பாடுகளையும், மிகவும் குறைத்து வரவேண்டுமேயொழிய அவற்றை நீக்கக் கூடாது. இவ்வொப்பந்தத்தை முதலில் உருவாக்கியவர்கள் சில சூழ்நிலைகளையொட்டி வர்த்தகக் கட்டுப்பாடுகள் ஓர் அளவிற்கு இருக்க வேண்டுமென்று அறிந்துள்ளனர். இந்த ஒப்பந்தம் உறுப்பினர்களுக்கு முழுச் சுதந்திரத்துடன் சுங்கவரித் தீர்வையை அதிகரிக்கவோ, குறைக்கவோ செய்யலாம். தானாகவே கட்டுப்பட்டுள்ள நாடுகள் இதன் கட்டுப்பாடுகளை மறு முறை மாற்றக்கூடாது.

பிரிவு 2: (Article II) ஒப்பந்தத்தில் ஈடுபடும் உறுப்பினர்கள்.

(i) நிபந்தனையின்றி (unconditional) இதர நாட்டினை மி.ப.கா. (M.F.N.)வாக பாவித்து நடத்தவேண்டும்.

(ii) தற்போது காட்டப்படும் சலுகை முறைகளைக் கையாளாது நடந்து கொள்ள வேண்டும். இந்த மி.ப.கா. (M.F.N.) என்ற பிரிவு அமெரிக்க ஐக்கிய நாட்டுச் செயல் முறை யால் தோன்றியது. இந்த முறை எல்லாருடைய புகழ்ச்சியைத் தட்டிக் கொண்டு போய்விட்டது. சலுகை முறையைச் சற்று விளக்க முயல்வோம். அமெரிக்க ஐக்கிய நாடுகள் வரலாற்றின் காரணத்தால் அடுத்துள்ள கியூபாவிற்கும் (Cuba) ஃபிலிப்பைன்ஸ் (Philippines) நாடுகளுக்கும் குறைந்த சுங்கத் தீர்வையை விதித்திருக்கின்றது. பிரிட்டன் நாடு அதே போன்று காமன் வெல்த் (Commonwealth) நாடுகளுக்கும் சுங்கத் தீர்வையைக் குறைந்த விகிதத்தில் அமைத்துள்ளது. பிரான்சு நாடும் தனது குடியேற்ற நாடுகளுக்கு இம்மாதிரியே குறைந்த விகிதத்தில் சுங்க வரியை விதிக்கிறது. இரண்டாவது பிரிவில் சலுகை காட்டுதல் தடை செய்யப்படவில்லை. ஆனால், புதிய சலுகைகளை அளிப்பது தடுக்கப்படுகிறது. குறிப்பாகப் புதிய சலுகைகளோ அல்லது நடப்பில் உள்ள சலுகைகளோ இன்னும் அதிகரித்தல் கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது.

புதிய சலுகைகள் காட்டக் கூடாது என்ற நியதி பல உறுப்பினர்களால் எதிர்க்கப்படுகிறது. குறிப்பாக ஆஸ்திரேலி யாவும், பிரிட்டனும் எதிர்க்கின்றன. இதன் விளைவாக இப்பிரிவின்

கீழ் விட்டுக் கொடுக்கும் (Waiver) உரிமை உள்ளது. இதன் அடிப்படையில் பிரிட்டன் தனது குடியேற்றப் பகுதியாகக் கரிபியன் (Carribean) தீவு களில் உற்பத்தியாகும் வேளாண்மைப் பொருள்களுக்குச் சலுகை அளிக்கிறது. சிட்ரஸ் (citrus) என்ற ஒரு வகை எலுமிச்சைப் பழங்கள், புகையிலை இவைகளுக்குப் போதிய சலுகையளிக்கப்படுகின்றது. பிரிட்டன் தனக்குக் கட்டுப்படாத பண்டங்களின் மீது அதிகத் தீர்வை விதிக்கலாமென்று முடிவு செய்துள்ளது. தீர்வை விலக்கு அளிக்கப்பட்டப் பண்டங்களின் மீது இந்தத் தடை விதிக்கப்படுவதில்லை. இந்தப் பிரிவின்கீழ் பலன் அனுபவிக்கக் கோரும் நாடுகள் குறிப்பாக இரண்டு நிபந்தனைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

(i) விட்டுக் கொடுத்தலின் (Waiver) காரணத்தால் உலகின் பன்னாட்டுக்குப் போகும் வர்த்தகம் காமன்வெல்த் நாடுகளுக்குள் மட்டும் மாறிப்போகக் கூடாது.

(ii) 1939ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் போன்ற காமன் வெல்த் நாடுகளிலிருந்து வரும் பண்டங்களுக்கு விதி விலக்கு காட்டக் கூடாது.

பிரிவு 3 : சு.வ.ச.பொ. ஒ.வின் (G. A. T. T) தீர்வை கைமாற்று (Negotiations) விதிகளின் கீழ் பல சலுகைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சலுகைகளை வீணடிக்காது பாதுகாக்க முயல்கிறது. உறுப்பினர்கள் தம்மிச்சைக்கேற்ப தீர்வை விதிக்கப்படும் பண்டங்களின் மீது தீர்வையை நீக்கக் கூடாது எனக் கூறுகிறது.

பிரிவு 4: வர்த்தகத்திற்குத் தடை விதிக்கும் நோக்குடன் சலுகை அளித்த பின்னர் உள்நாட்டில் வரி உருவில் அவற்றின் மீது தடை விதிக்கக் கூடாது எனக் கூறுகிறது. இந்தத் தனிப்பட்ட உள் நாட்டு வரிகள் மறைமுகத் தடைகள் எனக் கூறலாம்.

பிரிவு 5: பல்வேறு நாடுகளின் வழியே செல்லக் கூடிய பிற நாடுகளுக்குப் போய்ச் சேரும் பண்டங்களின் மீது தேவையற்றப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்து பிறிதொரு நாட்டிற்குப் போகும் பண்டங்களின் மீது தடை விதிக்கக்கூடாது என்கிறது. குறிப்பாக உறுப்பினர்கள் இம்மாதிரியான கட்டுத் திட்டங்களை அமலாக்கக் கூடாதெனக் கூறுகிறது.

பிரிவு 6: உறுப்பினர் நாட்டில் நடப்பில் நடந்து வரும் தொழிலுக்கு விரோதமாக அந்நாட்டில் திணறிக் கொட்டல் முறையை உடனே அகற்ற வேண்டும் எனக் கூறுகிறது. அந்த

உறுப்பினர் அம்மாதிரியான நிலையை எவ்வாறு சமாளித்துக் கொள்ள வேண்டும் என்று வழி முறையைக் காட்டி விளக்குகிறது. திணறிக் கொட்டல் தடுப்பு (Anti Dumping) முறை சமனுக்கு வரி (Counter vailing Duty) விதிப்பு முறை.

பிரிவு 7: சுங்கவரி முறைக்கு எவ்வகையில் பண்டங்களுக்கு மதிப்பீடு செய்தல் வேண்டும் என்ற முறையை விளக்குகிறது.

பிரிவு 8: சுங்கவரி எத்தரத்தில் அமைய வேண்டும் என்றும், எந்த விகிதத்தில் சுங்கத் தீர்வைத் தொகை இருக்க வேண்டும் என்றும், இறக்குமதியைத் தடுக்கும் நோக்கத்துடன் இருக்கக் கூடாதென்றும் கூறுகிறது.

பிரிவு 9: எந்நாட்டிலிருந்து பண்டம் உருவாகியுள்ளது என்று எளிதில் அறிந்து கொள்ளத் தக்ககுறிப்புகளும் (Marks) இலச்சினைகளும் குறிக்கப்பட வேண்டும் என்றும், வேற்றுமை காட்டும் தன்மையை அறவே நீக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

பிரிவு 10: உறுப்பினர்களை (i) தத்தம் நாட்டில் உள்ள பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான விதிகளை வெளியிடும் படியும் (ii) மேற்படி விதிகளை ஒரே சீரான முறையில் வேற்றுமை காட்டாது கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

பிரிவு (11): பிரிவு 4-ம், 10-ம் பொதுக் கல்வி நுட்பப் பிரிவு களாகக் கருதப்படுகின்றன. இப் பிரிவு அளவு கட்டுப்பாட்டை (Quantitative restriction) தீவிரமாகக் கண்டிக்கிறது. இறக்கு-மதித் தடை, பங்கு விதிப்பு (Quota), உரிமம் முறை இவைகளை எதிர்க்கிறது. இவையனைத்தும் ஒரே அடியாக நீக்க முற்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. இவற்றைக் கண்டித்தும் ஒன்றிரண்டு விதி விலக்குகளையும் கூறியுள்ளது. பங்கு விதிப்பு முறையை ஆதரித்து, இறக்குமதி செய்வதால் விவசாயத்தில் ஏற்படும் பின் விளைவுகளைத் தடுக்க இந்த முறை பயன்படும் எனக் கூறுகிறது.

## தீர்வைகள் குறைப்பு

வர்த்தக முன்னேற்றத்திற்குத் தடை போன்றவை தீர்வைகள். எனவே, ஒப்பந்த நாடுகள் தம்மிடையே தீர்வை களைக் குறைத்துக் கொள்ள முயலும்.

(i) ஒப்பந்தத்தில் நுழையும் நாடுகளும் அவை கோரும் தொழில்களும்,

(ii) வளர்ச்சியுறு நாடுகள் மிகவும் எளிய முறையில் நெகிழ்ச்சி தரக் கூடும் தீர்வை முறைகளைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் காக்க முயலுதல்,

(iii) நாட்டின் செல்வ, வரிவிதிப்பு. பங்குமுறை இவைகளை யொட்டித் தீர்வைகளைக் குறைக்கப் பாடுபடுகின்றன.

**தீர்வைகள் தொடர்புடைய நியமனங்கள்**

(i) ஒன்றையொன்று அண்டி அமைத்தலும், சலுகைகளைக் காட்டலும் : பொது ஒப்பந்தத்திலீடுபட்ட நாடுகள் தம்மிடையே பேச்சு வார்த்தைகளை நடத்திச் சலுகைகள், தீர்வைகளைக் குறைத்தல் இவைகளைப் பற்றி முடிவெடுக்கின்றன.

(ii) குறைந்த தீர்வைகளை அமைத்தல்: குறைந்த விகிதத்தில் தீர்வைகளை அமைத்தும் அல்லது ஒரு குறிப்பிட்டத் தொகைக்கு அதிகமாகத் தீர்வைகளை இடுவதில்லையென்றும், தீர்வையின்றிப் பண்ட மாற்றங்கள் செய்வது என்றும், அதன் காரணமாக பெரும் தொடர் வர்த்தகம் நிகழ வசதியேற்படும்.

**தீர்வை தொடர்பாக பேச்சு நடத்திய முறை (1947-1962) (Techniques of Tariff Negotiation)**

பன்னாட்டுத் தீர்வை நிறுவனம் (International Tariff Organisation): தமது சாசனத்தின் மூலம் உலகின்கண் உள்ள நாடுகள் அனைத்தும் ஒன்றுபடுத்தி தீர்வையைக் குறைப்பதற்கான வழிகளை ஆராய்ந்து இருவகையான முடிவுகளைக் கொணர்ந்தன. அவை,

(i) இருமுகப் பேச்சுவார்த்தைகள் மூலம்,

(ii) பன்முகத் தீர்வைக் குறைப்பு முறை வருங்காலத்தில் பெறும் பலன்களைப் பல்வேறு நாடுகளுக்குக் கிடைக்கும் என்ற ஓர் எண்ணத்தை உருவாக்கியது. ஆயினும் இந்தக் கொள்கையை உலகின் நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இது பயனற்றும் செயலற்றுக் கிடந்தது என்று க்ளேர் வில்காக்ஸ் (Clair Wilcox) தனது 'A Charter for world trade' (New York, 1948) பக்கம் 63-ல் முறையிடுகிறார். உச்சத் தீர்வை விதிக்கும் நாடுகள் உச்சத்தீர்வையினின்று வழுவ விரும்புவதில்லை. இது அவர்களுக்கு இலாபம் தரக் கூடியது எனினும் குறைந்த தீர்வை நாடுகளுக்கு இது நட்டம்தான். இருமுகப் பேச்சின் மூலம் ஏதேனும் இரு நாடுகள் பலன் பெறும் என்றாலும் இதிலுள்ள இடையூறுகள் மிகப் பல. இதைப் பற்றிய நுணுக்கங்

களைப் பின்வரும் அதிகாரங்களில் விளக்குவோம். சுங்க வரி வர்த்தகம் G.A.T.T. தொடர்புடைய பொது ஒப்பந்தத்தில் இதன் தொடர்பான தயாரிப்பு முறைகளைப் பற்றிய விளக்கம் இல்லை. எனினும், தற்காலிகக் குழுவை (Adhoc committee) உருவாக்கி அதன் மூலம் இந்தப் பேச்சு வார்த்தைகளை நடத்தலாம். எனினும், ஹவானு சாசனத்தின் (Havana Charter) 17ஆம் பிரிவின்கீழ் 1947ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் நாள் முதல் அக்டோபர் 30ஆம் நாள்வரை செனிவாவில் (Geneva) இந்த மாநாடு நடந்தது. பெருமளவு தீர்வைக் குறைப்பை நன்கு தீர்மானித்து பர்மா, இலங்கை, தென் ரொடீசியா, பாகிஸ்தான், சிரியா, பாலஸ்தீனம் என்ற நாடுகள் பங்கு பெற்றன. இரண்டாவது மாநாடு 1949-ல் அன்னெஸி (Annecy) என்ற ஊரிலும், அடுத்து டார்க்வேயிலும், மறுமுறை ஜெனிவாவிலும் பின்னர் டில்லன் வட்டம் நாட்டிலும் நடைபெற்றது.

கென்னடி வட்டம் (Kennedy Rouud)

காலஞ்சென்ற அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவராக இருந்த கென்னடி எல்லா நாடுகளுக்கும் போதிய அளவு வர்த்தகத்தில் ஊக்கமளிக்கும் நோக்குடன் அமெரிக்கத் தீர்வையில் ஏறக்குறைய 30 சதவிகிதம் வரை குறைக்கும் எண்ணத்துடன் நடத்திய வட்டமேசை (Round Table) மாநாடு 1962ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் நாள் நடந்தது. இது மிகவும் பயனுள்ளதாகப் பன்னாட்டு வர்த்தகத்தில் கருதப்பட்டு பின்தங்கிய நாடுகளுக்குக் கூட நல்ல முறையில் சலுகைகள் காட்டப்பட்டு வந்தன எனலாம்.

# 18. வர்த்தகம், வளர்ச்சி தொடர்புடைய பன்னாட்டு மாநாடு

## (United Nations Conference on Trade and Development)

### உங்டாட் I

உலகின் பல பகுதிகளில் உள்ள பொருளாதார வளர்ச்சியுறு நாடுகளின் பொருளாதார நிலைமையை உயர்த்தவும் உலக வர்த்தகத்தைச் சிறப்பான முறையில் கையாளவும் பன்னாட்டு மக்கள் சமுதாயம் (International Community) பன்னாட்டு வர்த்தக, வளர்ச்சி தொடர்புடைய மாநாட்டைக் (U.N.C.T.A.D-உங்டாட்) கூட்டி வந்துள்ளனர். பன்னாட்டின் பொதுக் கூட்டம் 1961ஆம் வருடம் டிசம்பர் மாதம் கூடி இந்தப் பத்தாண்டுகளைப் 'பன்னாடுகளின் வளர்ச்சிக்கான பத்து ஆண்டுகள்' என்று முடிவு செய்தனர். தங்கள் பொதுச் செயலாளர் அவர்களை ஒரு பன்னாட்டு மாநாட்டைத் துவக்க வேண்டுகோள் விடுத்தனர். இந்த அடிப்படையில் உருவானது தான் பன்னாட்டு மாநாடு. வளர்ச்சியுறு நாடுகளின் வர்த்தக அமைச்சர்களின் மாநாட்டில் 1962ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பன்னாட்டின் சார்பில் ஒரு மாநாடு நடத்தி உலக வர்த்தக வளர்ச்சி தொடர்புடைய தகவல்களைப் பன்னாட்டு மாநாட்டில் விளக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். டிசம்பர் மாதம் 8ஆம் நாள் 1962ஆம் ஆண்டில் பன்னாட்டுப் பொது மன்றம் (General Assembly) கூடி 1964ஆம் ஆண்டில் மார்ச்சு மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஒரு மாநாடு நடத்துவதென்று முடிவு செய்தது. மேற்படி மாநாட்டில் தீர்மானம் செய்யப் பட்டவை.

(i) பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தவாறு அயல்நாட்டு வர்த்தகத்தை அதிகரித்தல்,

(ii) பன்னாட்டுப் பண்டத்தைப் பற்றிய பிரச்சினை,

(iii) தொழிலுற்பத்தியில் உண்டாகும் பொருள் அல்லது முழுமை அடையாத பொருள்கள். இவற்றை விற்பனைக்குத் தயாராக்குதல்,

(iv) வளர்ச்சியுறு நாடுகளில் உள்ள காணயியலா (invisible) வர்த்தகத்தை வளர்ச்சியாக்க முயலுதல்,

(v) வட்டாரப் பொருளாதாரக் கூட்டுகள் (groupings) தொடர்பான விவரங்கள்,

(vi) பன்னாட்டு வர்த்தகத்திற்கான பண வசதி செய்யும் முறை,

(vii) பன்னாட்டு வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான நிறுவன முறைகளைப் பற்றிய விளக்கம்,

(viii) முடிவு. உங்டாட் I-க்கான (Unctad. I) செயலகத்தை (Secretariat) நிறுவி அதில் வர்த்தகத்தை நன்கறிந்த வல்லுநர்களைக் (experts) கொண்டு தகவல்களைக் கொடுக்கும்படிச் செய்தனர்.

120 நாடுகளின் பிரதிநிதிகள் உங்டாட் I-ல் கலந்து கொண்டனர். ஹவானா (Havana) சாசனத்தின் (Charter) பின்னர் நடந்த உலக வர்த்தக நிலைமையை ஆராய அவர்களுக்குப் போதிய காலம் கிடைத்தது. ஒவ்வொரு நாட்டினுடைய உண்மையான வர்த்தக நிலையை ஆராய்ந்து அதன் அடிப்படையில் பன்னாட்டு வர்த்தகக் கொள்கைகளை அமைக்க முற்பட்டனர். இந்த மாநாடு மிகவும் வெற்றிகரமாகவே முடிந்தது. இந்த மாநாட்டில் 14 பொதுக் கொள்கைகளை உருவாக்கி அவற்றை முழு மனதுடன் எல்லாப் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டனர். இவற்றின் மூலம் பொது பன்னாட்டுச் சமூகம் உருவாகி அதன் கொள்கைகளை ஏற்றுக் கொண்டது எனலாம்.

பொதுக் கொள்கைகள் வருமாறு

1. ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் உள்ள பொருளாதார, சமூக, வர்த்தகத் தொடர்பு தனிப்பட்ட அரசு முறையுள்ள நாடு என்ற மேன்மைக்கத்துடன் கொள்ள வேண்டும். மேற்படி நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதில்லை என்ற கொள்கையைப் பெற்றிருக்க வேண்டும்.

2. பொருளாதார, சமூக வேறுபாடுகளின் காரணத்தைக் காட்டி வேற்றுமை காட்டும் தன்மை நீக்கப்பட வேண்டும்.

3. பன்னாட்டுச் சமூகத்தின் பொது நோக்கு என்னவெனில் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். வளர்ச்சியடையா நாடுகளின் பொருளாதார நிலையை மாற்றியமைத்து, அவற்றின் வாழ்க்கைத் தரத்தை அதிகப்படுத்த முயலவேண்டும்.

4. தனிமையில் சுதந்தரத்துடன் உள்ள நாடு என்று ஒவ்வொன்றும் கருதி அது தன் வசமுள்ள மூலப் பொருள்களையும் கச்சாப் பொருள்களையும் தம்மிச்சைப்படி விற்பனை செய்ய உரிமையுண்டு.

5. பன்னாட்டு அமைப்பின் ஆதரவுடன் பன்முக வர்த்தகம் தொடர்பான சட்ட முறையின்கீழ் போதிய ஆவணங்களைத் தயார் செய்து பொது நாடுகளின் கூட்டுறவின்கீழ் நன்கு அமைத்து எல்லா உறுப்பினர் நாடுகளும் இம் முறையின்கீழ் பன்னாட்டு வர்த்தகத்தைச் சீராக நடத்த முயல்தல்.

6. சாசனத்தின் 1ஆம் பிரிவின்கீழ் இதை ஒரு மத்தியக் கேந்திரமாக அமைத்துக் கொண்டு பணியாற்றுதல். பொருளாதார வளர்ச்சியில் மிகவும் இன்றியமையாத பங்கு உடையது பன்னாட்டு வர்த்தகம். எனவே இது தொடர்புடைய நியதிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் வேண்டிய முறைகளைப் பரப்பக்கூடும்.

7. பன்னாட்டு வர்த்தகத்தைப் பல பிரிவுகளாக்கி அவற்றின் ஒவ்வொரு பிரிவையும் நன்கு வளப்படுத்தி அதற்காக உலகின் பல்வேறு மூலைகளில் சந்தைகளை (markets) உருவாக்கிப் பலன் தரும் அளவில் விலைகளை ஏற்படுத்திப் பொருளாதார முன்னேற்றம் பெற்ற நாடுகள் இட்டுள்ள தடங்கலை நீக்கித் தங்கள் விலைகளைக் குறைத்தும் வளர்ச்சி பெற முயலும் நாடுகளுக்குப் போதிய ஊக்கமளித்தும் அவை முன்னேற்றம் பெற கூட்டுறவைக் கொடுக்க முன்வர வேண்டும். இதனால் ஆதாரப் பொருள்களின் விலைகள் எளிதில் குறையும். தொழிலாக்கப் பொருள்களுக்கும், போதிய சந்தை (market) உருவாகலாம்.

8. நாடுகள் தம்மிடையே சக (mutual) ஒற்றுமையுடன் வர்த்தகம் செய்து பிறநாடுகளை வஞ்சிக்காது இருவரும் இலாபம் பெற முயலவேண்டும். மிகப் பரிவு காட்டப்படும் நாடு என்ற

சமநிலை உருவாக வேண்டும். பிற நாடுகள் வர்த்தகம் செய்ய வரினும் அவை செய்யயியலா முறையில் அவற்றைத் தாமாகவே புறக்கணிக்கும் நிலையில் விடுதல் கூடாது. வளரும் நாடுகள் தற்போதுள்ள நிலைமையில் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குச் சலுகைகள் காட்டி வருவது தடை செய்யப்பட வேண்டும். ஒரு வளரும் நாடு இன்னொரு வளரும் நாட்டிற்குச் சலுகைகள் காட்டி வருவது வரவேற்கத் தகுந்ததே. தற்போது சில வளர்ச்சிபெறு நாடுகள் முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து பெற்று வரும் சலுகைகளை நிரந்தரமெனக் கருத வேண்டாம். அவை பொருளாதார நிலை மாற்றக்காலம் வரைதான் எனக் கருதவும்.

9. முன்னேற்றமடைந்த நாடுகள் தாங்கள் உள்ள வட்டாரப் பொருளாதாரக் கூட்டில் (grouping) எவ்வளவு தூரம் உதவியளிக்க வேண்டும் என்று கூற முற்படின், மூன்றும் நாட்டின் வர்த்தகத்தில் அதிகப்படி இடையூறுகளை உண்டாக்காது நடந்து கொள்ள வேண்டும்.

10. வளரும் நாடுகள் தம்மிடையே வட்டாரப் பொருளாதாரக் கூட்டமைப்பு அல்லது ஒருமிக்க அமைய முற்படுதல், அல்லது பொருளாதாரக் கூட்டுறவை நாடல் இவை யனைத்தும் ஏற்படவேண்டும். இவற்றால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுப் பின்தங்கிய நாடுகள்கூட முன்னேற்றம்பெற விழையும்.

11. பன்னாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்குப் பொருள் உதவி, தொழில் நுட்ப உதவி மற்றும் பொருளாதார உதவிகளைத் தாம்பெறும் ஏற்றுமதியனின்று பெறும் இலாபத்திலிருந்துகொடுக்க முன்வரவேண்டும். உதவிபெறும் நாடுகளிலும் உள்நாட்டு தேசியக் கொள்கை அவைகளையொட்டி மாற்றியமைத்துக் கொண்டு, பெறும் உதவிகளைச் செவ்வனே பயன்படுத்திக் கொண்டு நாட்டின் தொழில் வளர்ச்சி, பொருளாதாரக் கூட்டு இவைகளை நன்கு வளர்க்கப் பாடுபடவேண்டும்.

12. எல்லா நாடுகளும் ஒன்றுகூடி முடிவு செய்தபடி ஆயுதம் ஏந்தாதிருக்கவும் (Disarmament), இதர பின்னடைந்த நாடுகளின் பொருளாதார நிலையை உயர்த்தவும் கோரியபடி சீரான பன்னாட்டுக் கட்டுப்பாட்டை (International control) உறுதிப் படுத்தவும் அதன்படிப் பின்தங்கிய நாடுகளுக்கான பொருளாதார உதவியளிக்க வேண்டும்.

13. இந்த மாநாடு கொள்கையை ஏற்றுக் கொண்டபடி மாற்று வர்த்தகத்தை (Transist Trade) மேற்கொண்டுள்ள நிலப்

பரப்பில் பிணைந்துள்ள இராச்சியங்களையும் (Land Locked Countries) அனுமதித்துத் தனிப் பிரிவாகக் கொள்கைகளை இந்த மாநாடு ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

14. பன்னாட்டு உறுதிமொழிக்கு (Declaration) ஏற்ப, குடியேற்ற நாடுகளை நீக்கி அதன் மக்களுக்குச் சுதந்தரம், பொருளாதார மூலப் பொருள்களைத் தம்மிச்சைப்படிப் பயன் படுத்தவும், மக்களாட்சி முறையை உண்டாக்கி அதன் வாயிலாகப் பொருளாதாரச் சுதந்தரம் அளிக்க முன் வர வேண்டும்.

15. எல்லா நாடுகளுக்கும் போதிய வாய்ப்பு அளித்து பொருளாதாரச் சுதந்தரம் பெற உதவி புரிய வேண்டும்.

## உங்டாட் II (UNCTAD II)

பன்னாட்டு வர்த்தகப் பொருளாதார வளர்ச்சி இரண்டாம் மாநாடு புதிய டில்லியில் 1969ஆம் ஆண்டு மார்ச்சு 19ஆம் நாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த மாநாடு கூடுமுன்னர் உலகின் பல்வேறு நாடுகள் இதன் முடிவை மிக ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்தன. இதில் எடுத்துக் கொண்ட முடிவுகள் வருமாறு :

(i) முதல் மாநாட்டின் பரிந்துரைகளை நன்கு ஆராய்ந்து அவற்றை நடைமுறையில் கொண்டுவர முயலுதல்.

(ii) பன்னாட்டுக் கூட்டுறவினைப் பெற நாடுகள் தம்மில் பேச்சுவார்த்தைகள் நடத்தி முன்னேற்ற வழிகளை ஆராயவேண்டும்.

(iii) ஒப்பந்தங்கள் எழுதப்படும் முன்னரே அவற்றிற்கான அடிப்படைகளை நன்கு ஆய்ந்து முடிவு செய்யவேண்டும்.

இரண்டாம் கூட்டத்திற்கான சர்ச்சைக்கான தகவல்களை கீழ்க் கொடுக்கப்பட்ட எட்டு பிரிவுகளாக்கியுள்ளனர்.

(i) உலக வர்த்தகத்தில் பொருளாதார வளர்ச்சியின் வருங்கால அமைப்பையும் பிரச்சினைகளையும் பற்றி ஆராய்தல்,

(ii) பண்டங்களைப் பொறுத்தமட்டில் ஏற்படும் பிரச்சினை களும்கொள்கைகளும்,

(iii) வளரும் நாடுகளின் ஏற்றுமதித் தொழில் பண்டங் களையும், முழுமை பெறு ஏற்றுமதித் தொழில்களின் பண்டங்களையும் அதிகரித்தல்,

(iv) பன்னாட்டு உள் நாட்டு வளர்ச்சி, நிதி தொடர்பான கொள்கைகளை ஒருமித்தல்,

(v) காணயியலா (invisible) வர்த்தகத்தையும், கப்பற் செலவு தொடர்புடைய வர்த்தகத்திற்கான வளர்ச்சிக்கு அடிகோலிடுதல்,

(vi) வர்த்தகப் பெருக்கம், பொருளாதார இணைப்பு இவை வளரும் நாடுகளிலும், முன்னேற்ற நாடுகளிலும் கூட்டி வட்டார, மாவட்டப் பகுதிகளில் ஒற்றுமை கோரல்,

(vii) வளரும் நாடுகளில் மிகவும் பின்னடைந்த நாட்டின் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கான தனிப் பட்ட முயற்சிகளைச் செய்தல் இன்றியமையாதது,

(viii) உங்டாடின் செயல்களைப் பரிசீலித்தல்.

உங்டாட் IIஆம் மாநாட்டின் பலன்கள் மிகவும் குறைவே. எதிர் நோக்கிய அளவு பலன் கிடைக்கவில்லை. இதற்கான காரணங்கள்:

1. வியட்நாம் போர்,

2. பொன் விலைச் சரிவு,

3. வாணிபக் கொடுப்பல் விலையில் மந்தம். அமெரிக்கா, பிரிட்டன் இவற்றில் பின்னிறக்கம்,

4. சோசலிச நாடுகள் தம்மிச்சைப்படிப் பிரிந்து செல்லுதல் முதலியன.

# 19. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு

**வரலாற்று வாயிலாக வளர்ச்சி**

ஐரோப்பியக் கண்டத்தில் இரண்டாம் போர் முடிவடைந்த பிற்காலத்தில், பொருளாதாரச் சேர்மமும் மேம்பாடடைந்த தேசிய நிறுவனங்களை ஒன்றுபடுத்தும் நோக்குடன் அரசியல், பொருளாதாரச் சேர்க்கைக்கு எல்லா நாடுகளும் விழைந்தன. இதன் விளைவாக 1948ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நிறுவனம் (ஐ. பொ. கூ. நி.) தோன்றியது. இந்த நிறுவனம் நடத்தும் பல்வேறு பணிகளாவன. அமெரிக்க ஐக்கிய நாட்டுச் செயலாளர் ஜான். சி. மார்சல் மேற்பார்வையில் ஐரோப்பியப் பொருளாதார நிதியை வழங்குவதும், பற்றுக்குறையேற்பட்ட காலத்தில் உற்பத்திக்கான மூலப் (கச்சாப்) பொருள்களை ஏற்பாடு செய்தும், உற்பத்திக்கான மின் விசைத் தேவைகளையும், தொழில் வளர்ச்சிக்கான வசதிகளையும், கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும், விவசாயத் துறையில் பல்வேறு வசதிகளைச் செய்துதரவும் முன் வந்துள்ளனர். அண்மையில் சுங்க வரி கூட்டமைப்பு (Customs union) ஒன்று பெல்ஜியம், ஆலந்து, லக்ஸம்பரோ–பெனிலோ (Luxembury-Benelux) இவைகளிடையே உருவாகியது. ஐரோப்பிய நாடுகளில் சிலவற்றிற்கிடையே வர்த்தக உறவு மறுபடியும் உருவாக இந்த ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நிறுவனம் மிகவும் உதவி புரிந்துள்ளது. முதல் திட்டமாக இந்நாடுகளிடையே வர்த்தகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தித் தாராளமாகவும் அமைதியாகவும் வர்த்தகம் நடைபெற ஏற்பாடு செய்தது, வர்த்தகப் பெருக்கம் தொடர்ந்து நடைபெறமுடியாது போய்விட்டது. 1950ஆம் ஆண்டில் அந்நிலையில், கடன் வசதிகளைப் பெருக்கியும், பன்முக வர்த்தக (Multilateral) கொடுப்பல் முறையையும் அமைத்தது. 1956ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாட்டினருக்கிடையே வர்த்தகம் இரண்டு மடங்குகளாகப் பெருகியது. அதன் மேல் பெருக்கெடுத்த வர்த்தகம் அவ்வளவு திருப்திகரமாக அமைந்தது எனக் கூறுவதற்கிடமில்லை. 1960ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு

நிறுவனத்தைக் கலைத்தும், அதிக உறுப்பினர்கள் அடங்கிய புதிய நிறுவனத்தைத் தொடங்கி, வர்த்தகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும், முற்போக்கு முறைகளை அமைத்தனர். இந்த நிறுவனத்தை ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு வளர்ச்சி (Organisation for Economic Co-operation and Development) கொள்கையின் அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் கனடாவையும் இந்த நாடுகளுடன் சேர்த்துக் கொண்டது. இவர்களின் நல்லுறவால் இதன் உறுப்பினர்களுக்குப் போதிய அளவு வர்த்தகம் நடைபெற்றது. பொருள் வளர்ச்சியும், உலக வர்த்தகம் செம்மையாகவும் நடைபெற்றன. ஆனால், இந்த நிறுவனம் முன்னோடியைப் போன்று பரிந்துரைகள் செய்யலாமே ஒழிய கட்டுப்படுத்தும் அதிகாரம் பெறவில்லை.

1952ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் முயன்று ஐரோப்பிய நிலக்கரி, எஃகு வர்த்தக சமூக அமைப்பைத் (European Coal and Steel Community) தோற்றுவித்தது. இதன் உறுப்பினர்களாவன. ஃபிரான்சு, செர்மனி, இத்தாலி பெனிலோவின் மூன்று உறுப்பினர்கள் இந்த சமூகத்தின் முக்கியக் கோட்பாடென்ன வெனில் இந்த நாடுகளுக்கிடையே பொதுச் சந்தையை நிறுவி அவற்றின் மூலம், இரும்பு, இரும்புக் கழிவுப் பொருள்கள், (Scraps) எஃகு இவைகளை விற்பனை செய்தனர். இந்தச் சமூகத்தில் சேர இங்கிலாந்து மறுத்தது.

ஐ.போ.கூ.நி. யின் (O.E.E.C.) பணியிலிருந்து பல்வேறுஅரசுகளின் கட்டுப்பாடுகளையும் திட்ட முறைகளையும் எடுத்துக்காட்டி எவ்வாறு தடை விதித்தது என்று விளக்கியுள்ளது. ஐரோப்பிய எஃகு, நிலக்கரி வர்த்தகக் கழக அமைப்பின் வெற்றியிலிருந்து எவ்வாறு மேம்பாடான கூட்டமைப்புகள் உருவாக்கலாம் என்று தெரிகிறது. இந்த அனுபவங்களைக் கொண்டு எல்லாம் ஒருங்கே அமைந்த பொருளாதாரக் கூட்டமைப்பு (Economic Union) ரோமாபுரி உடன்படிக்கையில் 1957-ல் எதிர் பார்க்கப்பட்டது.

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் (European Economic Community)

1957ஆம் ஆண்டில் ரோம் நகரில் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தப்படி ஃபிரான்சு, செர்மனி, இத்தாலி, பெல்சியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் இவை சேர்ந்த ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் 1958-ல் சனவரி மாதம் 1ஆம் நாள் உருவாகியது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் பொதுச் சந்தை (Common market) உருவாகியது. இதனடிப்படையில் உறுப்பினர் நாடுகளனைத்திலும் ஒரே மாதிரியான விற்பனைக் கொள்கையை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடவும் முயன்றது.

ரோம் நகர உடன்படிக்கையில் இந்தப் பொதுச் சந்தையை பற்றித்தான் வெகுவாக விளக்கப்பட்டுள்ளது. இதன் முக்கியச் சரத்துகள் பின்வருமாறு :

1. மூலதனம், தொழிலாளர்கள், இதர பணிகளைக் கட்டுப் பாடின்றி மாற்றிக் கொள்ளலாம்,

2. போக்குவரத்து, விவசாயம் இவை தொடர்புடைய வரையில் பொதுக் கொள்கையைக் கடைப்பிடித்தல்,

3. பொருளாதார, சமூகக் கொள்கைகளில் ஒற்றுமையை உண்டாக்க முயலுதல்,

4. பொதுச் சந்தையில் ஒன்றை ஒன்று விரோதிக்கும் வகையில் போட்டியிடல்,

5. பொதுச் சந்தை நடப்பதற்கென, உள்நாட்டுச் சட்ட திட்டங்களைச் சீராக்கியும், உறுப்பினர் நாடுகளில் ஒற்றுமையை உண்டாக்கவும் முயலுதல்,

6. ஐரோப்பிய முதலீடு வங்கியைத் தோற்றுவித்தல். ஐரோப்பியச் சமூக நிதியைத் (European Social Fund) தோற்று வித்தல். இவற்றின் மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கும், நாட்டிலுள்ள மக்களது வேலைவாய்ப்பு (employment) வசதிகளைப் பெருக்கவும் கூடும். ரோம் ஒப்பந்த உடன்படிக்கை ஐரோப்பியச் சமுதாயத்துடன் கடல்கடந்த நாட்டின் மக்களது உறவையும் நாட விரும்பியது. இதன் மூலம் பொதுச் சந்தை உருவாகி அதன் காரணத்தால் நட்புறவுடன், பொருளாதார முன்னேற்றம், நிதி முன்னேற்றம் மற்றும் தொழில் வளர்ச்சி இவைகளுடன் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் தன் இதர இராச்சியப் பகுதிகளிலும் ஒத்துழைப்பைப் பெறலாம்.

### ஐரோப்பியப் பொதுச் சந்தை (European Common Market)

முன்னரே கூறிய ஆறு நாடுகளும் சுங்க ஒற்றுமை (Customs Union) எவ்வளவு தேவை என்ற அனுபவத்துடன் தெரிந்துகொண்டு, பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடு படும். இவ்வுலகில் இன்றைய நிலைமையில் மிகப் பெரிய நாடு களான அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சோவியத்து நாடுகளும் உள்ளன. அவற்றிடையே மிகச் சிறிய நாடுகளும் உள்ளன. இச் சிறிய நாடுகள் சக்தியற்றும் உதவியின்றியும் உள்ளன. இச் சிறிய ஆறு நாடுகளின் மக்கள் தொகையின் மொத்த எண்ணிக்கை அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள் தொகைக்குச் சமம்.

இவர்கள் உழைப்பும் ஆதாரமும் உடையவர்கள். உலகின் வருவாயில் மூன்றில் ஒருபங்கு இவர்களுக்குக் கிடைக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டுச் சந்தையில் பெருமளவில் செய்யும் உற்பத்திகள் விலையாக்கப்படுகின்றன. ஆயினும் ஐரோப்பியநாட்டு தொழில்கள் சிறிய அளவில் இயங்கி வருகின்றன. மேலும் சுங்க வரி விதிப்பின் காரணமாக முன்னேற்றமின்றித் துன்புற ஆரம்பித்துள்ளன. இவர்களுடைய வளர்ச்சியின் அடிப்படையில் இவர்கள் தனிப்பட்ட முறையில் பொதுச் சந்தையை நிறுவி அதன் மூலம் இடையூறுகளை அகற்றி முன்னேற்றத்திற்குப் பாடுபட முடிவு செய்தனர்.

### சுங்க வரிக் குறைப்பு

ரோம் நகர உடன்படிக்கைக்கேற்ப உறுப்பினர் தன் வசம் செய்துகொள்ளும் அயல்நாட்டு வர்த்தகத்திற்குச் சுங்கவரி விதித்தல் கூடாது. சுமார் 10 சுழற்சிகளில் நாலாண்டுகளுக்கு ஒரு முறை மூன்றுமாற்ற (Transitional) உருவமைப்புகளையொட்டிச் சுங்க வரியைக் குறைத்துக் கொண்டே வந்து சிறிதுசிறிதாக 10 சதவிகிதம் குறைத்து ஆறு முறைகளில் தனிப்பட்ட பண்டங்களின் மீது வரி குறைப்பு முறையைக் கையாள வேண்டியது. இம் முறையின்கீழ் முதல் பருவத்தில் 30 சதவிகிதக் குறைப்பு நடத்த வேண்டும். இரண்டாம் பருவ முடிவில் 60 சதவிகிதக் குறைப்பு ஏற்படவேண்டும். மூன்றும் பருவ முடிவில் எந்த விதமான நில, சுங்க வரியும் கூட இல்லாமல் நீக்க வேண்டும். இந்த மாற்றக் காலத்தின் எல்லையை 10-லிருந்து 15 அல்லது 12 வருடங்களாக நீட்ட ஒப்பந்தம் அனுமதிக்கிறது. 1970ஆம் ஆண்டில் பொதுச் சந்தை (Common market) உருவாகியது. இதர ஏற்றுமதி, இறக்குமதி வரி விதிப்புகளை நீக்கவும் புதிய வரி விதிப்புகளைக் கொண்டுவராமல் தடை செய்யவும் இந்த ரோம் உடன்படிக்கை வலியுறுத்துகிறது. பங்குவிதிப்பு முறையையும் உடனடியாகத் தடை செய்கிறது. நடப்பில் உள்ள பங்குவிதிப்பு முறையை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டு பின்னர் இல்லாது நீக்கம் செய்யப்பட வேண்டுமென்பதே உடன்படிக்கையின் கருத்து ஆகும்.

இவற்றிடையே பொது சுங்க வரி விதிப்புக் கொள்கையைப் பொதுச் சராசரியை (Arethmetic Average) ஒட்டிச் சுங்கவரி கணக்கிடப்பட்டு பெனிலோ (Behenlux), மேற்கு செர்மனி, ஃபிரான்சு, இத்தாலி நாடுகளில் 1957ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் தேதி முதல் அமலாக்கப்படுகிறது. பொது விதிக்குச் சில விதி விலக்குகள் கொடுக்கப்பட்டு இதன் பொது உறுப்பினர்கள் துன்புறுது

வர்த்தகம் புரிய உதவி செய்கிறது. பொது அயல் நாட்டுச் சுங்க வரி விதிப்பினை 12 முதல் 15 ஆண்டுகளுக்குப் பின் கொண்டுவரலாம் என முடிவு செய்யப்பட்டது.

பொது வேளாண்மைக் கொள்கையை ரோம் உடன்படிக்கை மேற்கொண்டு அதன் கீழ் வர்த்தகத்தையும், தொழிலையும், வேளாண்மையையும் பொதுக் கொள்கையாக மேற்கொள்ள வேண்டும் என உறுதிப்படுத்தியுள்ளது. தொழில் பண்டங்கள் அதி விரிவாக முன்னேறுவது போல் வேளாண்மைப் பண்டங்கள் முன்னேறுவதில்லை. விவசாயத் துறையில் மக்கள் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளைக் கடக்க நேரிடுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் விவசாய உற்பத்திக்கு அரசு கொடைப் பணம் கொடுத்து அதன் விலைகளைக் கட்டுப்படுத்துவது தெரிந்ததே. ஒரே பொதுப்படையான தொழில்முறை காணப்படுவதில்லை எனலாம். பொதுவாக ஃபிரான்சு, நெதர்லாந்து இவ்விரு நாடுகளிலும் விவசாயத் தொழில் மிகவும் மேம்பாடடைந்துள்ளது. பெல்சிய நாட்டிலும் மேற்கு செர்மனியிலும் விவசாயம் மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்துள்ளது. மேற்கு செர்மனியில் என்றுமே விவசாய விலைகள் மிகவும் அதிகமாகவே அமைந்துள்ளன. ஃபிரான்சில் தொழில் வளர்ச்சியின் காரணத்தை முன்னிட்டு விவசாயப் பண்டங்களின் விலைகளைக் குறைவாக இருக்கும்படி வைத்துள்ளனர்.

இதன் உறுப்பினர்கள் அனைவருமே ஒரேசீரான விவசாயக் கொள்கையை மேற்கொண்டு எல்லா விவசாயப் பண்டங்களையும் ஒரே சந்தையில் விற்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். விவசாயிகளிடமிருந்து வாங்கும் விலை தீர்மானிக்கப்பட்டு அதே விலையை உறுப்பினர் நாடுகள் பழக்கத்தில் கொண்டுவர வேண்டும்.

**கடல் கடந்த நாடுகளின் சங்கம்**

பொதுச் சந்தைக்குக் (Common market) காட்டப்படும் சலுகைகள் அனைத்தும் கடல் கடந்த நாடுகளுக்கும் கிடைக்க வேண்டும் என்று ரோம் நகர ஒப்பந்தம் கூறுகிறது. முதன் முதலாக கடல்களுக்கப்பாலுள்ள நாடுகளுக்கு வர்த்தகச் சலுகைகளை அளிக்க உறுப்பினர் நாடுகள் முயல வேண்டும் என்றும், நாளடைவில் வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என்றும் ரோம் ஒப்பந்தம் விரும்புகிறது. அதோடு நில்லாது உறுப்பினர்கள் கடல்கடந்த நாடுகளில் அக்கறை செலுத்தித் தங்கள் முதலீடுகளை இந் நாடுகளில் செலுத்தி

நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு விழைய வேண்டும். இந் நாடுகள் பண்டைய குடியேற்ற நாடுகளானதாலும் அவற்றுடன் உள்ள தொடர்பைத் துண்டிக்காது தொடர்ந்து நட்புடன் நடப்பது திண்ணம் என்று ரோம் ஒப்பந்தம் பறைசாற்றுகிறது.

ஐரோப்பியத் தடங்கலற்ற வர்த்தகச் சங்கம் (European Free Trade Association)

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் உருவாகும் சமயத்தில். சுங்க வரி முறை தோன்றி வர்த்தகம் பிரிந்து போகும் தருணத்தில், ஐரோப்பிய நாடுகளை ஒருமைப் படுத்தி, வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்கித் தடங்கலற்ற வர்த்தகத்தை நிலை நாட்டும் நோக்குடன் இங்கிலாந்து முன் வந்தது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நிறுவன உறுப்பினர் நாடுகளுக்கு அறைகூவல் விடுத்தது. அதன்படி உறுப்பினர் நாடுகள் தங்களுக்குள் எவ்விதமான சுங்க வரி விதிப்பு முறையையும் கடைப்பிடிக்கக் கூடாது. இதர நாடுகளுக்குத் தம்மிச்சைப்படிச் சுங்க வரியை விதிக்க அனுமதி உண்டென்று முடிவு செய்தது. பொருளாதார, சமூக, மூலதனக் கூட்டினை இது வலியுறுத்தவில்லை. வர்த்தகம் பொருத்தமட்டில்தான் இந்தச் சங்கம் உருவாகியது.

இந்த யோசனை வரவேற்கத்தக்கதே. ஏனெனில், அந்த நிலைமையில் ஐரோப்பிய நாடுகளனைத்தும் எதிர்த்துப் போராடும் அளவிற்குச் சுங்க வரி விதிப்பை அமைத்திருந்தன. உறுப்பினர்களிடையே நேசபாவம் தோன்றவும், தமது வர்த்தக அமைப்பின் வருவாயைக் குறைக்காவண்ணம் உறுப்பினரல்லாத இதர நாடுகளுடன் தம்மிச்சைப் படி வரிவிதிப்பினை விதிக்கவும் இங்கிலாந்து ஒரு யோசனையைக் கூறியது வரவேற்கத்தக்கதே. பிரிட்டிஷ் தேவைகளையொட்டி இந்த யோசனை உருவாகியதெனலாம். ஏனெனில் பிரிட்டன் தனது மூலப் பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் ஐரோப்பாவிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. உலகச் சந்தை விலைகளை விடக் குறைவாக அவற்றை இறக்குமதி செய்ய விரும்பும் நோக்குடன் இந்த யோசனையைக் கூறியதெனலாம். மேலும் பிரிட்டன் காமன் வெல்த் நாடுகளுடன் தனிப்பட்ட உரிமையைப் பெற்றிருந்தது. தனிப்பட்ட சுங்க வரி உரிமையைப் பெற்றிருந்தது தெரிந்ததே. அறுவர் பரிந்துரைத்த பொதுச் சந்தையில் இத்தகைய யோசனையை ஏற்பதில் தடங்கல் உள்ளதென்றும், ஐரோப்பியத் தடங்கலற்ற வர்த்தகச் சங்கத்தில்தான் இது ஏற்க முடியும் எனவும் கருதினர். மேலும் பிரிட்டன் ஐரோப்பியக் கண்டத்தின்

பொளாதாரக் கூட்டின் (Economic Union) அரசியலிலிருந்து தனித்து நின்றது.

பிரிட்டனது யோசனையை ஏற்காது நீட்டிக் கொண்டே போய் ரோம் ஒப்பந்தத்தில் 1958ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதி இதர நாடுகள் கையொப்பம் இட்டன. 1598ஆம் ஆண்டு நவம்பரில் இந்த யோசனைகளை நிராகரிக்கப்பட்ட பொதுச் சந்தை தனித்து நின்றது. பிரிட்டன், ஆஸ்திரியா, டென்மார்க்கு, நார்வே, போர்ச்சுகல்,. சுவிடன் மற்றும் சுவிட்சர்லாந்து இவற்றுடன் தடங்கலற்ற வர்த்தகச் சங்கத்தை அமைத்துக்கொண்டது. ரோம் ஒப்பந்தத்தில் கண்ட சரத்துகளையொட்டி இந்தச் சங்கம் வகுத்துக் கொண்டது. இறக்குமதிப் பங்கு இன்னதென்று முடிவு செய்தது. சுங்க வரி விதிப்பைக் குறைத்தது. விவசாயப் பண்டங்கள் வர்த்தகத்தில் ஏற்கப்படவில்லை. இது தொழில் தொடர்பான பண்டங்களைப் பொருத்தமட்டில்தான் அமைந்தது.

ஐரோப்பியப் பொருளாதாச் சமூகத்துடன் பேச்சுவார்த்தைகள்

ஆரம்பத்தில் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்துடன் பிரிட்டன் சேர விரும்பவில்லை. நாளடைவில் ஐரோப்பியப் பொருளதாரச் சமூகத்திலிருந்து வலுத்த போட்டி நிகழக்கூடும் என்று பிரிட்டன் கண்டு கொண்டது. வளர்ச்சி விகிதம் மாறும் நிலை தோன்றிய காரணத்தாலும், காமன்வெல்த் நாடுகளின் குன்றிவரும் நிலைமையினாலும், உலக அரசியலில் பிரிட்டனின் மதிப்பு குறைந்து வந்தது. எனவே பிரிட்டன் நேச உறவுடன் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தில் சேரப் பாடுபட்டது. 1961-ல் பிரிட்டன், டென்மார்க்கு, அயர்லாந்து, நார்வே முதலிய நாடுகள் சமூகத்தில் சேர விருப்பப்பட்டன. ஆஸ்திரியா, சுவீடன் இவ்விரு நாடுகளும், உதவி உறுப்பினர் பதவி வகிக்க மனு செய்தன. முடிவில் பிரிட்டன் வெளிச் சுங்க வரிப் பொதுப்படைக் கொள்கையை ஏற்றுக் கொண்டது.

காமன்வெல்த் நாடுகளுக்குத் தனிப்பட்ட சலுகை காட்ட வேண்டுமென்று பிரிட்டன் எதிர்பார்த்தது. ஏனெனில் ஃபிரான்சு ஆஃபிரிக்க நாடுகளுக்குச் சலுகை காட்ட வசதி பெற்ற முறையின் கீழ் இந்த வசதி செய்யப்பட வேண்டும் என்பதாம். நியூசிலாந்தைப் (Newzealand) பொருத்தமட்டில் எல்லா ஏற்றுமதிகளும் பிரிட்டனையே சாரும். இன்னும் பல்வேறு பிரிட்டிஷ் பிரச்சினைகளையும் குறித்து பேச்சுவார்த்தைகள் நீண்ட காலம் நடந்தன. 1961-1962-ல்கூட முடிவு பெறுமல் 1963 சனவரியில் ஃபிரான்சு நாட்டதிபர் தளபதி டிகால் இந்தப் பேச்சு வார்த்தைக்கு முற்றுப்

புள்ளியிட்டு பிரிட்டன் இதில் சேருவதைத் தடுத்தார். அன்று முதல் பிரிட்டன் தனித்தே இயங்கி வருகிறது.

**ஐரோப்பியப் பொதுச் சந்தையும் (E. C. M.) வெளிநாடுகளும்**

ஐரோப்பியப் பொதுச் சந்தையின் வளர்ச்சியைக் கண்டு ஏனைய இதர நாடுகள் குறிப்பாக இதில் பங்கு கொள்ளா நாடுகள் சற்றுக் கலங்குகின்றன. அதிவிரைவில் உலக நாட்டின் வர்த்தகச் சந்தைகள் ஒன்ருயிராமல் ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளுடன் சேரக்கூடும் என்றும், வெளி நாட்டவர்களின் வர்த்தகம் சிதைந்து போகக்கூடும் என்றும் கருதுகின்றனர். வர்த்தக உற்பத்தி அதிகரித்து வருகிறது என்ற கருத்தைவிட வர்த்தக மாற்றம் என்ற பயம்தான் அதிகரித்துள்ளது.

1. ஐரோப்பியப் பொதுச் சந்தை உறுப்பினர்கள் தற்போதுள்ள பொருளாதார நிலையின் முன்னேற்றக் காரணத்தால் இதர நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். இது நாளடைவில் நின்று போகக்கூடும். தங்களுக்குள்ளாகவே இறக்குமதி செய்து கொள்ளக்கூடும்.

2. தற்போது உறுப்பினர் நாடுகளுக்குள்ளாக உள்ள வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீக்கமடைந்த பின்னர்தான் அயல் நாடுகளுடன் சுங்க வரி வேறுபாடு காட்டலின் முழுத் தோற்றம் தெரியும் எனலாம். அவை தங்களுக்கிடையே பலவகை சுங்க வரிகள், கேட்புகள் முதலியவற்றை நீக்கிக் கொண்டுள்ளன.

3. விவசாயக் கொள்கையை ஐ. பொ. சு. நி. தன் காலத்தின் முதல் பகுதியில் நடைமுறையில் அமைத்து நடத்திக் காட்டவில்லை. இதில் ஒப்பந்தம் ஏற்படாத காரணத்தால் இந்த உறுப்பினர் நாடுகளுக்குள் விவசாயப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்து அதன் விளைவாக அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யாது நின்று போகக் கூடும்.

4. ரோம் நகர உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த ஆறு நாடுகளிலும் உள்நாட்டுச் சுங்க வரியினைக் குறைக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன் கூட்டு நாடுகளிலுள்ள பற்பல இறக்குமதிகளையும் அவ்வாறே குறைக்க முற்படலாம். பொதுச் சந்தை நன்கு வளர்ந்து திறம்பட நடக்க ஆரம்பித்த வுடன் ஆஃப்ரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதிகள் சுங்க வரி விதிப் பின்றி ஐ.பொ.ச.வில் நுழையும். போட்டியிடும் மற்ற நாடுகள் குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா, ஆசியா முதலிய பகுதிகளில்

இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களுக்குச் சுங்க வரி விதிக்கப்படும். ஆஃபிரிக்கத் துணை நாடுகள் வெப்ப நிலைப் பகுதிகளில் இருந்து உணவுப் பண்டம், காப்பி, தேயிலை, சர்க்கரை, கோகோ மற்றும் நேந்திரம் வாழை இவைகளை ஏற்றுமதி செய்கின்றன. மிகவும் அதிகப்படியான தீர்வைகள் விதிக்கப்படுவதால் குறிப்பாகப் பாதிக்கப்படும் நாடுகள் வளர்ச்சிக்கு விழையும் நாடுகள் தாம். குறிப்பாக கானு, நைசீரியா போன்றன. ஐ.பொ.ச.வின் வேற்றுமை காட்டும் தன்மையை எதிர்த்து இந்த நாடுகள் தங்கள் ஏற்றுமதிப் பண்டங்கள் மீது வேற்றுமை காட்டும் தீர்வையை நீக்க வேண்டும் என்று கோரியதன் பேரில் தீர்வையின் அளவைக் குறைத்தனர்.

**ஐரோப்பியப் பண வசதிக் கூட்டுறவு—வரலாற்று வளர்ச்சி**

முன்னுள்களில் ஐ.பொ.கூ.நி (O.E.E.C.) பணம் செலுத்தும் ஒப்பந்தம் மிகவும் இன்றியமையாததாகக் கருதியது. இதன் வாயிலாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் மார்சல் உதவியை (Marshall Aid) சீரான முறையில் பங்கு பெற்று பொருளாதார நிலையைச் செம்மையாக்க முற்பட்டன. இதன் உறுப்பினர் நாடுகள் இருமுக ஒப்பந்தத்தில் ஈடுபட்ட காரணத்தினுல் பொருளாதார முன்னேற்றமின்றிக் கிடந்தன. 1948 அக்டோபர் மாதம் 16ஆம் நாள் எல்லா ஐரோப்பிய நாடுகளும் தத்தம் கொடுக்கல் தொகை, பதிலுதவித் தொகையைப் பற்றிய ஒப்பந்தம் செய்துகொண்டன. இதனுதவியால் வர்த்தகம் அதிகரித்து வருவதோடல்லாது கணக்குத் தீர்வகமாக (Clearing Quota) பன்னுட்டுத் தீர்வு வங்கி (Bank of International Settlement) இயங்கியது. இருமுக நோக்குடன் ஒப்பந்தம் உள்ளதென்று குறை கூறப்பட்டது. எனவே 1949ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் நாளன்று இரண்டாவது ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இந்தப் புதிய ஒப்பந்தத்தின் முக்கியப் பகுதி என்னவெனில் பன்முக (multilateral) அமைப்பு எனலாம். பணம் வாங்கும் (பெறும்) நாடுகள் தாங்கள் முக்கால் பகுதியைப் பெற்றுக் கொண்டும் மிகுதி கால் பகுதியைப் பற்றுக்குறைக் கணக்கில் செலுத்துவது என்பதுதான். இந்த ஒப்பந்தமும் எதிர் பார்த்த அளவு பன்முகக் கணக்குத் தீர்வு முறையைச் செயல் படுத்தவில்லை. எனவே 1950ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பத்தொன்பதாம் நாளன்று ஐரோப்பிய செலுத்துகள் ஒருமைப்பாட்டு நிறுவனம் (European Payments-Union) என்ற பெயரில் ஒப்பந்தம் செய்து கொண்டன.

ஐரோப்பியச் செலுத்துனர் ஒருமைப்பாட்டு நிறுவனம் (European Payments Union): இந்த ஐ. செ. ஒ. வின் (E. P. U.) முக்கியக்

கொள்கை பன்முகக் கணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கான தானாகவே இயங்கும் ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். ஒவ்வொரு நாட்டிற்கும் நிகரமுள்ள கடன்களையும் வரவேண்டிய செலுத்துகளையும் ஒரு மத்திய வங்கி பதிவு செய்து கொள்ளும். மாத முடிவில் பேல் (Bale) நகரிலுள்ள பன்னாட்டுத் தீர்வு வங்கிக்கு (B. I. S.) எந்நாடு எவ்வளவு பாக்கி என்ற தகவலைத் தெரிவித்து வரும். நிகரக் கடன் பாக்கிகளோ அல்லது வரவினங்களோ ஐ. செ. ஒ. விற்கு இன்னதென்று முடிவு செய்து, அவ்வப்போது ஏற்படும் பாக்கிகளைத் தீர்த்துவிட முயலும்.

ஆரம்பத்தில் வரவினங்கள் உள்ள நாடுகள் இவர்களைச் சில கடன்பட்ட நாடுகளுக்கு ஈடுபடுத்தி வரவினத்தைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. அவையாவன:

(i) கிரீஸ் *(115 பில்லியன் டாலர்கள்)*,

(ii) ஆஸ்திரியோ *(80 பில்லியன் டாலர்கள்)*,

(iii) நார்வே *(60)*,

(iv) நெதர்லாந்து *(30)*,

(v) துருக்கி *(25)*,

(vi) ஐஸ்லந்து *(4)*. ஆரம்பத்திலேயே பற்றுக் கணக்குடன் ஆரம்பித்த நாடுகள் மார்சல் திட்டத்தின் கீழ் தொடக்கத்தில் பற்றுக் கணக்கில் (i) பிரிட்டன் *(150)* (ii) பெல்சியம்-லக்ஸம்பர்க் *(29·4)* (iii) சுவீடன் *(21·2)*.

**ஐரோப்பியப் பண ஒப்பந்தம் (European Monetary Agreements)**

இவ்வொப்பந்தத்தின் இரு பெரும் பிரிவுகளாவன:

(i) ஐரோப்பிய நிதி (European Fund),

(ii) பன்முகக் கணக்குத் தீர்வு முறைகள். ஐரோப்பிய மூலதனமாக $600 பில்லியன் டாலர்களை (237 பில்லியன் தங்கமாகவும்) மற்ற பகுதி டாலர்களாகவும், ஐரோப்பிய செலுத்து ஒருமைப்பாட்டு நிறுவனத்திலிருந்து மாற்றப்படும். $ 35 பில்லியன் டாலர்கள் நீண்டகால பாக்கியென நார்வேயினின்றும், துருக்கியினின்றும், தேவைப்படும்போது ஐ. செ. ஒ. (E. P. W.) வினின்றும் மாற்றப்படும். ஐ. செ. ஒ. வினின்று$ 328 டாலர்கள் தங்கமாகத் தேவைப்படும்போது வைக்கப்பட வேண்டும். இதன் அடிப்படை நோக்கம் என்னவெனில் குறுகிய காலப் பண உதவி

அளிக்க முன்வர வேண்டும் என்பதாம். இரண்டாண்டு காலத்திற்குள் உதவி புரிய முன்வர வேண்டும் என்பதாகும். எந்த உறுப்பினர் நாடும் பொருளாதாரத் துன்பமுற்படின் அந் நாடு பண உதவிக்கு ஐ.ப.ஒ. (E.M.E.) ஐரோப்பியப் பண ஒப்பந்த நிறுவனத்திற்கு மனுபோடலாம். ஆனால், மனுவை ஏற்கவோ, நிராகரிக்கவோ உரிமை ஐ.ப.ஒ. நிறுவன நெறியாளரிடம்தான் உண்டு. இது காறும் சிறு சிறு தொகையாகத்தான் இது உதவியளித்து வருகிறது.

பன்முகக் கணக்குத் தீர்ப்பு முறையின் கீழ் உறுப்பினர் நாடுகள் தங்கள் அன்னிய வர்த்தகத்தின் வரவு பற்றுகளை இயல்பாக அன்னியச் செலாவணிச் சந்தையின் மூலம் முடிவு கட்டயியலும். ஐ.ப.ஒ. நிறுவனத்தின் கீழ்க் கணக்குத் தீர்க்கும் முறை, ஐ.செ. ஒருமைப் பாட்டின் கீழ்க் கணக்குத் தீர்க்கும் முறையிலும் மாறியிருந்தது.

1. தாமாகவே கணக்குத் தீர்க்கும் முறை நடைமுறையில் இல்லை. 100% டாலர் தொகையில் செலுத்தவேண்டும்.

2. கணக்குத் தீர்க்கப் பயன்படும் செலாவணி அ. ஐக்கிய நாட்டு டாலர் விகிதத்தில் கணக்கிடப்படாது அன்னியச் செலாவணி விகிதத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும். ஐ.ப.ஒ.வின் எல்லைக்கப்பாலும் இதே முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. ஐ. செ. ஒருமைப்பாட்டு நிறுவனத்தினின்று ஐ. ப. ஒப்பந்த நிறுவனமாக எடுத்துக் கொண்டபோது ஒவ்வொரு நாட்டின் செலாவணியின் மாற்று விகிதமும் இன்னதென்று வரையறுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாட்டின் கையிருப்புத் தொகையும் இவ்வளவு என்று தகவல் கூறப்பட வேண்டும். இதனால் பின்னால் செலாவணியின் விலை குறைப்பு (devaluation) ஏற்படின் சீர்செய்ய வசதியாக அமையும். 1963-ல் ஐ.ப.ஒ.-வின் (E.M.A.) நிறுவனத்தின் சட்டத்தினை மறுமுறை பரிசீலனை செய்தது. முன் கூறிய மூன்று சட்டங்களைக் கூறியதன் விளைவாக பன்முகத் தீர்வு முறைக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது.

# 20. பன்னுட்டுச் செலாவணிப் பணம்

பன்னுட்டுப் பணவியல் முறை சீராக நடக்கவும், உலக வர்த்தகத்தில் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாது மேலோங்கவும் போதிய அளவு பன்னுட்டுச் செலாவணிக்கான பணம் தேவைப்படுகிறது. செலாவணிக் கொடுப்பல் நிலையில் எதிர்பாராது ஏற்படும் பற்ருக்குறை நிலையைச் சமாளிக்கவும் நாட்டுப் பணக் காவலர்களிடம் போதிய அளவு பன்னுட்டுப் பணத் தொகை வைத்துக் கொள்ளவும் பயன்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நாடு தன்வசம் பன்னுட்டுப் பணவியலைச் சொத்து உருவிலோ அல்லது பன்னுடுகளிலிருந்து கடன் பெறக் கூடிய தகுதியைப் பெற்ருே அமையக் கூடும். அவை சொத்து உருவிலாவது அல்லது பிற நாட்டரசுகளுடன் ஆலோசனை செய்து பெறக்கூடிய கடன் தொகையாகக்கூட இருக்கலாம். மேற்கூறிய சொத்துகள் பொன் (தங்கம்) உருவிலும், மாற்றத்தகு பன்னுட்டுச் செலாவணியாகவும் இருக்கக்கூடும். தேவையேற்படும் சமயம் கையிலுள்ள சொத்துகளனைத்தையும் ஒன்ருகத் திரட்டிப் பயன் படுத்தலாம். அல்லது தேவையை ஒட்டிப் பன்னுட்டு நிறுவனங் களினின்று கடனுகப் பெற உரிமையாகவும், இதர நாட்டரசு களினின்றும், தனியாரிடமிருந்தும் பெறக்கூடிய கடன் தொகை யாகவும், இதர நாடுகளுடைய பணச் சந்தைகளிலிருந்து கடன் பெறக்கூடிய தொகையாகவும் அல்லது ஒதுக்கு நிதி வைப்பிட மாயின் இதர நாடுகள் அந் நாட்டின் செலாவணிப் பணத் தொகையை அதிகரிக்கச் சம்மதித்தல்.

பொன், அயல்நாட்டுச் செலாவணி இவ்விரண்டினையும் கடைப்பிடித்துக் கணக்கெடுத்தால் பன்னுட்டுச் செலாவணி நிதியின் (International Monetary Fund) உறுப்பினர்களுடைய மத்திய வங்கிகளில் வைப்பு நிதியாகவும் பொன்னுகவும் சேமித்து வைக்கப்பட்ட தொகை இரண்டு அல்லது மூன்று சதவிகிதம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. ஆனல் இவற்றிடையே நடைபெற்று வரும் வர்த்தகமோ இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

இதன் முடிவென்னவெனில் ஆண்டுதோறும் பணத்தின் நீர்த்த நிலை (liquidity) வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. வர்த்தகத்தின் முன்னேற்றம் ஒரே சீராக நடந்துவரின் இச் சங்கட நிலைமையேற்பட நியதியில்லை, ஆயினும் பழைய ஆண்டறிக்கைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய சில படிப்பினைகளை இங்குக் காண்போம். 1966ஆம் ஆண்டறிக்கையில் பன்னாட்டுச் செலாவணி நிதி (International Monetary Fund) கூறுவது யாதெனில், வாணிபக் கொடுப்பல் நிலையில்பாக்கி (Imbalanee) அளவுகடந்து இருப்பதும், பன்னாட்டு வர்த்தகத்தில் மிதமிஞ்சி இருப்பதும், ஒரே சீராக உள்ளதைப் போதிய எடுத்துக்காட்டுகளுடன் விளக்கயியலும் என்கிறது. ஒதுக்கு நிதியின் நிலைமையைச் சரிவர வைத்துக் கொண்டால்தான் நாடுகளின் அயல்நாட்டு வர்த்தகத்தை நன்கு நடத்தலாம். இல்லையேல் தத்தம் நிலையைக் காப்பாற்ற வேண்டி வர்த்தகத்தில் பற்றில்லாமல் நடத்த முயலக்கூடும். இதன் விளைவாகப் பன்னாட்டு வர்த்தகம் சரிய ஆரம்பிக்கக் கூடும்.

ஒரு நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலைமை என்றும் அளவு கடந்து குறைவாக இருப்பின், அந் நாட்டிலுள்ள செல்வ நிலை நீர்த்தத்தன்மை (liquidity) நீடித்து நடக்கும் என்று கூறலாம். ஒதுக்கப்பட்ட நிதியின் இன்றியமையாத தன்மை யாது? நாட்டின் செலாவணியின் மதிப்பைக் குறைக்காமலும், உள்நாட்டில் பணவாட்டம் செய்யாமலும் எளிய முறையில் வாணிபக் கொடுப்பலில் உள்ள கீழ் நிலையைச் சரிகட்ட ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கடனைச் சரிகட்டலாம். இதன் கோட்பாடு என்னவெனில் தாற்காலிகக் கீழ் நிலையைச் சமாளித்து, காலம் தாழ்த்தும் நோக்கத்துடன் முயற்சி செய்யப்படுகிறது. ஒரு நாட்டின் வாணிபக் கொடுப்பலில் ஈடுகட்ட முடியாத நிலையில் பற்றுக் குறையாக இருந்துவரின் அதை சரி செய்யத்தக்க முறைகளைக் கையாண்டு வருவதே நலம்.

## பொன்மாற்றுத் திட்டம்

வர்த்தகத்தின் அசைவுகளையும், செலாவணியின் ஒதுக்கு நிதிகளைப் பற்றிய மொத்தப் புள்ளி விவரங்களையொட்டியும் உள்ள தகவல்கள் பயனுள்ளவையல்ல. ஏனெனில், ஒதுக்கு நிதி வழங்குதலில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய விவரங்கள் நன்கு தெளிவாகக் காட்டப்படுவதில்லை எனலாம். கண்டப் பகுதியில் உள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளுடைய பன்னாட்டு வர்த்தகத்தில் அதிகப்படியான இலாபம் கிடைத்த காரணத்தால் ஒதுக்கு நிதியும் அவ்வப்போது அதிகரித்துள்ளது எனலாம்.

உலகின் ஏனைய இதர பகுதிகளில் கனடா, சப்பான் நீங்கலாக இதர பகுதிகளில் ஒதுக்கு நிதிகளில் எவ்விதமான மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மேற்கு ஐரோப்பியப் பகுதி, கனடா, சப்பான் இந் நாடுகளிலோ ஏற்படும் மிகுதியான இலாபத்திற்குக் காரணம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட ஒதுக்கு நிதியின் குறைவே எனக் கருத இடமுண்டு.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொடர்ந்தாற்போல் வாணிபக் கொடுப்பல் நிதியில் குறைவான நிலைமையில் அமைந்திருந்தது. இந்த நிலையைப் பொன் மாற்றுத் திட்டம் என்று கூறுகிறோம். பிரிட்டன் உட்ஸில் (Bretton Woods) அனுமானித்த பணப் பட்டுவாடா முறையிலும் அதிக அளவையிலும் முக்கியம் வாய்ந்தது. முன்னரே பவுண்டு ஸ்டெர்லிங், டாலர், சில சமயங்களில் ஃபிரெஞ்சு ஃபிராங்க் இவை மூன்றும் ஒதுக்குநிதியான செலாவணியாக சில நாடுகளுக்குப் பயன்பட்டு வந்தன. அந்த நாடுகள் இந்தக் குறிப்பிட்ட செலாவணியுடன் தொடர்பு கொண்டு, உள்நாட்டில் பொன்னைச் சேமிப்பதற்குப் பதிலாக இந்தச் செலாவணியைச் சேமித்து அதன்மூலம் அயல்நாட்டு வர்த்தகத் தொடர்பைக் கொண்டிருந்தன. 1950ஆம் ஆண்டின் இறுதியில் கனடா, சப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தங்களது மத்திய வங்கிகளில் அதிகரிக்கும் சொத்துக்கேற்ப டாலர்கள் இருப்பை அதிகரித்து வந்தன.

பன்னாட்டு ஒதுக்கு நிதி எந்த அளவில் அதிகரிக்கிறது எனப்படுவது நாட்டின் பரப்பு, வாணிபக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் நிரந்தரமான பற்றுக்குறை—குறிப்பாக எந்த நாட்டில் செலாவணியை ஒதுக்கு நிதியாகப் பயன்படுத்த முடிவு செய்கிறோமோ அந் நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறையேற்படின் அது ஏற்றத்தக்கதல்ல. அந் நாட்டின் உள்ள பற்றுக்குறையைச் சரி செய்தால் உலகில் உள்ள ஒதுக்கு நிதி வளர்ச்சியடையாது நின்றுவிடக் கூடும். பன்னாட்டுச் செலாவணியாகப் பயன்படும் ஆதாரச் செலாவணி (Key Currency) மென்மையாக (weak) இருப்பின் நம்பிக்கை தளர்ந்துவிடக் கூடும். சாதாரணமாக ஒதுக்கு நிதி செலாவணியாக இருக்க வேண்டியது மிகவும் வன்மையாக அமைதல் இன்றியமையாதது.

பன்னாட்டு ஒதுக்கு முறை (International reserves) தேசியச் செலாவணியை ஒட்டியிருக்கிறது. அவற்றின் ரொக்கநிலை (liquidity) பொன்னாக மாற்றப்படுவதால் கெட்டு விடுகிறது. 1930ஆம் ஆண்டில் அநேக நாடுகள் தங்கள் தேசியச் செலாவணியைப் பொன்னுக்கப் பாடுபட்டன.

பொன் விலை ஏற்றமடைதல்

பல்வேறு பொருளியல் வல்லுநர்களும் ராய்ஹேரராட் (Roy Harod) அவர்களும் பொன் விலையை அதிகரிப்பது நல்லதெனக் கூறுகின்றனர். பொன் விலையை இரட்டிப்பாக்கினுல் பொது வாகப் பதுக்கல் முறை கைவிடப்படும். உலகின் ரொக்க நிலை அதிகரிக்கும். உலகின் பல்வேறு நாடுகள் பொன்னை மத்திய வங்கிகளில் சேமித்து வைக்க செய்யும் முயற்சிகள் தாமாகவே குறைந்துவிடும். இதன் விளைவாகப் பல்வேறு நாடுகளில் உற்பத்தி பெருக்கு ஏற்படக்கூடும். இந்தப் பரிந்துரை பல்வேறு காரணங்களால் எதிர்க்கப்படுகின்றது. டிரிஃபின் (Triffin) அவர்கள் இதை ஒரு தற்காலிகப் பிரயோக முறை என்றும் இதைத் திரும்பத் திரும்பக் கையாளுதல் கூடாது என்றும் பயனற்றது என்கிறுர். கையிருப்புப் பொன்னின் விலையை இரட்டிப்பாக்கினுல் ரொக்கநிலை கூடும். அதன் விளைவாகப் பெரும் பணவீக்கம் (inflation) ஏற்படக்கூடும். சோவியத்து நாட்டிலும், தென் ஆஃபிரிக்க நாட்டிலும் அதிகப்படியான அளவில் பொன் கிடைப்பதால் இந் நாடுகளின் ரொக்க மதிப்பு இலாபகரமாக அமைவதோடல்லாது பொது உடைமை கட்சியையும் கருப்பரைப் பிரித்தாளும் (apartheid) நோக்கத்தையும் ஊக்குவிப்பதாகும். விலை ஏறும் காரணத்தால் தோன்றும் வருவாயைச் சமமாக எல்லா நாடுகளுக்கும் கிடைக்காமல் பொன் வசதியுள்ள நாடுகளுக்கே கிடைப்பதற்கு இது ஒரு காரணம் ஆகலாம்.

மாக்ஸ்வெல் ஸ்டாம்ப் அவர்களின் திட்டம் (Stamp Plan)

பன்னாட்டுப் பண நிதியின் இயக்குநராக இருந்த மாக்ஸ்வெல் ஸ்டாம்ப் அவர்கள் செய்துள்ள திட்டத்தின் முக்கியக் குணங்களாவன :

1. ஏறக்குறைய 2 பில்லியன் டாலர்கள் அளவில் எளிதில் கடன் வசூல் செய்வதற்கு நிதிக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அந்த நிதி மிக எளிமையான நிலையில் தொடங்கலாம்.

2. நிதி அமெரிக்க ஐக்கிய டாலர் கணக்கில் இயல்பான மதிப்பில் ஓர் அவுன்சு 35 டாலர்கள் வீதம் சான்றிதழ்கள் வழங்கலாம். இவ்விதழ்களை நிதியின் பல்வேறு செலாவணி களுக்கு மாற்றக்கூடிய அனுமதி பெறுதல் வேண்டும். இச் சான்றிதழ்களைத் தயாரிக்காது கணக்கு ஏடுகளில் வரவு வைத்தால் மட்டும் போதும். பொன்விலை ஏறினுலோ அல்லது மதிப்புக் குறைப்பு (devaluation) செய்தாலோ அதற்குத் தக்கவாறு, சான்றிதழின் மதிப்பையும் மாற்ற வேண்டும்.

3. நிதியின் உறுப்பினர் நாடுகள் இந்தச் சான்றிதழ்களை மத்திய வங்கிகள் மூலமாகவோ அல்லது பணவியல் அலுவலர்களிடமிருந்தோ தங்களுடைய பங்கு விதிப்பிற்கேற்ற அளவில் (quotas) பெற்றுக் கொள்ளலாம். இவைகளை ஒதுக்கு நிதியாக வைத்துக்கொண்டு இன்றியமையாத சமயத்திலோ அல்லது கெடுபிடி சமயத்திலோ இவற்றைப் பயன்படுத்தலாம். ஆனல் தங்களது பொன் தொகையை அதிகரிக்கவோ டாலர் தொகையைகூட்டவோ பயன் படுத்தக்கூடாது.

4. இக் கடன் பத்திரங்களைக் கடனுக 50 ஆண்டுகளுக்குப் பன்னாட்டு வளர்ச்சிக் குழுவிற்குக் (International Development Association) கொடுக்கப்படும். ப.வ.கு. (I.D.A) பதிலாகத் தங்களுச்குக் கிடைக்கும் முதலீட்டிலிருந்து வட்டியை நிதிக்குக் கொடுத்துவரும் இப் பத்திரங்களை வைத்துள்ள உறுப்பினர்களுக்கு விகிதப்படி வரவு வைத்துக் கொடுக்கப்படும்.

5. ப.வ.கு. (I.D.A.) சாதாரணமாக் முன்பணமாகக கடன்கொடுத்து உதவலாம். செலாவணி தேவைப்படுவதால் இந்தப் பத்திரங்களை அந்தந்த நாட்டில் காண்பித்துப் பதிலுக்குச் செலாவணியைப் பெறலாம்.

6. ஏதேனும் ஓர் உறுப்பினர்-நாடு இப் பத்திரங்களை மற்ருேர் உறுப்பினரிடம் காண்பித்தும், அந் நாட்டில் ஏற்க மறுத்தாலோ, அல்லது அவர்களுக்கு அளவற்ற பத்திரங்கள் சேர்ந்திருக்கிற காரணத்தால் ஏற்க மறுத்தாலோ இந்த நிதி அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர் கொண்டு வரும் பத்திரத்தை ஏற்றுக்கொண்டு பதிலுக்குச் செலாவணியைக் கொடுக்க வேண்டும். இல்லையேல் பொன் கொடுத்து உதவுதல் வேண்டும். பொன் பெறும் நாடு திட்டத்தின் அடிப்படையில் அந்தக் கணக்கைத் திருப்பி எழுதி (Reversing the Transaction), பொன்னை ஈடுகட்ட வேண்டும்.

7. வேறு எவரேனும் ஓர் உறுப்பினர் மிகுதியான வேலை வாய்ப்புகளைக் கிடைத்தவர்கள் இருப்பின் (Full Employment) அந்நாட்டவர் ப.வ,கு. விடம் (I.D.A)இருந்து இனி பத்திரங்களை ஏற்றுக்கொள்ள இயலாமையைத் தெரிவித்து பெற்றுள்ள கடன் செலாவணியை நாட்டின் பொருளாதார நிலைக்குச் செலவுசெய்ய முடியாத நிலையை எடுத்துக்காட்டுதல் வேண்டும். ஆயினும் இதர மத்திய வங்கிகள் காண்பிக்கும் நிதிப் பத்திரங்களை (Fund Certificates) ஏற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது எனலாம்.

இத் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு விழையும் நாடுகளுக்கு உதவி அளிக்கும் வகையில் தீட்டப்பட்டுள்ளது எனலாம்.

ட்ரிஃபின் திட்டம்

யேல் பல்கலைக்கழக (Yale University) பேராசிரியர் இராபர்ட் ட்ரிஃபின் (Robert Triffin) அவர்கள் வகுத்துள்ள திட்டம் வருமாறு:

1. ப. ப. நி. யின் (பன்னாட்டுப் பணநிதி I. M. F.) கையிருப்புத் தொகையைப் பொன்னாக இன்றி. தேசியச் செலாவணி குறிப்பாக டாலர் அல்லது பவுண்டு ஸ்டர்லிங்காக வைத்துக் கொள்ளுதல். பொன் மதிப்பீட்டில் வரவு செலவு செய்து கொள்ளத் தேவைப்படுகிறது.

2. ப. ப. நி. யில் (பன்னாட்டுப் பணநிதி I. M. F.) உறுப்பினர்களின் வைப்பைக் (deposits) கடைப்பிடித்துக் கடன் அளிக்கும் எல்லைக்கோடு வரையறுக்கப்படும். உறுப்பினர்கள் பொன்னாகவோ, செலாவணியாகவோ எந்த அளவு வைப்பாக வைத்துள்ளனரோ அதையொட்டித்தான் கடன் வசதி செய்ய முடியும். அளவுக்குமீறி ப. ப. நி. (I. M. F.) கடன் உதவி புரியக் கூடாது.

3. போதிய அளவு பன்னாட்டு மாற்றுத் தொகை கையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது நியதி. அதற்காக ப. ப. நி. (I. M. F.) தன்வசம் உறுப்பினர் நாடுகள் செலுத்தும் நடப்பு பொன், செலாவணி ஒதுக்கு நிதியின் பன்னிரெண்டு மாதங்கள் அளவில் 3 முதல் 5% வரை கடனாகக் கொடுக்கலாம்.

4. ப. ப. நி. யில் பொன்னாகச் சேமித்து வைக்காது செலாவணியாக வைத்துக் கொள்வதால் குறைந்த செலவில் அயல் நாட்டுச் செலாவணியை நடத்தக் கூடும். அளவுக்கு மீறி சேமிப்பதால் செலாவணியின் விலையேற்றம், மாற்றயியலாத் தன்மை, கட்டுப்படுத்துதல்,

5. உறுப்பினர்களுக்கு விகிதாச்சாரமாக அவர்கள் இட்ட வைப்பையும், செலாவணியையும் கடைப்பிடித்துக் கொடுக்கலாம்.

**பெர்ன்ஸ்டியன் திட்டம்** (Berstein Plan): ப. ப. நி. யின் (I. M. F.) முன்னாள், ஆராய்ச்சிக்கூட இயக்குநராக இருந்த டாக்டர். எட்வர்ட் பெர்ன்ஸ்டியன் அவர்களது திட்டம் வருமாறு:

பங்கு விதிப்பு அளவையுடன் உறுப்பினர்களுடைய நடப்பு இருப்புடன் கூட்டி வசூலித்தால் ப. ப. நி. யின் பன்னாட்டு ஒதுக்கு நிதி கூடுதலாகக் கூடும். இதனால் கடன் வசதி எளிதாகக்கூடும்.

இரண்டாவதாகப் ப. ப. நி. யின் (I. M. F.) உறுப்பினர் தங்களுடைய பங்கு விதிப்பினை (quota) அதிகப்படுத்தினால் நீண்டகால மாற்றுச் செலாவணியைப் பெற வழி கிடைக்கலாம்.

மூன்றாவதாக உறுப்பினர்களுக்குக் கடன் வசதி செய்துத் தரக்கூடிய ஒரு தனிப்பட்ட அமைப்பைத் தோற்றுவித்து ஒதுக்கு நிதித் தீர்ப்புக் கணக்கு (Reserve Settlement Account) எனப் பெயரிட்டு, அமெரிக்க ஐக்கியநாடு, பிரிட்டன், சப்பான், சாமன் மார்கெட் நாடுகள், கனடா இவற்றினை அந்த வகையில் கடனுதவி அளிக்கும்படி செய்து மேற்படி தொகையை ரொக்கமாகவோ அல்லது பாண்டுகள் மேற்கொண்டோ கொடுக்கலாம். பாண்டுகளுக்குக் கெடு (Maturity) குறைந்த காலமாக, பொன் உத்தரவாதத்துடன் (Gold Guarantee) வாணிபக் கொடுப்பல் நிலையில் பற்றாக்குறை நிலையை அடைந்தவர் களுக்குக் (Balance of Payments) கொடுக்கப்படும். அவர்கள் கெடுவிற்கு முன்னரே அந்தப் பாண்டுகளை மாற்றிவிட வேண்டும். கடன், பாண்டு இவ்விரண்டிற்கும் வட்டி அளிக்கப்படும். அதே போன்று கடன் வசதிபெறும் நாடு வட்டி கொடுத்தல் இன்றியமை யாதது. இம் முறையின் மெச்சத்தகு அமைப்பு குறுகிய கால மூலதன சுழற்சியெனலாம்.

**ப. ப.நி.யும் (I. M. F.) உலகப் பணமாற்று வசதிகளும்**

உலக நாடுகளிடையே பணமாற்று வசதியைப் பெருக்க பன்னாட்டுப் பணநிதி எளிதான முறைகளை அமைக்க முயன்று வருவது தெரிந்ததே. உறுப்பினர்களின் அதிகரிக்கும் தேவைகளை ஈடுகட்ட நிதியின் சொத்து நிலையை வன்மையாக்கும் வண்ணம் பங்குவிதிப்புத் தொகைகளை 1959–லும் 1966–லும் அதிகப் படுத்தினார்கள். பங்குவிதிப்பு வசதி பெருகியதாகக் கருதினாலும், தேவையை அவை ஈடுகட்ட முடியவில்லை. இதன் விளைவாகத் தனிப்பட்ட எடுத்தல் உரிமை (Special Drawing rights) என்ற திட்டம் உருவாகியது. ப. ப. நி. யின் ஆண்டுக் கூட்டத்தில் ரியோடிட்ஜெனரோவில் (Rio De Janeiro) 1967ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இது கொண்டு வரப் பட்டது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் வருமாறு:

**1.** ஆண்டுதோறும் தனிப்பட்ட எடுத்தலுரிமை இவ்வளவு என்று முதல்ஐந்தாண்டுகளுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

தற்போது ப. ப. நி. யின் உறுப்பினர்களுக்கு உள்ள பங்குவிதிப்பு, வழங்குரிமை இவற்றின் ஒரு விகிதமாகவே தனிப்பட்ட எடுத்தல் உரிமை வழங்கப்படும். இவ்வுரிமையால் வாணிபக் கொடுப்பல் நிலையில் உள்ள பற்றுக்குறையை மட்டுமே நீக்கக் கூடும். இத் திட்டத்தை நடத்த வேண்டிய பொறுப்பு ப. ப. நி. யின் தலைமை இயக்குநரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. வாக்குரிமை 85% தற்போதுள்ள பங்குவிதிப்பு முறைக்கு இத்திட்டத்தையொட்டி வரையறுக்கப்படும். இதற்கென கூடுதல் ஒதுக்கு நிதியை 1·5 பில்லியன் டாலர்களாக ஆண்டுதோறும் வைக்கவேண்டும் எனக் கருதப்பட்டுள்ளது.

2. பற்றுக்குறையுள்ள நாடு, இதர நாட்டுச் செலா வணியை ஒதுக்கப்பட்ட அளவில் 70 சதவிகிதத்தை ஐந்தாண்டு களுக்குள்ளாக வாங்க முன்வரலாம். இதற்கேற்ப த. எ. உ. யின் (S.D.R.) நிகரம் குறைவுபடும். இதர கடனளிக்கும் நாடுகளின் இருப்பு அதிகரிக்கக் கூடும்.

3. த.எ.உ.விலிருந்து (S.D.R) பணம் எடுப்பது கட்டுப் பாடின்றியும், கடன் பட்ட நாடுகள் தங்களது உள்நாட்டுப் பொருளாதார நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்றில்லை. அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உரிமையை ஒரே நேரத்தில் கூட வாங்கிக் கொள்ளலாம். 5 ஆண்டுகளுக்குள் அவை திருப்பிக் கொடுக்கப்படலாம்.

4. த.எ.உ. வின் (S.D.R) பொன் மதிப்பு நடப்பில் உள்ள விகிதத்தில் இருந்துவரும். அவற்றின் மீது மிகக் குறுகிய வட்டி விகிதம் விதிப்பதால் ஊக வர்த்தகத்தைத் துண்டிக்கும் ஓர வஞ்சனை முறைகளையும் அகற்றும்.

5. அடிப்படை ஏற்றத்தாழ்வு ஏற்படின் (Fundamental Disequilibrium) அந்த நாடு ப.ப.நி.யில் தனது குறைக்கப்பட்ட செலாவணியை அதிகப்படுத்தி செலுத்திவிட வேண்டும். அப்பொழுதுதான் த.எ.உ. (S.D.R) பாதிக்கப்பட மாட்டாது.

பொன்னாகவும், பல்வேறு நாடுகளின் ஒதுக்கு நிதியைச் செலாவணியாகவும் சேமித்து நடப்பிலுள்ள கையிருப்பினை அதிகப் படுத்துகின்றன. எந்த உறுப்பினரும் முன்பணமாகச் செலா வணியையோ பொன்னையோ அளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. வளர்ச்சியுறு நாடுகள் இவ் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உலக வர்த்தகத்தில் காகிதச் செலாவணியைப் (Paper Currency) பெருமளவில் பயன் படுத்தும் திட்டம் இதுவே. உலகின் மத்திய வங்கி (Central Bank) உருவாக இதுவே தக்க சான்று. பண்டைக் காலத்தின் மனிதன் என்றென்றும் பொன்னை விரும்பியே நிற்கும் பழக்கத்தைப் புறக்கணிக்க இது ஒரு மேலான முறையெனக் கருத இடமுண்டு. உலகின் பன்னாடுகளின் நடப்பில் உள்ள பணவசதிகளை அதிகப்படுத்துவது ஒன்றுதான் உலக வர்த்தகத்தைச் சற்று பெரியதாக்குகிறது. பல்வேறு செலாவணித் திட்டங்களுடன் காகிதப் பொன் (Paper Gold) திட்டம் உண்டாக்கலாம். இந் நிலை உருவாக வேண்டுமானால் பன்னாட்டு அரசுகளின் பொருளாதாரக் கூட்டும் ஒத்துழைப்பும் தேவை.

இத் திட்டத்தில் குறைபாடுகள் இல்லை என்று கூற இயலாது. நடைமுறையில் ப.ப.நி.யின் (I.M.F) பங்கு விதிப்பு முறையை மேற்கொண்டு, அதனடிப்படையில் த.எ.உ.விற்கு (S.D.R) வழங்குமுறை அமைப்பது நாடுகளின் வசதிக்கேற்ப அமைப்ப தாகும். வழங்குமுறைக் கொள்கைக்கேற்ப நாடுகளுக்கு ப.ப.நி. வசதி செய்யாது நாட்டின் வசதிக் கேற்ப அமைப்பது வரவேற்கத் தக்கதல்ல. தொடக்கத்தில் 1944ஆம் ஆண்டில் என்ன பொன் ஒதுக்குத்தொகை இருந்து வந்ததோ அதே அடிப்படையில்தான் இன்றும் இருக்கிறது. பின்னர் அரசியல் காரணங்களையொட்டிப் பங்கு முறையை மாற்ற ஆரம்பித்தனர். இதனால் உண்மையான தேவையை எடுத்துக் காட்டாது தமதிச்சைக்கேற்பப் பங்கு முறையை ஏற்படுத்தினார்கள்.

ப. ப. நி.யின் பங்கு விதிப்பு முறை (quota system)இருமுறைப் பயன்களைத் தரும் எனலாம். முதலாவதாக, உறுப்பினர் நாடு களுக்குப் பண உதவி கடனாக எந்த அளவு வரை கொடுக்கலாம் என்று முடிவு செய்வார்கள். ப. ப. நி.யின் நிதிக்கு எந்த விகிதத்தில் அந் நாட்டுச் செலாவணியும் பொன்னும் அமைய வேண்டும் என்று முடிவு செய்ய இது பயன்படுகிறது. தொழில் வளர்ச்சியில் முன்னேறிய நாடுகளுக்கு அதிகப்படியான பங்குத் தொகைகளை விதித்துள்ளது. அதற்கான காரணமென்னவெனில், அந் நாடுகளில் தேவை மிகவும் அதிகரிக்கக் கூடும். ஆயினும், த. எ. உ. (S. D. R.) ஒதுக்கு நிதியை உருவாக்கிப் பற்றாக்குறை யுள்ள நாடுகளின் தேவையைக் கொள்கையின் அடிப்படையில் ஈடுகட்ட முயல்கிறது. அடிப்படைப் பண்ட உற்பத்தியில் ஈடுபட்ட நாடுகளுக்குக் கண்டிப்பாக வாணிபக் கொடுப்பல் நிலையில் கடன்நிலை தோன்றும். அந் நிலையில் துன்புறும் நாடு

களுக்கு உதவியளிக்கவே த. எ. உ. க்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

ப. ப. நி.யில் (I. M. F.) உறுப்பினர்கள் உலக நாடுகள் அனைத்தும் அல்ல என்பது தெரிந்ததே. ஒரு சில நாடுகளே உறுப்பினர்களாக உள்ளன. அவ்வாறான நிலையில் உலக வர்த்தகத்தின் ஒரு சிறு பகுதியில் மட்டும் இது கவனம் பெறு கிறது. கீழ் ஐரோப்பிய நாடுகள், சைனா முதலியன ப. ப. நி.யில் உறுப்பினகள் அல்ல. அவர்களுடைய வர்த்தகம் உலக வர்த்தகத்தில் பெரும்பகுதியாகப் பரிணமித்துக் கொண்டு வருகிறது. எனவே, இந்த முறை நாளடைவில் பயனற்றதாகி விடக்கூடும்.

## அனுபந்தம் – 1

### இந்தியாவின் வாணிபக் கொடுப்பல் நிலை — மூலதனக் கணக்கு

(ரூபாய் கோடியளவில்)

| தலைப்புகள் | | 1968—69 | | | 1969—70 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வரவு | பற்று | நிகரம் | வரவு | பற்று | நிகரம் |
| 1. தனியார் (அ) | ... | 38·5 | 52·1 | — 13·6 | 34·2 | 68·4 | — 34·2 |
| (i) நீண்டகாலம் | ... | 32·3 | 49·5 | — 17·2 | 30·8 | 66·3 | — 35·5 |
| (ii) குறுகிய காலம் | ... | 6·2 | 2·6 | + 3·6 | 3·4 | 2·1 | — 1·3 |
| 2. வங்கி (ஆ) | ... | 32·9 | 35·2 | — 22·3 | 51·8 | 37·2 | — 14·6 |
| 3. அரசினர் (இ) | ... | 1,201·8 | 687·0 | + 514·8 | 1,069·5 | 818·5 | + 251·0 |
| (i) கடன்கள் (ஈ) | ... | 797·5 | 62·4 | + 735·1 | 659·0 | 128·2 | + 530·8 |
| (ii) தவணைகள் (உ) | ... | 3·2 | 159·6 | — 156·4 | 2·3 | 180·8 | — 178·5 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iii) இதர வகைகள் (ஊ) ... | 264·6 | 290·4 | — 25·8 | 329·2 | 192·6 | + 136·6 |
| (iv) ஒதுக்கீடுகள் (எ) ... | 136·5 | 174·6 | + 38·1 | 79·0 | 316·9 | — 237·9 |
| மொத்த மூலதனமும் பொன் கட்டியும் ... | 1,273·2 | 794·3 | + 478·9 | 1,155·5 | 924·1 | + 231·4 |

(அ) வங்கியல்லாத நிறுவனங்கள் பன்னாட்டுச் சீரமைப்பு வளர்ச்சி வங்கியினின்று (I. B. R. D.) பெற்று திருப்பப்பட்ட கடன்கள் இந்தியத் தனியார்த் துறைக்கடன் (ஆ) மத்திய வங்கி நீங்கலாக இதர வகைகள் (இ) மத்திய வங்கிக் கணக்குடன் (ஈ) I. B. R. D., I. D. A. வினின்று பெற்ற கடன்கள். இதர அயல் நாடுகளினின்று பெற்றக் கடன்கள் (உ) ஓய்வு பெற்றோரின் வருவாய் ஒப்பந்தம். 1948ஆம் ஆண்டின்படி பிரிட்டனுடன் அற்றவை (ஊ) மூலதன வரவினங்கள் (எ) பொன்கட்டி வைப்பும், அன்னியச் செலாவணி குறித்துள்ள R. B. I. சொத்துகளும்

ஆதாரம் : 'இந்தியா' 1971-72 அரசினர் ஆராய்ச்சி வெளியீட்டுப் பகுதி (பக்கம் 403)

**அனுபந்தம் – 2**

## இந்தியாவின் வாணிபக் கொடுப்பல் நிதி — நடப்புக் கணக்கு

(ரூபாய் கோடியளவில்)

| தலைப்புகள் | 1968—69 | | | 1969—70 | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | நிகரம் | வரவு | பற்று | நிகரம் |
| 1. (i) வர்த்தகம், தனியார் ... | 1,367·4 | 646·5 | + 720·9 | 1,403·0 | 628·6 | + 774·4 |
| (ii) அரசினர் ... | — | 1,094·0 | — 1,094·0 | 0·9 | 953·7 | — 952·8 |
| 2. விலை மதிப்பற்ற சரக்குகளின் சலனம் ... | — | — | — | — | — | — |
| 3. அயல்நாட்டுப் போக்குவரத்து... | 4·9 | 14·4 | — 9·5 | 31·7 | 15·5 | + 16·5 |
| 4. போக்குவரத்து ... | 99·3 | 65·1 | + 34·2 | 100·4 | 72·0 | + 28·4 |
| 5. காப்புறுதி (Insurance) ... | 12·7 | 9·1 | + 3·6 | 12·9 | 13·4 | — 0·5 |
| 6. ஆவணங்களினின்று வருவாய் ... | 25·8 | 239·7 | — 213·9 | 33·8 | 251·6 | — 217·8 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. அரசினர் இதரவிடங்களி னின்று விலக்கப்பட்டது | ... | 48·0 | 21·0 | + 27·0 | 29·5 | 23·5 | + 6·0 |
| 8. இதரவினங்கள் (Miscellaneous) | ... | 71·7 | 72·6 | — 0·9 | 54·3 | 69·4 | — 15·1 |
| 9. மாற்றங்களுக்கான கொடுப்பல்கள் (Transfer payments) | ... | — | — | — | — | — | — |
| (i) அரசினர் | ... | 56·2 | 16·7 | + 39·5 | 35·6 | 16·8 | + 18·8 |
| (ii) தனியார் | ... | 144·2 | 16·3 | + 127·9 | 139·3 | 14·2 | + 145·1 |
| 10. மொத்த நடப்புச் செலாவணிகள் | ... | 1,830·2 | 2,195·4 | — 365·2 | 1,841·4 | 2,058·4 | — 217·0 |
| 11. விடுதல்களும் தவறுகளும் | ... | — | — | — 113·7 | — | — | — 14·4 |

ஆதாரம்: இந்தியா 1971-72, பக்கம் 406.

# மேற்கோள் நூற்பட்டியல்
## (Bibliography)


Allen, William R. and Allen Clark Lee—'Foreign Trade and Finance', (New York, 1959).

American Economic Association,—'Readings in the Theory of International Trade', (Philadelphia, 1949).

Bastable, Charles, F.—'The Theory of International Trade: With Some of its Applications to Economic Policy', (London, 1887).

Beveridge, Sir William—'Tariff, The Case Examined', (London, 1932).

Brown, A.J.—'Industrialisation and Trade; The Changing World Pattern and the Position of Britain', (Oxford, 1943).

Cairnes, J.E.—'Principles of Political Economy', (New York, 1874).

Cassel, Gustav,—'Monetary and Foreign Exchange after 1914', (New York, 1928).

Condliff, J.B.,—'The Reconstruction of World Trade', (New York, 1940).

——, 'The Commerce of Nations', (New York, 1950).

Crumpp, Norman E. (ed).—'The ABC of Foreign Exchange', (New York, 1951).

Einzig, Paul,—'Exchange Control', (London, 1934).

——, 'The Theory of the Forward Exchange', (London, 1937)

Ellis, H.S.,—'Bilateralism and the Future of International Trade', (Princeton, 1945). Reprinted in American Economic Association, Readings in the Theory of International Trade (Philadelphia, 1949).

Ellsworth, Paul T.—'International Economics', (New York, 1938).

——, International Economy: Its Structure and Operation, (New York, 1950).

Enke, Stephen and Salera, Virgil—'International Economics', (New York, 1954).

Haberler, Gattfried—'Quantitative Trade Controls; Their Causes and Nature', (Geneva, 1943).

——, 'Theory of International Trade: With its Application, to Commercial Policy', (New York, 1950).

——, 'A Survey of International Trade Theory', (Cambridge, Mass, 1955).

Hall, N.F.—'The Exchange Equalisation Account', (London, 1935).

Harris, Seymour E.—'Exchange Depreciation', (Cambridge, 1936).

Harrod, Roy F.—'International Economics', (London, 1947).

Hawtrey, R.G.—'The Gold Standard in Theory and Practice', (London, 1947).

Hayek, F. A. —'Monetary Nationalism and Industrial Stability',(London, 1939).

International Bank For Reconstruction and Development Reports.—(Washington, D.C., Annual).

——, 'Summary proceedings of Meetings', (Washington, D.C., Annual).

International Monetary Fund, 'Balance of Payments Year Book', (Washington, D.C., Annual).

——, Reports, (Washington, D.C., Annual).

——, 'Reports on Exchange Restrictions' (Washington, D.C., Annual).

——, Staff Papers, (Washington, D.C., Published from time to time).

——, 'Summary Proceedings of Annual Meetings', (Washington D.C., Annual).

Kemmerer, E.W. 'The Gold and the Gold Standard', (New York, 1944).

Kindleberger Charles, P.—'International Short Team-Capital Movements', (New York, 1937).

——, 'The Dollar Shortage', (New York, 1950).

——, 'International Economics', (Home Wood, 1953).

——, 'The Terms of Trade', (New york, 1956).

Lakadawala, D.T.—'International Aspects of Indian Economic Development', (Bombay, 1951).

League of Nations, 'Enquiry into Clearing Agreements', (Geneva, 1935).

——, International Currency Experience: 'Lessons of the Inter-war Period', (Princeton, 1944).

League of Nations,—'Commercial Policy in the Postwar World', (Geneva, 1945).

———, 'Industrialisation and Foreign Trade', (Geneva, 1945).

Machlup, Fritz,—'International Trade and the National Income-Multiplier', (Philadelphia, 1943).

Marshall, Alfred,—'The Pure Theory of Foreign Trade : The Pure Theory of Domestic Values', (London, 1929).

———, 'Money, Credit and Commerce', (London, 1929).

Meade, James E.,—'An Introduction to Economic Analysis and Policy' (New York, 1938).

———, 'The Balance of Payments', (London, 1951).

———, 'A Geometry of International Trade', (London, 1952).

———, 'Problems of Economics Union', (Chicago, 1953).

———, 'The Theory of Customs Unions', (Amsterdam, 1955).

———, 'Trade and Welfare', (New York, 1955).

Mill, John Stuart,—'Essays on some Unsettled Qusetions of Political Economy', (London, 1844).

———, 'Principles of Political Economy with some of Their Applications to Social Philosophy, 2 Volumes', (London, 1948).

———, 'Mosak, Jacob L., 'General Equilibrium Theory in International Trade',(Bloomington, 1944).

Myrdal, Cunnar,—'An International Economy', (New York, 1956).

Nurkse, Ragnar,—'Conditions of International Monetary Equilibrium,' (Princeton, 1935).

———, 'Problems of Capital Formation in Under-developed Countries', (New York, 1953).

Ohlin, Bertil,—'Inter-regional and International Trade', (Cambridge Mass, 1935).

Rangnekar. S.B.,—'Imperfect Competition in International Trade', (London, 1947).

Rostow W.W.,—'The Process of Economic Growth', (Oxford, 1952).

Smith Adam,—'An Enquiry into the Nature and Causes of Wealth of Nations', (London, 1679).

Snyder R.C.,—'The Most-Favoured. Nation Clauses-An Analysis with Particular Reference to Recent Treaty Practices and Tariff', (New York, 1948).

Taussing, Frank W. (ed)—'Selected Readings in International Trade and Tariffs Problems', (Boston, 1921).

———, 'International Trade', (New York, 1927).

Taussing Frang W. (ed), 'Some Aspects of the Tariff Question', (3rd ed.) (Cambridge, 1931).

Tinbergen, Jan.,—'International Economic Corporation', (New York, 1945).

——, 'International Economic Integration', (London, 1954).

Torrens, Robert,—'An Essay on the External Corn Trade', (London, 1815).

United Nations,—'International Capital Movements during the Interwar Period', (New York, 1949).

——, 'Methods of Financing Economic Development in Under developed Countries', (New York, 1949).

——, 'Relative Prices of Exports and Imports of Under Developed Countries', (New York, 1949).

——, 'National and International Measures for Full Employment', (New York, 1949).

——, 'Foreign Investment Laws and Regulations of the Countries of Asia and the Far East', (New York, 1951).

——, 'Measures for International Economic Stability', (New York, 1951).

——, 'Measures for the Economic Development of Under developed Countries', (New York, 1951).

——, Instability in Export Markets of Under-Developed Countries', (New York, 1952).

——, 'Commodity Trade and Economic Development', (New York, 1953).

——, 'A Study of Trade Between Asia and Europe', (Geneva, 1953).

——, 'Report on a Special United Nations Fund for Economic Development', (New York, 1953).

——, 'The Quest for Free Trade', (New York, 1955).

——, 'The International Flow of Foreign Capital', 1946-1952, (New York, 1954).

——, 'United Nations, Economic Commission for Latin America, Economic Development of Latin America and Its Principal Problems', (New York, 1950).

——, 'Viner, Jacob—'Canada's Balance of International Indebtedness 1900-1913; An Inductive Study in the Theory of International Trade', (Cambridge Mass, 1924).

——, 'Studies in the Theory of International Trade', (New York, 1937).

Viner, Jacob— 'Trade Relations Between Free-Market and Controlled Economics', (Geneva, 1943).

——, 'The Customs Union Issue', (New York, 1950).

——, 'International Economics Studies' (Glencoe, 1951).

——, 'International Trade and Economic Development', (Glencoe, 1952).

Whale, Barrett,—'International Trade', (New York, 1932).

——,Young, J. P.—'The International Economy', (New York, 1951).

# கலைச்சொற்கள்

A

| | |
|---|---|
| Absolute cost | — தனிப்பட்ட அடக்க விலை |
| Absolute difference | — ,, பேதம் |
| Absolute market | — ,, சந்தை |
| Absolute quota | — ,, பங்குமுறை |
| Adjustment | — சமனுக்கல், சீர்ப்படுத்துதல் |
| Administrator | — ஆட்சியாளர் |
| Arbitrage | — ஊகவர்த்தகம் |
| Arbitrageur | — ஊகவர்த்தகர் |

B

| | |
|---|---|
| Balance of payment | — வாணிபக் கொடுப்பல் நிலை |
| Banking effect | — வங்கியின் ஈடுபாடு |
| Barter | — பண்டமாற்று முறை |
| Bilateral | — இருமுக |
| Blocked Account | — கட்டுப்படுத்தப்பட்ட கணக்கு |
| Bottleneck | — திக்குமுக்காடிய நிலை |

C

| | |
|---|---|
| Changing Production Cost | — மாறும் தன்மையுள்ள உற்பத்தி யடக்கவிலை |
| Classcial Theory | — தொன்மைப் பொருளாளர் கொள்கை |
| Classification | — பாகுபடுத்துதல் |
| Clearing Agreement | — கணக்குத் தீர்வக ஒப்பந்தம் |
| Colony | — ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகள் |
| Comparative cost | — அடக்கவிலை ஒப்பிடல் முறைகள் |
| Compensating Agreement | — ஈடுகட்டும் ஒப்பந்தங்கள் |

Competition imperfect — நிறைவற்ற போட்டி
Competition monopolicti — ஏகபோக உரிமைப் போட்டி
Competition perfect — நிறைவுப் போட்டி
Crisis — பொருளாதாரக் குழப்பம்
Currency inflation — செலாவணி (பண) வீக்கம்
Currency condition — செலாவணியின் நிலை
Currency hard — அழுத்தமான, கிடைப்பதற்கரிய செலாவணி
Currency soft — எளிதில் கிடைக்கத்தகு செலாவணி
Cyclical disequilibrium — சுழற்சிச் சமன்பாடின்மை

D

Declaration — உறுதிமொழி
Deficient — பற்றுக் குறை
Deflation — பண வாட்டம்
Depreciate — மதிப்பிறக்குதல், தேய்மானம்
Depression — வர்த்தக மந்தநிலை
Devaluation — பணமதிப்பிறக்கம்
Discrimination — வஞ்சக முறை
Disparity — வேற்றுமைகள்
Diversification — பலவகைப் படுத்துதல்
Dumping — திணறிக் கொட்டல்

E

Economics of scale — பொருளாதார (தேவை) அளவுகள்
Employment — வேலைவாய்ப்பு
Entepreneur — தொழிற்றுணிவு பெற்றவர்
Equilibrium — சமநிலை
Exchange appreciation — செலாவணி மதிப்பு மாற்றம்
Exchange control — ,, காப்பு முறை
Exchange equalisation — ,, சமநிலை
Exchange fixed — ,, நிலைத் தன்மை
Exchange fluctuating — ,, நிலையற்ற தன்மை
Exchange restriction — ,, கட்டுப்பாடு
Exchange pegging — ,, முளையடித்துக் கட்டல்
Exchange stablity — செலாவணி மாறுத தன்மை
External economics — புறச் சிக்கனமுறை

European Common Market — ஐரோப்பியப் பொதுச் சந்தை
European Monetary Agreement — ஐரோப்பியப் பண ஒப்பந்தம்
European Payment Union — ஐரோப்பியச் செலுத்து ஒருமைப்பாட்டு நிறுவனம்

F

Factors of production — உற்பத்திக் காரணிகள்
Flatten — சப்பையாக
Fixed Drawing Rights — குறித்தளவு எடுக்க உரிமை
Flexible — நெகிழும், சுருங்கி விரியும்
Foreign Trade — பன்னாட்டு, அயல்நாட்டு வாணிபம்
Foreign Exchange Control — அயல்நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு
Forward Market — முன்னோக்கிய சந்தை
Forward Exchange — செலாவணி
Free trade — தடங்கலற்ற வர்த்தகம்
Frontier Traffic — எல்லைப் போக்குவரத்து

G

Gap — பிளவு
G. A. T. T. (General Agreement in Trade & Tariff) — சு. வ. ச. பொ. அ. சுங்க (வரி தொடர்பான பொது ஒப்பந்தம்)
Gold guarantee — பொன்கட்டி உத்தரவாதம்
Gold Standard — பொன்கட்டித் திட்டமுறை
Government Accounts — அரசினர் கணக்கு

H

Hard Currency — அழுத்தமுள்ள-கிடைக்க அரிதான செலாவணி

I

Imbalance — கணக்குப் பாக்கி
Immobility — மாறாத, நிலைத்த
Import prohibition — இறக்குமதித் தடை
Import substitution — இறக்குமதிக்குப்பதிலான பண்டங்கள்
Inconvertible — மாற்றவியலா
Indifferent curves — சமநிலை உற்பத்திக் கோடுகள்

Indirect — மறைமுக
Influence — சேர்க்கை
Insurance — காப்புறுதி
International Trade — பன்னாட்டு வர்த்தகம்
International Monetary Fund — பன்னாட்டுப் பண நிதி
International Development Authority — பன்னாட்டு வளர்ச்சிக் குழு
Internal economics — அகச் சிக்கனம்
Intervention — தலையீட்டுக் கொள்கை
Inventories — தளவாடங்கள்
Investment — ஆவணங்கள், முதலீடுகள்
Invisible — காணவியலா

K

Key Industries — மூலத் தொழில்கள்

L

Licences — உரிமங்கள்
Liquidity — நீர்த்த தன்மை
Long Term Agreement — நீண்டகால ஒப்பந்தம்

M

Marginal cost — வரம்பினுட்பட்ட அடக்கவிலை
Markets — சந்தைகள்
Mercantilist — வர்த்தகக் கோட்பாட்டினர்
Mobility — இடம் பெயருகின்ற
Money cost — பண அடக்கவிலை
Movement — பெயர்ச்சி
Most Favoured Nation Clause — மிகப் பரிவு காட்டப்படும் நாட்டைப்பற்றிய பிரிவு
Multilateral — பன்முக

N

Negative — எதிர்மறை
New Trade Policy — புதிய பொருளியல் கொள்கை
Neo Classical Economists — புதிய கருத்துடைய தொன்மைப் பொருளாளர்

## O

| | |
|---|---|
| Official Compensatory Finance | — அரசினரின் பதிலுதவிப் பணம் |
| Open Market | — கட்டுப்பாடற்ற, தடங்கலற்ற சந்தை |
| O. E. E. C. Organisation of European Economic Co-operation | — ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நிறுவனம் |

## P

| | |
|---|---|
| Payment Agreements | — செலுத்து ஒப்பந்தங்கள் |
| Per Capita Income | — சராசரி வருமானம் |
| Permanant cost | — நிரந்தர அடக்கவிலை |
| Propensity to consume | — நுகர்வு இறுதிநிலை நாட்டம் |
| Protection | — காப்பளிப்புகள் |
| Purchasing Power Parity Theory | — வாங்கு திறன் சமநிலைக் கொள்கை |

## Q

| | |
|---|---|
| Quota system | — பங்கு விதிப்புமுறை |

## R

| | |
|---|---|
| Ration | — பங்கீட்டுமுறை |
| Real cost | — உண்மை அடக்கவிலை |
| Recession | — பின்னிறக்கநிலை |
| Reciprocal demand | — பதில் தேவை |
| Regional exception | — வட்டார விதிவிலக்கு |
| Regression | — தேய்வு பெறல் |
| Returns constant | — நிரந்தர வருவாய் |
| ,, Diminishing | — குறைவு பெறும் வருவாய் |
| ,, Increasing | — அதிகமுறும் வருவாய் |
| Revenue Protective | — அரசினரின் காப்புத் தீர்வை |
| ,, Tariff | — அரசினரின் வருவாய்த் தீர்வை |
| Risk | — நட்டம், ஆபத்து |

## S

| | |
|---|---|
| Schedule | — பட்டியல் |
| Secular disequilibrium | — பன்னெடுங்காலச் சமன் பாடின்மை |

Special Drawing Rights — தனிப்பட்ட எழுத்துரிமைகள்
Specie point — பொன் பெயர்ச்சி
Spot Market — உடனடிப் பேரச் சந்தை
Standard Bill Agreements — நிலைகுத்திய ஒப்பந்தங்கள்
State Trading — இராச்சிய வர்த்தக நிறுவனம்
Stock Market — ஆவண முதலீட்டுச் சந்தைகள்
Structural disequilibrium — அமைப்பின் சமன்பாடின்மை
Subsidy — உதவிக்கொடை, அரசினரின் பண உதவி
Substitute curves — பதிலீட்டு வளைவுகள்
Swap trade — வர்த்தக விகிதம்
Switch ,, — மாற்று வர்த்தகம்

T

Tariff quota — பங்கு விதிப்புத் தீர்வை
Terms of Trade — மாற்று விகிதம்
Trade cycle — வர்த்தக, வணிகச் சுழல்

V

Vertical Industries — செங்குத்து முறையில் ஒன்றிய தொழில்கள்

# பொருட்குறிப்பகராதி


அகச் சின்னம், 31
அடக்கச் செலவு, 22
அரசினரின் பதிலுதவி, 50, 100
அதிகாரம் பெற்ற மூலதனம், 80
அம்தார்க், 132
அமெரிக்க ஐக்கிய நாடுகள், 184
ஆசிய நாடுகள், 193
ஆதம் ஸுமித், 8
ஆதாயம், 37
ஆளுநர், 39, 167
ஆஸ்திரியா, 197
இடப்பெயர்ச்சி, 10
இரண்டாம் உலகப்போர், 33
இரண்டாம் வகை மூலதனம், 37
இரட்டைக்கலன் தீர்வை, 96
இறக்குமதித் தீர்வை, 90
இராச்சிய வர்த்தக நிறுவனம், 124
இருமுக வர்த்தகம், 122
இருமுக வர்த்தக ஒப்பந்தம், 122
ஈடுகாட்டிய பணஉதவி, 76
உதவிக்கொடை, 100
உலக வங்கி, 122
உரிமம், 110, 111
உங்டாட், 185, 186, 189
ஊக வர்த்தகம், 73
எவிட், 64
எக்ஸ்சர் ஆக்லின், 35
ஏபர்லர், 24, 144
ஏற்றுமதி, 40
ஏற்றுமதித் தீர்வை, 91, 92
ஐயந்திரிபற, 1
ஒற்றைக்கலன் தீர்வை, 96
ஃபிரடரிக் லிஸ்ட், 81, 82
கஸ்டவ் காஸல், 74
காப்புமுறை, 20
காப்புத் தீர்வை, 95
கிழக்கு ஐரோப்பிய நாடுகள், 193
கிண்டில் பெர்கர், 2, 89
கீன்ஸ் பிரபு, 58
கென்னடி வட்டம், 184
கேயர்ன்ஸ், 4
கேபட் லாட்ஜ் ஹென்றி, 84
குறுக்கு வீதங்கள், 68
க்ளேர் வில்காக்ஸ், 140, 183
சராசரி வருவாய், 27
சந்தர்ப்ப அடக்கவிலை, 24
சிங்கர், 84
சுழற்சிக் கடன், 190
செலிக்மன், 9
செலாவணிக் கட்டுப்பாடு, 7, 121
செலாவணி விகிதம் 7, 122
செகஸ்லோவேகியா, 193
சோவியத் நாடு, 193

டாஸிக், 43
டாரென்ஸ், 8, 25, 44
டிரிஃபின் திட்டம், 207
டிரஃபின் இராபர்ட், 207
தடங்கலற்ற வர்த்தகம்,
8, 9, 17
தனியார் வர்த்தகம், 17
தனியார் மூலதன
அமைப்பு, 18
தனிப்பட்ட சந்தை, 8, 22
திக்குமுக்காடிய நிலை, 27
திணறிக் கொட்டல், 148,149
தீர்வைகள், 179
தேய்மானம், 77
தொன்மைப் பொருளியல்
வல்லுநர், 37
நிறைவற்ற போட்டி, 24, 35
பஞ்சாலைகள், 86
பழக்கத் தீர்வை, 96
பணவீக்கம், 6
பணவீக்க மதிப்பீட்டுக்
குறைப்பு, 78
பன்முகச் செலாவணி
விகிதங்கள், 128
பன்முக வர்த்தகம், 160
பங்குவிதிப்பு முறை, 102, 210
பன்னாட்டுக் கணக்குத்
தீர்வகம், 201
பன்னாட்டு வர்த்தகம், 12
பன்னெடுங்காலச் சுழற்சி, 122
பாட்டாளிகள், 10,12,24
புறச் சிக்கனம், 31
புள்ளியியல் பிரச்சினை, 35
பென்னிங்டன் ஜேம்ஸ், 40
பொருளாதார இணைப்பு,
152, 153
பெர்ன்ஸ்டியன் திட்டம், 207
மதிப்பீடுகள், 120
மதிப்பீட்டுத் தீர்வை, 94
மதிப்பீட்டுத் தீர்வைச்
சிக்கனம், 95
மத்திய வங்கி கோரல், 112
மதிப்பீட்டு விதி, 23
மாதிரி எடுத்தல், 47
மார்சல், 41
மாற்று வீதங்கள்,
11, 37, 39, 76
மாற்றவியலாச் செலாவணி,
76
மாற்றவியலாப் பணம், 70
மாச்சுலுப், 53
மி. ப. கா. பிரிவு, 144
மில் ஜான்ஸ் டுவர்ட், 31
மீட். ஜே. ர, 60
முன்னேக்கிய செலாவணி
விகிதம், 71
முக்கலன் தீர்வை, 97
ராபின்ஸன், 32
ரெகார்டோ டேவிட், 3
ரேஞ்சர் ஃபிரீஷ், 50
லத்தீன் அமெரிக்கா, 193
வரம்பற்று, 12, 14
வர்த்தகச் சுழல், 52, 161
வங்கிமுறை, 2, 166
வாய்ப்புப் பெறுமானம்,
3, 11
வில்லியம்ஸ், 32
வேளாண்மை, 85
வேற்றுமை, 97, 140
ஸயீத் முகம்மது, 131
ஸிங்கர், 84